# Open Bible Stories Translation Questions

## பதிப்பு 5.1

[ta]

# பதிப்புரிமை மற்றும் உரிமம்

**Open Bible Stories Translation Questions**
**தேதி:** 2019-11-11
**பதிப்பு:** 5.1
**வெளியிடப்பட்ட:** Door43

**Open Bible Stories**
**தேதி:** 2019-08-09
**பதிப்பு:** 5.4
**வெளியிடப்பட்ட:** Door43

# License

## Creative Commons Attribution-ShareAlike 4.0 International (CC BY-SA 4.0)

This is a human-readable summary of (and not a substitute for) the full license found at http://creativecommons.org/licenses/by-sa/4.0/.

### You are free to:

- **Share** — copy and redistribute the material in any medium or format
- **Adapt** — remix, transform, and build upon the material for any purpose, even commercially.

The licensor cannot revoke these freedoms as long as you follow the license terms.

### Under the following conditions:

- **Attribution** — You must give appropriate credit, provide a link to the license, and indicate if changes were made. You may do so in any reasonable manner, but not in any way that suggests the licensor endorses you or your use.
- **ShareAlike** — If you remix, transform, or build upon the material, you must distribute your contributions under the same license as the original.

**No additional restrictions** — You may not apply legal terms or technological measures that legally restrict others from doing anything the license permits.

### Notices:

You do not have to comply with the license for elements of the material in the public domain or where your use is permitted by an applicable exception or limitation.

No warranties are given. The license may not give you all of the permissions necessary for your intended use. For example, other rights such as publicity, privacy, or moral rights may limit how you use the material.

# பொருளடக்கம்

**Open Bible Stories Translation Questions** 5
1. படைப்பு 5
2. உலகத்தில் பாவம் நுழைதல் 11
3. ஜலப்பிரளயம் 16
4. ஆபிரகாமுடன் தேவனின் உடன்படிக்கை 22
5. The Son of Promise 26
6. தேவன் ஈசாக்குக்குக் கொடுத்தார் 30
7. தேவன் யாக்கோபை ஆசீர்வதித்தல் 33
8. யோசேப்பையும் அவனுடைய குடும்பத்தையும் தேவன் காப்பாற்றுதல் 37
9. தேவன் மோசேயை அழைத்தல் 42
10. பத்து வாதைகள் 47
11. பஸ்கா 51
12. யாத்திராகமம் 54
13. இஸ்ரவேலோடு தேவனின் உடன்படிக்கை 59
14. வனாந்திரத்தில் அலைந்துத்திரிதல் 64
15. தேசம் 70
16. மீட்பர்கள் 75
17. தாவீதுடன் தேவனின் உடன்படிக்கை 81
18. ராஜ்ஜியம் பிரிக்கப்படுதல் 87
19. தீர்கத்தரிசிகள் 92
20. அடிமைத்தனத்திலிருந்து திரும்புதல் 98
21. தேவன் மேசியாவை வாக்குப்பண்ணுதல் 103
22. யோவானின் பிறப்பு 108
23. இயேசுவின் பிறப்பு 111
24. யோவான் இயேசுவை ஸ்நானம்பண்ணுதல் 115
25. இயேசுவை பிசாசு சோதித்தல் 119
26. இயேசு ஊழியத்தை ஆரம்பித்தல் 122
27. நல்ல சமாரியனின் கதை 126
28. வாலிபப் பணக்கார அதிகாரி 130
29. இரக்கம் இல்லாத வேலைக்காரனின் கதை 134
30. ஐயாயிரம் பேருக்கு இயேசு உணவு கொடுத்தல் 138
31. இயேசு தண்ணீரின் மேல் நடப்பது 141
32. பிசாசு பிடித்திருந்தவனையும் வியாதியாய் இருந்த ஒரு இயேசு குணமாக்குதல் 144
33. விவசாயம் செய்பவனின் கதை 150
34. இயேசு சொன்ன மற்ற கதைகள் 153
35. கருணையுள்ள தகப்பனின் கதை 157
36. மறுரூபப்படுதல 162
37. மரித்த லாசருவை இயேசு எழுப்புதல் 165
38. இயேசுவைக் காட்டிக்கொடுத்தல் 170
39. இயேசு சோதிக்கபடுதல் 176
40. இயேசுவை சிலுவையில் அறைதல் 181
41. இயேசுவை தேவன் மரணத்திலிருந்து எழுப்புதல் 185
42. இயேசு பரலோகத்திற்குத் திரும்புதல் 188
43. சபைகளின் ஆரம்பம் 193
44. பேதுருவும் யோவானும் ஒரு பிச்சைக்காரனை சுகமாக்குதல் 198
45. ஸ்தேவான் மற்றும் பிலிப்பு 202
46. பவுல் கிருஸ்தவனாய் மாறுதல் 207
47. பிலிப்புவில் பவுலும் சீலாவும் 212

48. இயேசு தான் வாக்குத்தத்தம் பண்ணபட்ட மேசியா 217
49. தேவனுடைய புதிய உடன்படிக்கை 222
50. இயேசுவின் வருகை 228
**பங்களிப்பாளர்கள் 234**
Open Bible Stories Translation Questions பங்களிப்பாளர்கள் 234
Open Bible Stories பங்களிப்பாளர்கள் 234

# Open Bible Stories Translation Questions

## 1. படைப்பு

### 01:01

தேவன் ஆதியிலே எல்லாவற்றையும் படைத்தார். அவர் உலகம் முழுவதையும் ஆறு நாளில் . தேவன் பூமியை உருவக்கினபின்பு அது இருளும் வெறுமையுமாய் இருந்தது, ஏனெனில் உலகில் எதையும் உண்டாக்கவில்லை, ஆனால் தேவ ஆவியானவர் ஜலத்தின்மேல் அசைவாடிக்கொண்டிருந்தார்.

#### உலகத்தில் உள்ள எல்லாம் எங்கேயிருந்து வந்தது?

எல்லாவற்றையும் தேவன் உண்டாக்கினார்

#### எல்லாவற்றையும் உண்டாக்குவதற்கு தேவனுக்கு எவ்வளவு காலம் தேவைப்பட்டது?

ஆறு நாட்கள்

---

### 01:02

பின்பு தேவன் வெளிச்சம் உண்டாகக்கடவது என்றார் உடனே வெளிச்சம் உண்டாயிற்று. வெளிச்சத்தை தேவன் நல்லதென்று கண்டார் எனவே அதை பகல் என்று , இருளினின்று விலக்கி. முதலாம் நாளில் தேவன் வெளிச்சத்தை உண்டாக்கினார்.

#### தேவன் உண்டாக்கின ஒவ்வொரு நாளின் முடிவிலும் அவர் உருவாக்கினவற்றைப் பார்த்து சொன்னது என்ன?

அது நல்லது என்று சொன்னார்.

---

### 01:03

படைப்பின் இரண்டாம் நாளில், தேவன்:ஜலத்தின்மேல் ஆகாயம் உண்டாகக்கடவது அப்படியே ஆயிற்று. அதை வானம் என்று அழைத்தார்.

## 01:04

மூன்றாம் நாளில், தேவன்: ஜலம் முழுவதும் ஒன்று சேர்ந்து வெட்டாந்தரை உண்டாகக்கடவது என்றார். அந்த வெட்டாந்தரையை பூமி தண்ணீரை "கடல்" அழைத்தார். பின்பு அது நல்லதென்று கண்டார்.

### தேவன் உண்டாக்கின ஒவ்வொரு நாளின் முடிவிலும் அவர் உருவாக்கினவற்றைப் பார்த்து சொன்னது என்ன?

அது நல்லது என்று சொன்னார்.

---

## 01:05

பின்பு தேவன்: இந்த பூமி சகலவிதமான மரங்களையும், செடிகளையும் என்றார். அப்படியே ஆயிற்று. தேவன் அது நல்லதென்று கண்டார்.

### தேவன் உண்டாக்கின ஒவ்வொரு நாளின் முடிவிலும் அவர் உருவாக்கினவற்றைப் பார்த்து சொன்னது என்ன?

அது நல்லது என்று சொன்னார்.

---

## 01:06

படைப்பின் நான்காம் நாளில், தேவன்: வானத்தில்உண்டாகக் கடவது என்றார். பின்பு சூரியன்,சந்திரன்மற்றும் நட்சத்திரங்கள் உண்டாயிற்று. காலங்களையும், வருடங்களையும் அறிய வெளிச்சம் தரும்படிக்கும், பகல் மற்றும் இரவு என்பதை அறியவும் இவ்வாறு செய்தார். தேவன் அது நல்லதென்று கண்டார்.

### தேவன் உண்டாக்கின ஒவ்வொரு நாளின் முடிவிலும் அவர் உருவாக்கினவற்றைப் பார்த்து சொன்னது என்ன?

அது நல்லது என்று சொன்னார்.

---

## 01:07

ஐந்தாம் நாளில், தேவன்:ஜலத்தில் ஜீவ ஜந்துக்களையும், வானில் பறக்கும் பறவைகளையும் உண்டாக்கினார். இவ்விதமாக தேவன் ஜலத்தில் நீந்தும் ஜீவ ஜந்துக்களையும், வானில் பறக்கும் பறவைகளையும் உண்டாக்கினார். தேவன் அது நல்லதென்று கண்டார்.

### தேவன் உண்டாக்கின ஒவ்வொரு நாளின் முடிவிலும் அவர் உருவாக்கினவற்றைப் பார்த்து சொன்னது என்ன?

அது நல்லது என்று சொன்னார்.

---

## 01:08

சிரிஷ்ட்டிப்பின் ஆறாம் நாளில், தேவன்: எல்லாவிதமான விலங்குகளும் உண்டாகும்படி கட்டளையிட்டார், அவர் சொன்னபடியே ஆயிற்று. அதில் காட்டுமிருகங்களும், நாட்டுமிருகங்களும், ஊரும்பிராணிகளும் அடங்கும். அதை தேவன் நல்லதென்று கண்டார்.

### தேவன் உண்டாக்கின ஒவ்வொரு நாளின் முடிவிலும் அவர் உருவாக்கினவற்றைப் பார்த்து சொன்னது என்ன?

அது நல்லது என்று சொன்னார்.

---

## 01:09

பின்பு தேவன்: நமது சாயலாக மனிதனை உண்டாக்குவோம் என்றார். அவர்கள், பூமியையும், எல்லா மிருக ஜீவன்களையும் ஆளக்கடவர்கள் என்றார்.

### எந்த விதத்தில் தேவன் மனிதனை விலங்குகளைவிட வேறுவிதமாய் உண்டாக்கினார்?

அவர் மனிதனை தம்முடைய சாயலிலும், உருவத்திலும் உண்டாக்கினார்.

### பொறுப்பு என்று தேவன் சொன்னது என்ன?

பூமியின்மேலும் விளங்குகளின்மேலும் அதிகாரம் கொடுத்து, அவைகளை பார்த்துக்கொள்வது தான்.

---

## 01:10

பின்பு தேவன் சிறிதளவு மண்ணினாலே மனிதனை படைத்து, நாசியில் சுவாசத்தை அவனுக்குள் ஊதினார். அந்த மனிதனின் பெயர் ஆதாம். தேவன் ஆதாம் வாழும்படிக்கு ஒரு பெரிய தோட்டத்தை உண்டாக்கி அதை கவனித்துக் கொள்ளும்படி செய்தார்.

### முதல் மனிதனை தேவன் எப்படி உண்டாக்கினார்?

தேவன் அவனை மண்ணினால் உண்டாக்கினார்.

### மனிதன் எப்படி உயிர் பெற்றான்?

தேவன் அவனுக்குள் சுவாசத்தை ஊதினார்.

### அந்த மனிதனின் பெயர் என்ன?

ஆதாம்.

### தேவன் ஆதாமை எங்கே வைத்தார்?

தேவன் உண்டாக்கிய தோட்டத்தில்.

---

## 01:11

தோட்டத்தின் நடுவில், தேவன் இரண்டு விஷேச மரங்களை முளைக்கும்படி செய்தார் அது ஜீவ விருட்சத்தையும், நன்மை தீமை அறியதத்தக்க விருட்சமுமாயிருந்தது. தேவன் ஆதாமினிடத்தில்: நீ இந்த தோட்டத்தில் உள்ள நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தை மாத்திரம் புசிக்க வேண்டாம் அப்படி புசித்தால் நீ சாவாய் என்று கூறினார்.

### விசேஷமான எந்த மரத்திலிருந்து ஆதாம் சாப்பிடக்கூடாது?

நன்மை தீமை அறியத்தக்க மரம்.

### நன்மை தீமை அறியத்தக்க மரத்திலிருந்து ஆதாம் சாப்பிட்டால் அவனுக்கு என்ன சம்பவிக்கும்?

அவன் மரிப்பான்.

---

### 01:12

பின்பு தேவன் கூறியது, மனிதன் தனிமையாய் இருப்பது நல்லதல்ல என்றும், ஆதாமின் துணையாளராக இருக்க இயலாது என்றார்.

#### எல்லா விதமான விலங்குகளும் இருக்கையில் ஏன் ஆதாம் மட்டும் தனியாக இருந்தான்?

அந்த மிருகங்களெல்லாம் ஆதாமுக்கு துணையாக இல்லை.

---

### 01:13

எனவே தேவன் ஆதாமுக்கு அயர்ந்த நித்திரை வரப்பண்ணி, பின்னர் தேவன் ஆதாமின் விலா எலும்புகளில் ஒன்றை எடுத்து ஒரு பெண்ணை உண்டாக்கி அவளை, அவனிடத்தில் கொண்டு வந்தார்.

#### பெண்ணை தேவன் எப்படி உண்டாக்கினார்?

அவர் ஆதாமின் விலாவிலிருந்து உண்டாக்கினார்.

---

### 01:14

ஆதாம் அவளைக் கண்டபோது, அவன்: இவள் என்னைப்போல இருக்கிறாள்! இவள் மனுஷி எனப்படுவாள் என்றான். அவள் மனுஷனில் எடுக்கப்பட்டாள். இதினிமித்தம் புருஷன் தன் தகப்பனையும், தன் தாயையும் விட்டு தன் மனைவியோடு இசைந்திருக்ககடவன்,

#### ஆதாமுக்கு, பெண் என்பதன் அர்த்தம் என்ன?

அவள் மனிதனிலிருந்து உண்டாக்கபட்டவள் என்று அர்த்தம்.

அவர்கள் இருவரும் ஒருவராய்

---

## 01:15

தேவன், மனுஷனையும், மனுஷியையும் தமது சாயலில் உண்டாக்கினார். அவர்களை ஆசீர்வதித்து, அவர்களை நோக்கி: நீங்கள் அநேக பிள்ளைகளையும், பேரப்பிள்ளைகளையும் பெற்று பூமியை நிரப்புங்கள் என்றார்! தேவன் தாம் படைத்த எல்லாவற்றையும் கண்டார், அவை எல்லாம் நல்லதென்று கண்டார். இவையெல்லாம் ஆறு

### எல்லாவற்றையும் தேவன் உண்டாக்கி முடித்தப்பின்பு அவருடைய என்ன?

அது மிகவும் நல்லது.

---

## 01:16

ஏழாம் நாளில், தேவன் தாம் செய்து கொண்டிருந்த எல்லா வேலைகளையும் முடித்து, அந்த நாளை ஆசீர்வதித்து, அதை பரிசுத்தமாக்கி, அந்நாளில் ஓய்ந்திருந்தார். இவ்விதமாக தேவன் உலகம்முழுவதையும் படைத்தார்.

### ஏழாம் நாளில் தேவன் என்ன செய்தார்?

அவர் ஏழாம் நாளில் ஓய்ந்திருந்து, அதை ஆசீர்வதித்து, அதை பரிசுத்தமாக்கினார்.

# 2. உலகத்தில் பாவம் நுழைதல்

## 02:01

ஆதாம் மற்றும் அவனுடைய மனைவியும் தேவன் உண்டாக்கிய தோட்டத்தில் மிகவும் சந்தோஷமாக இருந்தனர். அந்த உலகத்தில் பாவம் இல்லாததினால் அவர்கள் நிர்வாணிகளாயிருந்தும், தாங்கள் நிர்வாணிகள் என்பதை உணராதிருந்தார்கள். அவர்கள் தோட்டத்தில் உலாவுகிறவர்களகவும், தேவனோடு பேசுகிறவர்களாகவும் இருந்தனர்.

### ஆதாமும் ஏவாளும் நிர்வாணமாய் இருந்தும் ஏன் வெட்கப்படவில்லை?

இந்த உலகத்தில் பாவம் இல்லாதிருந்தது.

---

## 02:02

தோட்டத்தில் இருந்த மிகவும் தந்திரமாய் அந்த ஸ்திரீயினினிடத்தில், இந்த தோட்டத்தில் உள்ள சகல கனியையும் சாப்பிட வேண்டாம் என்று தேவன் சொன்னாரோ? என்று கேட்டது.

### பாம்பின் முதல் கேள்வி என்ன?

இந்த தோட்டத்தில் உள்ள எல்லா மரத்தின் கனிகளையும் தேவன் உண்மையாகவே சாப்பிட வேண்டாம் என்று சொன்னாரோ?

---

## 02:03

அதற்கு அந்த ஸ்திரீ, எல்லா மரத்தின் கனியையும் நாங்கள் சாப்பிடலாம் ஆனால் நன்மை, தீமை அறியத்தக்க அந்த மரத்தின் கனியை மட்டும் சாப்பிட வேண்டாம் என்றும், அந்த கனியை சாபிட்டாலோ அல்லது அதைத் தொட்டாலோ நாங்கள் சாவோம் என்று தேவன் கூறினார் என்றாள்.

### எந்த மரத்திலிருந்து ஆதாமும் அவனுடைய மனைவியும் கனியை சாப்பிட அனுமதிக்கப்படவில்லை?

அவர்கள் நன்மை தீமை அறியத்தக்க மரத்தின் கனியை சாப்பிட அனுமதிக்கப்படவில்லை.

### நன்மை தீமை அறியத்தக்க மரத்தின் கனியை சாப்பிட்டால் ஆதாமுக்கும் அவன் மனைவிக்கும் என்ன நடக்கும் என்று தேவன் சொன்னார்?

அவர்கள் மரிப்பார்கள் என்று தேவன் சொன்னார்.

---

## 02:04

அப்பொழுது பாம்பு அந்த பெண்ணிடத்தில், அப்படியல்ல! நீங்கள் சாவதில்லை. அந்த கனியை சாப்பிட்டவுடனே நன்மை, தீமை அறிந்து தேவனைப்போல் இருப்பீர்கள் என்று தேவன் அறிவார் என்றது

### தேவன் சாப்பிட கூடாது என்று சொன்ன கனிக்கு[பழத்திற்கு] பாம்பு சொன்ன காரணம் என்ன?

தேவன் அவரைப் போல நீங்களும் எல்லாவற்றையும் அறிந்துகொள்ளக் கூடாது என்று தேவன் பொய் சொன்னார் என்று அது சொன்னது.

---

## 02:05

அந்த கனி ஸ்திரியின் பார்வைக்கு இன்பமும், புசிப்புக்கு ருசியனடயிருந்தது. அவள் புத்தி தெளியவும் விரும்பினபடியால், அதின் கனிகளை பறித்து சாப்பிட்டு, தன் புருஷனுக்கும் கொடுத்தாள். அவனும் அதை சாப்பிட்டான்.

### பெண் ஏன் அந்த கனியை சாப்பிட்டாள்?

அவளுடைய பார்வைக்கு அந்த கனி அழகாகவும், அருமையானதாகவும் மற்றும் அவள் ஞானம் அடையவும் விரும்பினாள்.

### ஆதாமும் அவனுடைய மனைவியும் அந்த கனியை சாப்பிடும்படி கட்டாயப்படுத்தப்பட்டார்களா?

இல்லை, அவர்களே அந்த கனியை சாப்பிட்டு, தேவனுக்குக் கீழ்ப்படியாமற்போனார்கள்.

---

## 02:06

உடனே அவர்கள் கண்கள் திறக்கப்பட்டு, தாங்கள் நிர்வாணமாய் இருப்பதை உணர்ந்தார்கள். அவர்கள் அத்தி இலைகளினால் ஆடை உண்டாக்கி த ங்கள் உடலை மூடினார்கள்.

### அந்த மனிதனும் அந்த பெண்ணும் தாங்கள் நிர்வாணிகள் என்று அறிந்து என்ன செய்தார்கள்?

அவர்கள் இலைகளைப் பிடுங்கி அதில் தங்களை மறைத்துக்கொண்டார்கள்.

---

## 02:07

பின்பு ஆதாமும் அவன் மனைவியும் தோட்டத்தில் உலாவுகிற தேவனுடைய சத்தத்தை கேட்டார்கள், அதினால் தாங்கள் ஒளிந்து கொண்டார்கள். பின்பு தேவன், ஆதாமை கூப்பிட்டு, நீ எங்கே இருக்கிறாய் என்றார்? அதற்கு ஆதாம், நீர் தோட்டத்தில் லாவுகிற சத்தத்தை நான் கேட்டு, நான் நிர்வாணமாய் இருப்பதினால் பயந்து ஒளிந்துகொண்டேன் என்றான்.

---

## 02:08

அதற்கு தேவன், நீ நிர்வாணியாய் இருக்கிறாய் என்று உனக்கு அறிவித்தவன் யார்? நான் சாப்பிட வேண்டாம் என்று உனக்கு சொன்ன கனியை நீ சாப்பிட்டாயோ என்றார்? அதற்கு அவன், நீர் எனக்குத் தந்த இந்த ஸ்திரீ எனக்கு அந்த கனியை கொடுத்தாள், நான் அதை சாப்பிட்டேன் என்றான். பின்பு தேவன் அந்த ஸ்திரீயைப் பார்த்து, ஏன் இப்படி செய்தாய்? என்று கேட்டார். அதற்கு அவள், பாம்பு என்னை வஞ்சித்தது என்றாள்.

### தேவன் எதிராக வந்தபோது அந்த பாவத்தைக் குறித்து மனிதன் தேவனிடத்தில் சொன்னது என்ன?

அவன் அந்த பெண்ணின்மேல் பழிசுமத்தினான்.

அந்த பாவத்தைக் குறித்து பெண் தேவனிடத்தில் ? அவள் பாம்பின்மேல் பழிசுமத்தினாள்.

---

### 02:09

தேவன் அந்தப் பாம்பினிடத்தில், நீ சபிக்கப்பட்டிருப்பாய்! நீ உன் வயிற்றினால் நகர்ந்து, உயிரோடிருக்கும் நாளெல்லாம் மண்ணைத் தின்பாய் என்றார். உனக்கும் க்கும், உன் சந்ததிக்கும் அவள் சந்ததிக்கும் பகை உண்டாக்குவேன். அவன் உன் தலையை நசுக்குவார், நீ அவன் நசுக்குவாய் என்றார்.

### பாம்பின்மேல் தேவனுடைய சாபம் என்ன?

நீ உன் வயிற்றினால் நகர்வாய், அந்த பெண்ணின் சந்ததி உன் தலையை நசுக்கும்.

---

### 02:10

பின்பு தேவன் அந்த ஸ்தியினிடத்தில், நான் உன் கர்ப்பவேதனையை மிகவும் பெருகப்பண்ணுவேன். உன் ஆசை உன் புருஷனைப் பற்றியிருக்கும், அவன் உன்னை ஆளுவான் என்றார்.

### பெண்ணின்மேல் தேவனுடைய சாபம் என்ன?

உன் பிள்ளைப்பேறு கடினமாகும், மற்றும் உன்னுடைய சிந்தனை எல்லாம் உன் புருஷன்மேல் இருக்கும், அவன் உன்னை ஆளுவான்.

---

### 02:11

தேவன் ஆதாமை நோக்கி, நீ உன் மனைவியின் வார்த்தையைக் கேட்டு, எனக்குக் கீழ்படியாதபடியினால், பூமி சபிக்கப்பட்டிருக்கும், நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் வருத்ததோடே அதின் பலனை சாப்பிடுவாய். பின்பு நீ மரித்து, உன்னுடைய உடல் மண்ணுக்குத் திரும்பும் என்றார். ஆதாம் தன் மனைவிக்கு ஏவாள் என்று பெயரிட்டான், ஏனெனில் அவள் ஜீவனுள்ளோருக்கெல்லாம் தாயானவள். பின்பு தேவன் ஆதாமுக்கும், ஏவாளுக்கும் விலங்குகளின் தோலினால் உடைகளை உடுத்தினார்.

### மனிதனின்மேல் தேவனுடைய சாபம் என்ன?

ஆகாரம் விளைவிக்க நீ கடினமாய் உழைப்பாய், மற்றும் நீ மரித்து மண்ணுக்குத் திரும்புவாய்.

---

## 02:12

பின்பு தேவன், இதோ மனிதன் நன்மை, தீமை அறியத்தக்கவனாய் நம்மில் ஒருவரைப்போல் ஆனான், அவர்கள் ஜீவவிருட்சத்தின் கனியை சாப்பிட்டு, என்றென்றைக்கும் உயிரோடிராதபடிக்கு, ஆதமையும், ஏவாளையும், தோட்டத்திலிருந்து தேவன் வெளியே அனுப்பிவிட்டார். பின்பு ஒருவரும் ஜீவவிருட்சத்தின் கனியை சாப்பிடாதபடிக்கு வல்லமையான தூதர்களை தோட்டத்தின் வழியில் காவல் வைத்தார்.

### சாவாமல் வாழ்வதிலிருந்து தேவன் எப்படி ஆதாமையும், ஏவாளையும் தடுத்தார்?

தேவன் அவர்களை தோட்டத்திலிருந்து வெளியே துரத்தி, வல்லமையுள்ள தூதர்களை காவல் வைத்தார்.

# 3. ஜலப்பிரளயம்

## 03:01

அநேக நாட்களுக்கு பிறகு, ஏராளமான ஜனங்கள் பூமியில் வாழ்ந்து வந்தனர். அவர்கள் ஒழுக்கம் இல்லாதவர்களாகவும், தவறான காரியங்களைச் செய்கிறவர்களாகவும் இருந்தனர். அதினால் தேவன் முழுஉலகத்தையும் பெருவெள்ளத்தினால் அழிக்கும்படி முடிவு செய்தார்.

### ஏன் தேவன் உலகத்தை அழிக்க முடிவு செய்தார்?

ஜனங்கள் மிகவும் தீங்கு செய்கிறவர்களும் மற்றும் பொல்லாதவர்களுமாய் இருந்ததினால்.

### உலகத்தை அழிக்க தேவன் செய்த திட்டம் என்ன?

அவர் .

---

## 03:02

ஆனால் நோவாவுக்கோ, தேவனுடைய கண்களில் தயவு கிடைத்து. அக்கிரமம் செய்கிற மனிதர்களின் நடுவில் நோவா நீதிமானாய் இருந்தான். எனவே பெருவெள்ளம் வரபோவதாகவும், அதினால் ஒரு பேழையை உண்டாக்கும்படி நோவாவினிடத்தில் கட்டளையிட்டார்.

### ஏன் நோவாவுக்கு தேவனுடைய கண்களில் தயவு கிடைத்தது?

அவன் நீதிமானாய் இருந்தான்.

---

## 03:03

பேழையை மரத்தினால் செய்யவும் அதின் நீளம் 140மீட்டர், அகலம் 23மீட்டர், 13.5மீட்டர் உயரமுமாய் இருக்கவும், அதை மூன்று அடுக்காகவும், அநேக அறைகளை உண்டு பண்ணி, மேல்தட்டு உண்டாக்கி ஒரு ஜன்னலையும் வைக்கும்படி கூறினார். அந்த பேழையில் நோவாவும், அவனுடைய குடும்பமும் மற்றும் சகல மிருக ஜீவன்களும் ஜலத்திலிருந்து காக்கப்ப்படும் படிக்கு இவ்வாறு செய்ய கட்டளையிட்டார்.

## நோவா என்ன செய்யும்படி தேவன் கூறினார்?

பெரிய பேழையை உண்டாக்கும்படி கூறினார்.

## அந்த பேழையின் தேவை என்ன?

நோவாவையும் அவனுடைய குடும்பத்தையும் மற்றும் மிருகஜீவன்கள் எல்லாம் ஜலத்தில் பாதுகாக்கப்படவும்.

---

# 03:04

நோவா தேவனுக்குக் கீழ்படிந்தான். அவனும் அவனுடைய மூன்று குமாரரும் அந்த பேழையை தேவன் சொன்னபடியே செய்தார்கள். அந்த பேழை மிகவும் பெரியதாய் இருந்ததினால் செய்து முடிக்க அநேக வருடங்கள் ஆயிற்று. பெருவெள்ளம் வரபோவதாகவும் எனவே ஜனங்கள் தேவனிடமாக திரும்பும்படி நோவா அவர்களை எச்சரித்தும் அவர்கள் அவனை நம்பவில்லை.

## வரப்போவதை நோவா ஜனங்களிடம் சொன்னதும் ஜனங்களின் செய்கை என்ன?

அவர்கள் அவனை நம்பவில்லை.

---

# 03:05

தேவன் நோவாவினிடத்தில், அவனுக்கும் அவன் குடும்பத்திற்கும் மற்றும் மிருகங்களுக்கும் போதுமான ஆகாரத்தை சேர்க்கும்படி கட்டளையிட்டார். அவன் அப்படி செய்தபின்பு, தேவன் நோவாவினிடத்தில் அவனையும், அவன் மனைவியையும், அவனுடைய மூன்று குமாரர்களையும் அவர்களுடைய மனைவிகளையும் சேர்த்து எட்டு பேர்களை பேழைக்குள் பிரவேசிக்கும்படி கட்டளையிட்டார்.

---

# 03:06

பெருவெள்ளத்திலிருந்து எல்லா மிருகங்களும், பறவைகளும் ஆணும் பெண்ணுமாக பேழைக்குள் காக்கப்படும்படிக்கு நோவாவினிடத்தில் தேவன் அனுப்பினார். தேவனுக்கு பலியிடும்படிக்கு ஏழு விதமான மிருகஜீவன்கள் ஆணும் பெண்ணுமாக அனுப்பினார். எல்லாம் பேழைக்குள் நுழைந்த பின்பு தேவன்தாமே பேழையின் கதவை அடைத்தார்.

## வருவதற்கு முன்பு எந்த விலங்குகளெல்லாம் பேழைக்குள் வந்தது?

எல்லா வகையான விலங்குகளிலும் ஆணும் பெண்ணுமாகவும், மற்றும் பலியிடப் பயன்படும் ஏழு வகையான மிருகஆணும் பெண்ணுமாக வந்தது.

## நோவாவின் குடும்பமும், எல்லா மிருகஜீவன்களும் பேழைக்குள் வந்தவுடன் யார் பேழையின் கதவை அடைத்தது?

தேவன் கதவை அடைத்தார்.

---

## 03:07

பின்பு பெருமழை பெய்ய ஆரம்பித்தது, நாற்பது நாள் இரவும் பகலும் ஓய்வில்லாமல் பெய்தது. ஜலம் பூமியின்மேல் அதிகமாய் பெருகினதினால், பூமியெங்குமுள்ள உயரமான மலைகளும் மூடப்பட்டன.

## எவ்வளவு காலம் மழை பெய்தது?

இரவும் பகலும் நாற்பது நாள்.

---

## 03:08

பேழைக்குள் பெருவெள்ளத்திலிருந்து காக்கப்படும்படிக்கு இருந்த மனிதர்கள் மற்றும் மிருகஜீவன்கள் தவிர வெட்டந்தரையில் வாழ்ந்த எல்லா ஜீவன்களும் மரித்துப்போயின,

## த்தின் வெள்ளம் எந்த உயரத்தை எட்டினது?

அது முழு உலகத்தையும் மூடி, உயரமான மலைகளையும் மூடிற்று.

## பூமியில் வாழ்ந்த எல்லாவற்றிக்கும் என்ன சம்பவித்தது?

எல்லாம் மரித்துப்போயின.

---

### 03:09

மழை நின்ற பின்பு, பேழை வெள்ளத்தில் ஐந்து மாதம் மிதந்து கொண்டிருந்தது, அப்போது ஜலம் வற்றத்துவங்கியது. பின்பு ஒருநாள் அந்த பேழை ஒரு மலையுச்சியில் வந்து நின்றது, ஆனால் பூமி முழுவதும் வெள்ளத்தினால் மூடப்பட்டிருந்தது. மூன்று மாதத்திற்கு பிறகு, மலையின் மேற்பரப்புகள் தோன்ற ஆரம்பித்தன.

---

### 03:10

மேலும் நாற்பது நாட்களுக்கு பிறகு, ஜலம் வற்றிப்போயிற்றோ என்று அறியும்படி நோவ ஒரு காகத்தை அனுப்பினான், ஜலம் வற்றிப்போன எந்த இடமும் இல்லாததினால் காகம் மறுபடியும் பேழைக்கு திரும்பிற்று.

---

### 03:11

சில நாள் பின்பு ஜலம் வற்றிப்போயிற்றோ என்று அறியும்படி ஒரு புறாவை அனுப்பினான், ஜலம் வற்றாததினால் அது மறுபடியும் நோவாவினிடதிற்கு வந்தது. பின்னும் ஒரு வாரத்திற்கு பிறகு மறுபடியும் புறாவை வெளியே விட்டான், அந்த புறா திரும்பி வந்தபோது ஒரு ஒலிவ மரத்தின் இலை அதின் வாயில் இருந்தது. ஜலத்தின் அளவு குறைந்து, செடிகள் மறுபடியும் முளைக்கஆரம்பித்தன.

---

### 03:12

பின்னும் நோவா ஏழு நாள் பொறுத்து, அந்த புறாவை மூன்றாவது முறையாக அனுப்பினான். இந்த முறை அதற்கு இளைப்பாற இடம் கிடைத்ததினால் அது திரும்பி வரவில்லை. ஜலம் பூமியில் வற்ற ஆரம்பித்தது!

### ஜலம் வற்றினது எப்படி நோவாவுக்குத் தெரியும்?

அவன் ஒரு புறாவை அனுப்பி அது திரும்பி வரவில்லை.

---

## 03:13

இரண்டு மாதத்திற்கு பின்பு தேவன் நோவாவினிடத்தில், நீயும் உன் குடும்பமும் சகல மிருக ஜீவன்களும் பேழையை விட்டு புறப்படு, பலுகி பெருகி பூமியை நிரப்புங்கள் என்றார். எனவே நோவாவும் அவனுடைய குடும்பமும் பேழையை விட்டு வெளிய வந்தனர்.

### நோவாவும் அவனுடைய குடும்பமும் பேழையிலிருந்து இறங்கியவுடன் தேவன் அவர்களிடம் சொன்னது என்ன?

நீங்கள் பிள்ளைகளையும், பேரபிள்ளைகளையும் பெற்று பூமியை நிரப்புங்கள் என்றார்.

---

## 03:14

நோவா பேழையை விட்டு வந்து, பலிபீடத்தைக் கட்டி, பலியிட தகுதியான மிருகஜீவன்களை பலியிட்டான். தேவன் மிகவும் சந்தோஷமடைந்தார், நோவாவையும் அவனுடைய குடும்பத்தையும் ஆசீர்வதித்தார்.

### நோவா பேழையிலிருந்து இறங்கியவுடன் எப்படி தேவனை தொழுதுகொண்டான்?

அவன் ஒரு பலிபீடத்தைக் கட்டி, சில மிருகஜீவன்களை பலி செலுத்தினான்.

---

## 03:15

இனி நான் மனுஷர் நிமித்தம் பூமியை சபிக்கவோ, ஜலத்தினால் அழிக்கவோ மாட்டேன், மனிதர்களுடைய நினைவுகள் அவர்கள் சிறுவயதுமுதல் பொல்லாதவைகளாய் இருக்கிறது என்று தேவன் கூறினார்.

### தேவன் எதை திரும்பவும் செய்வதில்லை என உறுதியளித்தார்?

பூமியை சபிப்பது மற்றும் த்தினால் உலகத்தை அழிப்பது.

---

## 03:16

பின்பு தேவன், நான் என் வில்லை மேகத்தில் உடன்படிக்கையின் அடையாளமாக வைத்தேன். எப்போதெல்லாம் வானவில் ஆகாயத்தில் தோன்றுகிறதோ அப்போது, நான் மனிதர்களிடத்தில் செய்த உடன்படிக்கையை நினைவுகூறுவேன் என்றார்.

### தேவன் தம்முடைய வாக்கை எந்த அடையாளத்தினால் காண்பித்தார்?

அவர் வானத்தில் வானவில்லை வரும்படிச் செய்தார்.

# 4. ஆபிரகாமுடன் தேவனின் உடன்படிக்கை

## 04:01

ஜலபிரளயம வந்து அநேக வருடங்கள் ஆனபின்பு, ஏராளமான ஜனங்கள் உலகத்தில் இருந்தனர். அவர்கள் மற்றவர்களுக்கும் தேவனுக்கும் விரோதமாக பாவம் செய்தனர், ஏனெனில் அவர்கள் எல்லோரும் ஒரே பாஷையை பேசினார்கள். அவர்கள் தேவன் அவர்களுக்கு கட்டளையிட்டதைச் செய்யாமல் எல்லோரும் ஒன்று சேர்ந்து ஒரு நகரத்தை கட்டினார்கள்.

### ஜலத்திற்கு பின்பு, தேவன் கட்டளையிட்டபடியே ஜனங்கள் பூமியை நிரப்பினார்களா?

இல்லை, அவர்கள் ஒன்று சேர்ந்து, நகரத்தைக் கட்டினார்கள்.

### அந்த சமயத்தில் வெவ்வேறு மொழிகள் பூமியில் எத்தனை இருந்தது?

ஒரேஒரு பாஷை மட்டும் தான் இருந்தது.

---

## 04:02

அவர்கள் மிகவும் எப்படி வாழ வேண்டுமென்று தேவன் அவர்களுக்குக் கூறின கட்டளைகளுக்கு செவிகொடுக்க மனதில்லாமல், வானம் தொடும் அளவு ஒரு கோபுரத்தைக் கட்ட ஆரம்பித்தனர். இப்படி அவர்கள் சேர்ந்து அநேக பாவங்களை செய்துகொண்டிருந்ததினாலும், மேலும் அநேக பொல்லாத காரியங்கள் செய்யக்கூடும் என்பதையும் அறிந்தார்.

### பூமியை நிரப்பாமல் ஜனங்கள் ஒன்று சேர்ந்து செய்த வேலை என்ன?

அவர்கள் வானம் தொடும் அளவுக்கு மிகவும் உயரமான கோபுரம் கட்ட ஆரம்பித்தார்கள்.

---

## 04:03

எனவே தேவன் அவர்களுடைய பாஷையை பல பாஷைகளாக பெருகும்படி செய்து, அவர்களை பூமியெங்கும் சிதறப்பண்ணினார். அவர்கள் கட்ட நினைத்த நகரத்தின் பெயர் பாபேல் அப்படியென்றால், குழப்பம் என்று அர்த்தம்.

### ஜனங்கள்உலகம் முழுவதும் பிரிந்துபோகும்படி தேவன் என்ன செய்தார்?

அவர் அவர்களுடைய பாஷையை வெவ்வேறு மொழிகளாக மாற்றினார்.

### அவர்கள் கட்டிக்கொண்டிருந்த நகரத்தின் பெயர் என்ன?

பாபேல்.

### பாபேல் என்றால் அர்த்தம் என்ன?

குழப்பம்.

---

## 04:04

நூறு வருடங்களுக்குப் பிறகு, ஆபிராம் என்னும் ஒருவனோடு தேவன் பேசி, நீ உன் தேசத்தையும், வீட்டையும் விட்டு நான் உனக்கு காண்பிக்கும் தேசத்திற்கு போ. நான் உன்னை ஆசீர்வதித்து, உன்னை ஒரு பெரிய ஜாதியாக்குவேன். நான் உன்னுடைய பெயரை பெருமைப்படுத்துவேன். உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன், உன்னைச் சபிக்கிறவர்களைச் சபிக்கிறேன். பூமியில் உள்ள அனைத்து குடும்பங்களும் உன்னால் ஆசீர்வதிக்கப்படும்."

### ஆபிரகாம் என்ன செய்யும்படி தேவன் சொன்னார்?

ஆபிரகாம் தன்னுடைய வீடு மற்றும் தேசத்தை விட்டு வேறு தேசத்திற்குப் போகும்படி தேவன் சொன்னார்.

### ஆபிரகாமுக்கு என்ன செய்வதாக தேவன் வாக்குப்பண்ணினார்?

அவன் காண்கிற எல்லா தேசத்தையும் அவனுக்கும், அவனுடைய சந்ததிக்கும் கொடுத்து, அவனுடைய பெயரையும், அவன் சந்ததியின் பெயரையும் பெருமைப்படுத்தி, அவனால் பூமியின் வம்சங்களெல்லாம் ஆசீர்வதிப்பதாக வாக்குப்பண்ணினார்.

---

## 04:05

எனவே ஆபிராம் தேவனுக்குக் கீழ்படிந்தான். அவன் தனது மனைவியாகிய சாராளையையும், தன்னுடைய வேலைக்காரர்களையும், தனக்கு உண்டான எல்லாவற்றோடுங்கூட தேவன் அவனுக்குக் காண்பித்த கானான் தேசத்திற்குப் போனான்.

### ஆபிரகாம் எந்த தேசத்திற்குப் போனான்?

கானான் தேசம்.

## 04:06

ஆபிராம் கானான் சேர்ந்தபின்பு, தேவன் அவனிடத்தில், உன்னை சுற்றிலுமுள்ள எல்லாவற்றையும் பார். இந்த தேசத்தை உனக்குத் தருவேன், உன்னுடைய சந்ததி எப்போதும் இதை சுதந்தரித்துக் கொள்வார்கள் என்றார். பின்பு ஆபிராம் அங்கேயே குடியேறி விட்டான்.

### கானானை பற்றி தேவன் ஆபிரகாமிடம் வாக்குப்பண்ணினது என்ன?

தேவன் அந்த தேசத்தை ஆபிரகாமுக்கும் அவனுடைய சந்ததிக்கும் சுதந்திரமாக தருவேன் என்று வாக்குப்பண்ணினார்.

---

## 04:07

உன்னதமான தேவனுடைய ஆசாரியனாகிய மெல்கிசேதேக் என்னும் ஒருவன் இருந்தான். ஒருநாள் யுத்தம் முடிந்து வரும் போது ஆபிராம் அவனைக் கண்டான். மெல்கிசேதேக் ஆபிராமை ஆசீர்வதித்து, வானத்தையும், பூமியையும் உருவக்கின உன்னதமான தேவன் ஆபிராமை ஆசீர்வதிப்பார் என்றான். பின்பு ஆபிராம் யுத்தத்தில் தான் சம்பாதித்த எல்லாவற்றிலும் பத்தில் ஒரு பங்கு மெல்கிசேதேக்கிற்கு தசமபாகம் செலுத்தினான்.

### மெல்கிசேதேக் என்பவன் யார்?

அவன் உன்னதமான தேவனுடைய ஆசாரியன்.

### மெல்கிசேதேக் ஆபிரகாமை என்ன செய்தான்?

அவன் ஆபிரகாமை ஆசீர்வதித்தான்.

### ஆபிரகாம் மெல்கிசெதேக்குவிற்கு என்ன கொடுத்தான்?

தனக்கு உண்டான எல்லாவற்றிலும் தசமபாகத்தைக் கொடுத்தான்.

---

## 04:08

அநேக வருடங்களாகியும் ஆபிராமும், சாராயும் பிள்ளை இல்லாதிருந்தார்கள். தேவன் ஆபிராமினிடத்தில் நீ ஒரு குமாரனைப் பெறுவாய், மேலும் வானத்தின் நட்சத்திரங்களைப்போல உன் சந்ததி பெருகும் என்றும் வாக்குத்தத்தம் பண்ணினார்.

ஆபிராம் தேவனை விசுவாசித்தான். ஆபிராம் தேவனின் வாக்குத்தத்த விசுவாசித்தபடியால் அவனை நீதிமான் என்று சொன்னார்.

### கானானில் அநேக வருடங்கள் வாழ்ந்த ஆபிரகாமிடம் தேவன் வாக்குப்பண்ணினது என்ன?

ஆபிரகாமுக்கு ஒரு குமாரனை கொடுப்பதாகவும் மற்றும் அந்த சந்ததி வனத்தின் நட்சத்திரங்களைப்போல இருக்கும் என்றும் வாக்குப்பண்ணினார்.

### ஆபிரகாம் நீதினாம் என்று ஏன் தேவன் சொன்னார்?

தேவனுடைய வாக்குத்தத்தத்தை ஆபிரகாம் விசுவாசித்தான்.

---

## 04:09

பின்பு தேவன் ஆபிராமோடு உடன்படிக்கை பண்ணினார். பொதுவாக உடன்படிக்கை என்பது இருவருக்கு நடுவாக ஏற்படுத்திக்கொள்வது ஆனால் இங்கே, ஆபிராம் நன்றாகத் தூங்கிக்கொண்டிருக்கும்போது அவனோடு உடன்படிக்கைப்பண்ணினார். அப்போது அவனால் தேவனுடைய சத்தத்தை கேட்க முடிந்தது. அவர் கூறியது என்னவென்றால், உனக்கு ஒரு குமாரனைப் பிறக்கும்படி செய்து, உன்னுடைய சந்ததிக்கு கானான் தேசத்தைக் கொடுப்பேன் என்றார், அப்போது ஆபிராமுக்கு பிள்ளை இல்லாதிருந்தது.

### உடன்படிக்கை என்றால் என்ன?

இருவருக்குள் ஏற்படுத்தும் ஒப்பந்தம்.

# 5. The Son of Promise

## 05:01

பத்து வருடங்களுக்குப்பின் ஆபிராமும் சாராயும் கானானில் வந்து சேர்ந்தார்கள், அப்போது அவர்களுக்குக் குழந்தை இல்லை எனவே சாராய் தன் புருஷனாகிய ஆபிராமினிடத்தில் நான் பிள்ளை பெறாதபடிக்கு தேவன் என் கர்ப்பத்தை அடைத்தார், நான் முது வயதும் ஆனேன் எனவே என்னுடைய வேலைக்காரி ஆகார் என்பவளை நீர் திருமணம் செய்து எனக்கு பிள்ளைப் பெற்றுதாரும் என்றாள்.

### சாராய் அவளுக்குப் பிள்ளை என்று ஏன் நினைத்தாள்?

அவளுக்கு வயதாகிவிட்டதினால்.

### குழந்தை பெற்றுக்கொள்ள சாராய் ஆபிராமிடம் சொன்னது என்ன?

என்னுடைய வேலைக்காரி ஆகாரை திருமணம் செய்து, அவளுக்கு குழந்தைப் பெறும்படி சொன்னாள்.

---

## 05:02

எனவே ஆபிராம் ஆகாரை திருமணம் செய்து, அவளுக்கு ஒரு ஆண் பிள்ளை பிறந்தது, அந்தக் குழந்தைக்கு இஸ்மவேல் என்று ஆபிராம் பெயரிட்டான். அதன் பின்பு ஆகார் மீது சாராய்க்கு மிகுந்த பொறாமை ஏற்பட்டது. இஸ்மவேல் பதிமூன்று வயதாய் இருக்கும்போது ஆபிராமினிடத்தில் தேவன் பேசினார்.

### ஆகாரின் குழந்தையின் பெயர் என்ன?

இஸ்மவேல்

### சாராய் மற்றும் ஆகாருக்கு ஏற்பட்ட பிரச்சனை என்ன?

சாராய் ஆகார் மேல் பொறாமைபட்டாள்.

---

## 05:03

நான் சர்வ வல்லமையுள்ள தேவன். நான் உன்னோடு உடன்படிக்கைப் பண்ணுவேன் என்று தேவன் பேசினார். மேலும் அவர் கூறியது, உன்னை தேசங்களுக்கு தகப்பன் ஆக்குவேன். உனக்கும் உன் சந்ததிக்கும் கானான் தேசத்தை சுதந்திரமாகக் கொடுத்து,

நான் என்றென்றைக்கும் அவர்களுக்கு தேவனாயிருப்பேன் என்றார். உன் சந்ததியில் எல்லா ஆண் பிள்ளைகளும் விருத்தசேதனம் பண்ணவேண்டும் என்றும் கட்டளைக் கொடுத்தார்.

### தேவன் ஆபிராமுடன் செய்துகொண்ட உடன்படிக்கையின் வாக்குத்தத்தம் என்ன?

ஆபிராம்அநேக தேசங்களுக்கு தகப்பனாயிருப்பான் மற்றும் தேவன் கானான் தேசத்தை அவனுக்கும் அவனுடைய சந்ததிக்கும் தருவது தான்.

### அந்த உடன்படிக்கையின் அடையாளமாக என்ன செய்யும்படி தேவன் ஆபிராமிடம் சொன்னார்?

அவனுடைய குடும்பத்தில் உள்ள எல்லா ஆண்களும் விருத்தசேதனம்பண்ணும்படி சொன்னார்.

---

## 05:04

உன்னுடைய மனைவியாகிய சாராய் ஒரு குமாரனைப் பெறுவாள், அவனே வாக்குத்தத்தின் மகன். அவனுக்கு ஈசாக்கு என்று பெயரிடும்படி கூறினார். நான் அவனோடு உடன்படிக்கைப் பண்ணி, அவனை பெரிய ஜாதியாக்குவேன், என்னுடைய உடன்படிக்கை ஈசாக்குடன் இருக்கும் என்றார். பின்பு ஆபிராமின் பெயரை ஆபிரகாம் என்று மாற்றினார், அப்படியென்றால் ஜாதிகளுக்குத் தகப்பன் என்று அர்த்தம். அதுமட்டுமல்லாமல் சராய் என்ற பெயரையும் சாராள் என்று மாற்றினார், அப்படியென்றால் இளவரசி என்று அர்த்தம்.

### வாக்குத்தத்தின் மகன் யார் என்று தேவன் சொன்னார்?

சாராயின் மகன் ஈசாக்கு.

### யார் பெரிய தேசம் ஆவதாக தேவன் சொன்னார்?

ஈசாக்கு இஸ்மவேல் இருவரும்.

### ஆபிராமின் புது பெயர், ஆபிரகாம், என்றால் அர்த்தம் என்ன?

அநேக தேசங்களுக்குத் தகப்பன்.

---

## 05:05

அந்த நாளில் ஆபிரகாம் தன்னுடைய குடும்பத்தில் இருந்த எல்லா ஆண்களுக்கும் விருத்தசேதனம் செய்தான். பின்பு பத்து வருடங்களுக்குப் பிறகு ஆபிரகாமுக்கு 100

வயதும், சாராளுக்கு 90 வயதாய் இருந்த சமயத்தில் அவர்களுக்கு ஒரு ஆண் பிள்ளை பிறந்தது. அவனுக்கு ஈசாக்கு என்று பெயரிட்டனர்.

---

## 05:06

ஈசாக்கு வாலிபனாய் இருந்தபோது, உன்னுடைய ஒரே குமாரனாகிய ஈசாக்கை எனக்கு பலி செலுத்து என்று தேவன் ஆபிரகாமின் விசுவாசத்தை சோதித்தார். பின்னும் ஆபிரகாம் தேவனுக்குக் கீழ்படிந்து தன்னுடைய குமாரனை பலி செலுத்தும்படிக்கு ஆயத்தம் பண்ணினான்.

### ஈசாக்கு வாலிபனாய் இருக்கும்போது, என்ன செய்யும்படி தேவன் ஆபிரகாமிடம் சொன்னார்?

ஈசாக்கை தமக்கு பலியிடும்படி தேவன் ஆபிரகாமிடம் சொன்னார்.

ஏன் ஈசாக்கை ஆபிரகாம் பலியிடும்படி தேவன் சொன்னார்? ஆபிரகாமின் விசுவாசத்தை சோதிக்கும்படிக்கு.

---

## 05:07

ஆபிரகாமும் ஈசாக்கும் பலி செலுத்தப் போகும் வழியில், ஈசாக்கு தன் தகப்பனிடத்தில், பலி செலுத்தும்படிக்கு நம்மிடத்தில் விறகு உண்டு, ஆடு எங்கே என்று கேட்டான். அதற்கு ஆபிரகாம், தேவன் தருவார் என்று கூறினான்.

### பலி செலுத்த ஆடு இல்லை என்றதற்கு ஈசாக்கிடம் ஆபிரகாம் சொன்ன காரணம் என்ன?

பலிசெலுத்த ஆடு தேவன் தருவார் என்று ஆபிரகாம் சொன்னான்.

---

## 05:08

ஆபிரகாம் பலி செலுத்தும் இடம் வந்தபோது, தன் மகனாகிய ஈசாக்கைக் கட்டி அந்த பலிபீடத்தின் மேல் வைத்தான். பின்பு அவனைக் கொலை செய்யப்போகும் நேரத்தில், தேவன் ஆபிரகாமைத் தடுத்து, அவனை ஒன்றும் செய்யாதே, இப்போது நீ எனக்கு பயப்படுவதை அறிந்தேன் ஏனெனில் உன்னுடைய ஒரே குமாரனை கூட எனக்கு விலக்கவில்லை என்றார்.

### ஈசாக்கை ஆபிரகாம் தேவன் விரும்பினாரா?

இல்லை. ஆபிரகாம் தேவனுக்குக் கீழ்படிகிறானா என்பதை மட்டும் அறிய விரும்பினார்.

---

## 05:09

பக்கத்தில் ஒரு புதரில் ஒரு ஆட்டுக்குட்டியை ஆபிரகாம் கண்டு, தன் மகனுக்கு பதிலாக ஒரு ஆட்டுக்குட்டியை ஆயத்தம் செய்த தேவனுக்கு மிகுந்த சாதோஷமாக அந்த ஆட்டுக்குட்டியை பலி செலுத்தினான்.

### ஈசாக்குக்கு பதிலாக பலிசெலுத்த தேவன் தந்தது என்ன?

முள்ளில் சிக்கிக்கொண்டிருந்த ஒரு ஆட்டுக்குட்டியை தேவன் கொடுத்தார்.

---

## 05:10

பின்பு தேவன் ஆபிரகாமினிடத்தில், நீ உன்னுடைய ஒரே குமாரன் என்றும் பாராமல் எல்லாவற்றையும் எனக்குக் கொடுக்க ஆயத்தமாய் இருப்பதினால், மற்றும் என் வார்த்தைக்கு கீழ்படிந்ததினாலும், நான் உன்னை அசீர்வதித்து, உன்னுடைய சந்ததியை வானத்தின் நட்சத்திரங்களைப் போல பெருகச் செய்வேன். பூமியின் வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும் என்றார்.

### தேவனுக்கு ஆபிராம்கீழ்ப்படிந்ததினால், அவனுக்கு என்ன செய்வதாக தேவன் வாக்குப்பண்ணினார்?

அவனுடைய சந்ததி வானத்தின் நட்சத்திரங்களை விட அதிகமாகும் மற்றும் அவனுக்குள் பூமியின் வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும் என்றும் தேவன் வாக்குப்பண்ணினார்.

# 6. தேவன் ஈசாக்குக்குக் கொடுத்தார்

## 06:01

ஆபிரகாம் முதிர் வயதானபோது, ஈசாக்கும் வளர்ந்து பெரியவனானான். ஆபிரகாம் தன் வேலைக்காரனை தன்னுடைய சொந்தக்காரர்கள் குடியிருக்கும் தேசத்திற்கு அனுப்பி தன்னுடைய குமாரனாகிய ஈசாக்குக்கு பெண் பார்க்கும்படி அனுப்பினான்.

### ஆபிரகாம் எதினால் அவனுடைய வேலைகரனை தன்னுடைய உறவினர் இருக்கும் ஊருக்கு அனுப்பினான்?

தன்னுடைய மகனாகிய ஈசாக்குக்கு மனைவியை கொண்டுவரும்படி.

---

## 06:02

வெகு தூரமான ஆபிரகாமின் சொந்தக்காரர்கள் வசிக்கும் தேசம் வந்தபோது, ஆபிரகாமுடைய சகோதரனுடைய மகள் ரெபெக்காள் என்பவளிடத்திற்கு தேவன் அந்த வேலைக்காரனை நடத்தினார்.

### வேலைக்காரன் எப்படி ரெபெக்காளை கண்டுபிடித்தான்?

தேவன் அவனை அவளிடத்தில் கொண்டுபோனார்.

### ரெபெக்காள் எவ்விதத்தில் ஆபிரகாமின் சொந்தம்?

ரெபெக்காள், ஆபிரகாமின் சகோதரனுடைய பேத்தி.

---

## 06:03

தன்னுடைய குடும்பத்தாரை விட்டு அவர்களோடே ஈசா வீட்டிற்குப் போகும்படி ரெபெக்காள் முடிவுசெய்து, அங்கே சேர்ந்ததும் ஈசாக்கை திருமணம் செய்தாள்.

### வேலைக்காரனோடு போய், ஈசாக்கை திருமணம் செய்ய ரெபெக்காள் கட்டாயப்படுத்தப்பட்டாளா?

இல்லை. அவள் போவதற்கு சம்மதித்தாள்.

---

## 06:04

அநேக நாட்களுக்குப்பின் ஆபிரகாம் மரித்தான். பின்பு தேவன் அவனுடைய குமாரனாகிய ஈசாக்கை ஆசீர்வதித்தார் ஏனெனில் ஆபிரகாமுடன் தேவன் உடன்படிக்கை செய்திருந்தார். தேவனுடைய வாக்குத்தத்தங்களில் ஆபிரகாமின் சந்ததி எண்ணமுடியாத அளவு பெருகும் என்பது ஆனால் ஈசாக்கின் மனைவி ரெபெக்காள் பிள்ளையில்லாதிருந்தாள்.

### ஆபிரகாம் மரித்தப்பின்பு, தேவனுடைய எந்த வாக்குத்தத்தம் ஈசாக்குக்கு கிடைத்தது?

தேவன் ஆபிரகாமுடன் செய்த எல்லா வாக்குத்தத்தங்களும், எண்ணமுடியாத சந்ததி உண்டாகும் என்ற வாக்குத்தத்தமும் சேர்த்து அவனுக்குக் கிடைத்தது.

### எண்ணமுடியாத சந்ததி உண்டாவது ஏன் ஈசாக்கினால் செய்யமுடியாததாய் இருந்தது?

ரெப்பெக்காளினால் குழந்தை பெற்றெடுக்க முடியவில்லை.

---

## 06:05

ஈசாக்கு ரெபெக்காவுக்காக ஜெபித்தான், ரெபெக்காள் கருவுற்று இரட்டை குழந்தைகள் கருவுறும்படி செய்தார். அந்த இரண்டு குழந்தைகளும் ரெபெக்காளின் கருவுக்குள் இருக்கும்போது மோதிக்கொண்டனர், எனவே அவள் அதை தேவனிடம் கேட்டாள்.

---

## 06:06

உனக்குப் பிறக்கும் இரண்டு குழந்தைகளும் இரண்டு ஜனங்கள். அவர்களில் ஒரு ஜனத்தார் மற்ற ஜனத்தாரைப்பார்க்கிலும் பலத்திருப்பார்கள், மூத்தவன் இளையவனைச் சேவிப்பான் என்று தேவன் சொன்னார்.

### ரெபெக்காளுக்கு இரட்டை குழந்தைகள் பிறக்கும் முன்பு தேவன் அவளிடம் அந்தக் குழந்தைகளைப் பற்றி சொன்னது என்ன?

அவர்கள் இருவரும் இரண்டு தேசங்களாவார்கள், மற்றும் மூத்த குமாரன் இளையவனை சேவிப்பான்.

---

# 06:07

ரெபெக்காளுக்கு இரட்டைப் பிள்ளைகள் பிறந்தபோது, மூத்தவன் சிவந்த நிறமுள்ளவனாயும் உடலெல்லாம் ரோம அங்கி போர்த்தவன் போல பிறந்தான். அவனுக்கு ஏசா என்றும், பின்பு அவன் சகோதரன் தன் கையினாலே ஏசாவின் குதிகாலைப் பிடித்துக்கொண்டு பிறந்ததினால், அவனுக்கு யாக்கோபு என்று பேரிட்டார்கள்.

## மூத்த குமாரனின் பெயர் என்ன?

ஏசா.

இளைய குமாரனின் பெயர் என்ன? யாக்கோபு.

# 7. தேவன் யாக்கோபை ஆசீர்வதித்தல்

## 07:01

அவர்கள் இருவரும் வளர்ந்து பெரியவர்களானபோது, யாக்கோபு வீட்டிலே தங்கி இருப்பதை விரும்பினான்,ஏசா வேட்டையாடுவதில் வல்லவனானான். ரெபெக்காள் யாக்கோபை மிகவும் நேசித்தாள், ஈசாக்கு ஏசாவை நேசித்தான்.

---

## 07:02

ஒருநாள் ஏசா வேட்டையாடி முடித்து வீடு திரும்பியதும் அவனுக்கு மிகவும் பசி உண்டாயிற்று, எனவே அவன் யாக்கோபினிடத்தில் நீ சமைத்ததில் கொஞ்சம் எனக்கு கொடு என்றான். அதற்கு யாக்கோபு, முதலில் அவனுடைய சேஷ்டபுத்திரபாகத்தைத் தருபடி கேட்டான், ஏசாவும் அப்படியே சம்மதிததான். பின்பு யாக்கோபு அவனுக்குக் கொஞ்சம் உணவு கொடுத்தான்.

## இளைய குமாரனாகிய யாக்கோபு எப்படி மூத்த குமாரனுடைய உரிமையை அடைந்தான்?

கொஞ்சம் உணவு யாக்கோபு ஏசாவுக்குக் கொடுத்ததினால் அவன் மூத்த குமாரனுடைய உரிமையை அடைந்தான்.

---

## 07:03

ஈசாக்கு தான் மரணமடையுமுன்னே மூத்தக் குமாரனாகிய ஏசாவை ஆசீர்வதிக்க விரும்பினான், ஆனால் ரெபெக்காளும் யாக்கோபும் தந்திரமாய் ஏசாவின் உடலில் உள்ள ரோமத்தை போல் ஆட்டுத்தோலை கைகளிலும், கழுத்திலும் உடுத்தி, வயதின் காரணமாய் ஈசாக்கின் கண்கள் இருளடைந்ததினால் அவனை வஞ்சித்தனர்.

## தன்னுடைய பொதுவான ஆசீர்வாதத்தை ஈசாக்கு யாரிடம் கொடுக்க விரும்பினான்?

ஏசா.

## ஈசாக்கு கொடுக்கும் ஆசீர்வாதத்தை பெற யாக்கோபு என்ன சதி செய்தான்?

தன்னை ஈசாக்கு, ஏசா என்று நினைக்கும்படி ஆட்டுத்தோலை போர்த்திக்கொண்டான்.

---

## 07:04

யாக்கோபு தன் தகப்பனிடத்தில் வந்து நான் உம்முடைய குமாரனாகிய ஏசா என்றான். அவனுடைய தோல் ஆட்டுத்தோலைப் போலிருந்து வாசனை வீசியதில் அவன் ஏசா என்று நினைத்து ஆசீர்வதித்தான்.

---

## 07:05

ஏசா யாக்கோபை மிகவும் வெறுத்தான்.ஏனென்றால்தன்னுடைய சேஷ்டபுத்திரபாகத்தையும், தன்னுடைய அசீர்வதத்தையும் திருடிபடியால், தகப்பன் மரித்தப்பின்பு அவனைக் கொன்றுபோடும்படி யோசனைபண்ணினான

## ஏசாவின் ஆசீர்வாதத்தை யாக்கோபு திருடியதினால், ஏசா அவனை என்ன செய்யும்படி நினைத்தான்?

ஈசாக்கு மரித்தப்பின்பு, யாக்கோபை கொலை செயும்படி ஏசா நினைத்தான்.

---

## 07:06

இந்தத் திட்டத்தை அறிந்த ரெபெக்காளும் ஈசாக்கும் யாக்கோபை தூரத்தில் உள்ள தன்னுடைய உறவினருடைய வீடிற்கு அனுப்பினார்கள்.

## ஏசா யாக்கோபை கொலை செய்ய நினைப்பதை அறிந்த ஈசாக்கும், ரெபெக்காளும் என்ன செய்தனர்?

அவர்கள் யாக்கோபை தூரத்தில் இருக்கும் ரெபெக்காளின் சொந்தக்காரர் வீட்டில் தங்கும்படி அனுப்பினார்கள்.

---

## 07:07

ரெபெக்காளுடைய உறவினருடன் யாக்கோபு அநேக வருடங்கள் வாழ்ந்து, அங்கே திருமணம் செய்து, பன்னிரண்டு ஆண் பிள்ளைகளும், ஒரு பெண் பிள்ளையும் உண்டானது. தேவன் அவனை ஆசீர்வதித்தார்.

### அடுத்த இருபது வருடங்கள் யாக்கோபுக்கு என்ன நடந்தது?

அவன் திருமணம் செய்து, பன்னிரண்டு மகன்கள் மற்றும் ஒரு பெற்று இருந்தான், மற்றும் தேவன் அவனை பெருகப்பண்ணினார்.

---

## 07:08

இருபது வருடங்கள் கழித்து, யாக்கோபு அவனுடைய குடும்பம், வேலைக்காரர்கள் மற்றும் அவனுக்கு உண்டான எல்லா மிருக ஜீவன்களோடும் தன்னுடைய சொந்த ஊரான கானானுக்குத் திரும்பினான்.

---

## 07:09

ஏசா தன்னை இன்னும் கொன்றுபோட நினைத்துக் கொண்டிருக்கிறான் என்று யாக்கோபு பயந்து, அவனுடைய ஆடு, மாடுகளில் கொஞ்சம் ஏசாவுக்கு பரிசாகக் கொடுக்கும்படி தன்னுடைய வேலைக்காரர்களை அவைகளுக்கு முன்பாக அனுப்பி, உம்முடைய அடியானாகிய யாக்கோபு இவைகளை உமக்குத் தந்தார். அவர் சீக்கிரத்தில் உம்மிடத்தில் வருவார் என்று சொல்லும்படி அனுப்பினான்.

### யாக்கோபு திரும்பவும் கானானுக்கு வரும்போது ஏன் பயந்தான்?

ஏசா அவனைக் கொலை செய்வான் என்று நினைத்தான்.

### ஏசாவினுடைய கோபத்தை போக்க யாக்கோபு என்ன செய்தான்?

அவன் மந்தையின் விலங்குகளை ஏசாவுக்கு பரிசாக அனுப்பினான்.

---

# 07:10

ஆனால் ஏசா தன் சகோதரனுக்குத் தீங்கு செய்ய நினையாமல், அவனைத் திரும்பவும் கண்டதினால் மிகுந்த சந்தோஷமடைந்தான். யாக்கோபு, கானான் தேசத்தில் சமாதானத்தோடு இருந்தான். பின்பு ஈசாக்கு மரித்தான். யாக்கோபும் ஏசாவும் தகப்பனை அடக்கம் செய்தனர். தேவன் ஆபிரகாமோபண்ணின உடன்படிக்கை ஈசாக்கினிடமிருந்து யாக்கோபுக்கு வந்தது.

## ஏசா இன்னும் யாக்கோபின்மேல் கோபமாய் இருந்தானா?

இல்லை. அவனை ஏற்கனவே மன்னித்துவிட்டான்.

## யாக்கோபு எங்கே வாழ்ந்தான்?

கானானில்.

## ஈசாக்கு மரித்தபின்பு, தேவன் உண்மையாகவே ஆபிரகாமினிடத்தில் கொடுத்த உடன்படிக்கையின் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டது யார்?

யாக்கோபு.

# 8. யோசேப்பையும் அவனுடைய குடும்பத்தையும் தேவன் காப்பாற்றுதல்

## 08:01

அநேக வருடங்களுக்குப் பிறகு, யாக்கோபு தான் மிகவும் நேசித்த அவனுடைய செல்ல மகனான யோசேப்பை, ஆடுகளை மேய்த்துக்கொண்டிருந்த அவனுடைய மூத்த சகோதரர்களை பார்த்து வரும்படி அனுப்பினான்.

---

## 08:02

யோசேப்பின் சகோதரர்கள் அவனை மிகவும் வெறுத்தனர், ஏனெனில் அவர்களுடைய தகப்பன் எல்லோரையும்விட யோசேப்பை மிகவும் நேசித்தான். அதுவுமல்லாமல் அவர்கள் எல்லோரையும் தான் ஆளுவதுபோல யோசேப்பு சொப்பனம் கண்டிருந்தான், அதினால் யோசேப்பு தன் சகோதரர்களிடத்தில் வந்தபோது அவனைப் பிடித்து அடிமைக்கொள்கிறவர்களிடத்தில் விற்றுப்போட்டனர்.

### யோசேப்பின் சகோதரர்கள் ஏன் அவனை வெறுத்தனர்?

யோசேப்பு யாக்கோபின் செல்ல பிள்ளையாயும், மற்றும் அவர்கள் எல்லோரையும் ஆளுகிறவனாக யோசேப்பு சொப்பனம் பார்த்திருந்ததினாலும்.

### யோசேப்பின் சகோதரர்கள் அவனுக்கு என்ன தீமை செய்தனர்?

அவனைப் பிடித்து, அடிமைகொள்கிறவர்களிடத்தில் விற்றுப்போட்டனர்.

---

## 08:03

யோசேப்பின் சகோதரர்கள் வீடு திரும்பும் முன்னே, அவனுடைய அங்கியை, ஆட்டுக் கடாவின் இரத்தத்தில் நனைத்து, ஏதோ ஒரு விலங்கு அவனைக் கொன்று போட்டிருக்கும் என்று நினைக்கிறோம் என்று சொல்லி அந்த ஆடையை யாக்கோபினிடத்தில் காண்பித்தார்கள். யாக்கோபு மிகவும் வருத்தப்பட்டான்.

### யோசேப்பின் சகோதரர்கள் அவன் இல்லாமற்போனதை எப்படி யாக்கோபுக்கு சொன்னார்கள்?

யோசேப்பின் அங்கியில் ஆட்டு இரத்தத்தை தெளித்து, எதோ ஒரு மிருகம் அவனைக் கொன்றுபோட்டிருக்கும் என்று யாக்கோபு நினைக்கும்படி செய்தனர்.

---

## 08:04

அடிமைக்கொள்கிறவர்கள் யோசேப்பை நயல் நதியின் அருகில் இருந்த மிகவும் பெரிய தேசமான எகிப்திற்கு கொண்டு சென்று, உயர்ந்த ஸ்தானத்தில் இருந்த ஒரு அதிகாரியினிடம் அவனை விற்றுப்போட்டனர். யோசேப்பு தன் எஜமானுக்கு சரியாய் வேலை செய்தான், தேவன் யோசேப்பை ஆசீர்வதித்தார்.

### தேவன் யோசேப்பை எகிப்தில் கைவிட்டாரா?

இல்லை. யோசேப்பு செய்த காரியங்களிலும், தேவன் அவனை ஆசீர்வதித்தார்.

---

## 08:05

யோசேப்பின் எஜமானின் மனைவி அவனோடு சந்தோஷமாய் இருக்கும்படி அழைத்தாள், தான் தேவனுக்கு விரோதமான பாவத்தை செய்ய முடியாது என்று மறுத்ததால், அவள் கோபமடைந்து, அவன்மேல் பொய்யான பழிசாட்டி, அவனை காவலில் அடைத்தாள். காவலிலும் யோசேப்பு உண்மையாய் இருந்தான், எனவே தேவன் அவனை ஆசீர்வதித்தார்.

### ஏன் யோசேப்பு எகிப்தின் சிறைக்கு அனுப்பப்பட்டான்?

யோசேப்பின் எஜமானின் மனைவியுடன் அவன் இருக்க மறுத்ததினால், அவள் பொய்யான பழியை அவன்மேல் சுமர்த்தினாள்.

---

## 08:06

தவறு ஏதும் செய்யாமல் இரண்டாவது வருடமும் சிறையில் இருக்கையில், எகிப்தின் ராஜாவாகிய பார்வோன் என்பவனுக்கு, இரவில் ஒரு சொப்பனம் உண்டாகி, அதின் விளக்கத்தை அவனுடைய ஆலோசனைக்காரர் முடியவில்லை.

---

## 08:07

தேவன் யோசேப்புக்கு சொப்பனத்தை விளங்கும் கிருபையை கொடுத்திருந்ததினால், அவன் பார்வோனுக்கு முன்பாக வரவழைக்கப்பட்டு, தேவன் முதல் ஏழு வருடம் செழிப்பையும், பின்வரும் ஏழு வருடம் பஞ்சத்தையும் வரும்படிச் செய்வார் என்று, அந்த சொப்பனத்தின் விளக்கத்தை யோசேப்புக் கூறினான்.

### எப்படிப்பட்ட திறமையை தேவன் யோசேப்புக்குக் கொடுத்தார்?

சொப்பனங்களின் அர்த்தத்தை விளக்கும் திறமையைக் கொடுத்தார்.

### பார்வோனின் சொப்பனத்தின் அர்த்தம் என்ன?

அது தேவன் அனுப்பும் செழிப்பான ஏழு வருடம், அதோடு ஏழு வருடம் பஞ்சம் உண்டாகும்.

---

## 08:08

பார்வோனுக்கு யோசேப்பை மிகவும் பிடித்ததினால், யோசேப்பை எகிப்து தேசம் முழுவதுக்கும் பார்வோனுடைய இரண்டாவது அதிகாரியாக்கினான்.

### யோசேப்பு பார்வோனின் சொப்பனத்தை விளக்கி சொன்னபிறகு எப்படி யோசேப்பை கணம்பண்ணினான்?

அவன் யோசேப்பை எகிப்து தேசத்தின் முழு அதிகாரமுடைய இரண்டாவது மனிதனாக ஏற்படுத்தினான்.

---

## 08:09

முதல் ஏழு வருடத்தின் அறுவடையை களஞ்சியத்தில் செர்த்து வைக்கும்படி யோசேப்பு ஜனங்களிடம் கூறினான். அதன் பின்பு வந்த ஏழு வருடம் சேர்த்து வைத்த உணவை ஜனங்களுக்கு விற்றான். அது அவர்களுக்கு போதுமான அளவு இருந்தது.

### யோசேப்பு பஞ்ச காலத்திற்கு எப்படி ஆயத்தம் ஆனான்?

செழிப்பான ஏழு வருடத்தின் விளைச்சலை மிகுதியாய் கடங்கில் சேமித்து வைக்கும்படி எகிப்தியரிடம் சொல்லி, அந்த சேமித்து வைத்த உணவை ஜனங்களுக்கு பஞ்சம் இருந்த ஏழு வருடமும் விற்றான்.

---

## 08:10

பஞ்சம் எகிப்தில் மட்டுமல்லாமல், யாக்கோபும், அவனுடைய குடும்பத்தாரும் இருந்த கானான் தேசத்திலும் மிகவும் கொடிதாய் இருந்தது.

---

## 08:11

எனவே யாக்கோபு தன்னுடைய குமாரர்களை எகிப்து தேசத்திற்கு உணவு வாங்கி வரும்படி அனுப்பினான். உணவு வாங்கும்படி யோசேப்பின் சகோதரர்கள் அவனுக்கு முன்பாக நிற்கும்போது அவர்கள் யோசேப்பை அறியவில்லை, ஆனால் யோசேப்புக்கு தன்னுடைய சகோதரர்கள் தான் அவர்கள் என்று விளங்கிற்று.

### யோசேப்பின் சகோதரர்கள் ஏன் எகிப்திற்கு வந்தார்கள்?

கானானிலும் கடுமையான பஞ்சம் இருந்ததினால், உணவு வாங்கும்படி அவர்கள் எகிப்திற்கு வந்தார்கள்.

---

## 08:12

அவர்கள் மாறிவிட்டார்களோ என்று யோசேப்பு சோதித்தப் பின்பு, நான் தான் உங்கள் சகோதரன், யோசேப்பு! என்று அவர்களிடம் கூறினான். மேலும் பயப்படாதிருங்கள். நீங்கள் எனக்குத் தீமை செய்யும்படி என்னை விற்றுப்போட்டீர்கள், ஆனால் தேவன் அதை நன்மையாக மாறப்பண்ணினார். வந்து எகிப்திலே இருங்கள், நான் உங்களுக்கும், உங்கள் குடும்பத்தாருக்கும் உதவி செய்வேன் என்று அவர்களிடம் கூறினான்.

### யோசேப்பு அவன் சகோதரர்களிடம் தான் யார் என்று சொல்வதற்கு முன் அவர்களை எப்படி சோதித்தான்?

அவர்கள் மாறிவிட்டார்களோ என்று அறியும்படி சோதித்தான்.

### யோசேப்பின் சகோதரர்கள் அவனை எகிப்தில் அடிமையாக விற்றதை தேவன் எப்படி நன்மையாக மாறப்பண்ணினார்?

தேவன் யோசேப்பை மிகவும் உயர்ந்த அதிகாரியாக்கி, அவனுடைய குடும்பத்திற்கும் மற்ற அநேக ஜனங்களுக்கும் பஞ்ச காலத்தில் உணவு கொடுக்கும்படி மாற்றினார்.

---

## 08:13

யோசேப்பின் சகோதரர்கள் மீண்டும் தங்கள் தகப்பனிடம் வந்து, யோசேப்பு உயிரோடிருக்கிறான் என்று சொன்னார்கள், யாக்கோபு மிகவும் சந்தோஷமடைந்தான்.

---

## 08:14

யாக்கோபு முதிர்வயதாகியும், தன்னுடைய எல்லாவற்றோடும் எகிப்துக்கு சென்று, அங்கே வாழ்ந்து, தான் மரிக்கும் முன்னே, யோசேப்பின் இரண்டு குமாரர்களையும் ஆசீர்வதித்தான்.

### யோசேப்பு இன்னும் உயிரோடு இருப்பதை அறிந்த யாக்கோபு என்ன செய்தான்?

அவன் முழுகுடும்பமாக எகிப்திற்குப் போனான்.

---

## 08:15

தேவன் ஆபிரகாமுக்குக் கொடுத்த வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கை அவனிடமிருந்து, ஈசாக்குக்கும், பின்பு யாக்கோபுக்கும், பின்பு அவனுடைய பன்னிரண்டு குமாரருக்கும் அவர்களிடமிருந்து இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களுக்கும் உண்டாயிற்று.

### யாக்கோபு மரித்தபின்பு, தேவன் ஆபிரகாமுக்குக் கொடுத்த வாக்குத்தத்தத்தை பெற்றுக்கொண்டது யார்?

யாக்கோபின் பன்னிரண்டு மகன்கள்.

### யாக்கோபின் பன்னிரண்டு மகன்களின் சந்ததிகளும் என்னவாயிற்று?

இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்கள்.

# 9. தேவன் மோசேயை அழைத்தல்

## 09:01

யோசேப்பு மரித்தபின்பு அவனுடைய சொந்தங்கள் மற்றும் அவர்கள் சந்ததி எகிப்து தேசத்தில் அநேக வருடங்கள் இருந்து பலுகிப் பெருகினர். அவர்களே இஸ்ரவேலர் என்று அழைக்கப்பட்டனர்.

---

## 09:02

சில நூற்றாண்டுகளுக்கு பிறகு யோசேப்பு எகிப்தில் செய்த நன்மையான செயல்களை எகிப்தியர்கள் மேலும் நினைப்பதாக இல்லை, மாறாக இஸ்ரவேலர்களைப் பார்த்து எகிப்தியர்கள் பயந்தனர் ஏனெனில் இஸ்ரவேலர் மிகவும் பலுகிப் பெருகினர். எனவே அந்நாட்களில் எகிப்தை ஆண்டு வந்த பார்வோன் இஸ்ரவேலர்களை தங்களுக்கு அடிமைகளாக்கினான்.

### எகிப்தியர்கள் எதினால் இஸ்ரவேலருக்கு பயந்தனர்?

இஸ்ரவேலர்கள் அநேகராய் இருந்ததினால்.

### இஸ்ரவேலர்களைக் குறித்து பார்வோன் பயந்ததினால் என்ன செய்தான்?

எகிப்தியர்களுக்கு அவர்களை அடிமைகளாக்கினான்.

---

## 09:03

இஸ்ரவேலர்களை எகிப்தியர்கள் மிகவும் வருத்தி, அநேக கட்டிடங்களையும், நகரங்களையும் கட்டும்படி மிகவும் கடினமான வேலைகளை செய்ய வைத்ததினால், அவர்களுடைய வாழ்க்கை கொடியதாய் இருந்தது, ஆனால் தேவன் அவர்களை ஆசீர்வதித்ததினால் அவர்கள் மேலும் பலுகிப் பெருகினர்.

---

## 09:04

இஸ்ரவேலர்கள் பலுகிப் பெருகுவதினால், பார்வோன் அவர்களுடைய ஆண் குழந்தைகளை நயல் நதியில் வீசி கொன்று போடும்படி தன்னுடைய ஜனங்களுக்குக் கட்டளையிட்டான்.

### இஸ்ரவேலர்களின் எண்ணிக்கை பெருகாமல் இருக்க பார்வோன் என்ன செய்தான்?

எல்லா இஸ்ரவேலர்களின் ஆண் குழந்தைகளையும் நயல் நதியில் வீசும்படி கட்டளையிட்டான்.

---

## 09:05

குறிப்பிட்ட ஒளித்து வைத்தனர்.

---

## 09:06

பிள்ளையின் பெற்றோர் தங்களுடைய ஆண் பிள்ளையை ஒளித்து வைக்க முடியாமல், யாரும் கொன்று போடாமல் பாதுக்கக்க, ஒரு மிதக்கும் கூடையில் அந்தக் குழந்தையை வைத்து, நயல் நதியில் விட்டுவிட்டனர். அந்தக் குழந்தையினுடைய மூத்த சகோதரி என்ன நடக்கும் என்று கவனித்துக் கொண்டிருந்தாள்.

### கூடையில் வைக்கபட்டிருந்த ஆண் குழந்தை நதியில் என்ன ஆயிற்று?

பார்வோனின் மகள் அவனைப் பார்த்து, தன்னுடைய சொந்த மகனாக எடுத்துக்கொண்டு, அந்த குழந்தைக்கு மோசே என்று பெயர் வைத்தாள்.

---

## 09:07

பார்வோனுடைய குமாரத்தி அந்தக் கூடையில் இருந்த குழந்தையைக் கண்டு அதை தன்னுடைய குழந்தையாக ஏற்று, அந்தக் குழந்தையை கவனிக்கும்படி ஒரு இஸ்ரவேல் பெண்மணியை அந்தக் குழந்தையின் தாய் என்று அறியாமல், பராமரிக்கும்படி செய்தாள். அந்தக் குழந்தை பால் மறந்தவுடன், பார்வோனின் குமாரத்தியினிடத்தில் ஒப்புவித்தாள். இவளே அந்தக் குழந்தைக்கு மோசே என்று பேரிட்டாள்.

### கூடையில் வைக்கபட்டிருந்த ஆண் குழந்தை நதியில் என்ன ஆயிற்று?

பார்வோனின் மகள் அவனைப் பார்த்து, தன்னுடைய சொந்த மகனாக எடுத்துக்கொண்டு, அந்த குழந்தைக்கு மோசே என்று பெயர் வைத்தாள்.

---

## 09:08

மோசே வளர்ந்து பெரியவனானபோது, அடிமையாகிய இஸ்ரவேலனை எகிப்தியன் ஒருவன் அடிப்பதைக் கண்டு அவனை காப்பாற்ற முயன்றான்.

### காப்பாற்ற மோசே என்ன செய்தான்?

அவனை அடித்துக்கொண்டிருந்த ஒரு எகிப்தியனை கொன்று, அவனுடைய உடலை புதைத்துவிட்டான்.

---

## 09:09

மோசே எகிப்தியனைக் கொன்று புதைத்ததை ஒருவரும் பார்க்கவில்லை என்று நினைத்தான், ஆனால் அதை ஒரு எகிப்தியன் பார்த்தான்.

### இஸ்ர காப்பாற்ற மோசே என்ன செய்தான்?

அவனை அடித்துக்கொண்டிருந்த ஒரு எகிப்தியனை கொன்று, அவனுடைய உடலை புதைத்துவிட்டான்.

---

## 09:10

மோசேயின் செயலை பார்வோன் கேள்விப்பட்டு, அவனைக் கொன்று போடும்படி நினைத்தான், ஆனால் மோசே எகிப்திலிருந்து வனாந்திரத்திற்கு ஓடிப்போனான். பார்வோனின் சேவகர்களால் மோசேயைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

### ஏன் மோசே எகிப்திலிருந்து ஓடிப்போகவேண்டியிருந்தது?

மோசே எகிப்தியன் ஒருவனைக் கொன்றுபோட்டதை அறிந்த அவனைக் கொலை செய்ய நினைத்தான்.

### மோசே தப்பித்து எங்கே போனான்?

அவன் வனாந்திரத்திற்குப் போனான்.

---

## 09:11

எகிப்திலிருந்து வெகு தூரமான வனாந்திரத்தில் மோசே ஆடுகளை மேய்க்கிறவனானான், அங்கே ஒரு பெண்ணைத் திருமணம் செய்து,அங்கே மோசைக்கு இரண்டு ஆண் பிள்ளைகள் பிறந்தனர்.

---

## 09:12

மோசே தன் மாமனாரின் ஆடுகளை மேய்த்துக்கொண்டிருக்கும் சமயத்தில், எரிகிற தணலை பார்த்தான். அது எரிகையில் தணல் வெந்து போகாமலிருந்தது. அதை உற்றுப்பார்க்கும்படி அருகில் சென்றான், உன்னுடைய செருப்பை கழற்று, நீ நிற்கிற இடம் பரிசுத்தமானது என்று தேவன் அவனோடு பேசினார்.

### வனாந்திரத்தில் மோசே ஆடுகளை மேய்த்துக்வினோதமான எதைப் பார்த்தான்?

அவன் ஒரு செடி அக்கினியில் எரிகிறதைப் பார்த்தான், ஆனால் அது வெந்துபோகாதிருந்தது.

### மோசே அக்கினியில் எரிகிற செடியைப் பார்க்கச் சென்றபோது, தேவன் அவனோடு சொன்னது என்ன?

தேவன், உன்னுடைய செருப்பை கழற்று, நீ நிற்கிற இடம் பரிசுத்தமானது என்று மோசேயிடம் சொன்னார்.

---

## 09:13

மோசேயினிடத்தில் தேவன், நான் இஸ்ரவேலருடைய உபத்திரவத்தைப் பார்த்தேன். அவர்களை விடுவிக்கும்படி உன்னைப் பார்வோனிடத்திற்கு அனுப்புவேன், நீ எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து அவர்களை விடுவிப்பாய். நான் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்பவர்களுக்கு வாக்குப்பண்ணின காணன் தேசத்தை அவர்களுக்குத் தருவேன் என்று சொன்னார்.

### எகிப்திலிருந்த இஸ்ரவேலர்களை தேவன் நேசிக்கிறார் என்று நாம் எப்படி அறிந்துகொள்ளலாம்?

தேவன் மோசேயினிடத்தில், இஸ்ரவேலர்களின் உபத்திரவத்தைப் பார்த்தேன் என்றார்.

## மோசே இஸ்ரவேலர்களுக்கு என்ன செய்யும்படி தேவன் அவனை அனுப்பினார்?

தேவன் மோசேயை பார்வோனிடத்தில் போய், எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து இஸ்ரவேலரை விடுவிக்கும்படி

## இஸ்ரவேலருக்கு எந்த தேசத்தைத் தருவதாக தேவன் சொன்னார்?

ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் யாக்கோபு என்பவர்களிடத்தில் தாம் வாக்குப்பண்ணியிருந்த தேசமாகிய கானான் தேசத்தைத் தருவதாக சொன்னார்.

---

## 09:14

ஜனங்கள் யார் என்னை அனுப்பினார்? என்று கேட்டால் நான் என்ன சொல்லவேண்டும் என்று மோசே தேவனிடத்தில் கேட்டான். அதற்கு தேவன், இருக்கிறவராக இருக்கிறேன். இருக்கிறேன் என்கிறவர் என்னை உங்களிடத்திற்கு அனுப்பினார் என்றும், நான் யேகோவா, உங்கள் பிதாக்களாகிய ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்பவர்களின் தேவன். இதுவே தலைமுறைதோறும் என்னுடைய நாமம் என்று சொல்லும்படி கூறினார்.

## என்றென்றைக்கும் இருக்கும் என்று தேவன் அவருடைய எந்த நாமத்தை சொன்னார்?

யேகோவா.

---

## 09:15

என்னால் நன்றாய் பேச முடியாது என்று நினைத்து, பார்வோனிடம் போக மோசே பயந்தான், எனவே தேவன் அவனுக்கு உதவும்படி அவனுடைய சகோதரனாகிய ஆரோனை அனுப்பினார்.

## மோசேக்கு உதவும்படி தேவன் யாரை அனுப்பினார்?

மோசேயின் சகோதரனாகிய ஆரோனை உதவும்படி தேவன் அனுப்பினார்.

## மோசேக்கும், ஆரோனுக்கும் பார்வோன் எப்படி பதில் அளிப்பான் என்று தேவன் சொன்னார்?

பார்வோன் கேட்கமாட்டான்.

# 10. பத்து வாதைகள்

## 10:01

மோசேயும் ஆரோனும் பார்வோனிடத்தில், என் ஜனங்களைப் போக விடு என்று இஸ்ரவேலின் தேவன் சொல்லுகிறார் என்று கூறியதும், போகவிடாமல், அவர்களுடைய வேலையை இன்னும் பாரமாக்கினான். அவன் செவிகொடுக்க மாட்டான் என்று தேவன் முன்னமே சொல்லியிருந்தார்.

### தேவனுடைய வார்த்தை என்று எதை மோசேயும் ஆரோனும் பார்வோனிடத்தில் அறிவித்தனர்?

என்னுடைய ஜனத்தைப் போகவிடு!

### இந்த கட்டளையை பார்வோன் கேட்டு என்ன செய்தான்?

அவன் இஸ்ரவேலர்களின் சுமையை இன்னும் அதிகமாக்கினான்.

---

## 10:02

பார்வோன் தொடர்ந்து அவர்களை போகவிடாதிருக்கையில், தேவன் பத்து வாதைகளை எகிப்தில் வரப்பண்ணி, தான் எகிப்தின் தேவர்களிலும் வல்லமையுள்ள தேவன் என்று பார்வோன் அறியும்படி செய்தார்.

### இஸ்ரவேலர்களை பார்வோன் அனுப்ப மறுத்ததினால் தேவன் என்ன செய்தார்?

அவர் கடுமையான வாதைகளை எகிப்தில் அனுப்பினார்.

### இந்த வாதைகளினால் தேவன் பார்வோனுக்கு காண்பித்தது என்ன?

பார்வோன் மற்றும் எகிப்தின் தெய்வங்கள் எல்லாவற்றிலும் அவரே மிகவும் வல்லமையுள்ளவர் என்று காண்பித்தார்.

---

## 10:03

தேவன் நயல் நதியை இரத்தமாகும்படி செய்தார் ஆனாலும் பார்வோன் இஸ்ரவேலரை போகவிடவில்லை.

### நயல் நதியின் தண்ணீரை தேவன் என்ன செய்தார்?

நயல் நதியின் தண்ணீரை தேவன் இரத்தமாக மாற்றினார்.

---

## 10:04

தேவன் எகிப்து முழுவதும் தவளைகள் வரும்படி செய்தார், பார்வோன் மோசேயிடம் தவளைகளை போக செய்யும்படி வேண்டினான். ஆனால் அவைகள் மரித்துப்போன பின்பு பார்வோன் தன்னுடைய இருதயத்தை கடினப்படுத்தி, இஸ்ரவேலரை போகவிடவில்லை.

---

## 10:05

எனவே தேவன் எகிப்து முழுவதும் பேன்களை வரும்படிச் செய்தார். பின்பு ஈக்களையும் வரும்படிச் செய்தார். பார்வோன் மோசே, ஆரோன் என்பவர்களை அழைத்து, இந்த வாதைகள் நிறுத்தினால், இஸ்ரவேலர்கள் எகிப்திலிருந்து போகலாம் என்றான். மோசே ஜெபித்தபோது, தேவன் வாதைகளை நிறுத்தினார், ஆனால் பார்வோன் தன்னுடைய இருதயத்தைக் கடினப்படுத்தி அவர்களை விடவில்லை.

---

## 10:06

பின்பு, தேவன் எகிப்தியரின் மிருகஜீவன்களையெல்லாம் நோயினால் சாகும்படிச் செய்தார். ஆனாலும் பார்வோனின் இருதயம் கடினப்பட்டு, இஸ்ரவேலரை போகவிடவில்லை.

---

## 10:07

பின்பு தேவன், பார்வோனுக்கு முன்பாக சாம்பலைக் காற்றில் தூவும்படி கூறினார். அவன் அப்படி செய்தபோது, வலி நிறைந்த புண்கள் எகிப்தியரின்மேல் மட்டும் வரும்படிச் செய்தார், தேவன் பார்வோனின் இருதயத்தைக் கடினப்படுத்தியதினால், அவன் இஸ்ரவேல் ஜனங்களைப் போகவிடவில்லை.

### வாதையினால் வந்த மிகவும் வலியாயிருந்த தோல் புண்களினால் பாதிக்கப்பட்டவர்கள் யார்?

அந்த புண்கள் எகிப்தியர்கள் மேல் வந்தது, ஆனால் இஸ்ரவேலர்மேல் வரவில்லை.

---

## 10:08

அதற்கு பின்பு, தேவன் கல் மழையை வரும்படி செய்தார். அது எகிப்தின் எல்லா பயிர்களையும் அழித்துப்போட்டது, மேலும் வெளியே சென்ற எகிப்தியர் யாவரையும் கொன்றுபோட்டது. பார்வோன் மோசேயும் ஆரோனையும் அழைத்து நான் பாவம் செய்தேன், நீங்கள் புறப்பட்டுப்போங்கள் என்றான், எனவே மோசே ஜெபித்தான், வானத்திலிருந்து பெய்த கல் மழை நின்றது.

---

## 10:09

ஆனால் பார்வோன் மீண்டும் பாவம் செய்து, அவனுடைய இருதயத்தைக் கடினப்படுத்தி இஸ்ரவேலரை போகவிடவில்லை.

---

## 10:10

எனவே தேவன் திரளான வெட்டுக்கிளிகளை எகிப்து முழுவதும் வரும்படிச் செய்தார். அது கல் மழையினால் அழியாத எல்லா பயிர்களையும் தின்றுபோட்டது.

---

## 10:11

பின்பு தேவன் எகிப்தியரின்மேல் கடும் இருளை வரப்பண்ணினார், அது மூன்று நாட்கள் இருந்ததினால் எகிப்தியரால் தங்கள் வீடுகளிலிருந்து வெளியே போகமுடியாதிருந்தது, ஆனால் இஸ்ரவேலர்கள் இருந்த இடத்தில் வெளிச்சமாக இருந்தது.

### இருளின் வாதை எல்லோருக்கும் பொதுவாக பாதிப்பை ஏற்படுத்தினதா?

இல்லை. எகிப்தியர்கள் வாழ்ந்த இடத்தில் இருளும், இஸ்ரவேலர்கள் வாழ்ந்த இடத்தில் வெளிச்சமும் இருந்தது.

---

## 10:12

இந்த ஒன்பது வாதைகளை வரப்பண்ணியும், பார்வோன் இஸ்ரவேலரை விடுதலையாய் போகவிடாததினால், பார்வோனுடைய இருதயம் மாறும்படி தேவன் மேலும் ஒரு வாதையை அவர்கள்மேல் வரப்பண்ணினார்.

### முதலில் வந்த ஒன்பது வதைகளுக்கும் பார்வோன் எப்படி இருந்தான்?

ஜனங்களை விடுதலையாய் போக விடவில்லை.

### முதலில் வந்த ஒன்பது வாதிகளுக்கும் பார்வோன் செவிகொடாததினால் தேவன் என்ன செய்தார்?

கடைசியாக ஒரு வாதையை அனுப்ப தேவன் முடிவு செய்தார்.

### முதலில் வந்த ஒன்பது வாதைகளும் செய்யாத எந்த காரியத்தை இந்த வாதை செய்தது?

இது பார்வோனின் மனதை மாற்றியது.

# 11. பஸ்கா

## 11:01

மோசேயையும் ஆரோனையும் பார்வோனிடத்திற்கு தேவன் அனுப்பி, நீ இஸ்ரவேலரை போகவிடு, இல்லையெனில் எகிப்திலுள்ள முதலில் பிறந்த எல்லா ஆண்பிள்ளைகளையும், மிருகஜீவன்களையும் தேவன் அழிப்பார் என்று எச்சரித்தனர். இதைக் கேட்டும் பார்வோன் தேவனுக்குக் கீழ்படியவில்லை.

### பார்வோன் இஸ்ரவேல் ஜனங்களை போகவிடவில்லை என்றால், எகிப்தியர்களுக்கு தேவன் என்ன செய்வதாக கூறினார்?

ஜனங்களிலும், விலங்குகளிலும் ஆண் முதற்பிறப்புகளை கொலை செய்வதாக கூறினார்.

---

## 11:02

தன்னை விசுவாசிக்கிறவர்களின் முதல் ஆண் பிள்ளைகளை காப்பாற்றும்படி, பழுதற்ற ஒரு ஆட்டுக் குட்டியை கொன்று தப்பித்துக்கொள்ள தேவன் ஒரு வழியைத் தந்தார்.

### ஜனங்களால் முதலில் பிறந்த மகனை எப்படி பாதுகாக்க முடியும்?

நல்ல ஆட்டுக்குட்டியை கொன்று அதின் இரத்தத்தை எடுத்து வீட்டுவாசலின் நிலைக்கால்களில் பூசவேண்டும்.

---

## 11:03

ஆட்டுக்குட்டியின் இரத்தத்தை தங்கள் வீட்டு நிலைக்கால்களின்மேல் பூசும்படி தேவன் இஸ்ரவேலரிடம் சொன்னார். மேலும் அவர்கள் இறைச்சியை சுட்டு, புளிப்பில்லாத அப்பங்களையும் சுட்டு சீக்கிரமாய் சாப்பிட்டு எகிப்தைவிட்டுப் புறப்ப சொன்னார்.

### ஜனங்களால் முதலில் பிறந்த மகனை எப்படி பாதுகாக்க முடியும்?

நல்ல ஆட்டுக்குட்டியை கொன்று அதின் இரத்தத்தை எடுத்து வீட்டுவாசலின் நிலைக்கால்களில் பூசவேண்டும்.

## இஸ்ரவேலர்கள் வறுத்த ஆட்டுக்குட்டியுடன் எந்த குறிப்பிட்ட உணவை சாப்பிடும்படி தேவன் சொன்னார்?

புளிப்பில்லாத மாவினால் செய்யப்பட்ட அப்பம்.

## இஸ்ரவேலர்கள் சாப்பிட்டு முடித்தவுடன் எதற்கு தயாராக இருக்க வேண்டும்?

எகிப்திலிருந்து புறப்படுவதற்கு தயாராக இருக்கவேண்டும்.

---

## 11:04

தேவன் தங்களுக்கு சொன்னபடியே இஸ்ரவேலர்கள் செய்தனர். அன்று இராத்திரியில் தேவன் எகிப்து எங்கும் போய் முதல் ஆண்பிள்ளைகளை கொன்றுபோட்டார்.

---

## 11:05

ஆட்டுக்குட்டியின் இரத்தத்தை தங்கள் கதவுகளில் பூசியிருந்த இஸ்ரவேலர்களுக்கு ஒன்று சம்பவிக்கவில்லை. தேவன் அவர்களைக் கடந்து போய்விட்டார். அவர்கள் வீட்டினுள் பாதுகாப்பாக இருந்தனர்.

## கதவை சுற்றிலும் இரத்தம் பூசியிருந்த வீட்டிற்கு தேவன் செய்தது என்ன?

அவர் அந்த வீட்டை கடந்து போவார், அந்த வீட்டின் உள்ளே இருப்பவர்கள் பாதுகாப்பாக இருந்தார்கள்..

---

## 11:06

ஆனால் எகிப்தியர்கள் தேவனை விசுவாசியாமலும், அவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படியாமலும் போனதினால், அவர்களைக் கடந்து போகாமல், அவர்களுடைய முதற்பிறப்புகளை எல்லாம் தேவன் கொன்றுபோட்டார்.

## எல்லா எகிப்தியரின் வீட்டிற்கும் தேவன் என்ன செய்தார்?

அவர் முதலில் பிறந்த ஆண் பிள்ளையைக் கொன்றுபோட்டார்.

---

## 11:07

எகிப்தியரின் காவலில் இருக்கிறவர்களிலிருந்து, பார்வோனின் முதல் ஆண் பிள்ளைகள் வரை எல்லோரும் மரித்துப்போயினர். அவர்களுடைய துக்கம் மிகவும் கொடிதாய் இருந்ததினால் அழுகவும், புலம்பவும் செய்தனர்.

### எகிப்தியரில் முதலில் பிறந்த ஆண் பிள்ளைகள் எவ்வளவு பேர் கொலைசெய்யபட்டனர்?

பார்வோனின் மகனையும் சேர்த்து, எல்லோரின் பிள்ளைகளும் மரித்துப்போயினர்.

---

## 11:08

அன்று இரவில், பார்வோன் மோசேயையும், ஆரோனையும் அழைத்து, சீக்கிரமாய் இஸ்ரவேலரைக் கூட்டிக்கொண்டு எகிப்தை விட்டு போங்கள் என்றான். எகிப்தியர்கள் சீக்கிரமாய் போகும்படி இஸ்ரவேலர்களை துரிதப்படுத்தினர்.

### இந்த வாதை வந்தபின்பு மோசே மற்றும் ஆரோனிடம் பார்வோன் சொன்னது என்ன?

இஸ்ரவேலரை கூட்டிக்கொண்டு உடனே எகிப்தைவிட்டு புறப்படுங்கள் என்று சொன்னார்.

# 12. யாத்திராகமம்

## 12:01

இஸ்ரவேலர்கள் இனி தாங்கள் அடிமைகள் இல்லை என்பதினால் மிகவும் சந்தோஷமாக எகிப்தை விட்டு வாக்குப்பண்ணப்பட்ட தேசத்திற்கு புறப்பட்டனர். இஸ்ரவேலர் கேட்ட வெள்ளி, பொன், மேலும் விலையுயர்ந்த பொருட்களையும்கூட எகிப்தியர் கொடுத்தனர். மற்ற தேசத்தாரும் தேவனில் நம்பிக்கை வைத்து இஸ்ரவேலரோடுகூட எகிப்திலிருந்து புறப்பட்டனர்.

### இஸ்ரவேலர்கள் எகிப்திலிருந்து புறப்படும்போது எகிப்தியர்கள் அவர்களுக்கு என்ன கொடுத்தார்கள்?

அவர்கள் கேட்ட வெள்ளியும் பொன்னும் மற்றும் விலையுயர்ந்த பொருட்களையும் கொடுத்தனர்.

### எகிப்திலிருந்து இஸ்ரவேலரோடுகூட வேறு யாரெல்லாம் புறப்பட்டனர்?

தேவனை விசுவாசித்த மற்ற தேசத்தாரும்.

---

## 12:02

பகலில் மேகஸ்தம்பமும், இரவில் அக்கினிஸ்தம்பமும் அவர்களுக்கு முன்பாகச் சென்றது. தேவன் இஸ்ரவேலருக்கு மேகஸ்தம்பமாகவும், அக்கினிஸ்தம்பமாகவும் அவர்களோடு இருந்து சென்ற வழியில் நடத்தினார். அவர்கள் செய்ய வேண்டியதெல்லாம் தேவனைப் பின்தொடர்வது மட்டுமே.

### இஸ்ரவேலர்களை தேவன் எப்படி நடத்தினார்?

பகலில் மேகஸ்தம்பமும், இரவில் அக்கினிஸ்தம்பமாகவும்.

---

## 12:03

கொஞ்ச நேரத்தில் பார்வோனும், அவனுடைய ஜனங்களும் மனம் மாறி இஸ்ரவேலரை அவர்களுக்கு அடிமைகளாக்கும்படி மறுபடியும் அவர்களைப் பின் தொடர்ந்தனர். தேவனே அவர்களின் சிந்தனையை மாற்றினார். எகிப்தின் தேவர்களைக் காட்டிலும் யேகோவா, ஒருவரே வல்லமையில் பெரியவர் என்று பார்வோன் அறியும்படி தேவன் இப்படி செய்தார்.

### ஏன் தேவன் பார்வோனின் இருதயத்தை கடினப்படுத்தி, பின்பு இஸ்ரவேலர்களை அனுப்பும்படிச் செய்தார்?

தேவன் ஒருவரே பார்வோனிலும் அவனுடைய தேவர்களிலும் மிகவும் வல்லமையுள்ளவர் என்று காண்பிக்கும்படி அப்படிச்செய்தார்.

---

## 12:04

எகிப்தின் ராணுவம் அவர்களைப் பின்தொடர்வதை கண்ட இஸ்ரவேலர்கள், தாங்கள் செங்கடலுக்கும், பார்வோனின் ராணுவத்துக்கும் இடையில் மாட்டிக்கொண்டதாக நினைத்து மிகவும் பயந்து, நாம் ஏன் எகிப்திலிருந்து புறப்பட்டோம்? நாம் சாகப்போகிறோம் என்றனர்.

### இஸ்ரவேலர்கள் கடலுக்கும் பார்வோனின் சேனைக்கும் நடுவில் சிக்கிக்கொண்டபோது என்ன செய்தனர்?

நாம் ஏன் எகிப்திலிருந்து வந்தோம்? இங்கே சாகப்போகிறோம் என்று சொன்னார்கள்.

---

## 12:05

பயப்படாதிருங்கள்! தேவன் நமக்காய் யுத்தம் செய்வார் என்று மோசே இஸ்ரவேலரிடம் சொன்னான். பின்பு தேவன் அவர்களை செங்கடலுக்கு அருகில் போகும்படி சொன்னார்.

### இஸ்ரவேலர்களை பயமின்றி அமைதிபடுத்த மோசே என்ன செய்தான்?

பயப்படாதிருங்கள்! தேவன் உங்களுக்காக யுத்தம் செய்து இன்று உங்களை விடுவிப்பார் என்றான்.

---

## 12:06

பின்பு தேவன் மேகஸ்தம்பத்தை இஸ்ரவேலருக்கும் எகிப்தியருக்கும் இடையில் நிற்கப்பண்ணினார். எனவே அவர்களால் இஸ்ரவேலரைப் பார்க்க முடியவில்லை.

### இஸ்ரவேலர்கள் தப்பித்து போகும்போது எகிப்தியர்கள் அவர்களை பார்க்கக்கூடாதபடிக்கு தேவன் என்ன செய்தார்?

அவர்கள் இருவருக்கும் நடுவாக தேவன் மேகம் போன்ற தூண் ஒன்றை ஏற்படுத்தினார்.

---

## 12:07

செங்கடலுக்கு எதிராக தன் கையை நீட்டும்படி தேவன் மோசேயிடம் சொன்னார். அவன் செய்தபோது பலத்த கற்றை வரும்படிச் செய்து, வெள்ளம் வலது, இடது பக்கத்தில் குவியலாக நின்றது. அதினால் செங்கடலில் இஸ்ரவேலருக்கு வழி கிடைத்தது.

### இஸ்ரவேலர்கள் தப்பித்துப்போக வழியுண்டாகும்படி மோசே என்ன செய்யவேண்டுமென்று தேவன் அவனிடம் சொன்னார்?

கடலின்மேல் தன் கையை உயர்த்தினால் தண்ணீர் இரண்டாகப் பிரியும் என்று தேவன் மோசேயினிடத்தில் சொன்னார்.

---

## 12:08

செங்கடலில் இரண்டு பக்கத்திலும் சுவர் போல நின்ற வெள்ளத்தினால் வேட்டாந்தரைபோல் இஸ்ரவேலருக்கு வழி உண்டாயிற்று.

### இஸ்ரவேலர்கள் எப்படி கடலை கடந்து போனார்கள்?

அவர்கள் வெட்டாந்தரையில் நடப்பதுபோல நடந்துபோனார்கள்.

---

## 12:09

தேவன் இடையில் இருந்த மேகஸ்தம்பத்தை விலக்கியதினால், இஸ்ரவேலர்கள் தப்பித்து போகிறதை எகிப்தியர்கள் கண்டு, அவர்களைப் பின்தொடர்ந்தனர்.

---

## 12:10

எகிப்தியர், இஸ்ரவேலர்கள் சென்ற அதே கடல் வழியாய் அவர்களைத் பின் தொடர்ந்தனர். ஆனால் தேவன் அவர்கள் பயந்து போகும்படி, அவர்களுடைய குதிரைகளின் இரதங்களை சிக்கிக்கொள்ளும்படிச் செய்தார். அப்பொழுது எகிப்தியர் நாம் இஸ்ரவேலரை விட்டு ஓடிப்போவோம். தேவன் அவர்களுக்காய் யுத்தம் செய்கிறார் என்றனர்.

## இஸ்ரவேலர்களை கடலில் பின் தொடர்ந்த எகிப்தியர்களுக்கு என்ன நடந்தது?

தேவன் எகிப்தியர்களுக்கு பயம் உண்டாகும்படிச் செய்து, அவர்களுடைய இரதங்களை சிக்கும்படிச் செய்தார்.

---

## 12:11

இஸ்ரவேலர்கள் எல்லோரும் கரையேறினவுடனே, ஜலம் எகிப்தியர்மேல் திரும்பும்படி, மேசேயின் கையை கடலின்மேல் நீட்டும்படி தேவன் சொன்னார். மோசே அதைச் செய்தபோது, ஜலம் எகிப்தியர்மேல் புரண்டு அவர்களை மூடிப்போட்டது.

## தேவன் எகிப்தியரின் இராணுவத்தை எப்படி அழித்தார்?

தண்ணீர் அவர்களை மூடிப்போட்டதினால், அவர்கள் அதில் மூழ்கினர்.

---

## 12:12

எகிப்தியர்கள் செத்துக்கிடக்கிறதை இஸ்ரவேலர்கள் பார்த்து, தேவனை நம்பினார்கள். தேவனுடைய ஊழியக்காரனான மோசேயையும் நம்பினார்கள்.

## எகிப்தியர்கள் மரித்துப்போனதை பார்த்த இஸ்ரவேலர்கள் என்ன செய்தனர்?

அவர்கள் தேவனை விசுவாசித்து, மோசேயும் தேவனுடைய தீர்க்கத்தரிசி என்று உணர்ந்தார்கள்.

---

## 12:13

தேவன் இஸ்ரவேலரை இரட்சித்து, அவர்களை அடிமைத்தனத்திலிருந்தும், எகிப்தின் இராணுவத்திற்கும் தப்புவித்ததை நினைத்து மிகவும் மகிழ்ந்து, தேவனுக்குக் கீழ்ப்படிந்து, அவரைப் புகழ்ந்து பாட்டுகளை பாடினார்கள்.

## இஸ்ரவேலர்கள் ஏன் தேவனை துதித்துப் பாடினார்கள்?

எகிப்தியரிடமிருந்து அவர்களை பாதுகாத்ததினால்.

---

## 12:14

தேவன் இஸ்ரவேலரை எகிப்திலிருந்து விடுவித்து, எகிப்தியரைத் தோற்கடித்ததை நினைவுகூறும்படி ஒவ்வொரு வருடமும் பண்டிகையைக் கொண்டாடும்படி கட்டளைக் கொடுத்தார். அதைத் தான் பஸ்கா பண்டிகை என்கிறோம். அந்நாளில் கொண்டாடவேண்டிய விதமாவது, பழுதற்ற ஒரு ஆட்டுக்குட்டியை அடித்து, சுட்டு, புளிப்பில்லாத மாவினால் செய்யப்பட்ட அப்பத்துடன் சாப்பிடவேண்டும்..

### எகிப்தியரிடமிருந்து இஸ்ரவேலருக்குக் கொடுத்த வெற்றியை அவர்கள் மறவாமலிருக்க என்ன செய்யும்படி தேவன் கூறினார்?

பஸ்காவை ஒவ்வொரு வருடமும் கொண்டாடும்படி அவர்களுக்கு தேவன் கட்டளையிட்டார்.

# 13. இஸ்ரவேலோடு தேவனின் உடன்படிக்கை

## 13:01

தேவன் இஸ்ரவேலரை செங்கடல் வழியாய் நடத்தின பின்பு, அவர்களை வனாந்திர வழியாய் சீனாய் மலைக்கு நேராய் வழி நடத்தினார். இந்த மலையில் தான் தேவன் மோசேக்கு எரிகிற முட்செடியில் தரிசனமானார். மலையின் அடிவாரத்தில் ஜனங்கள் தங்களுடைய கூடாரத்தைப் போட்டனர்.

## இஸ்ரவேலர்கள் செங்கடலை கடந்ததும், தேவன் அவர்களை எங்கே நடத்தினார்?

சீனாய் மலைக்கு நேராய் அவர் அவர்களை நடத்தினார்.

---

## 13:02

நீங்கள் எனக்குக் கீழ்ப்படிந்து, நான் கொடுக்கும் என் கட்டளைகளுக்கு செவிகொடுத்தால், நீங்கள் எனக்கு ஆசாரிய ராஜ்யமும், பரிசுத்த ஜாதியாயும் இருப்பீர்கள் என்று தேவன் மோசேயோடும், இஸ்ரவேலரோடும் சொன்னார்.

## இஸ்ரவேலர்கள் தேவனுக்கு கீழ்படிந்தால் அவர்களுக்கு என்ன செய்வதாக அவர் வாக்குப்பண்ணினார்?

அவர்கள் தேவனுக்கு சொந்த ஜனமும், ஆசாரியக்கூட்டமும், பரிசுத்த ஜாதியுமாய் இருப்பார்கள்.

---

## 13:03

தேவன் இஸ்ரவேலர்களை சந்திக்கும்படி, மூன்று நாட்கள் அவர்கள் தங்களை ஆயத்தபடுத்தினப் பின்பு, தேவன் சீனாய் மலையில் இறங்கினார். அப்பொழுது இடி, மின்னல், புகை மற்றும் எக்கால சத்தம் உண்டாயிற்று, பின்பு மோசே மலையின் மேல் ஏறிப்போனான்.

## தேவன் சீனாய் மலையில் இறங்கி வந்ததும் எனென்ன அடையாளங்கள் சம்பவித்தது?

இடி, மின்னல், புகை மற்றும் மிக சத்தமாக எக்காள சத்தம் கேட்டது.

---

## 13:04

பின்பு தேவன் ஜனங்களோடு உடன்படிக்கைச் செய்து, அவர் சொன்னது, நான் யேகோவா. எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்கின உங்களுடைய தேவன். என்னை அல்லாமல் வேறே தேவர்களை சேவிக்க வேண்டாம் என்பதே.

---

## 13:05

நான் யேகோவா. என்னை அல்லாமல், வேறே தேவர்களை உங்களுக்கு உண்டாக்கவும் அதை வணங்கவும் வேண்டாம். ஓய்வு நாளை பரிசுத்தமாய் ஆசரிக்கவும், அவர்களுடைய வேலைகளை மற்ற ஆறு நாட்களில் செய்யவும் கட்டளையிட்டார். ஓய்வு நாளில் ஓய்ந்திருக்கவும், என்னை நினைவுகூறவும் வேண்டுமென்று சொன்னார்.

---

## 13:06

தாயையும், தகப்பனையும் கனம்பண்ணு, விபச்சாரம் செய்யாதே, திருடாதே, பொய்சொல்லாதே, மற்றவனுடைய மனைவியையாவது, வீட்டையாவது, அவனுக்குச் சொந்தமான எந்த பொருளையாவது இச்சியாதே.

---

## 13:07

பின்பு தேவன் இரண்டு கற்பலகைகளில் பத்துக் கற்பனைகளை எழுதி மோசேயினிடத்தில் கொடுத்தார். மேலும் அநேக விதிமுறைகளையும் தேவன் அவர்களுக்குக் கொடுத்தார். இவைகளை அவர்கள் கைக்கொண்டு கீழ்ப்படிந்தால் அவர்களை ஆசீர்வதிப்பதாகவும், இல்லையெனில் அவர்களைத் தண்டிப்பதாகவும் அவர்களுக்கு வக்குப்பண்ணினார்.

### இஸ்ரவேலர்கள் தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்படியாமற்போனால், தேவன் அவர்களுக்கு என்ன செய்வார்?

அவர் அவர்களைத் தண்டிப்பார்.

---

## 13:08

பெரிய கூடாரத்தை உண்டாக்கும்படி தேவன் சொன்னார். அதை எப்படிச் செய்ய வேண்டும் என்றும் அவர்களுக்குச் சொன்னார். அந்தக் கூடாரத்தை இரண்டு பகுதிகளாகப் பிரிக்கவும், அதில் ஒன்றில் தேவன் வாசம்பண்ணவும், அங்கே பிரதான ஆசாரியன் மட்டுமே போக முடியும் என்பதையும் சொன்னார்.

### தேவன் இஸ்ரவேலர்களிடம் எதை உண்டாக்கும்படி சொன்னார்?

அவர் ஆசரிப்புக்கூடாரம் உண்டாக்கும்படி சொன்னார்.

### தேவன் வாசம்பண்ணும் இடமான திரைச்சீலைக்கு அந்த பக்கம் இருக்கும் அறைக்குள் யார் தான் போகமுடியும்?

பிரதான ஆசாரியன் மட்டும்.

---

## 13:09

கூடாரத்திற்கு முன்பாக ஒரு பலிபீடம் கட்டவேண்டும், கற்பனைகளுக்குக் கீழ்ப்படியாதவன் எவனோ அவன் மிருகஜீவன்களை பலிபீடத்திற்கு கொண்டுவர வேண்டும், அதை பிரதான ஆசாரியன், பலிசெலுத்தி, தீயினால் சுட்டெரிக்க வேண்டும். அது அவர்களை சுத்தமாக்கும். தேவன் ஜனங்களின் பாவங்களை நினையாதிருக்க, இப்படிச் செய்யும்படி சொன்னார். தேவன் மோசேயின் சகோதரனான ஆரோனின் சந்ததியை அவருக்கு ஆசாரியராய் இருக்கும்படித் தெரிந்துகொண்டார்.

### ஜனங்கள் தங்களுடைய பாவங்களை எப்படி நிவிர்த்தி செய்ய முடியும்?

ஆசாரியனிடத்தில் விலங்கு ஒன்றை கொண்டுவந்து, அதை பலிசெலுத்தி, அந்த இரத்தத்தினால் அவர்களுடைய பாவங்களை நிவிர்த்தி செய்யலாம்.

### யாரை தேவன் அவருடைய ஆசாரியர்களாக தெரிந்துகொண்டார்?

ஆரோன் மற்றும் அவனுடைய சந்ததி.

---

## 13:10

அவர் ஒருவருக்கே ஆராதனை செய்யவும், அவருடைய ஜனமாக இருக்கவும், தேவன் ஜனங்களுக்குத் தந்த எல்லா கற்பனைகளின்படி செய்யவும் அவர்கள் ஒப்புக்கொண்டனர்.

---

## 13:11

வெகு நாட்கள் மோசே சீனாய் மலையில் தேவனோடு பேசிக்கொண்டிருந்ததினால், ஜனங்கள் அவன் திரும்பிவர காத்திருந்து சோர்ந்துபோய், தங்களுடைய ஆபரணங்களை ஆரோனிடத்தில் கொடுத்து, அவர்கள் ஆராதிக்கும்படி ஒரு சிலையை உண்டாக்கும்படி கேட்டுக் கொண்டனர். இப்படி தேவனுக்கு விரோதமா பாவம் செய்தனர்.

### மோசே சீனாய் மலையிலிருந்து திரும்பிவர ஜனங்கள் காத்திருந்து சோர்ந்துபோனதினால் என்ன செய்தார்கள்?

அவர்கள் ஆரோனிடத்தில் ஒரு பொன் சிலையை உண்டாக்கும்படி சொல்லி, அதற்கு ஆராதனை செய்து, பலிசெலுத்தினார்கள்.

---

## 13:12

ஆரோன் தங்கத்தினாலான ஒரு கன்றுக்குட்டியை செய்தான், அதை ஜனங்கள் எல்லோரும் வணங்கி, அதற்கு பலிசெலுத்தினர்! அவர்களுடைய செய்கையினால் தேவன் மிகவும் கோபமடைந்து அவர்களை அழிக்கும்படி நினைத்தார். ஆனால் மோசே ஜனங்களை அழிக்காதபடிக்கு தேவனிடத்தில் ஜெபித்தான். அவனுடைய ஜெபத்தைக் கேட்டு தேவன் அவர்களை அழிக்கவில்லை.

### மோசே சீனாய் மலையிலிருந்து திரும்பிவர ஜனங்கள் காத்திருந்து சோர்ந்துபோனதினால் என்ன செய்தார்கள்?

அவர்கள் ஆரோனிடத்தில் ஒரு பொன் சிலையை உண்டாக்கும்படி சொல்லி, அதற்கு ஆராதனை செய்து, பலிசெலுத்தினார்கள்.

### அவர்கள் தேவனுக்கு கீழ்ப்படியாமல் இருந்தும் ஏன் தேவன் இஸ்ரவேலர்களை அழிக்கவில்லை?

மோசே அவர்களுக்காக ஜெபம் செய்தான்.

---

## 13:13

மோசே சீனாய் மலையிலிருந்து தேவன் கற்பலகையில் எழுதிக்கொடுத்த பத்துக் கட்டளைகளை கையில் எடுத்துக்கொண்டு இறங்கி வரும்போது, அந்த சிலையைப் பார்த்து மிகவும் கோபமடைந்து, உடைத்துப்போட்டான்.

### தேவன் பத்து கட்டளைகளை எழுதிக் கொடுத்த கற்பலகைகள் என்னவாயிற்று?

மோசே கோபமடைந்து அவைகளை உடைத்துப்போட்டான்.

---

## 13:14

பின்பு மோசே அந்தச் சிலையை உடைத்து, அதின் பொடிகளை நீரில் வீசினான், அதை ஜனங்கள் தேவன் வாதையை அனுப்பினார் எனவே அநேக ஜனங்கள் மரித்துப்போயினர்.

### அந்த சிலையை மோசே என்ன செய்தான்?

அந்த சிலை பொடியாகும்படி அடித்து, அதை தண்ணீரில் வீசி, அந்த தண்ணீரை ஜனங்கள் குடிக்கும்படிச் செய்தான்.

---

## 13:15

மோசே தான் உடைத்த கற்பலகைகள் போன்று மறுபடியும் செய்து பத்துக் கற்பனைகளை எழுதும்படி மலையின்மேல் ஏறிப்போனான். அங்கே தேவன் ஜனங்களை மன்னிக்கும்படி ஜெபித்தான். தேவன் அவனுடைய ஜெபத்தைக் கேட்டு, அவர்களை மன்னித்தார். பின்பு பத்துக் கற்பனைகளுடன் மலையிலிருந்து கீழே வந்தான். அதன்பிறகு, சீனாய் மலையிலிருந்து வாக்குப்பண்ணப்பட்ட தேசத்திற்கு நேராய் தேவன் இஸ்ரவேலரை நடத்தினார்.

### கற்பலகைகளினால் ஆன பத்துக் கட்டளைகள் எப்படி திரும்பவும் வந்தது?

புதிய கற்பலகைகளில் மோசே பத்துக் கட்டளைகளை எழுதினான்.

### சீனாய் மலையிலிருந்து இஸ்ரவேலர்கள் எங்கே போனார்கள்?

தேவன் இஸ்ரவேலர்களை வாக்குப்பண்ணபட்ட தேசத்திற்கு நேராய் நடத்திக்கொண்டு போனார்.

# 14. வனாந்திரத்தில் அலைந்துத்திரிதல்

## 14:01

இஸ்ரவேலரோடு தேவன் பண்ணின உடன்படிக்கையினால், தாம் அவர்களுக்குக் கொடுத்த கற்பனைகளுக்கு அவர்கள் கீழ்ப்படிந்து நடக்கும்படி சொன்னப்பின்பு, அவர்களை சீனாய் மலையிலிருந்து, அவர்களுக்கு வக்குப்பண்ணப்பட்டதேசமாகிய கானானுக்கு நடத்தினார். அவர் இஸ்ரவேலருக்கு முன்பாக மேகஸ்தம்பத்தினால் அவர்களை நடத்தினார், அவர்கள் பின்தொடர்ந்தனர்.

### சீனாய் மலையிலிருந்து இஸ்ரவேலர்களை தேவன் எங்கே நடத்திக்கொண்டு போனார்.?

அவர் வாக்குபண்ணபட்ட தேசமாகிய கானானுக்கு நேராய் போனார்.

---

## 14:02

தேவன் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்பவர்களுக்குக் கொடுப்பேன் என்று ஆணையிட்ட தேசத்தில் அநேக ஜனங்கள் வாழ்ந்துகொண்டிருந்தனர். அவர்கள் கானானியர் என்று அழைக்கப்பட்டனர். அவர்கள் தேவனை ஆராதிக்காமல், கீழ்ப்படியாமல், அந்நிய தேவர்களை வணங்கி, தீங்கான காரியங்களைச் செய்தனர்.

---

## 14:03

இஸ்ரவேலரோடு தேவன், நீங்கள் வாக்குப்பண்ணப்பட்ட தேசமாகிய கானானுக்குள் பிரவேசித்தப்பின்பு, அவர்களோடு சமாதானம் செய்யாமலும், அவர்களைத் திருமணம் செய்யாமலும், முற்றிலுமாய் சொன்னார். ஏனெனில், நீங்கள் எனக்குக் கீழ்ப்படியாமல் அவர்களுடைய அந்நிய தேவர்களை சேவிப்பீர்கள் என்றர்.

### கானனியர்களுக்கு என்ன செய்யும்படி தேவன் இஸ்ரவேலர்களிடம் சொன்னார்?

அவர்கள் எல்லோரையும் துரத்திவிடவும், அவனோடு சமாதானம் பண்ணாமலும், அவர்களைத் திருமணம் செய்யாமலும், அவர்களுடைய விக்கிரகங்கள் எல்லாவற்றையும் அழிக்கும்படி சொன்னார்.

---

## 14:04

இஸ்ரவேலர்கள் கானானின் எல்லையில் வந்தவுடன், மோசே பனிரெண்டு மனிதர்களைத் , அவர்களுக்கு ஆலோசனைக்கொடுத்து, தேசம் எப்படிப்பட்டது, அந்த மனிதர்கள் பலசாலிகளோ அல்லது பலவீனரோ என்று அறியும்படிக்கு கானான் தேசத்தை உளவு பார்க்க அனுப்பினான்.

---

## 14:05

பனிரெண்டு பெரும் நான்கு நாட்கள் கானான் முழுவதும் சுற்றித்திரிந்து, திரும்பி வந்து. தேசம் விளைச்சல் மிகுந்த பசுமையான தேசம் என்று அறிவித்தனர். அவர்களில் பத்து பேர், அந்த நகரம் மிகவும் வலிமையானது, அதில் இருக்கும் மனிதர்கள் ராட்சதர்களைப் போன்று இருக்கிறார்கள். நாம் அவர்களை நெருங்கினால் நிச்சயமாக நம்மை கொன்றுபோடுவார்கள் என்றனர்.

### கானானுக்கு வேவுபார்க்க சென்ற பன்னிரண்டு பேரும் சொன்னது என்ன?

அந்த தேசம் மிகவும் வளமும், விளைச்சல் மிகுந்த தேசமுமாயிருக்கிறது என்று சொன்னார்கள்.

### பத்து வேவுகாரர்களும் ஏன் கானானியர்களோடு இஸ்ரவேலர்கள் யுத்தம் செய்யக்கூடாது என்று சொன்னார்கள்?

அந்த நகரம் மிகவும் வலுமையானது மற்றும் அந்த நரகத்தில் வாழும் மனிதர்களும் இராட்சதர்கள் போல இருக்கிறார்கள். எனவே நாம் அவர்களோடு யுத்தம் செய்தால் அவர்கள் நம்மை கொலை செய்து தோற்கடிப்பார்கள் என்று சொன்னார்கள்.

---

## 14:06

உடனே காலேப்பும், யோசுவாவும், அந்த மனிதர்கள் உயரமான பலசாலிகள் தான் ஆனால் நாம் அவர்களை வீழ்த்தலாம்! தேவன் நமக்காய் யுத்தம் செய்வார் என்றனர்.

### காலேபும் யோசுவாவும் கானானியர்களைப் பற்றி என்ன சொன்னார்கள்?

அந்த மனிதர்கள் பலசாலிகள் தான் ஆனால் நாம் அவர்களைத் தோற்கடிப்போம். தேவன் நமக்காய் யுத்தம் செய்வார்! என்றனர்.

---

## 14:07

அவர்கள் காலேப்பும், யோசுவாவும் சொன்னதை கேளாமல், ஜனங்கள் கோபமடைந்து, மோசே, ஆரோன் என்பவர்களிடம், ஏன் எங்களை இப்படிப்பட்ட மோசமான இடத்திற்கு கொண்டு வந்தீர்கள்? நாங்கள் எகிப்திலே இருந்திருப்போம், இங்க நாங்கள் யுத்தத்தில் சாவோம், எங்கள் மனைவிகள் பிள்ளைகளை கானானியர் அடிமைகளாக்கிக்கொள்வார்கள் என்றனர். மேலும் அவர்கள் தங்களுக்கு வேறு தலைவரைத் தெரிந்துகொண்டு மறுபடியும் எகிப்துக்குப் போக விரும்பினார்கள்.

### வேவுகாரர்கள் சொன்னதைக் கேட்ட ஜனங்கள் என்ன செய்யும்படி நினைத்தனர்?

அவர்கள் வேறு ஒரு தலைவனை தெரிந்துகொண்டு மறுபடியும் எகிப்துக்கு போக நினைத்தனர்.

---

## 14:08

ஜனங்கள் இப்படிச் சொன்னபடியால், தேவன் மிகவும் கோபமடைந்து, நான் உங்களுக்குக் கொடுக்கும் தேசத்தில் பிரவேசிப்பதில்லை. நீங்கள் எனக்கு விரோதமாய் கலகம் செய்தபடியினால், உங்களில் இருபது வயதுமுதல் அதற்கு மேற்பட்ட யாவரும் வனாந்திரத்தில் அலைந்து திரிய வேண்டும். காலேபும் யோசுவாவும் மட்டும் அதில் பிரவேசிப்பார்கள் என்றார்.

### ஜனங்களுடைய கீழ்ப்படியாமையினால் அவர்களை தேவன் எப்படி தண்டிக்கபோவதாக கூறினார்?

அவர்கள் இருபது வருடம் வனாந்திரத்தில் அலைந்துதிரிந்து, யோசுவாவையும் காலேபையும் தவிர சிறியவர்களும் பெரியவர்களும் என எல்லோரும் மரிக்கும்வரை.

---

## 14:09

தேவன் இப்படிச் சொன்னதினால் தாங்கள் செய்த செயலுக்கு ஜனங்கள் வருந்தி, கானான் தேசத்தாருடன் சண்டையிடும்படி சென்றார்கள். தேவன் அவர்களுக்கு முன்பாக போவதில்லை என்பதினால் மோசே வேண்டாம் என்று எச்சரித்தான், ஆனால் அவர்கள் அவனுக்குச் செவிகொடுக்கவில்லை.

---

## 14:10

தேவன் அவர்களோடே போகாததினால், அந்த யுத்தத்தில் இஸ்ரவேலர்கள் தோற்கடிக்கப்பட்டு, அநேக மரித்துப்போயினர். பின்பு அவர்கள் கானானில் இருந்து திரும்பினர். அதன்பின்பு நாற்பது வருடம் வனாந்திரத்தில் அலைந்துத்திரிந்தனர்.

### இஸ்ரவேலர்கள் எதினால் கானானியர்களோடு யுத்தம் செய்து தோற்றுப்போனார்கள்?

ஏனெனில் அந்த யுத்தத்தில் தேவன் அவர்களோடு போகவில்லை.

---

## 14:11

இஸ்ரவேலர்கள் வனாந்திரத்தில் அலைந்துத்திரிந்த நாற்பது வருடமும் தேவன் அவர்களுக்கு வேண்டியதைச் செய்தார். மன்னா என்று அழைக்கப்படும் அப்பத்தை வானத்திலிருந்து வரும்படிச்செய்தார். அவர்கள் இறைச்சி சாப்பிடும்படிக்கு காடைகளை பாளையத்தில் விழும்படிச் செய்தார் (சிறிய பறவைகள் போன்று). அந்த நாற்பது வருடமும் அவர்களுடைய துணியும், செருப்பும் சேதமடையவில்லை.

### இஸ்ரவேலர்கள் எத்தனை வருடம் வனாந்திரத்தில் அலைந்து திரிந்தனர்?

நாற்பது வருடம்.

### வனாந்திரத்தில் இஸ்ரவேலர்களுக்கு தேவன் கொடுத்தது என்ன?

அவர் மன்னாவையும், காடைகளையும் கொடுத்தார் மேலும் அவர்கள் அணிந்திருந்த உடைகளும் பாதரட்சைகளும் பழையதாய் போகவில்லை.

---

## 14:12

தேவன் அற்புதமாக பாறையிலிருந்து குடிக்க தண்ணீர் வரும்படிச் செய்தார், ஆனாலும் இஸ்ரவேலர்கள் தேவனுக்கும் மோசேக்கும் விரோதமாய் பேசினார்கள்.

### ஜனங்கள் முறுமுறுக்கிரதையும் குறைச் சொல்லுகிரதையும் தேவன் கேட்டு என்ன செய்தார்?

ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு என்பவர்களுக்கு தாம் கொடுத்த வாக்கின்படி உண்மையாயிருந்தார்.

---

## 14:13

ஒரு சமயம் ஜனங்களுக்குத் தண்ணீர் இல்லாதிருந்தது, எனவே தேவன் பாறையைப் பார்த்து பேசும்படி மோசேயிடம் சொன்னார், ஆனால் அவன் பேசாமல், தன் கோலினால் அந்த பாறையை அடித்தான். இவ்விதமாக மோசே தேவனுக்குக் கீழ்ப்படியாமற்போனான். ஆனாலும் ஜனங்கள் குடிக்கும்படி தண்ணீர் வந்தது. ஆனால் தேவன் மோசேயின்மேல் கோபமடைந்து, நீ வக்குப்பண்ணப்பட்ட தேசமாகிய கானானுக்குள் போவதில்லை என்றார்.

### மோசே கன்மலையை அடித்தபோது ஏன் தேவன் மோசேயின்மேல் கோபங்கொண்டார்?

தேவன் அவனை கன்மலையைப் பார்த்து பேசும்படி சொன்னார் ஆனால் மோசே அதை செய்யாமல் தேவனை கணவீனப்படுத்தினான்.

### மோசேயின் கீழ்படியாமைக்கு தேவன் கொடுத்த தண்டனை என்ன?

வாக்குப்பண்ணபட்ட தேசத்திற்குள் மோசே பிரவேசிப்பதில்லை என்றார்.

---

## 14:14

வனாந்திரத்தில் நாற்பது வருடம் அலைந்துத் திரிந்து தேவனுக்கு விரோதமாய் கலகம் செய்த யாவரும் மரித்தப்பின்பு, அவர்களுக்கு வக்குப்பண்ணப்பட்ட தேசமாகிய கானானுக்கு பக்கத்தில் மறுபடியும் அவர்கள் நடத்திச் சென்றார். வயதுஆயிற்று. எனவே யோசுவாவை மோசேக்கு உதவியாய் இருக்கும்படி தேவன் தெரிந்துகொண்டார். அவர்களுக்கு மோசேயைப் போல வேறொரு தீர்க்கத்தரிசி ஏற்படுத்துவதாக முன்னமே மோசேயிடம் தேவன் சொல்லியிருந்தார்.

### எதிர்காலத்தில் ஒருநாள் யாரை தேவன் அனுப்புவதாக வாக்குப்பண்ணினார்?

மோசேயைப் போல வேறு ஒரு தீர்கத்தரிசியை.

---

## 14:15

பின்பு மோசேயை மலையின்மேல் சென்று வக்குப்பண்ணப்பட்ட கானான் தேசத்தைப் பார்க்கும்படி சொன்னார். மோசே அதைப் பார்த்தான், ஆனால் கானானுக்குள் பிரவேசிக்க தேவன் சம்மதிக்கவில்லை. பின்பு மோசே மரித்தான். ஜனங்கள் அவனுக்காக நாற்பது நாள் துக்கமாய் இருந்தனர். யோசுவா தேவனை நம்பி, அவருக்குக் கீழ்ப்படிந்ததினால் அவன் புதிய தலைவன் ஆனான்.

### மோசே மரித்தபின்பு இஸ்ரவேல் ஜனங்களை வழிநடத்திக்கொண்டுபோனது யார்?

யோசுவா.

### யோசுவா எப்படிப்பட்ட தலைவனாயிருந்தான்?

அவன் தேவனுக்குக் கீழ்படிந்து, அவரை நம்பினபடியால் அவன் நல்ல தலைவனாயிருந்தான்.

# 15. தேசம்

## 15:01

இஸ்ரவேலருக்கு வாக்குபண்ணபட்ட தேசமாகிய கானானுக்குள் போகும் சமயத்தில், எரிகோ என்ற நகரம் இருந்தது. அந்த நகரத்தை பாதுகாக்க அதைச் சுற்றிலும் மிகவும் வலிமையான மதில்கள் இருந்தது. இரண்டு மனிதர்களை யோசுவா வேவு பார்க்கும்படி அங்கே அனுப்பினான், அந்த நகரத்தில் விபச்சாரியான ஒரு பெண் இருந்தாள். அவள் தேவனை நம்பினபடியால் அந்த இரண்டு பேரையும் ஒத்துவைத்து, பின்பு அவர்கள் தப்பிப்போகும்படி உதவினாள். எனவே அந்த இருவரும் எரிகோ பட்டணம் அழிக்கப்படும் போது அந்த ராகாபையும், அவள் குடும்பத்தையும் விட்டு விடுவதாக உறுதியளித்தனர்.

### வாக்குப்பண்ணபட்ட தேசத்திற்குள் நுழையும் நேரம் வந்தபோது, யோசுவா முதலில் செய்தது என்ன?

அவன் எரிகோவுக்கு இரண்டு வேவு பார்க்கிறவர்களை அனுப்பினான்.

### விபச்சாரியான ராகாபினிடத்தில் வேவு பார்க்கிறவர்கள் என்னவென்று வாக்குக்கொடுத்திருந்தனர்?

இஸ்ரவேலர்கள் இந்த நகரத்தை அழிக்கும்போது ராகாபையும் அவளுடைய குடும்பத்தையும் விட்டுவிடுவதாக வாக்குக்கொடுத்திருந்தனர்.

---

## 15:02

வாக்குபண்ணபட்ட தேசத்திற்கு போவதற்கு யோர்தான் நதியை கடக்க வேண்டியிருந்தது. யோசுவாவிடம் தேவன் ஆசாரியர்களை முன்பாக அனுப்பும்படி சொன்னார். ஆசாரியர்களின் கால்கள் யோர்தானில் பட்டவுடனே தண்ணீர் விலகி இஸ்ரவேலர்கள் கடந்து போகும்படி வெட்டாந்தரையைப் போல் ஆயிற்று.

### யோர்தான் நதியை இஸ்ரவேலர்களால் எப்படி கடக்க முடிந்தது?

ஆசாரியர்கள் முதலில் யோர்தான் நதியில் கால் வைத்தவுடனே, தண்ணீர் நின்றது.

---

## 15:03

இஸ்ரவேலர் யோர்தான் நதியை கடந்ததும், எரிகோ பட்டணத்தார் மிகவும் பலசாலிகளாயிருந்தும் அவர்களோடு யுத்தஞ்செய்யப் புறப்படும்படி தேவன் யோசுவாவோடு சொன்னார். இஸ்ரவேலின் ஆசாரியர்களும், யுத்தவீரர்களும் ஒரு நாள்

ஒருதரம் என்ற கணக்கின்படி ஆறு நாளும் எரிகோ பட்டணத்தை சுற்றும்படி சொன்னார். அவர்கள் அப்படியே செய்தனர்.

### இஸ்ரவேலர்கள் எப்படி எரிகோவை பிடித்தனர்?

இஸ்ரவேலர்கள் நாள் ஒருமுறை என்று ஆறுநாளும் அந்த நகரத்தை சுற்றி வந்தனர், ஏழாம் நாளில் ஏழு முறை சுற்றி வந்தனர். அவர்கள் கடைசியாக சுற்றி வரும்போது, ஆசாரியர்கள் எக்காளம் ஊதினார்கள் மற்றும் யுத்த வீரர்கள் மிகுந்த சத்தமாய் ஆர்ப்பரித்தனர்.

---

## 15:04

பின்பு ஏழாம் நாளில், இஸ்ரவேலர்கள் ஏழுதரம் சுற்றினர். ஏழுமுறை சுற்றி முடித்தப் பின்பு, ஆசாரியர்கள் எக்காளம் ஊதினர், யுத்த வீரர்களும் சத்தமாய் ஆர்ப்பரித்தனர்.

### இஸ்ரவேலர்கள் எப்படி எரிகோவை பிடித்தனர்?

இஸ்ரவேலர்கள் நாள் ஒருமுறை என்று ஆறுநாளும் அந்த நகரத்தை சுற்றிவந்தனர், ஏழாம் நாளில் ஏழு முறை சுற்றிவந்தனர். அவர்கள் கடைசியாக சுற்றி வரும்போது, ஆசாரியர்கள் எக்காளம் ஊதினார்கள் மற்றும் யுத்தவீரர்கள் மிகுந்த சத்தமாய் ஆர்ப்பரித்தனர்.

---

## 15:05

எனவே எரிகோவின் சுவர்கள் இடிந்து விழுந்தது. உடனே தேவன் இஸ்ரவேலர்களுக்குக் கட்டளையிட்டபடி அவர்கள் அதிலுள்ள எல்லாவற்றையும் அழித்தனர். ராகாபையும் அவள் குடும்பத்தையும் தப்ப விட்டனர், அவளும் இஸ்ரவேலரின் கூட்டத்தில் சேர்ந்தாள். கானானில் வாழ்ந்த மற்ற ஜனங்கள் இஸ்ரவேலர் எரிகோவின் பட்டணத்தை அழித்துப் போட்ட செய்தியைக் கேட்டு, அவர்களையும் இஸ்ரவேலர்கள் அழிப்பார்கள் என்று மிகவும் பயந்தனர்.

### ஆசாரியர்கள் எக்காளம் ஊதி யுத்தவீரர்கள் மிகுந்த சத்தமாய் ஆர்ப்பரித்தபோது என்ன சம்பவித்தது?

எரிகோவின் மதில்கள் இடிந்து விழுந்தது, பின்பு இஸ்ரவேலர்கள் அந்த நகரத்தில் இருந்த எல்லாவற்றையும் அழித்துப்போட்டனர்.

### ராகாபுக்கும் அவளுடைய குடும்பத்திற்கும் நடந்தது என்ன?

அவர்கள் கொலைசெய்யப்படாமல், இஸ்ரவேலரோடு சேர்த்துக்.

---

## 15:06

கானானில் இருக்கும் எந்த ஜனத்தாருடனும் சேரக்கூடாது என்று தேவன் இஸ்ரவேலருக்குக் சொல்லியிருந்தார். ஆனால் கானானில் இருந்த கிபியோனியர் யோசுவாவிடம், தாங்கள் தூரதேசத்தார் என்று பொய் சொல்லி, சமாதான ஒப்பந்தம் செய்யும்படி கேட்டனர். ஆனால் யோசுவாவும், இஸ்ரவேல் தலைவர்களும், கிபியோனியரிடம் சமாதான ஒப்பந்தம் செய்தனர்.

### இஸ்ரவேலர்களோடு சமாதான உடன்படிக்கை செய்துகொள்ள கிபியோனியர்கள் செய்த சதி என்ன?

கானானிலிருந்து மிகவும் தூரத்திலிருந்து வருவதாக சொன்னார்கள்.

### கிபியோனியர்கள் பொய்சொல்கிறதை ஏன் யோசுவாவும் இஸ்ரவேலர்களும் அறியாதிருந்தனர்?

அவர்கள் தேவனிடத்தில் கேட்கவில்லை.

---

## 15:07

மூன்று நாட்களுக்குப்பின் கிபியோனியர் கானானில் வாழ்கிறவர்கள் என்ற செய்தியை இஸ்ரவேலர்கள் கேள்விப்பட்டு, தங்களை ஏமாற்றியதினால் மிகவும் கோபமடைந்தனர். தேவனுக்கு முன்பாக சமாதனம் செய்ததினால் அவர்கள் ஒன்றும் செய்யவில்லை. சில நாட்களுக்குப்பின் இஸ்ரவேலருடன், கிபியோனியர் சமாதான ஒப்பந்தம் செய்ததை கானானில் வாழ்ந்த சில அம்மோனிய ராஜாக்கள் கேள்விப்பட்டு, மிகப்பெரிய கூட்டமாய் வந்து கிபியோனியரோடு சண்டையிட்டனர். தங்களுக்கு உதவும்படி கிபியோனியர் யோசுவாவுக்கு சொல்லி அனுப்பினர்.

### இஸ்ரவேலர்கள் கிபியோனியர்களுக்கு பாதுகாப்பாக இருப்பதையும் அவர்களோடு சமாதான உடன்படிக்கையை செய்திருந்ததை எதினால் தொடர்ந்தனர்?

தேவனுக்கு முன்பாக அவர்களிடத்தில் வாக்குப்பண்ணியிருந்தனர்.

---

### 15:08

எனவே யோசுவா, இஸ்ரவேலின் ராணுவத்தை சேர்த்து, இரவு முழுவதும் நடந்து கிபியோனியர் இருக்கும் இடத்திற்கு வந்து, அதிகாலையில் அம்மோனியர் ஆச்சரியப்பட அவர்களிடம் சண்டையிட்டனர்.

---

### 15:09

அன்று தேவன் இஸ்ரவேலுக்காக யுத்தம் செய்தார். அம்மோனியர்கள் மனதை குழப்பி, வானத்திலிருந்து பெரிய கற்களை விழும்படிச் செய்து அநேக அம்மோனியரை கொன்றுபோட்டார்.

### இஸ்ரவேலருக்காக தேவன் எப்படி அம்மோனியர்களிடத்தில் யுத்தம் செய்தார்?

அவர் அம்மோனியர்கள் குழம்பிப்போகும்படி, கல்மழையை வரும்படிச் செய்து, சூரியனை ஒரே இடத்தில் நிற்கும்படிச் செய்தார். அதினால் இஸ்ரவேலர்களுக்கு முற்றிலுமாய் அம்மோனியர்களை அழிக்கும்படி சமயம் கிடைத்தது.

---

### 15:10

இஸ்ரவேலர் அம்மோனியரை முற்றிலுமாய் ஜெயிக்கும்படி, தேவன் சூரியனை அப்படியே நிற்கும்படிச் செய்தார். இஸ்ரவேலருக்கு தேவன் மாபெரும் வெற்றியைத் தந்தார்.

### இஸ்ரவேலருக்காக தேவன் எப்படி அம்மோனியர்களிடத்தில் யுத்தம் செய்தார்?

அவர் அம்மோனியர்கள் குழம்பிப்போகும்படி, கல்மழையை வரும்படிச் செய்து, சூரியனை ஒரே இடத்தில் நிற்கும்படிச் செய்தார். அதினால் இஸ்ரவேலர்களுக்கு முற்றிலுமாய் அம்மோனியர்களை அழிக்கும்படி சமயம் கிடைத்தது.

---

## 15:11

அவர்களுடைய ராணுவத்தை தேவன் தோற்கடித்ததினால், கானானில் இருந்த மற்ற ஜனங்களும் சேர்ந்து இஸ்ரவேலுக்கு விரோதமாய் வந்தனர். யோசுவாவும், இஸ்ரவேலர்களும் அவர்களை முறியடித்தனர்.

### இஸ்ரவேலர்களை எதிர்த்த மற்ற கானானிய தேசத்தாருக்கு யோசுவாவும் இஸ்ரவேலர்களும் என்ன செய்தனர்?

யோசுவாவும் இஸ்ரவேலர்களும் அவர்களை அழித்துப்போட்டனர்.

---

## 15:12

இந்த யுத்தம் முடிந்தபின்பு, வாக்குபண்ணபட்ட தேசத்தில் இஸ்ரவேலின் ஒவ்வொரு கோத்திரங்களுக்கும் தேவன் இடங்களை பகிர்ந்து கொடுத்தார். அதன்பிறகு இஸ்ரவேலருக்கு அவர்கள் எல்லையில் சமாதானத்தைத் தந்தார்.

### வாக்குத்தத்தத்தின் தேசம் எப்படி பிரிக்கப்பட்டது?

இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களுக்கும் தேவன் சொந்தமாக ஒவ்வொரு பாகங்களைக் கொடுத்தார்.

---

## 15:13

யோசுவாவுக்கு வயதானபோது, அவன் இஸ்ரவேலர் எல்லோரையும் அழைத்து, சீனாய் மலையில் தேவன் அவர்களோடு செய்த உடன்படிக்கையை நினைவுபடுத்தி, தேவனுக்குக் கீழ்ப்படியவும், அவருடைய கற்பனைகளின்படி செய்யவும் சொன்னான்.

### யோசுவாவுக்கு வயதானபோது ஏன் இஸ்ரவேலர்களை கூடிவரும்படிச் செய்தான்?

அவர்களோடு தேவன் செய்த உடன்படிக்கைக்கு அவர்கள் கீழ்ப்படிய கவனமாயிருக்கும்படி அறிவுறுத்தும்படிக்கு.

### இஸ்ரவேலர்கள் எப்படி யோசுவாவுக்கு பதில் சொன்னார்கள்?

அவர்கள் தேவனுக்கு பயந்து நடக்கவும், மற்றும் அவருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து நடப்பதாகவும் வாக்குக்கொடுத்தனர்.

# 16. மீட்பர்கள்

## 16:01

யோசுவா மரித்த பின்பு, இஸ்ரவேலர்கள் தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்படியாமல், அவருடைய கட்டளைகளின்படி செய்யாமலும், வாக்கு பண்ணபட்ட கானானில் இருந்த மற்ற ஜனங்களை துரத்திவிடாமல். உண்மையான யேகோவா தேவனை ஆராதிக்காமல், அவர்களுடைய தேவர்களை ஆராதித்தனர். இஸ்ரவேலருக்கு ராஜா இல்லாததினால், அவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் பார்வைக்கு நலமாய் தோன்றியதைச் செய்தனர்.

### யோசுவா மரித்தபின்பு இஸ்ரவேல் ஜனங்கள் எப்படி தேவனுக்கு கீழ்படியாமற் போனார்கள்?

அவர்கள் கானியர்களைத் துரத்தாமல், உண்மையான தெய்வம் யேகோவா தேவனுக்கு பதிலாக கானானிய தேவர்களை வணங்கினார்கள்.

---

## 16:02

இப்படியே இஸ்ரவேலர்கள் தேவனுக்குக் கீழ்படியாமல் அநேக வருடங்கள் இப்படியே செய்து வந்தனர். தேவனுக்கு இஸ்ரவேலர் கீழ்படியாததினால் அவர்களை தண்டிக்கும்படி, விரோதிகள் கையில் ஒப்புக்கொடுப்பார். அவர்கள் இஸ்ரவேலரின் உடைமைகளைத் திருடி, அவர்களுடைய எல்லாவற்றையும் கொள்ளையடித்து, அவர்களில் அநேகரை கொன்று போடுவார்கள். இஸ்ரவேலரை விரோதிகள் மிகவும் ஒடுக்கினபின்பு, அவர்கள் மனந்திரும்பி தேவன் அவர்களை மீட்க்கும்படி ஜெபிப்பார்கள்

### இஸ்ரவேலர்களுடைய கீழ்படியாமைக்கு தேவன் அவர்களை எப்படி தண்டித்தார்?

அவர்களுடைய எதிரிகளை வீழ்த்த தேவன் அனுமதித்தார்.

---

## 16:03

அவர்கள் மனந்திரும்பிய ஒவ்வொரு முறையும் தேவன் இஸ்ரவேலரை காப்பாற்றி, அவர்களை இரட்சித்தார். எப்படியெனில், விரோதிகளுடன் யுத்தம் செய்து அவர்களைக் காப்பாற்றும்படி ஒரு இரட்சகன் என்று ஒவ்வொரு முறையும் தேவன் அநேகரை அனுப்பினார். அவர்கள் இஸ்ரவேலரைக் காப்பாற்றி, அவர்களை ஆளுவார்கள்.

இப்படியே தேவன் அநேகரை எழுப்பினார். அவர்கள் அருகில் இருந்த மீதியானியர் இஸ்ரவேலரைத் தோற்கடித்தபோதும் தேவன் இப்படியே செய்தார்.

### இஸ்ரவேலர்கள் உதவிக்காக அழுதபோது தேவன் என்ன செய்தார்?

அவர்களுக்கு ஒரு இரட்சகனை அனுப்பி, அவர்கள் தேசத்திற்கு சமாதானத்தைக் கொடுத்தார்.

---

## 16:04

மீதியானியர்கள் இஸ்ரவேலரின் எழு வருடத்தின் விளைச்சலை எடுத்துக்கொண்டனர். இஸ்ரவேலர் மிகவும் பயந்து மீதியானியர்கள் தங்களை காணாதபடி கெபிகளில் ஒளிந்து கொண்டனர். இறுதியாக தேவன் அவர்களை விடுதலையாக்கும்படி அவரிடத்தில் அழுதனர்.

---

## 16:05

கிதியோன் என்னும் ஒருவன் இஸ்ரவேலில் இருந்தான். ஒரு நாள் அவன் மீதியானியர்கள் காணாதபடி மறைந்து கதிர்களை போரடித்துக் கொண்டிருந்தான். அப்போது தேவதூதன் கிதியோனிடம் வந்து, பராக்கிரமசாலியே தேவன் உன்னோடு இருக்கிறார். போய் இஸ்ரவேலரை மீதியானியர்களின் கைக்குத் தப்புவிப்பாய் என்றார்.

### யேகோவாவின் தூதன் கிதியோனிடத்தில் வந்தபோது அவன் என்ன செய்து கொண்டிருந்தான்?

மீதியானியர்கள் திருடாதபடிக்கு இரகசியமாய் கோதுமையை போரடித்துக் கொண்டிருந்தான்.

---

## 16:06

கிதியோனுடைய தகப்பன் விக்கிரகத்திற்கு பலியிடும்படி ஒரு பலிபீடத்தை வைத்திருந்தான். தேவன் அதை இடித்துப் போடும்படி கிதியோனிடம் சொன்னார். ஆனால் வன் ஜனங்களுக்கு பயந்ததினால், இரவு வரும்வரை காத்திருந்தான். இரவில் அதை இடித்துப் போட்டு, தேவனுக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டி தேவனுக்கு பலி செலுத்தினான்.

---

## 16:07

மறுநாள் காலையில் பலிபீடம் இடிக்கப்பட்டு இருப்பதை பார்த்த ஜனங்கள் மிகவும் கோபமடைந்து, கிதியோனை கொன்று போடும்படி அவனுடைய வீட்டிற்கு வந்தனர். ஆனால் அவனுடைய தகப்பன், உங்கள் தேவனுக்கு நீங்கள் ஏன் உதவ வேண்டும், அவர் தேவனானால் அவர் தாமே அவரை காப்பாற்றிக் கொள்ளட்டும் என்றான். இப்படி அவன் சொன்னதினால் கிதியோனை அவர்கள் ஒன்றும் செய்யவில்லை.

---

## 16:08

மீதியானியர்கள் இஸ்ரவேலரை கொள்ளையிடும்படி மிகவும் திரளாய் வந்தனர். அவர்கள் எண்ணக்கூடாதிருந்தனர். அப்போது கிதியோன் இஸ்ரவேலரை யுத்தம் பண்ணும்படி கூட்டி, நிஜமாகவே தேவன் தன்னை இஸ்ரவேலை மீட்க அனுப்புவதற்கு தேவனிடத்தில் இரண்டு அடையாளத்தை கேட்டான்.

## இஸ்ரவேலை கிதியோனைக் கொண்டு விடுவிப்பதை எந்த இரண்டு அடையாளங்களினால் நிரூபித்தார்?

காலையின் பனி நிலத்தில் விழாமல், துணியின்மேல் மட்டும் விழும்படிச் செய்தார், பின்பு பனி நிலத்தில் மட்டும் விழும்படிச் செய்து, துணியில் விழாமல் செய்தார்.

---

## 16:09

முதலாவது, கிதியோன் ஆட்டுத்தோலை தரையிலே போட்டு, காலையின் பனி தோலின் மேல் மட்டும் நனைக்கும்படி தேவனிடத்தில் கேட்டான். தேவன் அப்படியே செய்தார். அடுத்த நாள் இரவு, அந்த தோல் நனையாமலிருக்கவும், தரை முழுவதும் பனி பெய்திருக்கும் படி கேட்டான். அப்படியே தேவன் செய்தார். இந்த இரண்டு அடையாளத்தினால் தேவன் அவனை உறுதியாய் இஸ்ரவேலை மீட்க மீதியானியரிடத்தில் அனுப்புவதை அறிந்து கொண்டான்.

## இஸ்ரவேலை கிதியோனைக்கொண்டு விடுவிப்பதை எந்த இரண்டு அடையாளங்களினால் நிரூபித்தார்?

காலையின் பனி நிலத்தில் விழாமல், துணியின்மேல் மட்டும் விழும்படிச் செய்தார், பின்பு பனி நிலத்தில் மட்டும் விழும்படிச் செய்து, துணியில் விழாமல் செய்தார்.

---

## 16:10

பின்பு கிதியோன் யுத்த புருஷர்களை அழைத்தான். 32,000 பேர் வந்தனர். ஆனால் இது மிகவும் அதிகம் என்று தேவன் சொன்னதினால், யுத்தத்திற்கு பயந்த 22,000 பேரை திருபி அனுப்பி விட்டான். பின்னும் தேவன் அதிகம் என்றதினால், தன்னோடு 300 பேரை மாத்திரம் வைத்துக் கொண்டு மற்றவர்களை அனுப்பி விட்டான்.

### கிதியோன் 300 யுத்த வீரர்களைத் தவிர ஏன் மற்றவர்களை திரும்ப வீடிற்கு அனுப்பினான்?

ஏனெனில் அதிகமான ஆண்கள் இருப்பதாக தேவன் சொன்னார்.

---

## 16:11

அந்த இரவில் தேவன் கிதியோனிடம், அவர்கள் பயப்படாமல் யுத்தம் பண்ணும்படி, மீதியானியர் இருக்கும் பாளையத்திற்கு போய் அவர்கள் அங்கே என்ன பேசுகிறார்கள் என்று கவனித்துக் கேட்க சொன்னார். எனவே கிதியோன் மீதியானியர் பாளையத்தில் ஒருவன் தான் கண்ட சொப்பனத்தின் அர்த்தத்தை சொன்னான். அதாவது, கிதியோனின் ராணுவம் நம்மை தோற்கடிக்கும்! என்றான். இதைக் கிதியோன் கேட்டதும், தேவனைத் துதித்தான்.

### கிதியோன் பயப்படாமல் இருக்கும்படி தேவன் கூடுதலாக எந்த அடையாளத்தைக் காண்பித்தார்?

கிதியோனின் இராணுவம் மீதியானியரின் இராணுவத்தை தோற்கடிக்கும் என்று மீதியானிய யுத்த வீரன் ஒருவன் தான் கண்ட சொப்பனத்தை சொல்வதைக் கிதியோன் கேட்டான்.

### மீதியானியானின் சொப்பனத்தைக் கேட்ட கிதியோன் என்ன செய்தான்?

அவன் தேவனைத் துதித்தான்.

---

## 16:12

கிதியோன் திரும்பி வந்து, அவனோடே இருந்த 300 பேருக்கும் எக்காளமும், மண்பானையும், தீப்பந்தமும் கொடுத்தான். பின்பு அவர்கள் மீதியானியர் இருக்கும் பாளையத்தை சுற்றி வளைத்தனர். தங்கள் கைகளில் மண் பானைகளை வைதிருந்ததினால் மீதியானியரால் அவர்களின் தீப்பந்தத்தை பார்க்க முடியவில்லை.

---

### 16:13

பின்பு ஒரே சமயத்தில் கிதியோனின் மனிதர்கள் பானையை உடைத்து, தீப்பந்தத்தை எடுத்து, எக்காளம் ஊதி, யெகோவாவின் பட்டயம், கிதியோனின் பட்டயம் என்று சத்தமிட்டனர்.

### கிதியோனும் அவனுடைய யுத்த மனுஷரும் எப்படி மீதியானியரோடு யுத்தம் செய்தார்கள்?

மீதியானியரின் பாளையத்தை சுற்றி வளைத்து, பானையை உடைத்து, தீவட்டிகளை எடுத்து, எக்காளம் ஊதி கர்த்தருடைய பட்டயம் கிதியோனின் பட்டயம் என்று மிகுந்த சத்தமிட்டனர்.

---

### 16:14

தேவன் மீதியானியரை குழப்பமடைய செய்ததினால் அவர்கள் தங்களில் ஒருவரையொருவர் வெட்டி, காயபடுத்திக் கொண்டனர். உடனே கிதியோன் மேலும் அநேக இஸ்ரவேலரை கூட்டி, மீதியானியரைப் பின் தொடர்ந்து, அவர்களில் அநேகரை கொன்று போட்டனர். அன்று 120,000 மீதியானியர்கள் மரித்தனர். இப்படியாக தேவன் இஸ்ரவேலுக்கு இரட்சிப்பைத் தந்தார்.

### கிதியோன் மீதியானியர்களைத் தோற்கடிக்கும்படி தேவன் என்ன உதவி செய்தார்?

தேவன் மீதியானியர்களை குழப்பமடையச் செய்ததினால், அவர்கள் தங்களுக்குள்ளே யுத்தம் செய்து மற்றவர்களை கொலை செய்தனர்.

---

### 16:15

ஜனங்கள் கிதியோனை தங்களுக்கு ராஜாவாக்கும் படி விரும்பினார்கள். ஆனால் கிதியோன் அப்படி செய்ய அனுமதியாமல், மீதியானியரிடத்தில் இருந்து எடுத்து வந்த தங்க ஆபரணங்களை கொடுக்கும்படி கேட்டான். அவர்கள் எல்லோரும் தந்தனர்.

---

### 16:16

பின்பு கிதியோன் அதினால் ஆசாரியர்கள் பயன் படுத்தும் ஒரு ஏபோத்தை உண்டாக்கினான். அதை ஒரு விக்கிரகமாக நினைத்து, ஜனங்கள் தொழுக

ஆரம்பித்தனர். எனவே தேவன் இஸ்ரவேலை தண்டித்தார். அவர்களுடைய விரோதிகளிடம் ஒப்புக் கொடுத்தார். அவர்கள் தங்களை விடுவிக்கும்படி வேண்டினர், பின்பு வேறொரு மீட்பரை அனுப்பி அவர்களை விடுவித்தார்.

## பின்பு கிதியோன் எப்படி ஜனங்களை விக்கிரகங்களை வணங்கும்படிச் செய்தான்?

அவன் பொன்னினால் ஆன ஒரு உடையைச் செய்தான், அதினால் ஜனங்கள் விக்கிரகங்களை வணங்க ஆரம்பித்தனர்.

---

## 16:17

இப்படியே அநேகந்தரம் ஆயிற்று. இஸ்ரவேலர் பாவம் செய்வதும், தேவன் அவர்களைத் தண்டிப்பதும், பின்பு அவர்கள் மனந்திரும்புவதும், தேவன் ஒருவனை அனுப்பி அவர்களை மீட்பதுமாய் இருந்தது. தேவன் இஸ்ரவேலரை அநேக வருடங்களாய் அவர்களை இரட்சித்து, விரோதிகளிடமிருந்து மீட்டார்.

## இஸ்ரவேலர்கள் எந்தக் காரியத்தை திரும்பத்திரும்ப அநேக முறை செய்தனர்?

இஸ்ரவேலர்கள் பாவம் செய்வார்கள், தேவன் அவர்களைத் தண்டிப்பார், அவர்கள் மனந்திரும்புவார்கள், பின்பு தேவன் ஒரு இரட்சகனை அனுப்பி அவர்களை விடுவிப்பார்.

---

## 16:18

இறுதியில், தங்களை ஆளும்படி ராஜா வேண்டும் என்று ஜனங்கள் தேவனிடத்தில் கேட்டனர். ஏனெனில் மற்ற தேசங்களைப் போல இருக்கவும் யுத்தத்தில் முன் நின்று அவர்களை நடத்தவும் விரும்பினர். தேவன் அதை விரும்பவில்லை, ஆனால் அவர்கள் கேட்டது போலவே ராஜாவை ஏற்படுத்தினார்.

## எதினால் ஜனங்கள் தங்களுக்கு ராஜா வேண்டும் என்று தேவனிடத்தில் கேட்டனர்?

மற்ற எல்லா தேசங்களிலும் ராஜாக்கள் இருப்பதுபோல, அவர்களுக்கு ஒரு ராஜா அவர்களை யுத்தத்தில் முன்னின்று நடத்தும்படி விரும்பினார்கள்.

## அவர்கள் கேட்டுக்கொண்டதினால் தேவன் எப்படி பதில் அளித்தார்?

அவர்கள் கேட்டுக் கொண்டபடியே தேவன் அவர்களுக்கு ஒரு ராஜாவைக் கொடுத்தார்.

# 17. தாவீதுடன் தேவனின் உடன்படிக்கை

## 17:01

சவுல் என்பவன் இஸ்ரவேலின் முதல் ராஜா. அவன் மிகவும் சவுந்தரியமும், உயரமுமானவன். சவுல் முதல் சில வருடங்கள் ஜனங்கள் விரும்பியபடியே நன்றாய் ஜனங்களை ஆண்டான். ஆனால் பின்பு தேவனுக்குக் கீழ்படியாமல், பாவம் செய்தான் எனவே தேவன் அவனுடைய ஸ்தானத்தில் வேறொருவனை ராஜாவாக .

### சவுல் தான் இஸ்ரவேலின் முதல் ராஜாவா, அவன் நல்ல ராஜாவா அல்லது மிகவும் மோசமான ராஜாவா?

அவன் முதல் சில வருடங்கள் நல்லவனாயிருந்தான், ஆனால் பின்பு மோசமான ராஜாவாக மாறினான்.

---

## 17:02

தாவீது என்று அழைக்கப்படும் ஒரு வாலிபனை தேவன் தெரிந்து கொண்டு, சவுலுக்குப் பின் அவனை ராஜாவாக்கும்படி ஆயத்தப்படுத்தினார். பெத்லகேம் என்னும் ஊரில் தாவீது ஒரு ஆட்டு மேய்ப்பனாயிருந்தான். ஒரு சமயம் தன் தகப்பனுடைய ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்தபோது வந்த ஒரு சிங்கத்தையும், ஒரு கரடியையும் கொன்று போட்டான். தாவீது தாழ்மையாயும், உத்தமமாயும், தேவனை நம்பி, கீழ்ப்படிந்திருந்தான்.

### தாவீது ராஜாவாகிறதற்கு முன்பு என்ன செய்துகொண்டிருந்தான்?

அவன் ஆடுகளை மேய்க்கிற மேய்ப்பனாயிருந்தான்.

---

## 17:03

தாவீது வாலிபனாய் இருந்த போது, அரக்கன் கோலியாத்திடம் சண்டை போட்டு அவனை தோற்கடித்தான். கோலியாத் மூன்று மீட்டர் உயரமும், பலசாலியும், நன்றாய் சண்டை பண்ணுகிறவனுமாயிருந்தான்!! ஆனால் தாவீது, கோலியாத்தைக் கொன்று, இஸ்ரவேலருக்கு ஜெயம் பெற்றுத் தரும்படி தேவன் அவனுக்கு உதவி செய்தார். அதன் பின்பு தாவீது அநேக யுத்தங்களில் வெற்றி பெற்றான். அவன் நன்றாய் யுத்தம் செய்கிறவனாய், இஸ்ரவேலின் இராணுவத்தை நடத்தினான். அதினால் ஜனங்கள் தாவீதை புகழ்ந்தனர்.

## கோலியாத்தை தாவீது கொன்றது ஏன் ஆச்சரியமாய் இருந்தது?

கோலியாத் யுத்தம் செய்யும்படி பயிற்சி பெற்றவனும், மிகவும் பலசாலியும், ஏகதேசம் மூன்று மீட்டர் உயரமுள்ளவன்.

## இஸ்ரவேல் ஜனங்கள் ஏன் தாவீதை புகழ்ந்தனர்?

அவன் இஸ்ரவேலின் எதிரிகளிடம் அநேக வெற்றிகளை பெற்றான்.

---

## 17:04

ஜனங்கள் சவுலைப்பார்க்கிலும் தாவீதை அதிகம் நேசித்ததினால், ராஜாவாகிய சவுல் அவனைக் கொல்லும்படி நினைத்தான். எனவே தாவீது வனாந்திரத்தில் ஒளிந்து கொள்ளும்படி, தன்னுடன் இருந்த யுத்த வீரர்களுடன் ஓடிப் போனான். ஒரு நாள் சவுலும், அவனுடைய வீரர்களும், தாவீது இருந்த அதே குகைக்குள் பிரவேசித்தனர். ஆனால் அவர்கள் தாவீதை பார்க்கவில்லை. அவன் ஒளிந்து கொண்டிருந்தான். தாவீது சவுலின் அருகில் சென்று அவனுடைய சால்வையின் ஒரு பகுதியை வெட்டி எடுத்துக் கொண்டான். பின்பு அவன் சவுலை நோக்கி, உம்முடைய சால்வையின் சிறு பகுதி என்றான். அப்படி அவன் செய்ததினால், சவுலைக் கொன்று போட்டு தான் ராஜாவாக விரும்பவில்லை என்பதை அவனுக்கு உணர்த்தினான்.

## குகையில் சவுலை கொலை செய்யும்படி தாவீதுக்கு வாய்ப்பு கிடைத்தும் தாவீது என்ன செய்தான்?

அவன்சவுலை விட்டுவிட்டு, அவனுடைய வஸ்திரத்தின் ஓரத்தை மட்டும் வெட்டி எடுத்துக்கொண்டான்.

---

## 17:05

கொஞ்ச நாட்களுக்குப் பிறகு, சவுல் யுத்தத்தில் மரித்தான், அதன் பின்பு தாவீது இஸ்ரவேலில் ராஜாவானான். அவன் நல்ல ராஜாவாயிருந்தான், ஜனங்களும் அவனை நேசித்தனர். தேவன் தாவீதை ஆசீர்வதித்து, அவனுக்கு ஜெயத்தைத் தந்தார். அவன் சென்ற அநேக யுத்தங்களில் இஸ்ரவேலருடைய விரோதிகளை ஜெயிக்கும்படி தேவன் தாவீதுக்கு உதவி செய்தார். அவன் எருசலேமை பிடித்து, அதை தன் தலைநகராக்கினான், அங்கே தான் அவன் வாழ்ந்து, ஆட்சி செய்தான். தாவீது நாற்பது வயதானபோது இஸ்ரவேல் தேசம் வலிமையையும், செழிப்பையும் பெற்றிருந்தது.

## தாவீது கைப்பற்றிய நகரம் மற்றும் அதன் தலைநகரம் என்ன?

எருசலேம்

---

### 17:06

மோசேயின் காலத்தில் செய்யப்பட்டு, 400 வருடங்களாக இருந்த ஆசரிப்புக் கூடாரத்தில் இஸ்ரவேலர்கள் தேவனுக்கு ஆராதனை செய்து, பலி செலுத்தி வந்ததினால், தாவீது தேவனுக்கு ஒரு ஆலயத்தைக் கட்ட வேண்டுமென்று விரும்பினான்.

### தாவீது தேவனுக்கு என்ன கட்டும்படி விரும்பினான்?

எல்லா இஸ்ரவேலர்களும் சேர்ந்து தேவனை ஆராதிக்கவும், அவருக்கு பலி செலுத்தவும் தாவீது ஒரு ஆலயம் கட்ட விரும்பினான்.

---

### 17:07

ஆனால் நாத்தான் என்னும் தீர்க்கத்தரிசியை தாவீதிடம் தேவன் அனுப்பி, நீ அநேக யுத்தங்களை செய்ததினால் நீ அல்ல, உன் குமாரனே எனக்கு ஆலயத்தைக் கட்டுவான், ஆயினும், நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து, என்றென்றைக்கும் உன்னுடைய சந்ததி இஸ்ரவேலை ஆளும் என்று சொன்னார்! தாவீதின் சந்ததியில் என்றென்றைக்கும் ஆளுகிறவர் மேசியா. தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட அந்த மேசியாவே உலகத்தின் ஜனங்களின் பாவங்களை போக்குகிறவர்.

### தாவீது தேவனுடைய ஆலயத்தைக் கட்ட ஏன் தேவன் அனுமதிக்கவில்லை?

தாவீது ஒரு யுத்த மனிதனாயிருந்தான்.

### யார் தேவனுடைய ஆலயத்தைக் கட்டுவதாக தேவன் கூறினார்?

தாவீதின் குமாரன் அதைக் கட்டுவான் என்றார்.

### தாவீதுக்கு தேவன் கொடுத்த மேலான வாக்குத்தத்தம் என்ன?

தாவீதின் சந்ததி தேவனுடைய ஜனங்களை என்றென்றைக்கும் ஆளுவார்கள் என்று தேவன் தாவீதுக்கு வாக்குப்பணினார்.

### மேசியா செய்யும் மகத்தான காரியம் என்ன?

உலகத்தின் ஜனங்களின் பாவங்களிலிருந்து அவர்களை விடுவிப்பார்.

---

## 17:08

நாத்தான் சொன்னதை தாவீது கேட்டு, தேவனுக்கு நன்றி சொல்லி, துதித்தான். ஆனால் எப்போது இதை தேவன் செய்வார் என்று தாவீதுக்கு தெரியவில்லை. இப்போது நாம் அறிந்தபடி, ஏறக்குறைய மேசியா வருவதற்கு 1000 வருடங்கள் வரை இஸ்ரவேலர்கள் காத்திருக்க வேண்டும் என்று. தொடர்ந்து தேவன் தாவீதை மேன்மைப்படுத்தி, அநேகத்தினால் ஆசீர்வதித்தார்.

---

## 17:09

அநேக வருடங்கள் தாவீது ஜனங்க நியாயமாய் நடத்தினான். அவன் தேவனுக்குக் கீழ்ப்படிந்ததினால், தேவன் அவனை ஆசீர்வதித்தார். பின்பு தேவனுக்கு விரோதமாய் கொடிய பாவம் செய்தான்.

---

## 17:10

ஒரு நாள் தன் அரண்மனையிலிருந்து ஒரு அழகான பெண் குளிப்பதை தாவீது பார்த்தான். அவளை அவனுக்குத் தெரியாது, ஆனால் அவள் பெயர் பத்சேபாள் என்று அறிந்து கொண்டான்.

### பின்பு தாவீது செய்ய மிகப்பெரிய பாவம் என்ன?

அவன் உரியாவின் மனைவியாகிய பத்சேபாளோடு விபச்சாரம் செய்து, உரியாவையும் கொலை செய்தான்.

---

## 17:11

அதை விட்டுவிடாமல், தாவீது அவளை அழைத்து வரும்படிச் சொல்லி, அவளோடு விபச்சாரம் செய்ததுவிட்டு, அவளைத் திரும்பவும் வீட்டிற்கு அனுப்பி விட்டான். சில காலத்திற்கு பின்பு, அவள் கற்பமாய் இருப்பதாக தாவீதுக்கு செய்தியை அனுப்பினாள்.

### பின்பு தாவீது செய்ய மிகப்பெரிய பாவம் என்ன?

அவன் உரியாவின் மனைவியாகிய பத்சேபாளோடு விபச்சாரம் செய்து, உரியாவையும் கொலை செய்தான்.

## 17:12

பத்சேபாளின் கணவர் பெயர் உரியா. அவன் தாவீதின் இராணுவத்தில் முதன்மையான சேவகனாகயிருந்தான். அந்த சமயத்தில் அவன் யுத்தத்தில் இருந்தான். உரியாவை தாவீது அழைத்து, அவனுடைய மனைவியுடன் இருக்கும்படி அனுப்பினான், ஆனால் மற்றவர்கள் எல்லோரும் யுத்தத்தில் இருக்கும்போது உரியா வீட்டிற்கு போகவில்லை எனவே தாவீது, அவனைத் திரும்பவும் யுத்தத்திற்கு அனுப்பி, யுத்தத்தில் எதிரிகள் அவனைக் கொன்று போடும் இடத்தில் நிறுத்தும்படி அதிகாரிகளுக்குக் கட்டளையிட்டான். அப்படி செய்ததினால் உரியா யுத்தத்தில் மரித்தான்.

### பின்பு தாவீது செய்ய மிகப்பெரிய பாவம் என்ன?

அவன் உரியாவின் மனைவியாகிய பத்சேபாளோடு விபச்சாரம் செய்து, உரியாவையும் கொலை செய்தான்.

---

## 17:13

உரியா மரித்தப் பின்பு, பத்சேபாளை தாவீது திருமணம் செய்தான், அவள் அவனுக்கு ஒரு ஆண் பிள்ளையை பெற்றெடுத்தாள். தாவீதின் செய்கையினால் தேவன் மிகவும் கோபமடைந்து, தீர்க்கதரிசியான நாத்தானை அனுப்பி எப்படிப்பட்ட தவறை அவன் செய்தான் என்று சொல்லச் சொன்னார். பின்பு தாவீது மதிரும்பினான், தேவன் அவனை மன்னித்தார். தாவீது தன் வாழ்நாளெல்லாம் தேவனுக்குக் கீழ்ப்படிந்து, கடினமான நேரங்களிலும், அவருடைய வழியில் நடந்தான்.

### தாவீது செய்த பாவத்தை நாத்தான் உணர்த்தினபோது அவன் என்ன செய்தான்?

தாவீது அவன் பாவத்தினிமித்தம் மனந்திரும்பினான், தேவன் அவனை மன்னித்தார்.

---

## 17:14

ஆனாலும் தாவீதின் பிள்ளை மரித்தது. தேவன் அவனை இப்படியாய் தண்டித்தார். மேலும் அவனுடைய சொந்த ஜனம் அவனுக்கு விரோதமாய் யுத்தம் செய்தனர். அவனுடைய பலம் எல்லாம் போயிற்று. தாவீது தேவனுக்கு விரோதமான பாவம் செய்தபோதும், தேவன் அவனுக்கு வாக்குப் பண்ணினதை செய்ய நிதியுள்ளவராயிருந்தார். தாவீதுக்கும், பத்சேபாளுக்கும் ஒரு ஆண் குழந்தையை தந்தார். அவன் பெயர் சாலமன்.

## தாவீதினுடைய பாவத்திற்கு தேவன் எப்படி தண்டித்தார்?

தாவீதின் குமாரன் மரித்தான், தாவீதின் பலம் வெகுவாக குறைந்தது மற்றும் அவனுடைய சகல நாட்களும் அவனுடைய குடும்பத்தில் சண்டை இருக்கும் என்பதே.

## தாவீது உண்மையாய் இல்லாதிருந்தும் தேவன் அவருடைய வாக்குத்தத்தத்தை உறுதிபடுத்திரானா?

ஆம்.

## பின்பு தாவீதுக்கும் பத்சேபாளுக்கும் பிறந்த ஆண் குழந்தையின் பெயர் என்ன?

சாலமோன்.

# 18. ராஜ்ஜியம் பிரிக்கப்படுதல்

## 18:01

ராஜாவாகிய தாவீது நாற்பது வருடம் தேசத்தை ஆண்டு மரித்தப் பின்பு, அவனுடைய மகன் ராஜாவானான். தேவன் சாலமனிடம் பேசி, உனக்கு என்ன நான் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டதற்கு, அவன் எனக்கு நியாணத்தைத் தர வேண்டும் என்று கேட்டான். அது தேவனுக்கு பிரியமாயிருந்தது. அவர் சாலமனை உலகின் நியாணியாக்கினார். அநேக காரியங்களைக் கற்றான், தேவன் அவனை மென்மேலும் ஆசீர்வதித்தார்.

### சாலமோன் தேவனிடத்தில் என்ன தரும்படி கேட்டான்?

ஞானம்.

---

## 18:02

எருசலேமில், தாவீது கட்டும்படி நினைத்து, சேர்த்து வைத்திருந்த பொருட்களைக் கொண்டு தேவனுக்கு ஆலயத்தைக் கட்டினான். அதுவரை ஜனங்கள் ஆசரிப்புக் கூடாரத்தில் பலி செலுத்தி வந்தனர். கட்டின ஆலயத்தில் தேவன் தங்கியிருந்தார், ஜனங்களும் அங்கே தேவனுக்கு ஆராதனை செய்து, பலி செலுத்தினர்.

### சாலமோன் கட்டின ஆலயத்தின் நோக்கம் என்ன?

அந்த இடம் ஜனங்கள் தேவனுக்கு ஆராதனை செய்யவும், அவருக்கு பலிசெலுத்தவும் கட்டப்பட்டதாகும்.

---

## 18:03

ஆனால், மற்ற தேசங்களிலிருந்து அநேக பெண்களை நேசித்தான். தேவனுக்குக் கீழ்ப்படியாமல் மற்ற தேசங்களிலிருந்து 1000-க்கும் மேலான பெண்களை திருமணம் செய்து, அவர்களுடைய விக்ரகங்களையும் வணங்க ஆரம்பித்தான். சாலமனுக்கு வயதான போனதும் அவர்களுடைய தேவர்களை வணங்கினார்.

### சாலமோன் செய்த மிகப்பெரிய பாவம் என்ன?

அவன் அநேக அந்நிய பெண்களைத் திருமணம் செய்து, அவனுடைய முதிர்வயதில் தெய்வங்களை வணங்கினான்.

## 18:04

தேவன் னின் மேல் கோபமடைந்து, இஸ்ரவேலின் ராஜ்யத்தை இரண்டாகப் பிரித்து அவனை தண்டிப்பேன் என்றார். இதை மரித்தபின்பு செய்வதாக சொன்னார்.

### சாலமோனின் பாவத்திற்கு தேவன் அவனை எப்படி தண்டித்தார்?

சாலமோனின் மரணத்திற்கு பின்பு இஸ்ரவேல் இராஜ்ஜியம் இரண்டாக பிரிக்கப்படும் என்று தேவன் வாக்குப்பண்ணினார்.

---

## 18:05

மரித்த பின்பு, அவனுடைய மகன் ரெகொபெயாம் இஸ்ரவேலில் ராஜாவானான். ஜனங்களெல்லாரும் அவனை ராஜாவாக ஏற்றுக் கொண்டனர். தேசத்தின் எல்லா மக்களும் ராஜாவாகிய ரெகொபெயாமினிடத்தில் வந்து, உம்முடைய தகப்பன் எங்களுக்கு கடினமான வேலைகளைத் தந்து, அதிகமான வரியையும் கொடுக்க சொன்னார். எங்களுடைய வேலையை ரெகொபெயாம் குறைக்கும்படி சொன்னார்கள்.

---

## 18:06

ஆனால் ரெகொபெயாம் மிகவும் முட்டாள்தனமாக ஜனங்களுக்கு பதில் சொன்னான். நீங்கள் சொன்னபடி, என்னுடைய தகப்பனாகிய உங்களை கடினமாய் வேலை செய்யும்படி செய்தார். ஆனால் நான் உங்களை அதிலும் கடினமான வேலை செய்யும்படி செய்வேன் என்றான்.

### ரோகோபெயாம் ஜனங்களுக்குக் கொடுத்த முட்டாள்தனமான பதில் என்ன?

உங்களுடைய வேலையை கடுமையாக்கி, என் தகப்பன் சாலமோனைவிட அதிகமாய் தண்டிப்பேன் என்றான்.

---

## 18:07

இப்படி அவன் சொன்னதினால், ஜனங்கள் அவனுக்கு விரோதமாய் திரும்பினர். பத்துக் கோத்திரத்தாரும் அவனை விட்டு விலகினர் கடைசியில் இரண்டு கோத்திரத்தார் மட்டும் அவனோடு இருந்தனர். அதைத்தான் யூததேசம் என்று அழைத்தனர்.

### ரெகொபெயாமுடன் இருந்த இரண்டு தெற்கு கோத்திரத்தாரால் நிறுவப்பட்ட ராஜ்யத்தின் பெயர் என்ன?

யூதாவின் ராஜ்ஜியம்

---

## 18:08

மற்ற பத்துக் கோத்திரங்களுக்கும் யேரோபெயாம் என்பவன் ராஜாவானான். இவர்கள் வடக்கு பகுதியில் இருந்தனர். அவர்கள் தங்களை இஸ்ரவேல் என்று பெயர் வைத்துக் கொண்டனர்.

### ரெகோபெயாமுடன் எத்தனை கோத்திரங்கள் சண்டைப்போட்டனர் மற்றும் வடக்குப்பகுதியில் நிறுவப்பட்ட ராஜ்ஜியத்தின் பெயர் என்ன?

பத்து கோத்திரங்கள், அது தான் இஸ்ரவேல் ராஜ்ஜியம் ஆகும்.

---

## 18:09

ஆனால் யேரோபெயாம் ஜனங்களை தேவனுக்கு விரோதமாய் பாவம் செய்ய வைத்தான். அவன் இரண்டு சிலையை உண்டு பண்ணி, ஜனங்களை வணங்க வைத்தான். அதினால் அவர்கள் எருசலேமின் தேவாலயத்திற்கு சென்று தேவனை ஆராதிப்பதை நிறுத்தி விட்டனர்.

### யூதாவில் உள்ள தேவாலயத்திற்கு ஜனங்கள் ஆராதிக்க போகாமல் இருக்க யேரோபெயாம் என்ன செய்தான்?

அவன் ஜனங்கள் வணங்கும்படி விக்ரகத்தை உண்டாக்கினான்.

---

## 18:10

யூதா மற்றும் இஸ்ரவேல் தேசமும் ஒருவருக்கொருவர் விரோதமாய் அடிக்கடி சண்டை போட்டுக் கொண்டனர்.

---

## 18:11

புதிய இஸ்ரவேல் ராஜ்யத்தில் இருந்த எல்லா ராஜாக்களும் கெட்டவர்கள். இவர்களில் அநேகர், இஸ்ரவேலில் ராஜாவாக நினைத்த மற்றவர்களால் கொலை செய்யப்பட்டனர்.

### இஸ்ரவேலின் ராஜாக்களில் எத்தனைப்பேர் தேவனுக்கு பிரியமாய் இருந்தனர்?

ஒருவரும் இல்லை.

---

## 18:12

எல்லா ராஜாக்களும், ஏறக்குறைய எல்லா ஜனங்களும் இஸ்ரவேலில் விக்ரகங்களை வணங்கினர். இதை அவர்கள் செய்த போது, அதிகமாய் விபச்சாரம் செய்து, சில நேரங்களில் தங்களுடைய பிள்ளைகளைக்கூட அந்த விக்கிரகங்களுக்கு படைத்தனர்.

### விக்ரகங்களை ஜனங்கள் வணங்கும்போது அவர்கள் செய்த பொல்லாத செய்கைகள் என்னென்?

குழந்தைகளை பலி செலுத்துவதும், விபச்சாரம் வேசித்தனம் செய்வதும்.

---

## 18:13

தாவீதின் சந்ததியான யூதா தேசத்தின் ராஜாக்களில் சிலர் நியாயமாய் ஜனங்களை நடத்தி, தேவனை ஆராதித்தனர். ஆனால் பெரும்பாலான யூத ராஜாக்கள் கெட்டவர்கள். அவர்கள் அநியாயமாய் ஜனங்களை நடத்தி, விக்ரகங்களை வணங்கி, அதிலும் சில ராஜாக்கள் அவர்களுடைய பிள்ளைகளை கடவுள் அல்லாதவைகளுக்கு பலிசெலுத்தினார்கள். பெரும்பாலான ஜனங்கள் விக்ரகங்களை வணங்கி, தேவனுக்கு விரோதமானதை செய்தார்கள்.

## யூதா ராஜாக்களின் முற்பிதா யார்?

ராஜாவாகிய தாவீது.

## யூதா ராஜாக்கள் தேவனுக்கு பிரியமாய் நடந்தார்களா?

ஆம். சிலர் தேவனுக்கு பிரியமாகவும் ஆனால் மற்றவர்கள் எல்லோரும் பொல்லாதவர்களுமாய் இருந்தனர்.

# 19. தீர்கத்தரிசிகள்

## 19:01

இஸ்ரவேலில் தேவன் தீர்க்கத்தரிசிகளை அனுப்பிக் கொண்டே இருந்தார். தேவன் சொல்லும் காரியங்களைத் தீர்க்கத்தரிசிகள் ஜனங்களிடம் சொன்னார்கள்.

### தீர்க்கத்தரிசிகள் ஜனங்களுக்கு சொன்ன செய்திகள் எங்கிருந்து வந்தது?

அவர்கள் அந்த செய்திகளை தேவனிடத்திலிருந்து கேட்டனர்.

---

## 19:02

ஆகாப் இஸ்ரவேலில் ராஜாவயிருந்தபோது எலியா என்னும் ஒரு தீர்க்கத்தரிசி இருந்தான். ஆகாப் கெட்டவன். அவன் ஜனங்களைப் பொய்யான தெய்வமான பாகாலை வணங்கும்படிச் செய்தான். எனவே தேவன் ஜனங்களைத் தண்டிக்கப் போவதாகஎலியா ராஜாவாகிய ஆகாபிடம் சொன்னான் அதாவது, நான் சொல்லும்வரை இஸ்ரவேலில் மழையோ, பனியோ பெய்வதில்லை என்றான். இதைக் கேட்ட ஆகாப் கோபமடைந்து, எலியாவை கொல்லும்படி நினைத்தான்.

### ராஜாவாகிய ஆகாபினிடத்தில் எலியா சொன்ன தீர்க்கத்தரிசனம் என்ன?

நான் சொல்லும்வரை இஸ்ரவேல் தேசத்தில் மழையோ பனியோ பெய்வதில்லை என்றான்.

---

## 19:03

எனவே தேவன் எலியாவிடம் வனாந்திரத்திற்குப் போய் ஆகாபிடமிருந்து ஒளிந்து கொள்ளும்படி சொன்னார். வனாந்திரத்தில், தேவன் காண்பித்த ஒரு ஓடையினருகே எலியா இருந்தான். ஒவ்வொருநாள் காலையிலும் மாலையிலும், அப்பமும், இறைச்சியும் பறவைகள் எலியாவுக்கு கொண்டு வரும். அந்த சமயத்தில் ஆகாபும், அவனுடைய இராணுவமும் எலியாவை தேடியும் காணவில்லை.

### வனாந்திரத்தில் ஒளிந்துக்கொண்டிருந்த எலியாவை எப்படி தேவன் போஷித்தார்?

தேவன் பறவைகளை காலையிலும் மாலையிலும் அனுப்பி, அப்பமும் இறைச்சியையும் கொடுக்கும்படிச் செய்தார்.

## 19:04

மழை இல்லாததினால் அந்த ஓடையில் தண்ணீர் நின்று போயிற்று. எனவே எலியா அருகில் இருந்த ஒரு தேசத்திற்கு போனான். அங்கே ஏழை விதவை தன் மகனுடன் இருந்தாள். அங்கேயும் பஞ்சம் உண்டானதினால் உணவு இல்லாதிருந்தது. ஆனாலும் அந்த விதவை எலியாவை போஷித்தாள், எனவே தேவன் அவளுக்கும் அவளுடைய பிள்ளைக்கும் பானையில் மாவும், ஜாடியில் எண்ணெயும் குறையாதபடி செய்தார். பஞ்சகாலம் முழுவதும் அவர்களுக்கு ஆகாரம் உண்டாயிருந்தது. எலியா அங்கே அநேக வருடங்கள் தங்கியிருந்தான்.

### விதவை மற்றும் அவளுடைய மகனோடு எலியா இருந்தபோது அவனை தேவன் எப்படி போஷித்தார்?

தேவன் அவர்களுடைய எண்ணெய் மற்றும் மாவு குறைந்துபோகாதபடி செய்தார்.

---

## 19:05

மூன்றரை வருடங்கள் கழித்து, தேவன் இஸ்ரவேல் தேசத்தில் திரும்பவும் மழையைப் பெய்யப்பண்ணுவேன் என்றும் எலியாவை ஆகாபினிடத்தில் போய் பேசும்படி சொன்னார். எனவே எலியா போனான். ஆகாப் எலியாவைப் பார்த்து, பிரச்சனைப் பண்ணுகிறவனே! என்றான். அதற்கு எலியா, நான் அல்ல நீரே பிரச்சனைப் பண்ணுகிறீர்!! நீர் தேவனுக்கு விரோதமாய் பாகாலை வணங்குகிறீர். யேகோவா தான் மெய்யான தெய்வம். நீர் இஸ்ரவேல் ஜனங்கள் எல்லோரையும் கர்மேல் பர்வதம் வரும்படிச் செய்யும் என்றான்.

### ஆகாப் செய்தான் என்று எலியா சொன்ன பொல்லாத காரியம் என்ன?

ஆகாப் உண்மையான தேவனுக்கு விரோதமாய் கலகம்பண்ணி, பாகாலை வணங்கினான்.

---

## 19:06

எனவே இஸ்ரவேலின் எல்லா ஜனங்களும் கர்மேல் பர்வதம் வந்தனர். அவர்களோடுக்கூட பாகலைப் பற்றி சொல்லிக் கொண்டிருந்தவர்களும் வந்தனர். இவர்களே பாகால் தீர்க்கத்தரிசிகள். அவர்கள் மொத்தம் 450 பேர்கள். எலியா அவர்களைப் பார்த்து, எவ்வளவு நாட்கள் உங்களுடைய சிந்தையில் குழப்பத்தோடு இருப்பீர்கள். யேகோவா தெய்வமானால் அவரை வணங்குங்கள்! இல்லை, பாகால் தெய்வமானால் அதை வணங்குங்கள்! என்றான்.

### ஜனங்கள் எதைச் செய்யும்படி எலியா சொன்னான்?

கர்த்தரே தேவமானால் அவரை சேவியுங்கள் அல்லது பாகால் தெய்வமானால் அதைச் சேவியுங்கள் என்றான்.

---

## 19:07

பின்பு எலியா பாகால் தீர்கத்தரிசிகளைப் பார்த்து, காளையை வெட்டி, பலிபீடத்தின்மேல் பலியிடும்படி வையுங்கள். தீ பற்ற வேண்டாம், பின்பு நானும் வேறொரு பலிபீடத்தின்மேல் அப்படியே செய்வேன். எந்த தேவன் தீயை பலிபீடத்தின்மேல் வரும்படிச் செய்கிறாரோ அவரே உண்மையான தேவன் என்றான். எனவே பாகாலின் தீர்கத்தரிசிகள் பலிபீடத்தின்மேல் தீ பற்றவைக்காமல் எல்லாவற்றையும் செய்தனர்.

---

## 19:08

பின்பு பாகால் தீர்கத்தரிசிகள் பாகாலிடம் ஜெபித்தனர். பாகால் செவிகொடு! என்று நாள் முழுதும் சத்தம் போட்டு, அவர்கள் உடலை கத்தியால் கீறிக்கொண், ஆனாலும் பாகால் பதில் தரவில்லை. தீயும் அனுப்பவில்லை.

---

## 19:09

பாகால் தீர்கத்தரிசிகள் ஏறக்குறைய நாள் முழுவதும் பாகாலிடம் ஜெபித்தனர். ஜெபித்து முடித்தப் பின்பு, எலியா தேவனுக்கென்று வேறொரு காளையை பலிபீடத்தின்மேல் வைத்தான். பின்பு, எலியா பன்னிரண்டு குடம் தண்ணீர் அந்த பலிபீடத்தின்மேல் ஊற்றும்படி ஜனங்களுக்குச் சொன்னான். அதில் பலியிடும் காளை, விறகுகள், மேலும் பலிபீடத்தை சுற்றிலும் நனைந்து போகத்தக்கதாக தண்ணீரை நிரப்பும்படி சொன்னான்.

---

## 19:10

பின்பு எலியா, யேகோவா, நீர் ஆபிரகாமின் தேவனும், ஈசாக்கின் தேவனும், யாக்கோபின் தேவனுமானவர். நீரே இஸ்ரவேலின் தேவன் என்றும் இன்று காண்பித்தருளும், நான் உம்முடைய வேலைக்காரன். நீரே உண்மையான தேவன் என்று இவர்கள் எல்லோரும் அறியும்படி பதில் தாரும் என்று ஜெபித்தான்.

---

## 19:11

உடனே, வானத்திலிருந்து, தீ வந்து, அந்த பலிபீடத்தின்மேல் இருந்த இறைச்சி, விறகுகள், கற்கள், புழுதி மற்றும் பலிபீடத்தை சுற்றிலும் இருந்த தண்ணீரையும்கூட கருக்கிப் போட்டது. ஜனங்கள் அதைப் பார்த்து, பணிந்து, யேகோவாவே தேவன்! யேகோவாவே தேவன் என்றனர்!

### தேவனே உண்மையானவர் என்பதை எப்படி அவர் எப்படி நிரூபித்தார்?

தேவன் வானத்திலிருந்து அக்கினியை அனுப்பி, இறைச்சியை பட்சிக்கும்படிச் செய்து, அங்கே இருந்த விறகுகள், கற்கள் மற்றும் புழுதியையும் பலிபீடத்தை சுற்றியிருந்த தண்ணீரையும் கூட நக்கிப்போட்டது.

### தேவனுடைய வல்லமையின் செய்கையைப் பார்த்த ஜனங்கள் என்ன செய்தனர்?

அவர்கள் தரையிலே விழுந்து, கர்த்தரே தேவன்! கர்த்தரே தேவன்! என்று சொன்னார்கள்.

---

## 19:12

பாகால் தீர்கத்தரிசிகள் ஒருவரையும் தப்பவிடாமல், பிடிக்கும்படி எலியா சொன்னான். ஜனங்கள் பாகாலின் தீர்கத்தரிசிகளை அந்த இடத்திலிருந்து பிடித்துக் கொண்டு போய் அவர்களைக் கொன்று போட்டனர்.

### பாகால் தீர்க்கத்தரிசிகளுக்கு சம்பவித்தது என்ன?

அவர்கள் பிடிக்கப்பட்டு, கொலை செய்யப்பட்டனர்.

---

## 19:13

பின்பு எலியா ராஜாவாகிய ஆகாப்பினிடத்தில், சீக்கிரமாய் வீடு திரும்பும், மழை வரப்போகிறது என்றான். உடனே, மேகம் கருத்து, பெருமழை பெய்தது. யேகோவா தேசத்தின் வறட்சியை மாற்றினார். அவரே உண்மையான தேவன் என்று இது விளங்கப் பண்ணினது.

---

## 19:14

எலியா தன் வேலையை முடித்தவுடன், அவனுடைய ஸ்தானத்தில் எலிசா என்னும் வேறொரு தீர்கத்தரிசியை ஏற்படுத்தினார். எலிசாவைக் கொண்டு தேவன் அநேக அற்புதங்களைச் செய்தார். அதில் நாகமானுக்கு நடத்த ஒரு அற்புதம். நாகமன் படைத் தளபதி ஆனால் அவனுக்கு குஷ்டரோகம் இருந்தது. நாகமான் எலிசாவைப் பற்றி கேள்விப்பட்டு, அவனிடத்தில் போய் தன்னை விடுதலையாக்கும்படி கேட்டான். எலிசா யோர்தான் நதியில் ஏழுமுறை மூழ்கும்படி சொன்னான்.

### நாகமானின் குஷ்டரோகத்தை நீக்க எலிசா என்ன செய்தான்?

யோர்தான் நதியில் ஏழு முறை மூழ்கும்படி சொன்னான்.

---

## 19:15

நாகமான் கோபமடைந்து, அது முட்டாள்தனமாக தோன்றியதினால் அதைச் செய்யவில்லை, ஆனால் திரும்பவும் தன்னுடைய மனதை மாற்றி, யோர்தான் நதியில் ஏழுமுறை மூழ்கினான். அவன் கடைசியாக எழும்பும் போது, தேவன் அவனை குணமாக்கினார்.

### எலிசாவின் வார்த்தைகளைக் கேட்ட நாகமான் என்ன செய்தான்?

அது முட்டாள்தனமாக இருந்ததினால் அவன் முதலில் கோபமடைந்தான், பின்பு அவன் மனதை மாற்றிக்கொண்டு அப்படியே செய்து, பூரண சுகமடைந்தான்.

---

## 19:16

தேவன் அநேக தீர்கத்தரிசிகளை இஸ்ரவேலில் அனுப்பினார், அவர்கள் எல்லோரும் விக்ரகங்களை வணங்காதிருக்கும்படி ஜனங்களுக்குச் சொன்னார்கள். மேலும், நியாயமாகவும், தாழ்மையாகவும் இருக்கும்படி ஜனங்களை எச்சரித்தனர். அவர்கள் ஜனங்களை கெட்ட வழியை விட்டுத் திரும்பி, தேவனுக்குக் கீழ்ப்படியும்படி சொன்னார்கள். அப்படிச் செய்யாவிட்டால், தேவன் அவர்களை நியாயந்தீர்த்து, அவர்களைத் தண்டிப்பார் என்று எச்சரித்தனர்.

### ஜனங்களுக்கு தீர்க்கத்தரிசிகளின் பொதுவான செய்தி என்ன?

விக்கிரகங்களை வணங்காமல், பரிசுத்தமாய் வாழவும் மற்றும் மற்றவர்களோடு அன்பாய் இருக்கவும் சொன்னார்கள், இல்லையென்றால் தேவன் உங்களை தண்டிப்பார்.

---

## 19:17

அவர்கள் மறுபடியும் தேவனுக்குக் கீழ்ப்படியாமல், தீர்கத்தரிசிகளை கேவலப்படுத்தி, சிலநேரங்களில் கொலையும் செய்தனர். ஒருமுறை எரேமியா என்னும் தீர்கத்தரிசியை, தண்ணீர் இல்லாத கிணற்றில் மரிக்கும்படி போட்டனர். கிணற்றின் அடியில் இருந்த மண்ணில் புதைந்து போகும் சமயத்தில், அவன் மரிக்கும்முன்னே அவனை கிணற்றிலிருந்து வெளியே எடுக்கும்படி தன் ஊழியக்காரரிடத்தில் கட்டளையிடும்படி ராஜாவினிடத்தில் எரேமியாவுக்கு கிருபைக் கிடைத்தது.

### பொதுவாக, ஜனங்கள் எப்படி தீர்க்கதரிசிகளை நடத்தினர்?

ஜனங்கள் அவர்களை கடுமையாக நடத்தி, சில நேரங்களில் கொலையும் செய்தனர்.

### எரேமியா தீர்க்கதரிசியை ஜனங்கள் எப்படி மோசமாக நடத்தினர்?

ஜனங்கள் எரேமியாவை தண்ணீர் இல்லாத கிணற்றில் போட்டு, சாகும்படி விட்டுவிட்டனர்.

### அந்த கிணற்றில் எரேமியா மரித்துபோனானா?

இல்லை. ராஜாவின் கண்களில் அவனுக்கு தயவு கிடைத்து, அவனை கிணற்றிலிருந்து தூக்கிவிட்டனர்.

---

## 19:18

தீர்கத்தரிசிகளை ஜனங்கள் வெறுத்தபோதும் அவர்கள் தேவனுக்காக தொடர்ந்து பேசினர். அவர்கள் பாவங்களை விட்டு மனந்திரும்பா விட்டால் தேவன் அவர்களை அழிப்பார் என்றும், வாக்குபண்ணபட்ட மேசியா வரபோவதையும் அவர்கள் ஜனங்களுக்கு நினைபூட்டினர்.

### தீர்க்கதரிசிகள் முக்கியமான ஒரு நபர் வருவார் என்று சொல்லிவந்தனர். யார் அந்த நபர்?

தேவன் அனுப்பும் அந்த நபர் தான் மேசியா.

# 20. அடிமைத்தனத்திலிருந்து திரும்புதல்

## 20:01

இஸ்ரவேல் தேசமும், யூதா தேசமும் தேவனுக்கு விரோதமாக பாவம் செய்தனர். சீனாய் மலையில் தேவன் அவர்களோடு செய்த உடன்படிக்கையை மறந்தனர். தேவன் அவருடைய தீர்கத்தரிசிகளை அனுப்பி, மனந்திரும்பி அவரை ஆராதிக்கும்படி எச்சரித்தார். ஆனால் அவர்கள் கீழ்ப்படியாமற்போனார்கள்

### தீர்க்கத்தரிசிகள் ஜனங்களுக்குக் கொடுத்த எச்சரிப்பு என்ன?

மனந்திரும்பி தேவனுக்கு ஆராதனை செய்யும்படி சொன்னார்கள்.

### தீர்க்கத்தரிசிகளின் வார்த்தைகளுக்கு ஜனங்கள் எப்படி செவிகொடுத்தனர்?

ஜனங்கள் கீழ்ப்படிய மறுத்தனர்.

---

## 20:02

எனவே தேவன் அந்த இரண்டு தேசத்தையும் அழிக்கும்படி அவர்களுடைய எதிரிகளிடம் ஒப்புக் கொடுத்தார். அசீரியா மிகவும் பலமுள்ள தேசமாயிருந்து, மற்ற தேசங்களுக்கு கொடியராய் இருந்தனர். அவர்கள் வந்து இஸ்ரவேல் தேசத்தை அழித்து, அவர்களுக்கு வேண்டிய எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு, அதிலுள்ள அநேகரைக் கொன்று, தேசத்தை போட்டனர்.

### இஸ்ரவேல் தேசத்தை அழித்த எதிரி யார்?

அசீரியாவின் அதிபதி.

---

## 20:03

எல்லா தலைவர்களையும் அசீரியர்கள் ஒன்று சேர்த்து, பணக்காரர்கள் மற்றும் நன்றாய் வேலை செய்ய அறிந்திருந்த யாவரையும் அசீரியாவுக்கு கொண்டு சென்றனர். மிகவும் ஏழையான ஜனங்கள் சிலர் மட்டுமே இஸ்ரவேலில் இருந்தனர்.

---

## 20:04

மற்ற தேசத்தாரை அசீரியர்கள் இஸ்ரவேலில் வாழும்படிச் செய்தனர். அவர்கள் நகரத்தை திரும்பவும் கட்டினர். அவர்கள் இஸ்ரவேலில் மீந்திருந்தவர்களைத் திருமணம் செய்துகொண்டனர். அவர்களின் சந்ததியார் சமாரியர் என்றழைக்கப்பட்டனர்.

### சமாரியர்கள் என்பவர்கள் யார்?

அந்நியர்களான அசீரியர்களோடு இஸ்ரவேலர்கள் திருமணம் செய்து அவர்கள் வழியாய் வந்த சந்ததி.

---

## 20:05

நம்பாமல், அவருக்குக் கீழ்ப்படியாமல் போன இஸ்ரவேலை தேவன் எப்படி தண்டித்தார் என்பதை யூதா தேசத்தார் பார்த்தும், தொடர்ந்து கானானின் தெய்வங்களையும் சேர்ந்த விக்ரகங்களை வணங்கினர், தேவன் தம்முடைய தீர்கத்தரிசிகளை அனுப்பி எச்சரித்தும் இஸ்ரவேலர் கேட்கவில்லை.

### இஸ்ரவேல் தேசத்தை தேவன் தண்டித்ததை பார்த்த யூதா தேசத்தார் தேவனுக்குக் கீழ்படிந்தார்களா?

இல்லை. அவர்கள் தொடர்ந்து விக்கிரகங்களை வணங்கி வந்தனர்.

---

## 20:06

அசீரியர்கள் இஸ்ரவேலை அழித்து 100 வருடங்கள் கழித்து, தேவன் நேபுகாத்நேச்சார் என்னும் பாபிலோனின் ராஜாவை யூதா தேசத்திற்கு விரோதமாய் அனுப்பினார். பாபிலோன் தேசம் மிகவும் பலமுள்ளதாய் இருந்தது. யூதாவின் ராஜா, நேபுகாத்நேச்சாருக்கு வேலை செய்கிறவர்களாய் இருக்க ஒப்புக்கொண்டு, ஒவ்வொரு வருடமும் அதிக பணம் அவர்களுக்குக் கொடுத்தனர்.

### யூதாவின் ராஜா யாரை சேவிக்க ஒப்புக்கொண்டான்?

பாபிலோனின் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார்.

---

## 20:07

ஆனால் சில வருடங்களுக்குப் பிறகு யூதாவின் ராஜா, பாபிலோனுக்கு விரோதமாய் எழும்பினான். எனவே பாபிலோனியர் வந்து யூதா தேசத்தை அழித்து, எருசலேம் நகரத்தை சிறைப்பிடித்து, தேவாலயத்தை இடித்து, அதிலுள்ள எல்லா பொக்கிஷங்களையும் எடுத்துக் கொண்டனர்.

---

## 20:08

நேபுகாத்நேச்சாரின் இராணுவத்தினர் யூதா ராஜாவை தண்டிக்கும்படி, அவன் குமாரர்களை, அவனுடைய கண்களுக்கு முன்பாக வெட்டிப் போட்டு, அவனை குருடாக்கினர். பின்பு அவன் மரிக்கும்படி பாபிலோனின் சிறையில் அடைத்தனர்.

### யூதாவின் ராஜா கலகம் செய்ததினால், நேபுகாத்நேச்சாரின் இராணுவம் அவனுக்கு என்ன செய்தனர்?

அவனுடைய கண்களுக்கு முன்பாக அவனுடைய குமாரர்களை கொன்று, அவனுடைய கண்களையும் குருடாக்கி, பாபிலோனின் சிறையில் சாகும்வரை கொண்டுபோனார்கள்.

---

## 20:09

நேபுகாத்நேச்சாரும் அவனுடைய இராணுவமும் ஏறக்குறைய எல்லா யூத ஜனங்களையும் பாபிலோனுக்கு கொண்டு சென்றனர். மிகவும் ஏழையான ஜனங்களில் சிலரை மட்டும் அங்கே விளைச்சலைப் பார்த்துக்கொள்ளும்படி விட்டுவிட்டனர். இந்த சமயத்தில் தேவனுடைய ஜனங்கள், வாக்குபண்ணபட்ட தேசத்தை விட்டு வெளியேற்றப்பட்டனர்.

### தேவனுடைய ஜனங்கள் வாக்குபண்ணபட்ட தேசத்திலிருந்து துரத்தப்பட்டப் சமயத்தை நாம் என்னவென்று சொல்லலாம்?

அடிமைகளாக்கப்படுதல்.

---

## 20:10

ஜனங்களின் பாவங்களினால் அவர்கள் தண்டித்து, தேசத்தை விட்டுத் துரத்தப்பட்டப் பின்னும், தேவன் அவர்களையும், தாம் வாக்குப்பண்ணினதையும் மறவாமல்,

தொடர்ந்து தம்முடைய தீர்கத்தரிசிகள் மூலமாக அவர்களோடே பேசி, எழுபது வருடங்களுக்குப்பின் மறுபடியும் அவர்களை வாக்குபண்ணபட்ட தேசத்திற்கு கொண்டு வருவதை சொன்னார்.

### ஜனங்கள் அடிமைகளாய் இருந்த சமயத்தில் அவர்களுக்கு தேவன் கொடுத்த வாக்குக்கொடுத்தார்?

எழுபது வருடங்கள் கழித்து, அவர்கள் வாக்குத்தத்தத்தின் தேசத்திற்கு திரும்புவார்கள் என்றார்.

---

## 20:11

எழுபது வருடங்களுக்குப் பின், பெர்சியாவின் ராஜாவாகிய சைரஸ் பாபிலோனை முறியடித்து, அநேக தேசங்களை ஆண்டு வந்தான். அப்போது இஸ்ரவேலர்கள், யூதர்கள் என்று அழைக்கப்பட்டனர். அதில் பெரும்பாலான ஜனங்கள் பாபிலோனில் தங்கள் வாழ்நாள் முழுவதும் வாழ்ந்தனர், ஆனால் சில முதியவர்கள் மட்டும் யூதா தேசத்தை நினைத்துக் கொண்டிருந்தனர்.

### பாபிலோனியர்களை தோற்கடித்த ராஜா யார்?

பெர்சியாவின் அதிபதியான ராஜாவாகிய சைரஸ்.

---

## 20:12

பெர்சியர் பலமுள்ளவர்களாயிருந்தும், தாங்கள் சிறைப்பிடித்திருந்த ஜனங்கள்மேல் தயவாய் இருந்தனர். சைரஸ் பெர்சியாவின் ராஜாவானபோது, யூதர்கள், பெர்சியா தேசத்தைவிட்டு போக விரும்பினால் அவர்கள் போகலாம் என்று ராஜாவினால் கட்டளைப்பிறந்ததும். எழுபது வருடங்களுக்குப் பிறகு, கொஞ்ச ஜனங்களே இருந்தபடியால் அவர்கள் யூதா தேசத்திற்கு திரும்பினர், தேவாலயத்தைக் மறுபடியும் கட்டும்படி பணமும் கொடுத்தான்.

### ராஜாவாகிய சைரஸ் யூதர்களைக் குறித்துச் சொன்னது என்ன?

யூதர்கள் யார்வேண்டுமானாலும் அவர்களுடைய தேசத்திற்கு திரும்பிப் போகலாம்.

---

## 20:13

ஜனங்கள் எருசலேமுக்கு வந்து, தேவாலயத்தையும், நகரத்தின் சுவர்களையும் கட்டினர். பெர்சியர் அவர்களை ஆண்டபோதும், அவர்கள் திரும்பவும் வாக்குபண்ணபட்ட தேசத்தில் குடியேறி, தேவாலயத்தில் தேவனை ஆராதித்தனர்.

### யூதர்கள் எருசலேமுக்குத் திரும்பி வந்து என்ன செய்தார்கள்?

அவர்கள் தேவ ஆலயத்தையும், நகரத்தின் சுவர்களையும் கட்டினார்கள்.

# 21. தேவன் மேசியாவை வாக்குப்பண்ணுதல்

## 21:01

தேவன் உலகத்தை உண்டாக்கும்போதே காலங்களுக்குப் பிறகு மேசியாவை இவ்வுலகத்திற்கு அனுப்பப் போவதை அறிந்திருந்தார். அதை தேவன் ஆதாமுக்கும், ஏவாளுக்கும் முன்னமே சொல்லியிருந்தார். அதாவது, உன்னுடைய சந்ததியில் பிறக்கிறவர் பாம்பின் தலையை நசுக்குவார் என்றார். பாம்பு என்பது ஏவாளை வஞ்சித்த சாத்தான். தேவன் சொன்ன அந்த மேசியா தான் சாத்தானை முற்றிலுமாய் ஜெயிக்கப் போகிறவர்.

### தேவன் எப்போது மேசியாவை அனுப்பும்படி தீர்மானித்தார்?

ஆதியிலேயே.

### மேசியா சாத்தானை என்ன செய்வார்?

மேசியா சாத்தானை முற்றிலும் தோற்கடிப்பார்.

---

## 21:02

தேவன் ஆபிரகாமிடம், அவன் மூலமாய் முழு உலகையும் ஆசீர்வதிப்பேன் என்று வாக்குப் பண்ணியிருந்தார். தேவன் ஆபிரகாமிடம் சொன்னதை நிறைவேற்ற, மேசியாவை இவ்வுலகத்திற்கு அனுப்பி, இந்த உலகத்திலுள்ள எல்லோருடைய பாவங்களையும் அவர் நீக்குவார்.

### ஆபிரகாம் மூலமாக எல்லா ஜனங்களும் ஆசீர்வதிக்கப்படும் தேவனுடைய வாக்குத்தத்தத்தை யார் தான் நிறைவேற்றக்கூடும்?

மேசியா.

---

## 21:03

தேவன் மோசேயிடம், அவனைப்போல ஒரு தீர்க்கத்தரிசியை அனுப்புவேன் என்று வாக்குப் பண்ணியிருந்தார். மறுபடியும் தாம் வாக்குப்பண்ணின, அந்த தீர்க்கத்தரிசி மேசியா தான்

### எவ்விதத்தில் மேசியா மோசேயைப் போன்றவர்?

மேசியாவும் மோசேயைப் போல ஒரு தீர்கத்தரிசி தான்.

---

## 21:04

தேவன், தாவீதிடம் அவனுடைய சந்ததியில் மேசியா வருவார் என்று வாக்குப்பண்ணியிருந்தார். அவரே ராஜாவயிருந்து, தேவஜனத்தை என்றென்றும் ஆட்சி செய்வார்.

### மேசியா எவ்விதத்தில் தாவீது ராஜாவுக்கு சமந்தமாகிறார்?

தாவீதின் சந்ததியில் வருபவர் தான் மேசியா.

---

## 21:05

தேவன், எரேமியாவினிடத்தில், ஒரு புதிய உடன்படிக்கையை தாம் ஒருநாள் செய்யப்போவதாக சொன்னார். அந்த உடன்படிக்கை, முன்பு இஸ்ரவேலிடம், சீனாய் மலையில் செய்ததுபோல இல்லாமல், அவரை தனிப்பட்ட முறையில் அறியவும், நேசிக்கவும், அவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படியவும் செய்யும் புதிய உடன்படிக்கை. அந்தக் கட்டளைகள் ஜனங்களுடைய இருதயத்தில் எழுதப்பட்டது போலிருக்கும். அவர்கள் அவருடைய ஜனமாயிருப்பார்கள். அவர் அவர்களுடைய பாவங்களை மன்னிப்பார். அந்த புதிய உடன்படிக்கையை ஜனங்களோடு ஏற்படுத்துவது மேசியா தான்.

---

## 21:06

அந்த மேசியா, தீர்கத்தரிசியும், ஆசாரியனும், ராஜாவுமாயிருப்பார். ஒரு தீர்கத்தரிசி என்பவன், தேவனுடைய வார்த்தைகளைக் கேட்டு, ஜனங்களுக்கு தெரிவிப்பான். அப்படியே, இந்த மேசியா, தேவனுடைய வார்த்தைகளை முழுமையாகக் கேட்டு, புரிந்துகொண்டு, அவைகளை ஜனங்களுக்கு முழுமையாக தெரிவிப்பார்.

---

## 21:07

இஸ்ரவேலின் ஆசாரியர்கள், ஜனங்களுக்காக தேவனிடத்தில் பலி . . மேலும் ஆசாரியர்கள் ஜனங்களுக்காக தேவனிடத்தில் ஜெபிப்பார்கள். அதுபோல, மேசியாவும்

பிரதான ஆசாரியர், ஏனெனில் அவர் தம்மையே பூரண பலியாக தேவனிடத்தில் ஒப்புக்கொடுப்பார். அவர் பாவம் செய்யாததினால், அவர் தம்மை பலியாக ஒப்புக்கொடுக்கும் போது, பாவங்களைப் நீக்க வேறொரு பலி அவசியம் இல்லை.

### மேசியா எப்படி பூரணமான பிரதான ஆசாரியன் ஆவார்?

ஜனங்களுக்காக தம்மையே பூரணமான பலியாக தேவனிடத்தில் ஒப்புக்கொடுப்பதன்மூலமாக.

---

## 21:08

ராஜாக்களும், தலைவர்களும் ஜனங்களை ஆளும்போது, தவறு செய்வார்கள். தாவீது ராஜா இஸ்ரவேலில் மட்டுமே ஆட்சி செய்தான், ஆனால் தாவீதின் சந்ததியில் வரும் மேசியா, முழு உலகத்தையும் என்றென்றைக்கும் ஆட்சி செய்வார். அவர் ஜனங்களை நீதியோடு நடத்தி, சரியான முடிவுகளை எடுப்பார்.

### மேசியா எப்படி ராஜாவாகிறார்?

அவர் ஜனங்களை என்றென்றைக்கும் ஆளுவார் மற்றும் நீதியோடு நியாயந்தீர்ப்பார்.

---

## 21:09

தேவனுடைய தீர்கத்தரிசிகள் மேசியாவைப் பற்றி அநேகக் காரியங்களை சொன்னார்கள். உதாரணமாக, மேசியா வருவதற்கு முன்பு ஒரு தீர்கத்தரிசி வருவான். அந்தத் தீர்கத்தரிசி மிகவும் முக்கியமானவன் என்று மல்கியா சொன்னான். மேலும் அந்த மேசியா ஒரு கன்னிகையின் வயிற்றில் பிறப்பார் என்று ஏசாயா சொன்னான். மற்றும் மேசியா என்பவர் பெத்லகேம் என்னும் ஊரிலே பிறப்பார் என்று மீகா சொன்னான்.

### மேசியாவின் பிறப்பைக் குறித்து ஏசாயா விஷேசமாக சொன்னது என்ன?

மேசியா கன்னியின் வயிற்றில் பிறப்பார் என்பதே.

---

## 21:10

மேசியா கலிலேயா என்னும் ஊரிலே இருப்பார் என்று ஏசாயா சொன்னான். அந்த மேசியா மிகவும் வேதனைப்படுகிறவர்களை தேற்றுவார், காவலில் இருக்கிறவர்களை

விடுவிப்பார், மேலும் அந்த மேசியா வியாதியாய் பேசமுடியாமல், நடக்கமுடியாமல், பார்க்கமுடியாமல், மற்றும் கேட்கமுடியாமல் இருப்பவர்களை குணமாக்குவார்.

---

## 21:11

ஜனங்கள் மேசியாவை வெறுத்து, அவரை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் என்று ஏசாயா தீர்கத்தரிசி சொன்னா. மேசியாவின் நண்பன் அவருக்கு விரோதமாய் திரும்புவான் என்று வேறொரு தீர்கத்தரிசி சொன்னா. அவன் அந்த செயலுக்காக முப்பது வெள்ளிக்காசை ஜனங்களிடமிருந்து பெறுவான் என்று சகரியா தீர்கத்தரிசி சொன்னா. மேலும், மேசியாவை ஜனங்கள் கொலை செய்து, அவருடைய உடையின் பேரில் சீட்டுப் போடுவார்கள் என்று அநேக தீர்கத்தரிசிகள் சொன்னார்கள்.

---

## 21:12

மேசியா எப்படி மரிப்பார் என்றும் அநேக தீர்கத்தரிசிகள் சொன்னார்கள். அவர் எந்த தவறும் செய்யாதிருந்தும், மேசியாவை அடிக்கவும், அவர்மேல் துப்பவும், அவரை கிண்டல் செய்யவும், ஈட்டியால் குத்தவும், அவரை துன்பப்படுத்தி, தாங்கமுடியாத கொடுமை செய்வார்கள் என்று ஏசாயா தீர்கத்தரிசி சொன்னா.

### மேசியா எப்படி மரிப்பார் என்பதைக் குறித்து தீர்கத்தரிசிகள் சொன்னது என்ன?

மேசியா அவமானமடைந்து, குத்தப்பட்டு, மற்றும் மிகவும் பாடுபட்டு மரிப்பார்.

---

## 21:13

மேசியா பாவம் செய்யாமல் பரிசுத்தமாயிருப்பார். ஆனால் ஜனங்களின் பாவங்களுக்காக தேவன் அவரை தண்டிப்பார். அவர் மரிக்கும்போது, ஜனங்கள் தேவனோடு சமாதானமாவதற்கு ஏதுவாக மேசியா மரிப்பார் என்றும் தீர்கத்தரிசிகள் சொன்னார்கள்.

### மேசியாவை தண்டிப்பது ஏன் தேவனுடைய திட்டமாய் இருந்தது?

பாவமில்லாத மேசியா ஜனங்களின் பாவங்களுக்காக தண்டிக்கப்பட்டு, தேவனுக்கும் மனிதர்களுக்கும் சமாதானத்தைக் கொண்டுவருவதற்காகவே.

---

## 21:14

தேவன், மேசியாவை மரணத்திலிருந்து எழுப்புவார் என்று தீர்கத்தரிசிகள் சொன்னார்கள். இதனால் தேவனுக்கு விரோதமாய் பாவம் செய்த ஜனங்களுடன், புதிய உடன்படிக்கை செய்யும்படியான தேவனுடைய திட்டம் தான் இவை எல்லாம்.

### மேசியாவின் மரணம் மற்றும் அவருடைய உயிர்த்தெழுதல் மூலமாக தேவன் என்ன செய்கிறார்?

தேவன் பாவிகளை இரட்சித்து, அவர்களோடு புதிய உடன்படிக்கை செய்கிறார்.

---

## 21:15

தேவன், அநேகக் காரியங்கள் மேசியாவை குறித்து, தீர்கத்தரிசிகளிடம் சொன்னார். இந்தத் தீர்கத்தரிசிகளின் நாட்களில் மேசியா வரவில்லை. தீர்கத்தரிசனங்கள் சொல்லப்பட்டு, 400 வருடங்களுக்கு மேல், தேவனின் சரியான நேரத்தில் மேசியா இவ்வுலகத்திற்கு வந்தார்.

### மேசியாவைக் குறித்து தீர்க்கதரிசனம் உரைத்ததும், மேசியா உலகத்திற்கு வருவதற்கும் இடையில் எவ்வளவு காலம் சென்றது?

# 22. யோவானின் பிறப்பு

## 22:01

முன்பு தேவன், அவருடைய ஜனங்களிடம் பேச தீர்கத்தரிசிகளை அனுப்பினார். ஆனால் 400 வருடங்கள் அவர்களிடமும் தேவன் பேசவில்லை. பின்பு, தேவன் அவருடைய தூதனை, ஆசாரியனாகிய சகரியவிடம் அனுப்பினார். சகரியாவும், அவனுடைய மனைவி எலிசபெத்தும் தேவனை கணம்பன்னினர். அவர்கள் முதிர்வயதாகியும், குழந்தை எதுவும் இல்லாதிருந்ர்கள்.

### தேவன் ஜனங்களோடு பேசி எவ்வளவு காலமாயிற்று?

---

## 22:02

தேவதூதன் சகரியாவிடம், உன் மனைவி ஒரு ஆண் பிள்ளையை பெறுவாள் என்றான். அவனுக்கு யோவான் என்று பெயரிடு. தேவன் அவனை பரிசுத்த ஆவியினால் நிறைப்பார். மேசியாவை ஏற்றுக்கொள்ள யோவான் ஜனங்களை ஆயத்தப்படுத்துவான்! குழந்தையைப் பெற்றெடுக்க முடியாதபடி என் மனைவியும் நானும் வயதானவர்கள், இது உண்மைதான் என்று நான் எப்படி அறிந்து கொள்வேன் ? என்று சகரியா தேவதூதனிடம் கேட்டான்.

### சகரியாவின் மகனுக்கு என்ன பெயர் வைக்கும்படி தேவதூதன் கூறினான்?

அவனுக்கு யோவான் என்று பெயர் வைக்கும்படி சொன்னான்.

### யோவான் அவன் வாழ்நாளில் என்ன செய்வான் என்று தூதன் கூறினான்?

மேசியாவை ஜனங்கள் சந்திக்கும்படி அவர்களை யோவான் ஆயத்தப்படுத்துவான்.

### எலிசபெத்துவிற்கு குழந்தை பிறக்கும் என்று ஏன் சகரியா நம்பவில்லை?

அவர்கள் முதிர்வயதாய் இருந்தார்கள்.

---

## 22:03

அதற்கு தேவதூதன், இந்த நல்ல செய்தியை அறிவிக்கும்படி தேவனால் நான் அனுப்பப்பட்டேன். நீ என்னை நம்பாததினால், குழந்தைப் பிறக்கும்வரை உன்னால் பேச

முடியாது என்றான். உடனே, சகரியா ஊமையானான். பின்பு தேவதூதன் போய்விட்டான், சகரியா வீட்டிற்கு போனான், அவனுடைய மனைவி கர்ப்பம் ஆனாள்.

### சகரியா விசுவாசியாததினால் தூதன் எப்படி அவனைத் தண்டித்தான்?

யோவான் பிறக்கும்வரை சகரியாவினால் பேசமுடியவில்லை.

---

## 22:04

எலிசபெத் ஆறு மாதம் கர்ப்பிணியாய் இருக்கும்போது, அதே தேவதூதன், எலிசபெத்துக்கு சொந்தக்கரியாகிய மரியாள் என்பவளுக்குத் தரிசனமானான். கன்னிகையான இவள் யோசேப்பு என்பவனுக்கு திருமணம் செய்ய நியமிக்கப்பட்டிருந்தாள். தேவதூதன் அவளிடத்தில், நீ கர்ப்பவதியாகி ஒரு ஆண் குழந்தையைப் பெறுவாய், அவருக்கு இயேசு என்று பெயரிடு. அவர் உன்னதமான தேவனுடைய குமாரனாய் என்றென்றைக்கும் ஆட்சி செய்வார் என்றான்.

### மரியாளுக்கு தூதன் தரிசனமாகும்போது எலிசபெத்து எவ்வளவு மாத கற்பினியாயிருந்தாள்?

ஆறு மாதம்.

### மரியாளுக்கு என்ன சம்பவிக்கும் என்று தூதன் சொன்னான்?

அவள் கற்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள் என்றான்.

### இயேசு எப்படிப்பட்டவர் என்று தூதன் சொன்னான்?

அவர் உன்னதமான தேவனுடைய குமாரன் என்றான்.

---

## 22:05

நான் கன்னிகையாய் இருப்பதினால் இது எப்படி சாத்தியமாகும்? என்று மரியாள் கேட்டாள். அதற்கு தேவதூதன், பரிசுத்த ஆவியும், அவருடைய வல்லமையும் உன்னிடத்தில் வரும், அப்போது அந்தக் குழந்தை பரிசுத்தமாயும், தேவனுடைய குமாரனாயும் இருப்பார். தேவதூதன் சொன்னதை மரியாள் நம்பினாள்.

### இயேசுவின் பிறப்பு ஏன் அதிசயமானது?

மரியாள் ஒரு கன்னியாயிருந்ததினால்.

## இயேசு யாருடைய குமாரன்?

இயேசு தேவனுடைய குமாரன்.

---

## 22:06

இது நடந்து முடிந்ததும், மரியாள், எலிசபெத்தை சந்தித்து, அவளை வாழ்த்தினாள், அப்போது, எலிசபெத்தின் வயிற்றில் இருந்த குழந்தைத் துள்ளிற்று. தேவன் அவர்கள் இருவருக்கும் செய்ததை நினைத்து மகிழ்ந்தனர். மூன்று மாதம் அவளை சந்தித்து, பின்பு, மரியாள் அவளுடைய வீட்டிற்குப் போனாள்.

## தூதன் மரியாளைவிட்டு போனபின்பு, அவள் யாரை சந்திக்கும்படி போனாள்?

அவள் எலிசபெத்தை சந்திக்கும்படி போனாள்.

---

## 22:07

இது நடந்த பின்பு, எலிசபெத் ஒரு ஆண் குழந்தையை பெற்றாள். தேவதூதன் சொன்னதுபோல சகரியாவும், எலிசபெத்தும் அவனுக்கு யோவான் என்று பெயர் வைத்தனர். பின்பு சகரியாவை தேவன் பேச வைத்தார். சகரியா பேசியது என்னவென்றால், தேவன் அவருடைய ஜனங்களை நினைத்தருளினார், அவருக்கு மகிமை உண்டாவதாக, நீ, என் மகனே, உன்னதமான தேவனுக்கு நீ தீர்கத்தரிசியாய் இருப்பாய். ஜனங்கள் பாவங்களிலிருந்து எப்படி மன்னிப்பு பெற வேண்டும் என்று அவர்களுக்குச் சொல்லுவாய்! என்றான்.

## யோவானைக் குறித்து சகரியா என்ன சொன்னான்.

யோவான் உன்னதமான தேவனுடைய தீர்க்கதரிசியாயிருந்து, அவன் ஜனங்கள் எப்படி பாவமன்னிப்பை பெறமுடியும் என்பதை அவர்களுக்குச் சொல்லுவான்.

# 23. இயேசுவின் பிறப்பு

## 23:01

மரியாள் நீதிமானாயிருந்த யோசேப்புக்கு நியமிக்கபட்டிருந்தாள். அவள் கர்ப்பமாய் இருந்ததினால், அது அவனுடைய குழந்தை இல்லை என்பதினால், அவளை அவமானப்படுத்த விரும்பாமல், சமாதானமாய், விவாகரத்து செய்ய விரும்பினான். அவன் அதைச் செய்யும்முன்னே, தேவன்தூதன் அவன் சொப்பனத்தில் வந்து அவனோடு பேசினான்.

### யோசேப்பு எப்படிப்பட்டவன்?

அவன் நீதிமானாயிருந்தான்.

### மரியாள் கற்பமாய் இருப்பதை அறிந்து யோசேப்பு என்ன செய்யும்படி யோசித்தான்?

அவன் அவளை விவாகரத்து செய்யும்படி யோசித்தான்.

---

## 23:02

தேவதூதன் யோசேப்பினிடத்தில், யோசேப்பே, மரியாளை உன் மனைவியாய் சேர்த்துக் கொள்ள பயப்படாதே, அந்தக் குழந்தை பரிசுத்த ஆவியினால் உண்டாயிருக்கிறது. அவள் ஒரு ஆண் பிள்ளையைப் பெறுவாள். அவருக்கு இயேசு என்று பெயர் வை, [இயேசு என்பதற்கு யேகோவா மீட்ப்பர் என்று அர்த்தம்] அவர் ஜனங்களின் பாவங்களை நீக்குவார்.

### எதினால் யோசேப்பு அவனுடைய மனதை மாற்றி மரியாளைத் திருமணம் செய்ய முடிவு செய்தான்?

தூதன் யோசேப்புக்கு சொப்பனத்தில் தரிசனமாகி, மரியாளை உன் மனைவியாக சேர்த்துக்கொள்ள பயப்படவேண்டாம் என்று சொன்னான்.

### இயேசு என்ற பெயரின் அர்த்தம் என்ன?

கர்த்தர் இரட்சிக்கிறார் என்று அர்த்தம்.

---

## 23:03

பின்பு மரியாளை யோசேப்பு திருமணம் செய்து, அவனுடைய வீட்டில் தன்னுடைய மனைவியாய் சேர்த்துக் கொண்டான். ஆனால் அவள் பிள்ளைப்பெறும் வரை, அவளைத் தொடவில்லை.

---

## 23:04

மரியாளுக்கு பிரசவம் ஆகப்போகும் சமயத்தில், யோசேப்பும், மரியாளும் பெத்லேகேம் என்னும் தூரமான ஊருக்கு போகவேண்டியிருந்தது. ஏனெனில், ரோம அதிகாரிகள் இஸ்ரவேலர்களை கணக்குப் பார்த்துக்கொண்டிருந்தனர். இதனால் ஒவ்வொருவரும் தங்கள் முன்னோர் இருந்த ஊர்களுக்குப் போக வேண்டியிருந்தது. தாவீது ராஜா பெத்லகேமிலே பிறந்ததினால், அவனுடைய சந்ததியில் வந்த யோசேப்பும், மரியாளும் அங்கே போக வேண்டியிருந்தது.

### யோசேப்பும் மரியாளும் ஏன் தூர பிரயாணம் செய்து பெத்லகேமுக்கு போனார்கள்?

ரோம அரசாங்கம் ஜனங்களின் எண்ணிக்கையை பார்க்கவேண்டும் என்று எல்லோரையும் அவர்களுடைய முன்னோர்கள் வாழ்ந்த இடத்திற்கு போகும்படிச் சொன்னது.

---

## 23:05

யோசேப்பும் மரியாளும் பெத்லேகேம் போனபோது, அவர்கள் தங்கும்படி மிருகஜீவன்கள் இருக்கும் இடத்தை தவிர வேறு இடம் இல்லை. அந்த இடத்தில் மரியாளுக்குக் குழந்தை பிறந்து, அங்கே ஒரு மெத்தைக்கூட இல்லை, எனவே குழந்தையை முன்னணையிலே வைத்து, அந்தக் குழந்தைக்கு, இயேசு என்று பெயர் வைத்தார்கள்.

### இயேசு எப்படிப்பட்ட இடத்தில் பிறந்தார்?

விலங்குகள் தாங்கும் இடத்தில் இயேசு பிறந்தார்.

---

## 23:06

அந்த இரவில் சில மேய்ப்பர்கள், வயல்வெளியில் ஆடுகளைக் காத்துக் கொண்டிருந்தனர். உடனே வெளிச்சம் போல் ஒரு தேவதூதன் தோன்றினான், அவர்கள்

பயந்தனர். தேவதூதன் அவர்களைப் பார்த்து, பயப்படாதிருங்கள், உங்களுக்கு ஒரு நல்ல செய்தி, மேசியா, ராஜா, பெத்லகேமிலே பிறந்திருக்கிறார்! என்றான்.

### மேய்ப்பர்களுக்கு தூதன் சொன்ன செய்தி என்ன?

பயப்படாதிருங்கள், உங்களுக்கு ஒரு நற்செய்தியை அறிவிக்கிறேன். பெத்லகேமில் மேசியா பிறந்திருக்கிறார் என்று சொன்னான்.

---

## 23:07

துணிகளில் சுற்றி, முன்னணையிலே வைத்திருக்கும் குழந்தையை போய் பாருங்கள் என்றதும், வானத்தில் தேவதூதர்கள் தோன்றினர். அவர்கள் தேவனைத் துதித்து, தேவனுக்கு மகிமையும், பூமியிலே சாமாதானமும், மனுஷர்மேல் பிரியமும் உண்டாகட்டும் என்றனர்.

---

## 23:08

தேவதூதர்கள் மறைந்த பின்பு, மேய்ப்பர்கள் அந்தக் குழந்தையை பார்க்கும்படி அவர்கள் ஆடுகளை விட்டுப் போனார்கள். தூதர்கள் சொன்னபடியே அவர்கள் முன்னணையிலே இருந்த இயேசுவை பார்த்து ஆச்சரியமடைந்தனர். அவர்கள் தங்கள் மந்தையினிடத்திற்கு திரும்பி, அவர்கள் கேட்டவைகளையும், பார்த்தவைகளையும் நினைத்து தேவனைத் துதித்தார்கள்.

### அவர்கள் அந்த குழந்தை தான் என்று எப்படி அறிந்துகொண்டார்கள்?

பிள்ளையை துணிகளில் சுற்றி முன்னணியில் கிடத்தியிருந்ததினால்.

### அந்த குழந்தையைப் பார்த்த மேய்ப்பர்கள் என்ன செய்தார்கள்?

அவர்கள் கண்டவைகளையும், கேட்டவைகளையும் குறித்து தேவனை துதித்துக்கொண்டு வயல்வெளிக்குப் போனார்கள்.

---

## 23:09

கிழக்குப் பகுதியில் இருந்த சில மனிதர்கள், வானத்தில் தோன்றிய நட்சத்திரங்களைப் பார்த்து, அதைப்பற்றி அறிந்திருந்ததினால் [வான சாஸ்திரிகள்], யூதருக்கு ராஜா பிறந்திருக்கிறார் என்று அறிந்து, அந்தக் குழந்தையைப் பார்க்கும்படி, தூரத்திலிருந்து

பிரயாணமாய், பெத்லேகேமில் இயேசுவும் அவருடைய பெற்றோரும் இருந்த இடத்திற்கு வந்தனர்.

### பின்பு, இயேசு பிறந்திருக்கிறதை கிழக்கிலே இருந்த சாஸ்திரிகள் எப்படி அறிந்துகொண்டனர்?

அவர்கள் வானத்திலே புதிய நட்சத்திரத்தைக் கண்டார்கள்.

---

## 23:10

அவர்கள் இயேசுவையும், அவருடைய தாயையும் பார்த்து, பணிந்து வணங்கி, துதித்தனர். அவர்கள் இயேசுவுக்கு விலையேறப்பெற்ற பரிசுகளைக் கொடுத்து, பின்பு வீடு திரும்பினர்.

### இயேசுவைக் கண்ட சாஸ்திரிகள் என்ன செய்தார்கள்?

அவர்கள் கீழே குனிந்து வணங்கி, இயேசுவுக்கு விலையுயர்ந்த பரிசுகளை வழங்கினார்கள்.

# 24. யோவான் இயேசுவை ஸ்நானம்பண்ணுதல்

## 24:01

சகரியாவுக்கும், எலிசபெத்துக்கும் பிறந்த யோவான், வளர்ந்து பெரியவனாகி, ஒரு தீர்கத்தரிசி ஆனான். வெட்டுக்கிளியையும், காட்டுத்தேனையும் சாப்பிட்டு, ஒட்டக முடியினால் செய்யப்பட்ட உடை அணித்து, வனாந்திரத்தில் வாழ்ந்தான்.

### யோவான் பெரியவனானபின்பு எங்கே வாழ்ந்தான்?

அவன் வனாந்திரத்தில் வாழ்ந்தான்.

---

## 24:02

அநேக ஜனங்கள் அவன் சொல்வதைக் கேட்கும்படி வனாந்திரத்திற்கு போனார்கள். மனந்திரும்புங்கள், பரலோக ராஜ்ஜியம் சமீபமாய் இருக்கிறது என்று பிரசங்கித்தான்.

### யோவான் ஜனங்களுக்குச் சொன்ன செய்தி என்ன?

மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபமாய் இருக்கிறது!

---

## 24:03

யோவானின் பிரசங்கத்தைக் கேட்ட அநேகர், தங்கள் பாவங்களை விட்டு மனந்திரும்பினர். அவர்களுக்கு யோவான் ஸ்நானம் கொடுத்தான். அநேக மதத் தலைவர்களும் யோவானைப் பார்க்கும்படி வந்தனர், ஆனால் அவர்கள் பாவங்களை சொல்லவோ, மனந்திரும்பவோ இல்லை.

### யோவானுடைய பிரசங்கத்தைக் கேட்டு மனதிரும்பியவர்களை அவன் என்ன செய்தான்?

அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்தான்.

---

## 24:04

மதத் தலைவர்களிடம் யோவான் சொன்னது, விரியன் பாம்புகளே! மனந்திரும்பி, ஒழுக்கமாய் இருங்கள். தேவன் கனி கொடுக்காத எல்லா மரங்களையும் வெட்டி, அக்கினியிலே போடுவார் என்றான். உமக்கு முன்னே போய், வழியை ஆயத்தம் செய்வான், என்று தீர்கத்தரிசிகள் சொன்னதை யோவான் நிறைவேற்றினான்.

### யாரை யோவான் விஷமுள்ள பாம்போடு ஒப்பிடுகிறான்??

மனந்திரும்ப மறுக்கும் அநேக மதத்தலைவர்களைக் குறித்து சொல்லுகிறான்.

---

## 24:05

யோவான், மேசியாவோ என்று மதத் தலைவர்கள் சிலர் அவனிடம் கேட்டனர். அவன், நான் மேசியா இல்லை, எனக்குப்பின் வருகிறவர் என்னைவிட பெரியவர். அவருடைய செருப்பின்வாரை எடுத்து விடுவதற்குகூட, நன் பாத்திரவான் இல்லை என்றான்.

### யோவான் தான் மேசியாவா என்று யூதர்கள் கேட்டதற்கு அவன் சொன்ன பதில் என்ன?

அவன் நான் மேசியா இல்லை என்றான்.

---

## 24:06

அடுத்தநாள், இயேசு ஸ்நானம் பெற்றுக்கொள்ளும்படி யோவானிடம் வந்தார். யோவான் அவரை பார்த்ததும், பாருங்கள்! இவரே தேவ ஆட்டுக்குட்டி, உலகத்தின் பாவங்களை நீக்குகிறவர் என்றான்.

### இயேசு தன்னிடத்தில் இயேசு ஞானஸ்நானம் பெறும்படி வருகிறதை யோவான் பார்த்து, அவரைக் குறித்து என்ன சொன்னான்?

உலகத்தின் பாவங்களை சுமந்து தீர்க்கும் தேவ ஆட்டுக்குட்டி என்றான்.

---

## 24:07

யோவான், இயேசுவிடம், நான் உமக்கு ஸ்நானம் கொடுக்க பாத்திரவான் இல்லை, நீர் எனக்கு ஸ்நானம் கொடுக்க வேண்டும் என்று சொன்னான். அதற்கு இயேசு, நீ எனக்கு ஸ்நானம் கொடுப்பது தான் சரி, ஸ்நானம் கொடு என்றார், அவர் பாவம் செய்யாதிருந்தும், யோவான் அவரை ஸ்நானம் பண்ணினான்.

### யோவான் இயேசுவுக்கு ஞானஸ்நானம் கொடுப்பதற்கு முன்பு ஏன் அவர் மனந்திரும்ப தேவையில்லை?

ஏனெனில் இயேசு பாவம் செய்ததில்லை.

### ஏன் இயேசு தனக்கு ஞானஸ்நானம் கொடுக்கும்படி யோவானிடத்தில் சொன்னார்?

யோவான் இயேசுவுக்கு ஞானஸ்நானம் கொடுக்க வேண்டும், அப்படிச் செய்வது தான் சரி என்றார்.

---

## 24:08

இயேசு, ஸ்நானம் எடுத்து முடித்து, தண்ணீரிலிருந்து வெளியே வரும்போது, பரிசுத்த ஆவியானவர் புறாவைப் போல் அவர்மேல் இறங்கினார். அதே சமயம், வானத்திலிருந்து தேவன் பேசினார், அதாவது, நீ என்னுடைய மகன், நான் உன்னை நேசிக்கிறேன் மேலும் உன்னில் பிரியமாயிருக்கிறேன் என்றார்.

### இயேசு ஞானஸ்நானம் பெற்றபின்பு அவர்மேல் தங்கும்படி வந்தது யார்?

தேவனுடைய ஆவியானவர் புறாவைப் போல் இறங்கினார்.

### இயேசு ஞானஸ்நானம் பெற்ற பின்பு அவரிடத்தில் தேவன் சொன்னது என்ன?

நீர் என்னுடைய நேச குமாரன், உம்மில் நான் பிரியமாய் இருக்கிறேன்.

---

## 24:09

தேவன், யோவானிடம், நீ ஸ்நானம் பண்ணும் ஒருவர் மேல் பரிசுத்த ஆவி இறங்குவார். அவரே தேவனுடைய மகன் என்றார். தேவன் ஒருவரே. ஆனால், யோவான், இயேசுவை ஸ்நானம் பண்ணினதும், பிதாவாகிய தேவனுடைய சத்தத்தைக் கேட்டு, அவருடைய மகனாகிய இயேசுவைப் பார்த்து, பரிசுத்த ஆவியையும் பார்த்தான்.

### யார் மேல் பரிசுத்த ஆவியானவர் வந்து தங்குவதாக தேவன் சொன்னார்?

தேவனுடைய குமாரன் மேல் வந்து தங்குவதாக சொன்னார்.

# 25. இயேசுவை பிசாசு சோதித்தல்

## 25:01

இயேசு ஸ்நானம் எடுத்து முடிந்ததும், பரிசுத்த ஆவியானவரால் வனாந்திரத்திற்கு நடத்தப்பட்டார். அங்கே, இயேசு நாற்பது நாள் இரவும், பகலும் உபவாசமாய் இருந்தார். இயேசுவை பாவம் செய்யும்படி சோதிக்க சாத்தான் வந்தான்.

### இயேசு ஞானஸ்நானம் எடுத்தப்பின்பு எங்கே போனார்?

இயேசு வனாந்திரத்திற்கு போனார்.

### இயேசுவை வனாந்திரத்திற்கு கொண்டுபோனது யார்?

பரிசுத்த ஆவியானவர் தான் அவரைக் கொண்டுபோனார்.

### வனாந்திரத்தில் இயேசு என்ன செய்தார்?

நாற்பது நாள் இரவும் பகலும் உபவாசித்தார்.

---

## 25:02

முதலில் சாத்தான், இயேசுவினிடத்தில், நீர் தேவனுடைய மகனாயிருந்தால், இந்த கற்களை அப்பமாக மாற்றி சாப்பிட வேண்டும் என்றான்.

### கற்களை வைத்து இயேசு என்ன செய்யும்படி பிசாசு சோதித்தான்?

அவைகளை இயேசு அப்பமாக மாற்றி சாப்பிடும்படி சொன்னான்.

---

## 25:03

அதற்கு இயேசு, மனிதன் வாழ்வதற்கு அப்பம் மாத்திரம் அல்ல, தேவனுடைய வாயிலிருந்து வரும் ஒவ்வொரு வார்த்தையும் வேண்டும் என்று தேவனுடைய வார்த்தை எழுதப்பட்டிருக்கிறது என்று சாத்தானிடம் சொன்னார்.

### அப்பத்தை விட எது நமக்கு தேவையாயிருக்கிறது என்று இயேசு சொன்னார்?

தேவன் பேசும் ஒவ்வொரு வார்த்தையும் நமக்குத் தேவன் என்றார்.

---

## 25:04

பின்பு சாத்தான், இயேசுவை தேவாலயத்தின் உச்சிக்கு கொண்டுபோய், நீர் தேவனுடைய மகனாயிருந்தால், இங்கேயிருந்து கீழே குதிக்க வேண்டும். ஏனெனில், பாதம் கல்லில் படாதபடி, தேவன் தூதர்களை வைத்து காப்பாற்றுவார் என்று எழுதியிருக்கிறது என்று சாத்தான் சொன்னான்.

### அடுத்ததாக பிசாசு இயேசுவை என்ன செய்யும்படி சோதித்தான்?

அவன் இயேசுவை தேவாலயத்திலிருந்து கீழே குதிக்கும்படி சொன்னான்.

### இயேசுவை யார் பாதுகாப்பதாக சாத்தான் சொன்னான்?

தேவன் தம்முடைய தூதர்களுக்குக் கட்டளைக் கொடுத்து இயேசுவை பாதுகாப்பார் என்றான்.

---

## 25:05

ஆனால் இயேசு, சாத்தானுடைய சொல்லைக் கேளாமல், தேவனாகிய ஆண்டவரை சோதிக்கக் கூடாது என்று தேவன் சொல்லியிருக்கிறார் என்றார்.

### சாத்தானுக்கு மறுமொழியாக இயேசு சொன்னது என்ன?

உன் தேவனாகிய கர்த்தரை பரீட்சைபாராதிருப்பாயாக என்று தேவனுடைய வார்த்தை சொல்லுகிறது என்றார்.

---

## 25:06

பின்பு சாத்தான், உலகத்தின் எல்லா ராஜ்யங்களையும், அதிலுள்ள எல்லா மேன்மையையும், அதிகாரங்களையும் இயேசுவுக்கு காண்பித்து, கீழே விழுந்து என்னை வணங்கினால், இவைகள் எல்லாவற்றையும் உமக்குத் தருவேன் என்று சொன்னான்.

### இறுதியான சோதனையில் சாத்தான் இயேசுவுக்கு என்ன தருவதாக சொன்னான்?

உலகத்தின் எல்லா ராஜ்யத்தையும் அதின் மகிமையையும் தருவதாக சாத்தான் சொன்னான்.

### இந்த ராஜ்ஜியங்களையெல்லாம் இயேசு பெற்றுக்கொள்ள என்ன செய்யும்படி சாத்தான் சொன்னான்?

இயேசு கீழே விழுந்து சாத்தானை வணங்கும்படி சொன்னான்.

---

## 25:07

அதற்கு இயேசு, அந்தபக்கம் போ, சாத்தானே! தேவனாகியகர்த்தர் ஒருவருக்கே ஆராதனை செய்து, அவர் ஒருவரையே கனம்பண்ணுவாயாக என்று தேவனுடைய வார்த்தையில் ஜனங்களுக்குக் கட்டளையிடப்படிருக்கிறது என்றார்.

### சாத்தானை வணங்க இயேசு ஒப்புக்கொண்டாரா?

இல்லை. அவர் தேவன் ஒருவருக்கே ஆராதனை செய்து அவருக்கே சேவை செய்வார்.

---

## 25:08

சாத்தானுடைய சோதனையில் இயேசு விழாததினால், சாத்தான் அவரை விட்டுப் போய்விட்டான். பின்பு தேவதூதர்கள் வந்து, இயேசுவுக்கு சேவை செய்தனர்.

### சாத்தானால் இயேசுவை பாவம் செய்யவைக்க முடிந்ததா?

இல்லை.

### சாத்தான் இயேசுவை விட்டு போனவுடனே என்ன நடந்தது?

தூதர்கள் வந்து இயேசுவுக்கு பணிவிடை செய்தனர்.

# 26. இயேசு ஊழியத்தை ஆரம்பித்தல்

## 26:01

இயேசு, சாத்தனின் சோதனையில் விழாமல், கலிலேயாவுக்கு வந்தார். இது அவர் வாழ்ந்த ஊர் ஆகும். பரிசுத்த ஆவியின் வல்லமையினால் ஒவ்வொரு இடம் சென்று, பிரசங்கித்தார். எல்லோரும் அவரைப் பற்றி நன்மையாய் சொன்னார்கள்.

### சாத்தானுடைய சோதனைகளை ஜெயித்துவிட்டு இயேசு எங்கே போனார்?

இயேசு வாழ்ந்த கலிலேயாவின் ஊருக்குப் போனார்.

---

## 26:02

இயேசு, தாம் சிறுவயதில் வாழ்ந்த நாசரேத்து என்னும் ஊருக்கு போயிருந்தார். ஓய்வுநாளில் தேவனை ஆராதிக்கும்படி போனார். அங்கே இருந்த தலைவர்கள் ஏசாயா தீர்கத்தரிசன சுருளை இயேசுவிடம் கொடுத்து, அதை வாசிக்கும்படி சொன்னார்கள். எனவே இயேசு அதைத் திறந்து அவர்களுக்கு வாசித்தார்.

### இயேசு சிறுபிள்ளையாய் இருந்தபோது எந்த நகரத்தில் வசித்தார்?

நாசரேத்து.

### ஓய்வுநாளில் இயேசு எங்கே போனார்?

அவர் ஆராதனை செய்யும் இடத்திற்குப் போனார்.

### ஆராதனை செய்யும் இடத்தில் இருந்தவர்கள் ஏன் இயேசுவினிடத்தில் ஏசாயாவின் சுருளை அவர் கையில் கொடுத்தனர்.

இயேசு அதை வாசிக்கும்படி அவர்கள் விரும்பினார்கள்.

---

## 26:03

தேவன் எனக்கு அவருடைய ஆவியைத் தந்தார். எனவே நான் நல்ல செய்தியை பிரசங்கிப்பேன், காவலில் இருப்பவர்களை விடுவிக்கவும், குருடரை பார்வையடைய செய்யவும், ஒதுக்கப்பட்டவர்களை விடுவிக்கவும், என்னை அனுப்பினார். இந்த சமயத்தில், தேவன் நமக்கு தயவாய் உதவி செய்வார் என்று வாசித்தார்.

---

## 26:04

இயேசு அதை வாசித்து முடித்து உட்கார்ந்ததும், எல்லோரும் அவரை கூர்ந்து கவனித்தனர். மேசியாவைப் பற்றி அவர் வாசித்தார் என்று அவர்கள் அறிந்திருந்தனர். நான் வாசித்த இந்தக்காரியங்கள் இப்போது நடந்து கொண்டிருக்கிறது என்று இயேசு சொன்னார். எல்லோரும் அவரைக் பற்றி ஆச்சரியப்பட்டு, இவன் யோசேப்பின் மகன் தானே என்றார்கள்.

### இயேசு வாசித்த வேதப்பகுதி யாரைக் குறிப்பிட்டது?

மேசியா.

### இயேசு வாசித்த வேதப்பகுதியைக் குறித்து அவர் சொன்னது என்ன?

அது இப்போது நிறைவேறிற்று என்றார்.

### இயேசுவின் ஊரார் அவருடைய வார்த்தையைக் கேட்டு என்ன சொன்னார்கள்?

இவன் யோசேப்பின் மகன் அல்லவா என்று ஆச்சரியமாய் கேட்டார்கள்.

---

## 26:05

அவர்களுக்கு இயேசு சொன்னது, சொந்த ஊரில் ஒரு தீர்கத்தரிசியை ஜனங்கள் ஏற்றுக்கொள்வதில்லை. எலியா தீர்கத்தரிசி வாழ்ந்த சமயத்தில், அநேக விதைவைகள் இஸ்ரவேலில் இருந்தனர், அப்போது மூன்றரை வருடம் மழை இல்லாதிருந்தது. தேவன், எலியாவுக்கு உதவும்படி இஸ்ரவேலில் இருந்து ஒரு விதைவையை அனுப்பவில்லை மாறாக வேறு தேசத்திலிருந்து ஒரு விதைவை அனுப்பினார்.

### தேவனுடைய தீர்க்கத்தரிசிகள் மற்ற தேசங்களுக்கும் உதவி செய்ததைப் பற்றி இயேசு சொன்ன விளக்கம் என்ன?

எலியா பஞ்சத்தில் இருக்கும்போது தேவன் ஒரு விதவையை வைத்து உதவினார் மற்றும் இஸ்ரவேலின் எதிரியான நாகமான் என்னும் படைத்தலைவனை எலியா சுகமாக்கினதையும் சொன்னார்.

---

## 26:06

இயேசு மேலும் சொன்னது என்னவென்றால், எலிசாவின் நாட்களில், இஸ்ரவேலில் அநேக குஷ்டரோகிகள் இருந்தனர். ஆனால் எலிசா அவர்களில் யாரையும் குணமாக்காமல், இஸ்ரவேலின் எதிரிகளின் இராணுவத்தலைவனாகிய நாகமானின் குஷ்டரோகத்தை மட்டும் குணமாக்கினான். இயேசு சொல்வதைக் கேட்டுக்கொண்டிருந்த யூதர்கள், இயேசுவின் மேல் மிகவும் கோபமடைந்தனர்.

### தேவனுடைய தீர்க்கத்தரிசிகள் மற்ற தேசங்களுக்கும் உதவி செய்ததைப் பற்றி இயேசு சொன்ன விளக்கம் என்ன?

எலியா பஞ்சத்தில் இருக்கும்போது தேவன் ஒரு விதவையை வைத்து உதவினார் மற்றும் இஸ்ரவேலின் எதிரியான நாகமான் என்னும் படைத்தலைவனை எலியா சுகமாக்கினதையும் சொன்னார்.

### இந்த கதைகளை இயேசு அவர்களுக்குச் சொன்னபோது ஜனங்கள் என்ன செய்தார்கள்?

அவர்கள் மிகவும் கோபமடைந்து இயேசுவை கொலை செய்ய முயற்சித்தார்கள்.

---

## 26:07

நாசரேத்து ஜனங்கள் இயேசுவைப் பிடித்து, ஆராதிக்கும் இடத்தை விட்டு, வெளியே தள்ளினார்கள். அவரைக் கொலை செய்யும்படி, உயரமான இடத்திலிருந்து தள்ள முயற்சித்தார்கள். ஆனால் இயேசுவோ அந்தக் ஜனக்கூட்டத்திலிருந்து நடந்து நாசரேத்திலிருந்து போய்விட்டார்.

### இந்த கதைகளை இயேசு அவர்களுக்குச் சொன்னபோது ஜனங்கள் என்ன செய்தார்கள்?

அவர்கள் மிகவும் கோபமடைந்து இயேசுவை கொலை செய்ய முயற்சித்தார்கள்.

### அந்த ஜனக்கூட்டத்திலிருந்து இயேசு எப்படி தப்பித்தார்?

இயேசு ஜனக்கூட்டத்திலிருந்து நடந்து அந்த பட்டணத்தைவிட்டுப் போய்விட்டார்.

---

## 26:08

பின்பு, இயேசு கலிலேயா ஊர் முழுவதும் போனார், அங்கே திரளான ஜனங்கள் வியாதியாய் இருந்தவர்களையும், முடியாதவர்களையும் அவரிடத்தில் கொண்டுவந்தார்கள். அவர்களில், சிலர் பார்க்க முடியாமலும், நடக்க முடியாமலும், கேட்க முடியாமலும், பேச முடியாமலும் இருந்தனர். இயேசு அவர்களை குணமாக்கினார்.

### கலிலேயாவிலிருந்த ஜனங்கள் இயேசுவைக் கண்டு என்ன செய்தார்கள்?

அவர்கள் வியாதியாய் இருந்தவர்களையும் முடவர்களையும் அவர் குணமாக்கும்படி அவரிடத்தில் கொண்டுவந்தார்கள்.

---

## 26:09

மேலும், பிசாசு பிடித்திருந்த அநேகரை அவரிடத்தில் கொண்டு வந்தார்கள். அசுத்த ஆவிகளை இயேசு வெளியேறும்படிக் கட்டளையிட்டார். அவைகள் வெளியே போனது. சில ஆவிகள் சத்தமாய், நீர் தேவனுடைய மகன்! அங்கே இருந்த ஜனங்கள் ஆச்சரியப்பட்டு, தேவனைத் துதித்தார்கள்.

### இயேசு அசுத்த ஆவிகளை ஜனங்களிடத்திலிருந்து போகும்படி கட்டளைக் கொடுத்தபோது அவர் யார் என்று அவைகள் சாட்சி கொடுத்தன?

இயேசுவை தேவனுடைய குமாரன் என்று அவைகள் சொன்னது.

---

## 26:10

பின்பு, அப்போஸ்தலர்கள் என்று அழைத்த பனிரெண்டு பேரை இயேசு தேர்ந்தெடுத்தார். அந்த அப்போஸ்தலர்கள் இயேசுவோடு சென்று, அவரிடமிருந்து கற்றுக் கொண்டனர்.

### இயேசு எத்தனை பேரை அவருடைய அப்போஸ்தலர்களாக தெரிந்துகொண்டார்?

அவர் பன்னிரண்டு பேரைத் தெரிந்துகொண்டார்.

# 27. நல்ல சமாரியனின் கதை

## 27:01

ஒருநாள், நியாயப்பிரமாணம் முழுவதும் தெரிந்த ஒருவன், இயேசுவினிடத்தில் வந்து, இயேசு தவறாக பிரசங்கம் செய்கிறார் என்று எல்லோருக்கும் தெரியப்படுத்த, இயேசுவினிடத்தில், நான் நித்திய ஜீவனை பெற்றுக்கொள்ள என்ன செய்ய வேண்டும்? என்று கேட்டான். அதற்கு இயேசு, தேவனுடைய நியாயபிரமாணத்தில் என்ன எழுதியிருக்கிறது? என்று அவனிடத்தில் கேட்டார்.

### யூதர்களின் நியாயப்பிரமாணத்தில் தேறினவன் இயேசுவினிடத்தில் என்ன கேள்வி கேட்டான்?

போதகரே, நான் நித்திய ஜீவனை அடைய என்ன செய்யவேண்டும்?

### நியாயப்பிரமாணத்தில் தேறினவனுக்கு இயேசு சொன்ன பதில் என்ன?

தேவனுடைய நியாயப்பிரமாணத்தில் என்ன எழுதியிருக்கிறது என்று அவனிடத்தில் கேட்டார்?

---

## 27:02

அவன், தேவனை, முழு இருதயத்தோடும், ஆத்துமாவோடும், பலத்தோடும், மனதோடும் நேசித்து, நம்மைப்போல மற்றவர்களையும் நேசிக்க வேண்டும் என்று இயேசுவினிடத்தில் சொன்னான். அதற்கு இயேசு, நீ சொன்னது சரிதான். இப்படி நீ செய்தால் நித்திய ஜீவனைப் பெறுவாய் என்றார்.

### யாரை நாம் நேசிக்கவேண்டும் என்று தேவனுடைய நியாயப்பிரமாணம் சொல்லுகிறது?

தேவனாகிய கர்த்தரையும் மற்றவர்களையும்.

---

## 27:03

ஆனால், நியாயப்பிரமாணம் முழுவதும் தெரிந்த அவன், தான் உண்மையாய் வாழ்கிறதை, ஜனங்களுக்கு காட்டவேண்டும் என்று, இயேசுவினிடத்தில், மற்றவர்கள் என்றால் யார் என்று கேட்டான்.

### யூதர்களின் நியாயப்பிரமாணத்தில் தேறினவன் எதினால் மற்றவர்கள் யார் என்று கேட்டான்?

அவன் தன்னை நீதிமானாய் காண்பிக்கும்படி.

---

## 27:04

நியாயப்பிரமாணம் தெரிந்தவனுக்கு இயேசு ஒரு கதை சொன்னார். அதாவது, ஒரு யூதன் எருசலேமிலிருந்து, எரிகோவுக்கு போய்க் கொண்டிருந்தான்.

---

## 27:05

அப்போது, சில திருடர்கள், அவனை சாகும் அளவு அடித்து, அவனிடத்தில் இருந்த எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டுப் போய்விட்டனர்.

### இயேசு சொன்ன கதையில் பிரயாணம் செய்த யூதனுக்கு வழியில் என்ன சம்பவித்தது?

அவன் திருடர்களால் தாக்கப்பட்டு, அவனிடத்தில் இருந்த எல்லாம் பிடுங்கப்பட்டு, மேலும் அவன் சாகக்கூடிய அளவுக்கு அவன் அடிக்கப்பட்டான்.

---

## 27:06

பின்பு, யூதர்களின் ஆசாரியன் ஒருவன் அந்த வழியாய் வந்து, கீழே விழுந்துகிடக்கிறவனைப் பார்த்துவிட்டு, அவனைக் கண்டு கொள்ளாமல், வேறு வழியாய் போய்விட்டான்.

### அடிபட்டவனை முதலில் பார்த்தவன் யார்?

யூத ஆசாரியன் ஒருவன்.

### யூத ஆசாரியன் அடிபட்டவனைப் பார்த்ததும் என்ன செய்தான்?

அவனைக் கண்டுகொள்ளாமல் வேறுவழியாய் போய்விட்டான்.

---

## 27:07

கொஞ்ச நேரம் கழித்து, லேவியன் ஒருவன் அந்த வழியாய் வந்தான். [தேவாலயத்தில் ஆசாரியர்களுக்கு உதவி செய்யும், யூதர்களின் லேவிக் கோத்திரத்தார்.] அவனும், கீழே விழுந்து கிடக்கிறவனைக் கண்டுகொள்ளாமல், அந்த வழியைக் கடந்து போய்விட்டான்.

### இரண்டாவதாக அடிபட்டவனைப் பார்த்தது யார்?

ஒரு லேவியன்.

### லேவியன் அடிபட்டவனைப் பார்த்ததும் என்ன செய்தான்?

அவனைக் கண்டுகொள்ளாமல் வேறுவழியாய் போய்விட்டான்.

---

## 27:08

இதற்குப் பின்பு, அந்த வழியாய் ஒரு சமாரியன் வந்தான். [யூதர்களும், சமாரியர்களும் ஒருவரையொருவர் வெறுத்தனர்.] அவன் கீழே விழுந்து கிடந்த அந்த மனிதன், யூதன் என்று அறிந்தும், அவனுக்கு மனமிரங்கி, அவனிடத்தில் போய், அவனுடைய காயங்களுக்கு கட்டுப் போட்டான்.

### அடிபட்டவனை மூன்றாவதாக பார்த்தவன் யார்?

ஒரு சமாரியன்.

### யூதர்களுக்கும் சமாரியர்களுக்கும் இருந்த உறவு என்ன?

அவர்கள் ஒருவரையொருவர் வெறுத்தனர்.

---

## 27:09

பின்பு அந்த சமாரியன், அவனை தன்னுடைய கழுதையின்மேல் ஏற்றி, அவனுக்கு உதவி கிடைக்கும் இடத்திற்கு கொண்டு சென்று, அவனுக்குத் தொடர்ந்து உதவி செய்தான்.

### அடிபட்டவனுக்கு சமாரியன் எப்படி உதவிசெய்தான்?

அவனுடைய காயங்களுக்குக் கட்டுப்போட்டு, அந்த வழியில் இருக்கும் உதவி செய்யும் இடத்திற்கு கொண்டுபோய் அவனைப் பார்த்துக்கொண்டான்.

## 27:10

அடுத்தநாள், சமாரியன் தன்னுடைய வழியில் போக வேண்டியிருந்தது. எனவே அவனை கவனித்துக் கொண்டிருக்கும் மனிதனிடத்தில் கொஞ்சம் பணத்தைக் கொடுத்து, அவனைப் பார்த்துக்கொள். இதை விட அதிக பணம் செலவானால், நான் திரும்பி வரும்போது அதைத் தருகிறேன் என்றான்.

### அடிபட்டவனுக்கு சமாரியன் எப்படி உதவிசெய்தான்?

அவனுடைய காயங்களுக்குக் கட்டுப்போட்டு, அந்த வழியில் இருக்கும் உதவி செய்யும் இடத்திற்கு கொண்டுபோய் அவனைப் பார்த்துக்கொண்டான்.

## 27:11

நியாயப்பிரமாணம் முழுவதும் தெரிந்தவனிடத்தில் இயேசு, என்ன நினைக்கிறாய்? திருடர்கள் கையில் அடிபட்டவனுக்கு அந்த மூன்று பேர்களில் யார் அவருக்கு இரக்கம் கட்டினான் ? அதற்கு அவன், அவனுக்கு உதவி செய்தவன் தான் என்றான். இயேசு அவனிடத்தில், நீயும் போய் அப்படியே செய் என்றார்.

### அந்த மூன்று பேரில் யார் காயப்பட்டவனுக்கு அருகில் இருந்தது யார்?

சமாரியன் தான் அவனுக்குத் தயை செய்தான்.

# 28. வாலிபப் பணக்கார அதிகாரி

## 28:01

ஒருநாள், வாலிபப் பணக்கார அதிகாரி, இயேசுவினிடத்தில் வந்து, நல்ல போதகரே. நித்திய ஜீவனை பெற்றுக் கொள்ள நான் என்ன செய்ய வேண்டும்? என்று கேட்டான். என்னை ஏன் நல்லவன் என்று சொல்லுகிறாய்? ஒருவரே நல்லவர். அவர் தேவனே என்று சொல்லி, நீ நித்திய ஜீவனை பெற்றுக்கொள்ள, தேவனுடைய கற்பனைகளின்படி நடக்கவேண்டும் என்று இயேசு சொன்னார்.

### ஐசுவரியவானான ஒரு வாலிபன் இயேசுவினிடத்தில் என்ன கேட்டான்?

நான் நித்திய ஜீவனை அடைய என்ன செய்யவேண்டும்?

### நித்திய ஜீவனை அடைய அந்த வாலிபனிடத்தில் என்ன செய்யும்படி இயேசு கூறினார்?

தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படியும்படி சொன்னார்.

---

## 28:02

அவைகளில் நான் எதை செய்ய வேண்டும்? என்று கேட்டான். அதற்கு இயேசு, கொலை செய்யாமல் இருக்க வேண்டும். விபச்சாரம் செய்யாமல் இருக்க வேண்டும். திருடாமல் இருக்க வேண்டும். பொய் சொல்லாமல் இருக்க வேண்டும். தகப்பனையும், தாயையும் கனம் பண்ணவேண்டும் மேலும், உன்னைப் போல மற்றவனையும் நேசிக்க வேண்டும் என்றார்.

---

## 28:03

அதற்கு அந்த வாலிபன், என் சிறுவயதிலிருந்து நான் இந்தக் கற்பனைகளின்படி தான் இருக்கிறேன். நான் சாகாதிருக்கும்படி நான் என்ன செய்ய வேண்டும்? என்று கேட்டான். இயேசு அவனை நோக்கி அன்பு கூர்ந்தார்.

### இயேசு சொன்ன கட்டளைகளைக் குறித்து ஐசுவரியவானான ஒரு வாலிபன் சொன்னது என்ன?

அவனுடைய சிறு வயதிலிருந்தே அவைகளை கைக்கொண்டு வருவதாக சொன்னான்.

## 28:04

இயேசு அவனிடத்தில், நீ சுத்தனாய் இருக்க விரும்பினால், உனக்கு உள்ள எல்லாவற்றையும் விற்று, ஏழைகளுக்கு கொடுத்து விடு, அப்போது பரலோகத்தில் உனக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும். பின்பு என்னைப் பின்பற்றும்படி வா என்றார்.

### எந்தக் காரியத்தையும் சேர்த்து அந்த வாலிபன் செய்யும்படி இயேசு சொன்னார்?

அவனிடத்தில் இருந்த எல்லா சொத்துக்களையும் விற்று, அந்த பணத்தை ஏழைகளுக்குக் கொடுத்துவிட்டு, இயேசுவை பின்பற்றும்படிச் சொன்னார்.

### ஐசுவரியவானான வாலிபன் இயேசு சொன்னதைச் செய்தால் என்ன வெகுமதி அவனுக்குக் கொடுக்கபடுவதாக இயேசு சொன்னார்?

அவனுக்கு பரலோகத்தில் பொக்கிஷம் இருக்கும் என்றார்.

## 28:05

இயேசு சொன்னதை அந்த வாலிபன் கேட்டதும், தனக்கு அநேக செல்வங்கள் இருந்ததினால், அதை மற்றவர்களுக்குக் கொடுக்க மனதில்லாமல், மிகுந்த துக்கமடைந்தவனாய் இயேசுவை விட்டுப் போய்விட்டான்.

### ஏன் ஐசுவரியவானான வாலிபன் மிகுந்த துக்கத்தோடு இயேசுவை விட்டுப் போனான்?

அவனுக்கு உண்டாயிருந்த சொத்துக்களையெல்லாம் கொடுக்க அவனுக்கு விருப்பம் இல்லை.

## 28:06

இயேசு தம்முடைய சீஷர்களைப் பார்த்து, பணக்காரர்கள் பரலோகராஜ்யத்திற்கு போவது மிகவும் கடினம்! ஆம் பணக்காரர்கள். பரலோகராஜ்யத்திற்கு போவது, ஊசியின் காதில் ஒட்டகம் போவது போன்றது என்றார்.

### பணக்காரர்கள் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பது எவ்வளவு கடினம்?

அதை விட ஊசியின் காதில் ஒட்டகம் நுழைவது எளிதாய் இருக்கும்.

---

## 28:07

இயேசு சொன்னதை சீஷர்கள் கேட்டு, அதிர்ச்சியடைந்து, அப்படியானால் தேவன் யாரைக் காப்பாற்றுவார் என்றனர்.

---

## 28:08

இயேசு, சீஷர்களைப் பார்த்து, மனிதர்கள் தங்களைக் காப்பாற்றுவது கடினம், ஆனால் தேவனால் கூடாதகாரியம் ஒன்றும் இல்லை என்றார்.

### ஐசுவரியவான்கள் இரட்சிக்கபடுவது எளிதான காரியமா?

ஆம். தேவனால் எல்லாம் கூடும்.

---

## 28:09

பேதுரு இயேசுவினிடத்தில், சீஷர்களாகிய நாங்கள், எல்லாவற்றையும் விட்டுவிட்டு உம்மை பின்பற்றுகிறோம், எங்களுக்கு என்ன கிடைக்கும்? என்றான்.

### சீஷர்கள் எதை விட்டுவிட்டு இயேசுவுக்குப் பின் சென்றார்கள்?

அவர்கள் எல்லாவற்றையும் விட்டுவிட்டார்கள்.

---

## 28:10

எவன் ஒருவன் தன் வீட்டையாவது, சகோதரர்களையாவது, சகோதிரிகளையாவது, தகப்பனையாவது, தாயையாவது, குழந்தைகளையாவது, சொத்தையாவது , 100 மடங்கு அதைவிட அதிகமாக நித்தியத்தில் பெறுவான். முன்பாக வருகிறவர்கள் கடைசியிலும், கடைசியில் வருகிற அநேகர் முதலிலும் இருப்பார்கள் என்று இயேசு சொன்னார்.

## அவர்களுக்கு என்ன கொடுக்கப்படும் என்று இயேசு சொன்னார்?

அவர்கள் அடுத்த ராஜ்யத்தில் நூறத்தனையாக அவைகளைப் பெறுவார்கள் மற்றும் நித்திய ஜீவன்.

## வேறு யாரெல்லாம் இதைப் பெறமுடியும்?

எவன் ஒருவன் இயேசுவுக்காக தன்னுடைய வீட்டையாவது, தகப்பனையாவது, தாயையாவது, சகோதரனையாவது, சகோதரியையாவது, பிள்ளைகளையாவது மற்றும் உடைமைகளையாவது இழந்தவன்.

# 29. இரக்கம் இல்லாத வேலைக்காரனின் கதை

## 29:01

ஒருநாள் பேதுரு, இயேசுவினிடத்தில், போதகரே, எனக்கு விரோதமாய் குற்றம் செய்யும் என்னுடைய சகோதரனை நான் எத்தனை முறை மன்னிக்க வேண்டும்? ஏழு முறை போதுமா? என்று கேட்டான். அதற்கு இயேசு, ஏழு முறை இல்லை, ஏழு எழுபது முறை மன்னிக்க வேண்டும். அவர் சொன்னதின் அர்த்தம் என்னவென்றால், நாம் எப்போதும் மற்றவர்களை மன்னிக்க வேண்டும் என்பது தான். அதற்கு பின்பு ஒரு கதையை சொன்னார்.

### பேதுருவிடம் இயேசு என்ன கேட்டார்?

எனக்கு விரோதமாய் பாவம் செய்யும் என்னுடைய சகோதரனை எத்தனை முறை நான் மன்னிக்கவேண்டும்?

### பேதுரு எத்தனை முறை அவனுடைய சகோதரனை மன்னிக்கும்படி யோசித்தான்?

ஏழு முறை.

### எத்தனை முறை அவருடைய சகோதரனை மன்னிக்கும்படி இயேசு கூறினார்?

ஏழு எழுபது முறை.

### ஏழு எழுபது முறை என்று இயேசு சொன்னதின் அர்த்தம் என்ன?

எப்போதும் நாம் மன்னிக்கவேண்டும் என்பதையே இயேசு சொன்னார்.

---

## 29:02

இயேசு சொன்னது, தேவனுடைய ராஜ்யம், ஒரு ராஜா தன்னுடைய கணக்கை அவனுடைய வேலைக்காரனிடத்தில் ஒப்புவிப்பது போன்றது. ஒரு வேலைக்காரன் அநேக வருடங்களின் தொகையாக ருபாய் 200,000 கடனாயிருந்தான்.

---

## 29:03

அவனால் அந்த பணத்தைத் திரும்ப தரமுடியாமல் போனதினால், ராஜா, அந்த வேலைகாரனையும், அவனுடைய குடும்பத்தையும் அடிமைகளாக விற்று, கடனை அடைக்கும்படி சொன்னான்.

### வேலைக்காரனால் எஜமானிடத்தில் வாங்கிய கடனை திரும்பச் செலுத்த முடிந்ததா?

இல்லை.

### அதிகம் கடன் வாங்கியிருந்த வேலைக்காரனை அவனுடைய எஜமான் எப்படி தண்டித்தான்?

அவனும் அவனுடைய குடும்பமும் அடிமைகளாக விற்கப்படும்படி எஜமான் கட்டளைகொடுத்தான்.

---

## 29:04

அந்த வேலைக்காரன் ராஜாவின் காலில் விழுந்து, ஐயா, கொஞ்சம் பொறுமையாயிரும், நான் உம்மிடத்தில் வாங்கிய கடனை முழுவதும் தந்து விடுவேன் என்று கெஞ்சினான். எனவே, அந்த ராஜா அவனுக்கு இரக்கம் செய்து, அவனுடைய எல்லா கடனையும் மன்னித்து, அவனை அனுப்பி விட்டான்.

### கொஞ்சம் பொறுமையாய் இரும் என்று வேலைக்காரன் கெஞ்சியதும் அந்த எஜமான் செய்தது என்ன?

அந்த வேலைக்காரன்மேல் மனதுருகி, அவனுடைய கடனை எல்லாம் அவனுக்கு மன்னித்தான்.

---

## 29:05

ஆனால், அந்த வேலைக்காரன் ராஜாவினிடத்திலிருந்து போய், அவனிடத்தில் நான்கு மாதத்தொகையாக கடன் வாங்கியிருந்த இன்னொரு வேலைக்காரனைப் பார்த்து, அவனைப் பிடித்து, என்னிடத்தில் வாங்கிய பணத்தை கொடு என்று கேட்டான்!

## பின்பு அந்த வேலைக்காரன் அவனிடத்தில் கொஞ்சம் கடன் வாங்கியிருந்தவனுக்கு என்ன செய்தான்?

அவன் அவனைப் பிடித்து பலவந்தமாய் தன்னிடத்தில் வாங்கிய கடனைத் திரும்பச் செலுத்தும்படி கேட்டான்.

---

## 29:06

கடன் வாங்கிய வேலைக்காரன், மற்றவனின் காலில் விழுந்து, கொஞ்சம் பொறுமையாயிரும், நான் உம்மிடத்தில் வாங்கிய கடனை முழுவதும் தருகிறேன் என்று அவனிடத்தில் கெஞ்சினான். ஆனால், இந்த வேலைக்காரன், கடன் வாங்கியவன் மறுபடியும் அதைத் திரும்பத் தரும் வரை, அவனைப் பிடித்து காவலில் வைத்தான்.

## தன்னிடத்தில் கடன் வாங்கியிருந்த வேலைக்காரன் அவனுடைய காலில் விழுந்து, கொஞ்சம் பொறுமையாயிரும் என்று கெஞ்சியதற்கு, அவன் என்ன செய்தான்?

அவன் கடன்வாங்கியவனை சிறையில் அடைத்தான்.

---

## 29:07

அதைப் பார்த்த சிலர், மிகவும் தூக்கப்பட்டு, ராஜாவினிடத்தில் போய், நடந்த எல்லாவற்றையும் சொன்னார்கள்.

## கடன்வாங்கியவனை சிறையில் அடைத்ததை அறிந்த மற்ற வேலைக்காரர்கள் என்ன செய்தார்கள்?

அவர்கள் மிகவும் துக்கமடைந்து அந்த காரியத்தை எஜமானிடத்தில் அறிவித்தார்கள்.

---

## 29:08

உடனே ராஜா, அந்த வேலைக்காரனை கூப்பிட்டு, நீ கெட்டவன்! நீ என்னிடத்தில் கெஞ்சினதினால் நான் உன்னுடைய எல்லா கடனையும் மன்னித்தேன், அதேபோல உன்னிடத்தில் கடன் வாங்கினவனுக்கும் நீ செய்திருக்க வேண்டும் என்று சொல்லி, அவன்மேல் மிகவும் கோபமடைந்து, கெட்ட வேலைக்காரன் வாங்கிய கடனை மறுபடியும் கொடுக்கும்வரை அவனைக் காவலில் போட்டான்.

### மற்றவனை மன்னிக்காத வேலைக்காரனை எஜமான் எப்படி தண்டித்தான்?

எஜமான் அவனை சிறையில் அடைத்தான்.

---

## 29:09

இதேபோல் நீங்களும் மற்றவர்களை முழு இருதயத்தோடு மன்னிக்கா விட்டால், பரலோகத்தில் இருக்கிற என் தகப்பனும் உங்களுக்கும் இப்படியே செய்வார் என்று இயேசு சொன்னார்.

### மற்றவர்களை நாம் நம்முடைய இருதயத்திலிருந்து மன்னிக்காவிட்டால் தேவன் நம்மை மன்னிப்பாரோ?

இல்லை.

# 30. ஐயாயிரம் பேருக்கு இயேசு உணவு கொடுத்தல்

## 30:01

இயேசு அவருடைய சீஷர்களை, வெவ்வேறு கிராமங்களில் இருக்கும் ஜனங்களுக்கு பிரசங்கிக்கும்படி அனுப்பினார். அவர்கள் அதை முடித்துத் திரும்பி இயேசு இருக்கும் இடத்திற்கு வந்து, தாங்கள் செய்தவைகளை அவருக்கு சொன்னார்கள். பின்பு கொஞ்ச தூரத்தில் இருந்த ஏரிக்கு அந்தப் பக்கத்தில் ஒரு இடத்திற்கு ஓய்வு எடுக்க சீஷர்களை படகில் அழைத்துக் கொண்டு போனார்.

### அப்போஸ்தலர்களை இயேசு எதற்காக கிராமங்களுக்கு அனுப்பினார்?

பிரசங்கம் செய்யவும் போதிக்கவும் அவர்களை அனுப்பினார்.

### எதற்காக இயேசு அப்போஸ்தலர்களை நதிக்கு அப்புறத்தில் கொண்டுபோனார்?

கொஞ்சநேரம் ஓய்வு எடுக்கும்படி அவர்களை அழைத்துக்கொண்டு போனார்.

---

## 30:02

ஆனால் இயேசுவும் அவருடைய சீஷர்களும் படகில் போகிறதைப் பார்த்த ஜனங்கள், அவர்களுக்கு முன்பாக அக்கரையில் சேர ஏரியில் வேகமாக ஓடினார்கள். அதினால் இயேசுவும் அவருடைய சீஷர்களும், அக்கரையில் சேர்ந்தபோது அங்கே அநேக ஜனங்கள் காத்துக் கொண்டிருந்தனர்.

### இயேசுவுக்கும் அவருடைய சீஷர்களுக்கும் தனிமையாய் இருந்து ஓய்வு எடுக்கமுடிந்ததா?

இல்லை. அவர்கள் அக்கறை சேரும்முன்னே அநேகர் அவர்களுக்கு முன்பாக அங்கே ஓடிபோனார்கள்.

---

## 30:03

பெண்களையும் குழந்தைகளையும் தவிர ஏறக்குறைய 5,000 ஆண்கள் அங்கே இருந்தனர். மேய்ப்பன் இல்லாத ஆடுகளைப்போல அந்த ஜனங்கள் இருப்பதை இயேசு பார்த்து, அவர்கள்மேல் மனமிரங்கி, அவர்களுக்கு போதிக்கவும், அவர்களுடைய வியாதிகளை சுகமாக்கவும் செய்தார்.

### அங்கே காத்துக்கொண்டிருந்த ஜனங்களைக் கண்ட இயேசு என்ன சொன்னார்?

அவர் அவர்கள்மேல் மனதுருகினார்.

### இயேசு தம்முடைய மனதுருக்கத்தை அவர்களுக்கு எப்படி காண்பித்தார்?

அவர் ஜனங்களுக்குப் போதிக்கவும், வியாதியாய் இருந்தவர்களை குணமாக்கவும் செய்தார்.

### எத்தனைப் பேர் சாப்பிட்டு திருப்தியடைந்தனர்?

பெண்களும் குழந்தைகளும் சேர்க்காமல் ஐயாயிரம் ஆண்கள்,

---

## 30:04

சாயங்காலம் ஆனபோது, சீஷர்கள் இயேசுவினிடத்தில், நேரமாயிற்று, பக்கத்தில் ஊர்களும் இல்லை, எனவே அவர்கள் சாப்பிடும்படிக்கு, ஏதாவது வாங்கும்படி அவர்களை அனுப்பும்படி கேட்டார்கள்.

### ஏன் சீஷர்கள் ஜனங்களை அனுப்பிவிட மனதாய் இருந்தார்கள்?

மாலை நேரம் மற்றும் ஜனங்கள் சாப்பிடவும் வேண்டும் .

---

## 30:05

ஆனால் இயேசு சீஷர்களிடத்தில், நீங்கள் ஜனங்களுக்கு சாப்பிட ஏதாவது கொடுங்கள் என்றார். அதற்கு அவர்கள், நாங்கள் எப்படி கொடுக்க முடியும்? எங்களிடத்தில் ஐந்து அப்பமும், இரண்டு சிறு மீன்கள் மட்டுமே இருக்கிறது என்றார்கள்.

### சீஷர்களால் ஏன் எல்லோருக்கும் உணவு கொடுக்க முடியாமல் போயிற்று?

அவர்களிடத்தில் ஐந்து அப்பமும், இரண்டு சிறிய மீன்களும் தான் இருந்தது.

---

## 30:06

இயேசு சீஷர்களிடத்தில், ஜனங்களை ஐம்பது, ஐம்பது பேராக, புல்லின்மேல் உட்காரவைக்கும்படி சொன்னார்.

## 30:07

பின்பு இயேசு அந்த ஐந்து அப்பத்தையும், இரண்டு மீன்களையும் எடுத்து, வானத்தைப் பார்த்து, அந்த உணவிற்காக தேவனுக்கு நன்றி சொன்னார்.

### ஐந்து அப்பத்தையும் இரண்டு மீன்களையும் வைத்து இயேசு என்ன செய்தார்?

அவர் அதை எடுத்து தேவனுக்கு ஸ்தோத்திரம் செய்து, பிட்டு, சீஷர்களிடத்தில் கொடுத்து, ஜனங்களுக்குப் பரிமாறும்படி சொன்னார்.

---

## 30:08

பின்பு இயேசு அந்த அப்பத்தையும், மீனையும் பியித்து, சீஷர்களிடம் கொடுத்து, ஜனங்களுக்கு பரிமாறும்படி சொன்னார். அவர்கள் கொடுத்துக் கொண்டே இருந்தார்கள். உணவு தீரவே இல்லை. எல்லோரும் திருப்தியாக சாப்பிட்டார்கள்.

### ஐந்து அப்பத்தையும் இரண்டு மீன்களையும் வைத்து இயேசு என்ன செய்தார்?

அவர் அதை எடுத்து தேவனுக்கு ஸ்தோத்திரம் செய்து, பிட்டு, சீஷர்களிடத்தில் கொடுத்து, ஜனங்களுக்குப் பரிமாறும்படி சொன்னார்.

---

## 30:09

அதற்கு பின்பு, எல்லோரும் சாப்பிட்டப்பின் மீதியாக, பன்னிரண்டு கூடைகள் நிறைய எடுத்தார்கள். அது ஐந்து அப்பமும், இரண்டு மீன்களிலிருந்து மீதியானது.

### எல்லோரும் சாப்பிட்டு மீதியாய் எத்தனைக் கூடைகள் இருந்தது?

நிறைந்த பன்னிரண்டு கூடைகள்.

# 31. இயேசு தண்ணீரின் மேல் நடப்பது

## 31:01

ஐயாயிரம் பேருக்கு உணவு கொடுத்த பின்பு, அவர்களை அவரவர் வீட்டிற்கு அனுப்பிவிட்டு, சீஷர்களைப் பார்த்து, அக்கறைக்கு போக படகை ஒட்டுங்கள் என்று சொன்னார், சீஷர்கள் படகில் ஏறி, போனார்கள். அதற்கு பின்பு இயேசு, ஜெபிக்கும்படி மலைக்குப் போனார். அங்கே தன்னந்தனியாக இரவெல்லாம் ஜெபித்தார்.

### இயேசு ஜனங்களை போகும்படி அனுப்பிவிட்ட பின்பு, சீஷர்களிடம் என்ன சொன்னார்?

அவர் அவர்களை படகில் ஏறி அக்கரைக்குப் போகும்படி அனுப்பிவிட்டார்.

### சீஷர்களை படகில் அப்புறம்போக அனுப்பிவிட்டு, இயேசு என்ன செய்தார்?

அவர் ஜெபிக்கும்படி மலைக்குப் போனார்.

---

## 31:02

அந்த சமயத்தில் சீஷர்கள், படகை ஒட்டிக் கொண்டிருந்தனர். ஆனால் காற்றும், புயலும், அவர்களுக்கு எதிராக பலமாய் இருந்ததினால், படகை ஓட்ட மிகவும் கஷ்டமாக இருந்தது. நடு இரவாகியும், பாதிதூரம் தான் போயிருந்தார்கள்.

### இரவில் சீஷர்களுக்கு வந்த சோதனை என்ன?

காற்று அவர்களுக்கு எதிராக வீசினதினால், அவர்களால் பகுதி தூரம் மட்டுமே போகமுடிந்தது.

---

## 31:03

அப்போது இயேசு ஜெபித்து முடித்து, சீஷர்களை சந்திக்கும்படி, தண்ணீரின்மேல் நடந்து அவர்கள் இருக்கும் படகை நோக்கி வந்தார்.

### இயேசு எப்படி படகை அடைந்தார்?

அவர் தண்ணீரின்மேல் நடந்து போனார்.

---

## 31:04

சீஷர்கள் அவரைப் பார்த்து பூதம் என்று நினைத்து, மிகவும் பயந்தார்கள். இயேசு அவர்கள் பயந்ததை அறிந்து, பயப்படாதிருங்கள். நான் தான் என்று சொன்னார்.

### இயேசுவை முதலில் சீஷர்கள் பார்த்து என்ன செய்தனர்?

அவரை ஆவி என்று அவர்கள் நினைத்து மிகவும் பயந்தார்கள்.

### அவர்களை சமாதானப்படுத்த இயேசு என்ன செய்தார்?

பயபடாதிருங்கள் நான்தான் என்றார்.

---

## 31:05

அப்போது பேதுரு இயேசுவைப் பார்த்து, ஆண்டவரே, நீர்தான் என்றால், நான் தண்ணீரின் மேல் நடந்து உம்மிடத்தில் வர கட்டளைகொடும் என்றான். இயேசு, பேதுருவைப் பார்த்து, வா! என்றார்.

### இயேசு ஏன் பேதுருவிடம் தண்ணீரின்மேல் நடந்து வரும்படிச் சொன்னார்?

ஏனெனில் அதைச் செய்யும்படி பேதுரு அவரிடத்தில் கேட்டுக்கொண்டான்.

---

## 31:06

எனவே, பேதுரு, படகில் இருந்து இறங்கி, தரையில் நடப்பதுபோல, தண்ணீரின் மேல் நடந்து இயேசுவிடம் போக ஆரம்பித்தான். கொஞ்ச தூரம் நடந்தவுடன், இயேசுவை பார்த்துக்கொண்டிருந்த அவன் கண்களை, அலையின் மேலும், புயலின் மேலும் திருப்பினான்.

### பேதுரு இயேசுவினிடத்திலிருந்து தன் கண்களைத் திருப்பி, அவன் எதை பார்க்கத் துவங்கினான்?

அவன் அங்கே அடித்துக்கொண்டிருந்த அலைகளையும் கடும் காற்றையும் கவனித்தான்.

---

## 31:07

பின்பு, பேதுரு மிகவும் பயந்து, தண்ணீரில் மூழ்க ஆரம்பித்தான். ஆண்டவரே என்னைக் காப்பாற்றும் என்று கதறினான். இயேசு அவனைப் பிடித்துத் தூக்கி விட்டார். பின்பு அவனைப் பார்த்து, உனக்கு கொஞ்ச விசுவாசம் தான் இருக்கிறது! உன்னைக் காப்பாற்ற நீ ஏன் என்னை விசுவாசிக்கவி ல்லை? என்று கேட்டார்.

### அலைகளையும் கடும் காற்றையும் கண்டு பயந்த பேதுருவுக்கு என்ன நடந்தது?

அவன் தண்ணீருக்குள் மூழ்க ஆரம்பித்தான்.

### பேதுரு உதவிக்காய் இயேசுவை கூப்பிட்டபோது அவர் என்ன செய்தார்?

இயேசு கையை அவனுடைய கையைப்பிடித்து மேலே இழுத்தார்.

### இயேசு என்ன சொல்லி பேதுருவை கடிந்துகொண்டார்?

கொஞ்சம் விசுவாசம் உள்ளவனே, நீ ஏன் சந்தேகபட்டாய்?

---

## 31:08

இயேசுவும் பேதுருவும் படகில் ஏறினவுடனே, அலையும், புயலும் அமைதியாயிற்று. தண்ணீரும் அமைதியாயிற்று. அப்போது சீஷர்கள் அவரை பணிந்து, வணங்கி, நீர் உண்மையாகவே தேவனுடைய குமாரன் தான் என்றார்கள்.

### இயேசு படகில் ஏறினவுடனே என்ன சம்பவித்தது?

உடனே இரைச்சல் நின்று காற்றும் கடலும் அமைதலாயிற்று.

### இந்த அற்புதத்தைப் பார்த்து சீஷர்கள் என்ன சொன்னார்கள்?

அவர்கள் இயேசுவை வணங்கி, நீர் உண்மையாகவே தேவனுடைய குமாரன் தான் என்றார்கள்.

# 32. பிசாசு பிடித்திருந்தவனையும் வியாதியாய் இருந்த ஒரு இயேசு குணமாக்குதல்

## 32:01

இயேசுவும் அவருடைய சீஷர்களும், படகில் கேசரநேத் என்னும் ஊரில் வாழும் ஜனங்களிடத்திற்கு போனார்கள். அங்கே அவர்கள் சேர்ந்தபோது, படகில் இருந்து இறங்கினார்கள்.

---

## 32:02

அங்கே ஒருவன் பிசாசு பிடித்திருந்தவனாயிருந்தான்.

### கிணைசரேத்து ஜனங்கள் வசிக்கும் இடத்திற்கு இயேசு வந்தபோது என்ன சம்பவித்தது?

பிசாசு பிடித்திருந்த ஒரு மனிதன் வருடத்தில் ஓடி வந்தான்.

---

## 32:03

ஒருவரும் அடக்கமுடியாத அளவு பலமுள்ளவனாயிருந்தான். சில சமயம் ஜனங்கள் சங்கிலிகளால் அவன் கை, கால்களைக் கட்டியும் அவைகளை அவன் .

### அந்த பிசாசு அவனை என்ன செய்தது?

அவனுக்கு பிசாசு பிடித்திருந்ததினாலே, அவன் சங்கிலிகளை முறித்து, குகைகளிலே வசித்து, உடை எதுவும் அணியாமல் இரவும் பகலும் சத்தமிட்டுக்கொண்டு, கற்களினாலே தன்னை காயப்படுத்திக்கொண்டிருந்தான்.

---

## 32:04

அவன் அங்கே இருந்த கல்லறையில் வாழ்ந்து வந்தான். அவன் இரவும் பகலும் மிகவும் சத்தமிட்டு, துணி எதுவும் போடாமல், சில நேரங்களில் கற்களால் அவனைக் காயபடுத்திக் கொள்வான்.

### அந்த பிசாசு அவனை என்ன செய்தது?

அவனுக்கு பிசாசு பிடித்திருந்ததினாலே, அவன் சங்கிலிகளை முறித்து, குகைகளிலே வசித்து, உடை எதுவும் அணியாமல் இரவும் பகலும் சத்தமிட்டுக்கொண்டு, கற்களினாலே தன்னை காயப்படுத்திக்கொண்டிருந்தான்.

---

## 32:05

அந்த மனிதன், இயேசுவினிடத்தில் ஓடி வந்து, அவர் காலில் விழுந்தான். பின்பு இயேசு அவனுக்குள் இருந்த பிசாசை, அவனை விட்டு வெளியே போ! என்று சொன்னார்.

---

## 32:06

அந்த பிசாசு, மிகவும் சத்தமாய், உன்னதமான தேவனுடைய குமாரனே! உமக்கும் எனக்கும் என்ன? என்னை ஒன்றும் செய்ய வேண்டாம் என்றது! இயேசு அந்த பிசாசை பார்த்து, உன்னுடைய பெயர் என்ன? என்று கேட்டார். நாங்கள் நிறையப்பேர் இருக்கிறோம் அதினால் லேகியோன் என்றது. [லேகியன் என்றால் ரோமாவின் இராணுவத்தின் அநேக ஆயிர யுத்த வீரர்கள் என்பதாகும்.]

### அந்த அசுத்த ஆவியின் பெயர் என்ன?

அதின் பெயர் லேகியோன்.

### லேகியோன் என்றால் அர்த்தம் என்ன?

ஒரு மனிதனுக்குள் அநேக அசுத்த ஆவிகள் இருந்தால் அதின் பெயர் லேகியோன் என்று அர்த்தம்.

---

## 32:07

பிசாசுகள் இயேசுவிடம் அவைகளை அந்த எல்லையை விட்டுத் துரத்த வேண்டாம்! என்று கெஞ்சின. பக்கத்தில் மலையில் பன்றிகள் கூட்டமாக மேய்ந்து கொண்டிருந்தன, அந்த பன்றிக் கூட்டத்திற்குள் அவைகளை அனுப்பும்படி இயேசுவிடம் கெஞ்சின, அவர் சரி என்று போக சொன்னார்.

### அந்த மனிதனை விட்டு அந்த பிசாசுகள் போகும்போது தங்களை எங்கே அனுப்பிம்படி இயேசுவினிடத்தில் கேட்டுக்கொண்டது?

கூட்டமாய் மேந்துகொண்டிருந்த 2000 பன்றிகளுக்குள் அனுப்பும்படி கேட்டுக்கொண்டது.

---

## 32:08

எனவே அந்த பிசாசுகள், அவனை விட்டு, அந்த பன்றிக் கூட்டத்திற்குள் புகுந்தன. அந்த மந்தையில் இருந்த 2,000 பன்றிகள் வேகமாக ஓடி, கடலில் விழுந்து செத்துப்போயின.

### அந்த மனிதனை விட்டு அந்த பிசாசுகள் போகும்போது தங்களை எங்கே அனுப்பிம்படி இயேசுவினிடத்தில் கேட்டுக்கொண்டது?

கூட்டமாய் மேந்துகொண்டிருந்த 2000 பன்றிகளுக்குள் அனுப்பும்படி கேட்டுக்கொண்டது.

### பிசாசுகள் பன்றிகளுக்குள் புகுந்தவுடனே என்ன ஆயிற்று

அவைகள் மேட்டிலிருந்து ஓடி கடலிலே மூழ்கிற்று.

---

## 32:09

பன்றிகளை மேய்த்துக் கொண்டிருந்தவர்கள், நடந்ததைப் பார்த்து, ஊருக்குள் ஓடிப்போய், இயேசு செய்ததை எல்லோருக்கும் சொன்னார்கள். அந்த ஊர் ஜனங்கள் வந்து பிசாசு பிடித்திருந்தவன் உடை அணிந்து, அமைதியாக எல்லோரையும்போல இருப்பதைப் பார்த்தார்கள்.

### பிசாசு அவனைவிட்டு போனபின்பு அவன் எப்படியிருந்தான்?

அவன் உடை அணிந்து, அமைதியாக உட்கார்ந்துகொண்டு, எல்லா மனிதர்களைப்போல இருந்தான்.

---

## 32:10

அந்த ஜனங்கள் மிகவும் பயந்து, இயேசுவை அவர்களுடைய ஊரை விட்டுப் போகும்படி சொன்னார்கள். உடனே இயேசு படகில் ஏறினார். பிசாசு பிடித்திருந்தவன் இயேசுவோடுகூட போக அவரிடத்தில் கெஞ்சினான்.

### அந்த மனிதன் சுகம் பெற்றதையும், பன்றிகள் செத்துப்போனதையும் அறிந்த அந்த ஊர் ஜனங்கள் என்ன செய்தனர்?

அவர்கள் மிகவும் பயந்து, இயேசுவை அந்த ஊரைவிட்டுப் போகும்படி சொன்னார்கள்.

---

## 32:11

ஆனால், இயேசு அவனிடத்தில், இல்லை. நீ உன்னுடைய வீட்டிக்குப் போய், தேவன் உனக்குக் கிருபையாய் இறங்கி செய்தவைகளை எல்லோருக்கும் சொல்லும்படி சொன்னார்.

### சுகம் பெற்றவன் தன்னோடு வராமல் என்ன செய்யும்படி இயேசு சொன்னார்?

இயேசு அவனிடத்தில் நீ போய், உன்னுடைய நண்பர்களுக்கும், உன்னுடைய குடும்பத்திற்கும் தேவன் உனக்கு செய்தவைகளை அறிவி என்றார்.

---

## 32:12

எனவே அவன் போய் எல்லோருக்கும் இயேசு செய்தவைகளை சொன்னான். அவனுடைய கதையைக் கேட்ட எல்லோரும் ஆச்சரியப்பட்டார்கள்.

---

## 32:13

இயேசு கடலின் அக்கரையில் சேர்ந்தபிறகு, திரளான ஜனங்கள் அவரைச் சுற்றி முன்னும் பின்னும் நெருக்கினார்கள். அந்த கூட்டத்தில், பன்னிரண்டு வருடங்களாக பெரும்பாடு உள்ள ஒரு பெண், தன்னுடைய எல்லா பணத்தையும் மருத்துவர்கள் குணமாக்குவார்கள் என்று செலவழித்தும், நிலைமை மிகவும் மோசமான நிலையில் இருந்தாள்.

## 32:14

இயேசு அநேக வியாதியஸ்தர்களை குணமாக்கினார் என்று கேள்விப்பட்டு, நான் எப்படியாகிலும், அவரைத் தொட்டால் என் வியாதி சுகமாகும் என்று நினைத்து, இயேசுவுக்கு பின்னாடி வந்து, அவருடைய துணியைத் தொட்டாள். அவரைத் தொட்டவுடனே, அவள் சுகமானாள்.

### ஏன் இரத்த சோகை உள்ள பெண் இயேசுவினிடத்தில் வந்தாள்?

அவள், நான் இயேசுவின் உடையைத் தொட்டால் கூட சுகமாவேன் என்று நினைத்தாள்.

### இயேசுவின் உடையை அவள் தொட்டதும் அவளுக்கு என்ன ஆயிற்று?

அவளுடைய உதிரம் நின்றுபோயிற்று.

---

## 32:15

உடனே, இயேசு, தம்மிடத்தில் இருந்து வல்லமை புறப்பட்டதை அறிந்து, திரும்பி, என்னைத் தொட்டது யார்? என்று கேட்டார். சீஷர்கள் இயேசுவினிடத்தில், இவ்வளவு நெருக்கமான கூட்டத்தில் என்னைத் தொட்டது யார்? என்று ஏன் கேட்கிறீர் என்று கேட்டார்கள்.

### தன்னை யாரோ ஒருவர் தொட்டதை இயேசு எப்படி அறிந்தார்?

அவரிடத்திலிருந்து வல்லமை புறப்பட்டதினால் அவர் அறிந்தார்.

---

## 32:16

அந்தப் பெண் இயேசுவின் காலில் விழுந்து, மிகவும் நடுக்கத்தோடு, அவள் செய்ததையும், அதினால் நடந்ததையும் இயேசுவிடம் சொன்னாள். உன்னுடைய விசுவாசம் உன்னை விடுவித்தது. நீ சமாதானமாய் போகலாம் என்று இயேசு அவளிடத்தில் சொன்னார்.

## இயேசுவின் காலில் விழுந்த பெண்ணைப் பார்த்து இயேசு சொன்னது என்ன?

உன்னுடைய விசுவாசமே உன்னை இரட்சித்தது. சமாதானத்தோடே போ.

# 33. விவசாயம் செய்பவனின் கதை

## 33:01

ஒருநாள் இயேசு கடற்கரையில் இருந்தார். அங்கே அநேக ஜனங்களுக்கு பிரசங்கம் பண்ணிக் கொண்டிருந்தார். அநேகர் அவர் சொல்வதைக் கேட்க வந்ததினால், அவர் நீரின்மேல் இருந்த ஒரு படகில் ஏறி ஜனங்களுக்கு பிரசங்கம் செய்தார்.

---

## 33:02

அப்போது இந்தக் கதையை இயேசு சொன்னார். ஒருநாள் விவசாயி விதை போனான். கையில் அவன் விதையை தூவினான், அப்போது சில விதைகள் வழியில் விழுந்தது. ஆனால் பறவைகள் வந்து அவைகளைத் தின்று போட்டது.

### வழியருகே விழுந்த விதை என்ன ஆயிற்று?

பறவைகள் வந்து அதை தின்றுபோட்டது.

---

## 33:03

சில விதைகள் கற்பாறையின் மேல் விழுந்தது. அந்த விதைகள் சீக்கிரத்தில் முளைத்தது, ஆனால் அதின் வேர் ஆழமாய் இல்லாததினால், சூரிய ஒளியின் சூட்டில் கருகி, ஒன்றும் இல்லாமற் போயிற்று.

### கற்பாறையின் நிலத்தில் விழுந்த விதை என்ன ஆயிற்று?

அது சீக்கிரமாய் முளைத்தது, ஆனால் வெயில் அதிகமானபோது அது காய்ந்துபோயிற்று.

---

## 33:04

மேலும் சில விதைகள் முள்ளுள்ள இடத்தில் விழுந்தது. அந்த விதைகள் வளர ஆரம்பித்தது, ஆனால் முற்கள் அவைகளை நெருக்கிப் போட்டதினால், அவைகளால் பலன் ஒன்றும் கொடுக்க முடியாமல் போனது.

## முற்கலுள்ள பகுதிகளில் விழுந்த விதைகள் என்ன ஆயிற்று?

அது வளர ஆரம்பித்தது, ஆனால் முற்கள் அதை நெருக்கிப்போட்டது.

---

## 33:05

சில விதைகள் நல்ல நிலத்தில் விழுந்தது. அவைகள் வளர்ந்து, 30, 60 மற்றும் 100 ஆக பலன் தந்தது. எனவே தேவனைப் பின்பற்ற விரும்புகிறவர்கள், நான் சொல்வதைக் கேட்கட்டும் என்றார்.

## நல்ல நிலத்தில் விழுந்த விதை என்ன ஆயிற்று?

அந்த விதையை விதைத்ததை விட வளர்ந்து 30, 60, மற்றும் 100 ஆக பலன் தந்தது.

---

## 33:06

இந்தக் கதை சீஷர்களுக்கு புரியாததினால், இயேசு அவர்களுக்கு தெளிவாக சொன்னார். விதை என்பது, தேவனுடைய வார்த்தை. வழி என்பது ஒருவன், தேவனுடைய வசனத்தைக் கேட்டும் புரியாதவன். பின்பு பிசாசு அந்த வசனத்தை அவனிடத்திலிருந்து எடுத்துப்போடுவான். அவ்வளவுதான். அதற்குப் பின்பு, அவனுக்கு வசனம் புரியாதபடிக்கு பிசாசு செய்வான்.

## அந்த கதையின் அர்த்தம் சீஷர்களுக்கு புரிந்ததா?

இல்லை. அவர்கள் குழம்பிப்போயினர்.

## அந்த கதையில் விதை எதைக் குறிக்கிறது?

தேவனுடைய வார்த்தையைக் குறிக்கிறது.

## வழி எதைக் குறிக்கிறது?

ஒருவன் தேவனுடைய வசனத்தைக் கேட்டும், அதை புரிந்துகொள்ளாமல், பிசாசு வந்து அதை அவனிடத்திலிருந்து எடுத்துப்போடுவான்.,

---

## 33:07

கற்பாறை என்பது, ஒருவன் தேவனுடைய வசனத்தை சந்தோஷமாய் ஏற்றுக் கொள்பவன். ஆனால் சில சோதனைகளும், மனிதர்களால் உபத்திரவமும் வந்தவுடனே

தேவனுடைய வழியில் இருந்து விழுவான். அவ்வளவுதான், தேவனை நம்புவதை நிறுத்தி விடுவான்.

### கற்பாறை நிலம் எதைக் குறிக்கிறது?

ஒருவன் வசனத்தை கேட்கிறவன் அதை சந்தோஷமாய் ஏற்றுக்கொள்கிறவன், ஆனால் சில சோதனைகள் மற்றும் உபத்திரவங்கள் வந்தவுடனே விழுந்து போகிறவன்.

---

## 33:08

முள்ளுள்ள இடம் என்பது, தேவனுடைய வசனத்தை ஒருவன் கேட்டு, அநேகக் காரியங்களைப் பற்றி கவலைப்பட்டு, நிறைய பணம் சம்பாதிக்க உழைத்து, அநேக காரியங்கள் செய்ய முயற்சி செய்து, பின்பு அவனால் தேவனை நேசிக்க முடியாமல், தேவனுடைய வசனத்திலிருந்து அவன் கற்றுக் கொண்டவைகள் அவனை நடத்தாமல், கோதுமையின் பதரைப்போல் பலன் ஒன்றும் கொடுக்காமல் போவான்.

### முற்கலுள்ள நிலம் எதைக் குறிக்கிறது?

வசனத்தைக் கேட்கிறவன், ஆனால் கொஞ்சகாலம் ஆனவுடனே, உலக இன்பங்களும், ஆஸ்தியும், செல்வமும் பெருகினவுடே தேவனுடைய அன்பிலிருந்து விலகிப்போகிறவன்.

---

## 33:09

ஆனால் நல்ல நிலம் என்பது, ஒருவன் தேவனுடைய வசனத்தைக் கேட்டு, அதை நம்பி, கனி கொடுப்பவன்.

### நல்ல நிலம் எதைக் குறிக்கிறது?

ஒருவன் தேவனுடைய வசனத்தைக் கேட்டு, அதை விசுவாசித்து, பலன் கொடுக்கிறவன்.

# 34. இயேசு சொன்ன மற்ற கதைகள்

## 34:01

தேவனுடைய ராஜ்யத்தைப் பற்றி இயேசு பல கதைகளை சொன்னார். உதாரணமாக, அவர் சொன்னார், தேவனுடைய ராஜ்யம் கடுகு விதையை ஒருவன் அவனுடைய நிலத்தில் விதைப்பது போன்றது. கடுகு விதை எல்லா விதைகளிலும் சின்னது.

### கடுகு விதை எப்படி மற்ற விதைகளுக்கு ஒப்பிடப்படுகிறது?

அது எல்லா விதைகளிலும் சிறியதாய் இருக்கிறது.

### பெருமையாய் இருக்கிறவர்களுக்கு தேவன் என்ன செய்கிறார்?

அவர்களை சிறுமைப்படுத்துவார்.

---

## 34:02

ஆனால் கடுகு விதை வளரும் போது, தோட்டத்தில் உள்ள எல்லா மரங்களிலும் பெரியதாகி, பறவைகள் வந்து, அதின் கிளைகளில் கூடு கட்டும் அளவு பெரிதாகும்.

### கடுகு விதை வளரும்போது எப்படி இருக்கும்?

அது மற்ற எல்லா செடிகளிலும் மிகவும் பெரியதாய் வளரும்.

---

## 34:03

இயேசு சொன்ன வேறு கதை, அதாவது, தேவனுடைய ராஜ்யம் புளித்த மாவைப் போன்றது, அதை ஒரு பெண் எடுத்து அது புளிக்கும்வரை மூடி வைப்பதற்கு சமம்.

### அப்பத்தின் மாவையும் புளித்த மாவையும் ஒன்றாக சேர்த்தால் என்ன ஆகும்?

அந்த மாவு பொங்கி எல்லா இடமும் பரவும்.

---

### 34:04

தேவனுடைய ராஜ்யம், ஒரு புதையலை நிலத்தில் பதுக்கி வைப்பதை போன்றது. வேறொருவன் அதைப் பார்த்து, அவன் அதை அதிகமாய் விரும்பி, வேறொரு இடத்தில் அதை பதுக்கி வைப்பான். அதினால் மிகவும் சந்தோஷப்பட்டு, தன்னிடத்தில் உள்ள எல்லாவற்றையும் விற்று, புதையல் இருக்கும் நிலத்தை வாங்குவான்.

## நிலத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த பொக்கிஷம் இருப்பதை ஒருவன் அறிந்தால் அவன் என்ன செய்வான்?

தன்னிடத்தில் உள்ள எல்லாவற்றையும் விற்று அந்த நிலத்தை வாங்குவான்.

---

### 34:05

தேவனுடைய ராஜ்யம், விலையேறப்பெற்ற முத்தைப் போன்றது. அதை வியாபாரம் செய்பவன் பார்த்து, தன்னிடத்தில் உள்ள எல்லாவற்றையும் விற்று, அந்த முத்தை வாங்குவது போன்றது.,

## முத்து வியாபாரம் செய்கிறவன் நல்ல முத்தை கண்டு என்ன செய்வான்?

அவன் தன்னிடத்தில் உள்ள எல்லாவற்றையும் விற்று அதை வாங்குவான்.

---

### 34:06

சில மனிதர்கள், தாங்கள் நல்ல காரியங்களை செய்வதினால் இயேசு அவர்களை ஏற்றுக்கொள்வார் என்று நினைத்தார்கள். அவர்கள் நன்மை செய்யாதவர்களை வெறுத்தார்கள், எனவே இயேசு அவர்களுக்கு ஒரு கதையை சொன்னார். இரண்டு பேர் இருந்தார்கள். அவர்கள் இருவரும் ஜெபிக்கும்படி, தேவனுடைய ஆலயத்திற்குப் போனார்கள். அதில் ஒருவன் வரி வசூலிப்பவன், மற்றவன் மதத் தலைவன்.

## ஜெப ஆலயத்தில் ஜெபித்த இரண்டு பேரின் கதையை இயேசு யாரிடம் சொன்னார்?

தங்களுடைய நல்ல செய்கையினால் மற்றவர்களை வெறுத்த ஜனங்களுக்கு தான் சொன்னார்.

---

## 34:07

திருடுகிற, அநியாயம் செய்கிற, விபச்சாரம் செய்கிற, மற்றும் இங்கே இருக்கும் மற்ற வரி வசூலிப்பவர்களைப் போல, நான் பாவி இல்லை. எனவே உமக்கு நன்றி, ஆண்டவரே, என்று மதத் தலைவன் ஜெபித்தான்.

### மதத்தலைவன் ஏன் தேவனுக்கு நன்றி சொன்னான்?

மற்ற பாவிகளைப் போல அவன் இல்லாததினால் அவன் தேவனுக்கு நன்றி சொன்னான்.

---

## 34:08

உதாணரமாக, வாரத்தில் இரண்டு முறை உபவாசம் எடுக்கிறேன், என்னுடைய சம்பளம் மற்றும் எனக்கு வரும் எல்லாவற்றிலும் பத்து சதவீதம் உமக்கு தசமபாகம் தருகிறேன் என்றான்.

### மதத்தலைவன் ஏன் தன்னை நீதிமானாக நினைத்தான்?

வாரத்தில் இரண்டு முறை உபவாசம் செய்து, தனக்கு உண்டான பணத்திலும் எல்லாவற்றிலும் தசமபாகம் செலுத்தினதினால் அப்படி நினைத்தான்.

---

## 34:09

ஆனால், அந்த வரி வசூலிப்பவன், மதத் தலைவனைவிட தூரத்தில் நின்று, வானத்தைப் பார்க்க மனதில்லாமல், தன்னுடைய நெஞ்சில் அடித்து, தேவனே தயவாய் எனக்கு இறங்கும், நான் பாவியான மனுஷன் என்றான்.

### வரி வசூலிப்பவன் என்னவென்று தேவனிடத்தில் கெஞ்சினான்?

அவன் பாவியாய் இருப்பதினால் அவன்மேல் இரக்கமாய் இருக்கும்படி கேட்டுக்கொண்டான்.

---

## 34:10

பின்பு இயேசு, உங்களுக்கு ஒரு உண்மையை சொல்லுகிறேன், மதத் தலைவனின் ஜெபத்தை அல்ல, அந்த வரி வசூலிப்பவனின் ஜெபத்தையே தேவன் கேட்டு, அவனை

நீதிமானாக்கினார்.தேவன் பெருமையாய் நினைக்கிறவர்களை ஏற்றுக்கொள்ள மாட்டார், ஆனால் தாழ்மையாய் இருக்கிறவர்களை ஏற்றுக்கொள்வார் என்றார்.

## இவர்களில் எவன் நீதிமானாக எண்ணப்பட்டான்?

வரிவசூலிப்பவன்.

## தன்னை தாழ்த்துகிற யாவருக்கும் தேவன் என்ன செய்வார்?

அவர்களை அவர் உயர்த்துவார்.

# 35. கருணையுள்ள தகப்பனின் கதை

## 35:01

ஒருநாள் இயேசுவிடம் அவருடைய பிரசங்கத்தைக் கேட்கும்படி வந்த அநேகரிடத்தில் அவர் பேசிக் கொண்டிருந்தார். அவர்களில் வரி வசூலிப்பவர்களும், மோசேயின் நியாப்பிரமாணத்திற்கு கீழ்ப்படியாதவர்களும் இருந்தார்கள்.

---

## 35:02

இயேசு அவர்களோடு நண்பர்களிடத்தில் பேசுவது போல பேசினதை சில மதத் தலைவர்கள் பார்த்ததும், மற்றவர்களிடத்தில், அவர் தவறு செய்கிறார் என்று சொல்ல ஆரம்பித்தார்கள். இயேசு அதைக் கேட்டு, அவர்களுக்கு ஒரு கதையை சொன்னார்.

### மதத்தலைவர்கள் ஏன் இயேசுவை குற்றம் சாட்டினர்?

ஏனெனில் இயேசு பாவிகளையும், வரி வசூலிப்பவர்களையும் நண்பர்களைப்போல நடத்தினார்.

---

## 35:03

ஒரு மனிதனுக்கு இரண்டு மகன்கள் இருந்தனர். அவர்களில் இளையவன் தன் தகப்பனிடத்தில், என்னுடைய சொத்தின் பாகத்தை இப்போது தரவேண்டும் என்று கேட்டான். எனவே தகப்பன் அவர்கள் இருவரின் சொத்து பாகத்தையும் பிரித்தார்.

### இளையகுமாரன் தன் தகப்பனிடம் என்ன வேண்டும் என்று கேட்டான்?

அவனுடைய சொத்தின் பாகத்தை கேட்டான்.

---

## 35:04

உடனே அந்த இளைய மகன் தனக்கு வரும் சொத்தின் எல்லா பாகத்தையும் எடுத்துக் கொண்டு, தூர தேசத்திற்கு போய், தவறான வழியில் அவனுடைய எல்லா பணத்தையும் செலவு செய்தான்.

## இளையகுமாரன் தன்னுடைய சொத்தை வைத்து என்ன செய்தான்?

பாவத்தில் வாழ்ந்து அதை வீனாக்கினான்.

---

## 35:05

அதற்கு பின்பு, அந்த இளைய மகன் இருந்த ஊரில் பஞ்சம் உண்டானதினால், சாப்பாடு வாங்ககூட பணம் இல்லாததினால், பன்றி மேய்க்கும் வேலை மட்டும் கிடைத்ததினால், அந்த வேலை செய்து, அவனுக்கு மிகவும் பசி உண்டானதில், அந்த பன்றியின் உணவை சாப்பிட விரும்பினான்.

## இளையகுமாரன் சென்ற தேசத்தில் என்னவாயிற்று?

கடிமையான பஞ்சம் உண்டாயிற்று.

## அந்த பஞ்சகாலத்தில் வாழும்படி இளையக்குமாரன் என்ன செய்தான்?

பன்றிகளை மேய்க்கும் வேலை செய்தான்.

---

## 35:06

கடைசியாக, இளைய மகன் அவனுக்குள், நான் இங்கு என்ன செய்கிறேன்? என்னுடைய தகப்பனிடம் வேலை செய்பவர்களுக்குகூட சாப்பிட நிறைய உணவு இருக்கிறது. நான் ஏன் உணவுக்காக இங்கு கஷ்டப்பட வேண்டும். நான் திரும்ப என் தகப்பனிடத்தில் போய், அவர் வேலைக்காரர்களில் ஒருவனாக இருப்பேன் என்று சொல்லிக்கொண்டான்.

## இளையகுமாரன் எதினால் வீட்டிற்கு போக முடிவு செய்தான்?

அவனை விட தகப்பனுடைய வீட்டு வேலைக்காரர்கள் கூட நன்றாய் வாழ்வதையும், சாப்பிடுவதற்கு குறையில்லை என்பதையும் உணர்ந்தான்.

## இளையக்குமாரன் தன் தகப்பனிடத்தில் என்ன கேட்கும்படி நினைத்தான்?

உம்முடைய வேலைகாரர்களில் ஒருவனாக இருக்கிறேன் என்று கேட்கும்படி நினைத்தான்.

---

## 35:07

பின்பு தன் தகப்பனின் வீட்டிற்கு புறப்பட்டான். அவன் தூரத்தில் வந்துகொண்டிருக்கும்போது, அவனுடைய தகப்பன் அவனைப் பார்த்து, அவன்மேல் மனதுருகி, அவனிடத்தில் ஓடி, அவனைக் கட்டிப்பிடித்து, முத்தமிட்டான்.

### இளையக்குமாரன் வருகிறதைப் பார்த்த தகப்பன் என்ன செய்தான்?

அவன் ஓடிப்போய், குமாரனை கட்டியணைத்து, அவனை முத்தமிட்டான்.

---

## 35:08

மகன் அப்பாவைப் பார்த்து, நான் உமக்கும், தேவனுக்கும் விரோதமாய் பாவம் செய்தேன். உம்முடைய மகன் என்று சொல்ல எனக்குத் தகுதியில்லை என்றான்.

### இளையகுமாரன் தன் தகப்பனை சந்தித்ததும் என்ன சொன்னான்?

தகப்பனே, நான் உமக்கும் தேவனுக்கும் விரோதமாய் பாவம் செய்தேன். நான் உம்முடைய குமாரனாய் இருப்பதற்கு பாத்திரவான் இல்லை என்றான்.

---

## 35:09

ஆனால் தகப்பன் தன் வேலைக்கரரில் ஒருவனிடத்தில், சீக்கிரமாய் போய், நல்ல துணியை எடுத்துக் கொண்டுவந்து என் மகனுக்கு போட்டுவிடு! அவனுடைய விரலில் மோதிரத்தையும், அவனுடைய கால்களில் செருப்பையும் போடு என்றான். மேலும் கொளுத்த கன்றை அடித்து, விருந்து செய். ஏனென்றால், என்னுடைய மகன் மரித்தான், இப்போது உயிரோடு இருக்கிறான்! அவன் காணமற்போனான், இப்போது நமக்கு கிடைத்தான்! என்றான்.

### இளையகுமாரனின் வார்த்தைகளைக் கேட்ட தகப்பன் என்ன சொன்னான்?

அவனுக்கு ஆடை அணிவித்து, மோதிரம் போட்டு, பாதரட்சைகளையும் கொடுத்து, அவன் திரும்பி வந்ததற்காக விருந்துபண்ணி கொண்டாடினான்.

---

## 35:10

எனவே அவர்கள் சந்தோஷமாய் இருந்தார்கள். அப்போது வயலில் வேலை செய்து கொண்டிருந்த மூத்த மகன் வந்து, அங்கே கேட்ட நடனம் மற்றும் இசையின் சத்தத்தைக்கேட்டு, என்ன நடக்கிறது என்று அவனுக்கு புரியவில்லை.

---

## 35:11

அவர்கள் இளைய மகன் திரும்பி வந்ததினால் சந்தோஷமாய் இருக்கிறதை அறிந்த மூத்த மகன் மிகவும் கோபமடைந்து, வீட்டிற்க்குள் போகவில்லை. அவனுடைய தகப்பன் வெளியே வந்து, அவர்களோடு சந்தோஷமாய் இருக்கும்படி உள்ளே அழைத்தான், ஆனால் அவன் போகவில்லை.

### தன்னுடைய சகோதரன் வீட்டிற்கு வந்துவிட்டான் என்று மூத்தகுமாரன் அறிந்து என்ன செய்தான்?

அவன் மிகவும் கோபமடைந்து, வீட்டிற்குள்ளே போகவில்லை.

---

## 35:12

மூத்த மகன் அப்பாவினிடத்தில், இவ்வளவு வருடங்கள் நான் உமக்கு உண்மையாய் வேலை செய்தேன்! உம்முடைய வார்த்தையை மீறவில்லை, அப்படியிருந்தும் நான் என் நண்பர்களோடு சந்தோஷமாய் இருக்கும்படி நீர் எனக்கு ஒரு ஆட்டுக்குட்டியை கூட தரவில்லை. ஆனால் தவறான வழியில் எல்லாவற்றையும் செலவு செய்த உம்முடைய மகன் திரும்ப வந்ததும், சந்தோஷமாய் இருக்கும்படி, கொளுத்த கன்றை கொடுத்தீரே என்றான்.

### மூத்தகுமாரன் தன் தகப்பனிடத்தில் என்னவென்று குற்றம்சாட்டினான்?

நான் உமக்கு உண்மையாய் வேலை செய்தேன், எனக்கு சிறிய ஆட்டைக்கூட சந்தோசமாய் இருக்கும்படிக் கொடுக்கவில்லை, ஆனால் உம்முடைய சொத்தை எல்லாம் அழித்த உம்முடைய குமாரனுக்கு கொழுத்தகன்றை அடித்தீரே என்றான்.

---

## 35:13

அதற்கு தகப்பன், என் மகனே. நீ எப்போதும் என்னோடிருக்கிறாய், என்னிடத்தில் இருக்கிறதெல்லாம் உனக்குத்தான். ஆனால் உன்னுடைய தம்பி, மரித்தான், இப்போது உயிரோடு இருக்கிறான்! அவன் காணமற்போனான், இப்போது நமக்கு கிடைத்தான்! எனவே நாம் சந்தோஷமாய் இருக்க வேண்டா என்றான்.

### தகப்பனுக்கு சொந்தமான எவ்வளவு ஆஸ்திகள் மூத்தகுமாரனுக்கு உரியதாய் மாறிற்று?

தகப்பனிடத்தில் இருந்த எல்லாம்.

### திரும்பி வந்த இளையகுமாரனுக்காக கொண்டாடுகிறதற்கு என்ன காரணத்தை தகப்பன் சொன்னான்?

அவனுடைய குமாரன் மரித்தான், ஆனால் இப்போது உயிர்த்தான். அவன் காணாமற்போனான், ஆனால் இப்போது காணப்பட்டான் என்றான்.

# 36. மறுரூபப்படுதல

## 36:01

ஒருநாள், இயேசு தம்முடைய சீஷர்கள் மூன்று பேர், பேதுரு, யாக்கோபு, யோவான் என்பவர்களை அவரோடு கூட்டிக்கொண்டு, மலையின் மேல் ஜெபிக்கும்படி போனார். [இந்த யோவான், இயேசுவை ஸ்நானம் பண்ணினவன் இல்லை].

### இயேசு யாரை தம்மோடுகூட அழைத்துக்கொண்டுபோனார்?

பேதுரு, யாக்கோபு மற்றும் யோவான் என மூன்று சீஷர்களை அழைத்துக்கொண்டுபோனார்.

---

## 36:02

இயேசு ஜெபித்துக் கொண்டிருக்கும்போது, அவருடைய முகம் சூரியனைப்போல் பிரகாசித்தது. அவருடைய துணி, வெளிச்சத்தைப் போல வெள்ளையாயிற்று. அந்த வெண்மை இந்த பூமியில் ஒருவராலும் ஆக்கமுடியாத வெண்மையாயிருந்தது.

### இயேசு ஜெபித்துக்கொண்டிருக்கும்போது அவருக்கு என்ன சம்பவித்தது?

அவருடைய முகம் சூரியனைப்போல் பிரகாசமாயிற்று, மற்றும் அவருடைய உடை வெளிச்சத்தைப்போல வெண்மையாயிற்று.

---

## 36:03

பின்பு மோசேயும், தீர்க்கதரிசியான எலியாவும் தோன்றினர். அவர்கள் நூற்றுக்கணக்கான வருடங்களுக்கு முன்பு இந்த பூமியில் வாழ்ந்தவர்கள். அவர்கள் இயேசுவிடம் அவருடைய மரணத்தைப் பற்றி பேசினார்கள். ஏனெனில் இயேசு சீக்கிரமாய் எருசலேமில் மரிக்கப்போகும் சமயமாயிருந்தது.

### இயேசுவோடு வெளிப்பட்ட இரண்டு பேர் யார்?

மோசேயும் தீர்க்கத்தரிசி எலியாவும்.

### மோசேயும் எலியாவும் தோன்றியது எதினால் அற்புதம்?

அவர்கள் இருவரும் நூற்றுக்கணக்கான வருடங்களுக்கு முன் வாழ்ந்தவர்கள்.

### மோசேயும் எலியாவும் எதைப் பற்றி இயேசுவிடம் பேசிக்கொண்டிருந்தனர்?

அவர்கள் இயேசுவின் மரணத்தைக் குறித்து பேசிக்கொண்டிருந்தனர்.

### இயேசு எங்கே மரிப்பதாயிருந்தது?

எருசலேம்.

---

## 36:04

மோசேயும், எலியாவும் இயேசுவோடு பேசிக்கொண்டிருந்த சமயத்தில், பேதுரு இயேசுவைப் பார்த்து, நாம் இங்கேயே இருப்பது நல்லது. நமக்கு மூன்று கூடாரங்களை இங்கே போடுவோம். அதில் ஒன்று உமக்கும், ஒன்று மோசேக்கும், ஒன்று எலியாவுக்கும் இருக்கட்டும் என்று தான் என்ன சொல்கிறான் என்று அறியாமல் சொன்னான்.

### இயேசு, மோசே மற்றும் எலியாவுக்கு என்ன செய்யலாம் என்று பேதுரு ஆலோசனைக் கூறினான்?

அவன் மூன்று கூடாரமாக இயேசுவுக்கு ஒன்றும், மோசேக்கு ஒன்றும், எலியாவுக்கு ஒன்றுமாய் போட விரும்பினான்.

---

## 36:05

பேதுரு பேசிக் கொண்டிருக்கும்போது, ஒரு வெண்மேகம் அவர்களை சூழ்ந்து கொண்டது. அந்த மேகதிலிருந்து ஒரு சத்தம் வந்து, இவர் நான் நேசிக்கும் என்னுடைய மகன், இவரில் நான் பிரியமாய் இருக்கிறேன் என்றது. அதைக் கேட்ட மூன்று சீஷர்களும் நடுங்கி, தரையில் விழுந்தனர்.

### வெளிச்சமாக இருந்த மேகத்திலிருந்து வந்த சத்தம் சீஷர்களிடத்தி சொன்னது என்ன?

இவர் நான் நேசிக்கும் என்னுடைய குமாரன், இவரில் நான் பிரியமாய் இருக்கிறேன், அவருக்குச் செவிகொடுங்கள்.

---

## 36:06

பின்பு இயேசு அவர்களைத் தொட்டு, பயப்படாதிருங்கள், எழுந்திருங்கள் என்றார். அவர்கள் எழுந்து பார்த்தபோது அங்கே இயேசு மட்டும் இருந்தார்.

---

## 36:07

இயேசுவும் அந்த மூன்று சீஷர்களும் மலையிலிருந்து கீழே இறங்கி போனார்கள். இயேசு அவர்களிடத்தில் அங்கே நடந்த எதையும் ஒருவருக்கும் சொல்ல வேண்டாம், நான் சீக்கிரமாய் மரித்து, மறுபடியும் உயிர்த்தெளுவேன் அதற்கு பின்பு நீங்கள் அதை ஜனங்களுக்கு சொல்லலாம் என்றார்.

### சீஷர்கள் பார்த்த காரியத்தைக் குறித்து இயேசு என்னது என்ன?

மலையில் சம்பவித்த காரியங்களை தாம் மரித்து திரும்பவும் உயிர்க்கும் வரை ஒருவருக்கும் அறிவிக்க வேண்டாம் என்று இயேசு சீஷர்களிடம் சொன்னார்.

# 37. மரித்த லாசருவை இயேசு எழுப்புதல்

## 37:01

லாசரு என்று ஒருவன் இருந்தான், அவனுக்கு இரண்டு சகோதிரிகள் இருந்தார்கள். அவர்கள் பெயர், மரியாள், மார்த்தாள். அவர்கள் இயேசுவுக்கு மிகவும் நெருக்கமானவர்கள். ஒருநாள் லாசரு வியாதியாய் இருக்கிறான் என்று இயேசு கேள்விப்பட்டு, லாசருவின் வியாதி, மரணத்திற்கு எதுவாய் இல்லாமல், ஜனங்கள் தேவனை மகிமைப்படுத்துவதற்கு எதுவாயிருக்கும் என்றார்.

### லாசருவின் வியாதியின் முடிவு என்னவாயிருக்கும் என்று இயேசு சொன்னார்?

அது தேவனுடைய மகிமையாய் இருக்கும் என்றார்.

### லாசரு வியாதியாய் இருக்கிறான் என்று இயேசு கேள்விப்பட்டு என்ன செய்தார்?

தாம் இருந்த இடத்திலே மேலும் இரண்டு நாட்கள் தங்கினார்.

---

## 37:02

இயேசு அவர்களை நேசித்தும், தாம் இருந்த இடத்தில் இரண்டு நாட்கள் தங்கினார். பின்பு அவர் தம்முடைய சீஷர்களிடத்தில் யுதேயாவுக்கு போவோம் என்றார். அதற்கு சீஷர்கள், போதகரே. கொஞ்ச நாட்களுக்கு முன்பு அங்கே இருக்கும் ஜனங்கள் உம்மை கொலை செய்ய நினைத்தார்கள் அல்லவா என்றார்கள்! இயேசு அவர்களிடத்தில், நம்முடைய நண்பனாகிய லாசரு தூங்கிக் கொண்டு இருக்கிறான். அவனை நான் எழுப்ப வேண்டும் என்றார்.

### இயேசு யூதேயாவுக்குப் போக முடிவு செய்தபோது, சீஷர்கள் எதை நினைவில் வைத்திருந்தனர்?

அந்த ஊரார் இயேசுவை கொல்ல நினைத்திருந்ததை.

---

## 37:03

சீஷர்கள் இயேசுவினிடத்தில், போதகரே, லாசரு தூங்கினால் அவன் சுகமாவான் என்றார்கள். பின்பு இயேசு அவன் மரித்ததை மேலோட்டமாக சொன்னார். அவர்கள் என்னை நம்பும்படிக்கு, நான் அங்கே இல்லாததினால் சந்தோஷமடைகிறேன் என்றார்.

### லாசரு நித்திரையாய் இருக்கிறான் என்று இயேசு சொன்னதை சீஷர்கள் என்னவென்று புரிந்துகொண்டனர்?

அவன் நன்றாக தூங்குகிறதினால் சுகமடைவான் என்று நினைத்தார்கள்.

### லாசருவைக் குறித்து இயேசு சீஷர்களிடம் சொன்னது என்ன?

லாசரு மரித்துவிட்டான் என்று இயேசு சொன்னார்.

### லாசரு மரிக்கும்போது தாம் அங்கே இல்லாததினால் ஏன் இயேசு சந்தோஷப்பட்டார்?

ஏனெனில் சீஷர்கள் இயேசுவை இன்னும் அதிகமாய் விசுவாசிக்க ஒரு வாய்ப்பு வந்ததினால்.

---

## 37:04

இயேசு, லாசருவின் சொந்த ஊருக்கு வந்தபோது, அவன் மரித்து நான்கு நாட்கள் ஆயிற்று. மார்த்தாள் போய் இயேசுவை சந்தித்து, போதகரே, நீர் இங்கே இருந்திருந்தால் லாசரு மரித்திருக்க மாட்டான். ஆனாலும், நீர் தேவனிடத்தில் கேட்கிற எதையும் அவர் உமக்குச் செய்வார் என்று நான் நம்புகிறேன் என்றாள்.

### இயேசுவால் லாசருவை குணமாக்க முடியும் என்று மார்த்தாளுக்கு விசுவாசம் இருந்ததா?

ஆம்.

### லாசரு மரித்து எவ்வளவு நாட்கள் ஆயிற்று?

அவன் மரித்து நான்கு நாட்கள் ஆயிற்று.

---

### 37:05

இயேசு அவளிடத்தில், நானே உயிர்த்தெழுதலும், ஜீவனுமாயிருக்கிறேன். என்னை நம்புகிறவன் மரித்தாலும் பிழைப்பான். என்னை நம்புகிறவன் எவனும் மரிப்பதில்லை. இதை நீ நம்புகிறாயா? என்று மார்த்தாளிடம் கேட்டார். அதற்கு அவள், போதகரே! நீர் தேவனுடைய மகன், மேசியா என்று உம்மை நம்புகிறேன் என்றாள்.

### இயேசுவே உயிர்த்தெழுதலும், ஜீவனுமாயிருப்பதினால் விசுவாசிகளுக்கு நடப்பது என்ன?

அவரை விசுவாசிக்கிற எவனும் மரித்தாலும் பிழைப்பான், மேலும் அவரை விசுவாசிக்கிற எவனும் ஒருபோதும் மரிப்பதில்லை.

### இயேசுவை யார் என்று மார்த்தாள் அறிந்திருந்தாள்?

தேவனுடைய குமாரன், மேசியா.

---

### 37:06

பின்பு மரியாள் வந்து, இயேசுவின் காலில் விழுந்து, நீர் இங்கே இருந்திருந்தால் லாசரு மரித்திருக்க மாட்டான் என்றாள். இயேசு அவர்களை பார்த்து, லாசருவை எங்கே வைத்திருக்கிறீர்கள் ? என்று கேட்டார். அவர்கள், கல்லறையில் வைத்திருக்கிறோம் வந்து பாரும் என்றார்கள். அப்போது இயேசு அழுதார்.

---

### 37:07

கல்லறை என்பது ஒரு குகைப் போன்றது, அதின் வாசலில் உருட்டக்கூடியக் கல்லை வைத்திருப்பார்கள். இயேசு அங்கே வந்து, அந்தக் கல்லை உருட்டும்படி சொன்னார். அப்போது மார்த்தாள், அவன் மரித்து நான்கு நாட்கள் ஆயிற்று, இப்போது நாறுமே என்றாள்.

### லாசரு மரித்து எவ்வளவு நாள் ஆயிற்று?

அவன் மரித்து நான்கு நாட்கள் ஆயிற்று.

---

## 37:08

இயேசு பதிலாக, நான் உனக்குச் சொல்லவில்லையா? நீ என்னை நம்பினால் தேவனுடைய வல்லமையைப் பார்ப்பாய் என்று சொல்லி, எனவே அவர்கள் அந்தக் கல்லை புரட்டினார்கள்.

---

## 37:09

பின்பு இயேசு வானத்தைப் பார்த்து, அப்பா, எனக்குச் செவி கொடுப்பதற்காக உமக்கு ஸ்தோத்திரம். நீர் எப்போதும் எனக்குச் செவி கொடுக்கிறீர். ஆனாலும், இங்கே நிற்கிற இந்த ஜனங்கள் நீர் தான் என்னை அனுப்பினீர் என்று நம்பும்படியாக என்று சொல்லி, லாசருவே வெளியே வா என்று சத்தமிட்டார்.

### இயேசு ஏன் பிதாவாகிய தேவனுக்கு நன்றி செலுத்தினார்?

பிதாவாகிய தேவன் தான் இயேசுவை அனுப்பினார் என்று ஜனங்கள் அறியும்படி செய்ததற்கு.

### லாசரு என்ன செய்யும்படி இயேசு கட்டளைக்கொடுத்தார்?

லாசருவை கல்லறையிலிருந்து வெளியே வரும்படி கட்டளைகொடுத்தார்!

---

## 37:10

பின்பு லாசரு வெளியே வந்தான். அவன் கல்லறையின் சீலையில் இன்னும் சுற்றப்பட்டிருந்தான். இயேசு அங்கே இருந்தவர்களைப் பார்த்து, அந்தக் கல்லறையின் சீலையை அவிழ்த்து விடுங்கள் என்றார்! இந்த அற்புதத்தினால் யூதர்களில் அநேகர் இயேசுவை நம்பினார்கள்.

---

## 37:11

ஆனால் யூதர்களின் மதத்தலைவர்கள் இயேசுவின்மேல் பொறாமைப்பட்டு, அவர்கள் ஒன்றுகூடி, இயேசுவையும் லாசருவையும் எப்படி கொலை செய்யலாம் என்று ஆலோசித்தார்கள்.

## யூதர்களின் மதத்தலைவர்கள் இந்த அற்புதத்தைப் பார்த்து என்ன செய்தனர்?

அவர்கள் மிகவும் பொறாமைப்பட்டு, இயேசுவையும் லாருவையும் கொலை செய்ய நினைத்தார்கள்.

# 38. இயேசுவைக் காட்டிக்கொடுத்தல்

## 38:01

ஒவ்வொரு வருடமும் யூதர்கள் பஸ்கா பண்டிகையைக் கொண்டாடுவது வழக்கம். ஏனெனில் அநேக நூற்றாண்டுகளுக்கு முன்பு அவர்களுடைய முன்னோர்களை தேவன் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்கினார். இயேசு பிரசங்கம் செய்யவும், போதிக்கவும் ஆரம்பித்து மூன்று வருடங்களுக்குப் பின், இயேசு அவருடைய சீஷர்களோடு பஸ்காவை எருசலேமில் கொண்டாட விரும்புவதாகவும், அங்கே அவர் அங்கே கொலை செய்யப்படபோவதாகவும் சீஷர்களிடத்தில் சொன்னார்.

### யூதர்கள் ஒவ்வொரு வருடமும் கொண்டாடிவந்த பஸ்கா பண்டிகையின் அர்த்தம் என்ன?

யூதர்களின் முன்னோர்களை தேவன் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலைப் பண்ணினதினால் கொண்டாடும் பண்டிகை தான் பஸ்கா.

---

## 38:02

இயேசுவின் சீஷர்களில் ஒருவன் பெயர் யூதாஸ். அவன் சீஷர்களின் பணத்திற்குப் பொறுப்பாளராய் இருந்தான். ஆனாலும் அவ்வப்போது அந்த பணத்தைத் திருடி செலவு செய்வான். இயேசுவும் அவருடைய சீஷர்களும் எருசலேமுக்கு வந்தவுடன், யூதாஸ் யூதர்களின் தலைவர்களை சந்தித்து, பணம் கொடுத்தால், தான் இயேசுவைக் காட்டிக் கொடுப்பதாக ஒப்புக் கொண்டான். யூதர்கள் இயேசுவை மேசியா என்று ஏற்றுக் கொள்ளவில்லை என்றும் அவரைக் கொலை செய்ய விரும்புவதையும் யூதாஸ் அறிந்திருந்தான்.

### யூத தலைவர்களிடம் இயேசுவை காட்டிக்கொடுக்க அவன் எதற்காக சம்மதித்தான்?

அவன் பணத்திற்காக ஒப்புக்கொண்டான்.

---

## 38:03

யூத தலைவர்கள், பிரதான ஆசாரியர்கள் மூலமாய் யுதாசுக்கு, இயேசுவைக் காட்டிக் கொடுக்கும்படி முப்பது வெள்ளிக்காசைக் கொடுத்தனர். தீர்கத்தரிசிகள் முன்பு

சொன்னபடியே நடந்தது, யூதாஸ் பணத்தை வாங்கிக் கொண்டு, புறப்பட்டுப் போய், இயேசுவை அவர்கள் பிடிக்க, காட்டிக் கொடுக்கும்படி நேரம் பார்த்துக் கொண்டிருந்தான்.

### இயேசுவைக் காட்டிக்கொடுக்க யூத தலைவர்கள் யூதாசுக்கு எவ்வளவு பணம் கொடுத்தனர்?

அவர்கள் அவனுக்கு முப்பது வெள்ளிக்காசுகள் கொடுத்தனர்.

---

## 38:04

எருசலேமில், இயேசு தம்முடைய சீஷர்களோடு பஸ்காவை கொண்டாடினார். பஸ்காவை சாப்பிடும்போது இயேசு அப்பத்தை எடுத்து, இதை வாங்கி சாப்பிடுங்கள், நான் உங்களுக்காகக் கொடுக்கும் என்னுடைய சரீரம் என்றார். என்னை நினைக்கும்படி இதைச் செய்யுங்கள் என்றார். இயேசு அவர்களுக்காக மரிக்கப் போவதையும், தம்மையே அவர்களுக்கு பலியாக கொடுக்கப் போவதையும் சொன்னார்.

### பஸ்காவை சாப்பிடும்போது இயேசு அப்பத்தைக் குறித்து சொன்னது என்ன?

அவர், இது உங்களுக்காக கொடுக்கப்படும் என்னுடைய சரீரம்.

---

## 38:05

பின்பு இயேசு பாத்திரத்தில் திராட்சை ரசத்தை எடுத்து, இது புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது. நான் உங்களுக்காக இரத்தம் சிந்தும் போது, தேவன் உங்களுடைய பாவங்களை மன்னிப்பார். இதை நீங்கள் குடிக்கும் போதெல்லாம், நான் உங்களுக்குச் செய்கிறதை நினையுங்கள் என்றார்.

### பாத்திரத்தைக் குறித்து இயேசு என்ன சொன்னார்?

பாவங்களை மன்னிக்கும்படி சிந்தத்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய இரத்தம் என்றார்.

---

## 38:06

பின்பு இயேசு சீஷர்களிடத்தில், உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக் கொடுப்பான் என்றார். சீஷர்கள் திடுக்கிட்டு, யார் அப்படி செய்வான் என்றார்கள், அதற்கு இயேசு,

நான் யாருக்கு அப்பம் கொடுக்கிறேனோ அவனே என்னைக் காட்டிக் கொடுப்பான் என்று சொல்லி, யுதாசுக்கு கொடுத்தார்.

## இயேசுவினிடத்திலிருந்து யூதாஸ் அப்பத்தை வாங்கினபின்பு அவனுக்கு என்ன நடந்தது?

சாத்தான் அவனுக்குள் புகுந்தான்.

---

## 38:07

யூதாஸ் அப்பம் வாங்கினவுடனே சாத்தான் அவனுக்குள் புகுந்தான். யூத தலைவர்கள் இயேசுவை பிடிக்க அவர்களுக்கு உதவும்படி யூதாஸ் போனான். அது இரவு நேரமாயிருந்தது.

## இயேசுவினிடத்திலிருந்து யூதாஸ் அப்பத்தை வாங்கினபின்பு அவனுக்கு என்ன நடந்தது?

சாத்தான் அவனுக்குள் புகுந்தான்.

---

## 38:08

சாப்பிட்டு முடித்து, இயேசுவும் அவருடைய சீஷர்களும், ஒலிவ மலைக்குப் போனார்கள். இயேசு அவர்களிடத்தில், மேய்ப்பனை அடிப்பேன் அப்போது ஆடுகள் எல்லாம் சிதறடிக்கப்படும் என்று எழுதியிருக்கிறபடியே. நீங்கள் எல்லோரும் இந்த இரவில் என்னை விட்டு போவீர்கள் என்று சொன்னார்.

## அந்த இரவில் சீஷர்களுக்கு என்ன நடக்கும் என்று இயேசு சொன்னார்?

அவர்கள் எல்லோரும் சிதறடிக்கப்படுவார்கள்.

---

### 38:09

பேதுரு அவரிடத்தில், எல்லோரும் உம்மை விட்டுப் போனாலும் நான் போவதில்லை! பின்பு இயேசு பேதுருவினிடத்தில், சாத்தானுக்கு நீங்கள் எல்லோரும் வேண்டும், ஆனாலும் உன்னுடைய விசுவாசம் வீணாகாதபடிக்கு, உனக்காக நான் ஜெபித்தேன். இன்று இரவில், சேவல் கூவுகிறதற்கு முன்பு நீ என்னை மூன்று தரம் தெரியாது என்று சொல்லுவாய் என்றார்.

#### சேவல் கூவுகிரதற்கு முன்னே பேதுரு என்ன செய்வான் என்று இயேசு சொன்னார்?

பேதுரு இயேசுவை மூன்று முறை மறுதலிப்பான் என்று சொன்னார்.

---

### 38:10

பின்பு பேதுரு இயேசுவினிடத்தில், நான் மரித்தாலும், உம்மை தெரியாது என்று சொல்ல மாட்டேன்! மற்ற சீஷர்களும் அப்படியே சொன்னார்கள்.

#### இயேசு அவர்களைக் குறித்து சொன்னதைக்கேட்டு சீஷர்கள் சொன்னது என்ன?

நாங்கள் செத்தாலும் சாவோம் அல்லாமல் உம்மை மறுதலிக்க மாட்டோம் என்று இயேசுவிடம் சொன்னார்கள்.

---

### 38:11

பின்பு இயேசு தம்முடைய சீஷர்களோடு கெத்சமனே என்னும் ஒரு இடத்திற்கு போனார்கள். அங்கே, பிசாசு அவர்களை சோதிக்காதபடிக்கு ஜெபிக்கும்படி சீஷர்களிடம் சொல்லி விட்டு, இயேசு தனியே ஜெபிக்கும்படி போனார்.

---

### 38:12

இயேசு மூன்று முறை, பிதாவே உமக்கு சித்தமானால் இந்த உபத்திரவத்தின் பாத்திரத்தில் நான் குடிக்க வேண்டாம், ஆனால் இந்த ஜனங்களின் பாவங்களை மன்னிக்க வேறு வழி இல்லையென்றால், உம்முடைய சித்தத்தின்படி செய்கிறேன்

என்று ஜெபித்தார். இயேசு மிகவும் வேதனைப்பட்டு, அவருடைய வேர்வை இரத்தத்தின் துளிகளாய் விழுந்தது. அவரை பெலனடைய செய்ய தேவன் தூதர்களை அனுப்பினார்.

### கெத்சமனேயில் இயேசு பிதாவினிடத்தில் ஜெபித்தது என்ன?

அவர் பிதாவினிடத்தில் இந்த உபத்திரவத்தின் பாத்திரம் என்னை விட்டு நீக்கக்கூடுமானால் செய்யும், ஆனால் ஜனங்களுடைய பாவங்கள் நீக்க வேறு வழியில்லை என்றால் உம்முடைய சித்தம் செய்கிறேன் என்று ஜெபித்தார்.

---

## 38:13

இயேசு ஒவ்வொரு முறை ஜெபிக்கும் போதும் சீஷர்களிடத்தில் வந்தார், அவர்களோ தூங்கிக் கொண்டிருந்தார்கள். அவர் மூன்றாவது முறை வந்து, எழுந்துருங்கள்! என்னைக் காட்டிக் கொடுக்கிறவன் வருகிறான் என்றார்.

### இயேசு ஜெபித்துக்கொண்டிருக்கும்போது சீஷர்கள் என்ன செய்துகொண்டிருந்தனர்?

அவர்கள் தூங்கிக்கொண்டிருந்தனர்.

---

## 38:14

யூதாஸ், யூத தலைவர்களோடும், படை வீரர்களோடும், பெரிய ஜனக்கூட்டத்துடனும், கையில் கத்தியும், குச்சிகளையும் வைத்துக் கொண்டு இயேசுவினிடத்தில் வந்தார்கள். யூதாஸ், போதகரே, என்று சொல்லி வாழ்த்தி, அவரை முத்தமிட்டான். அவரைக் காட்டிக் கொடுக்கும்படி இப்படிச் செய்தான். இயேசு முத்தத்தினால் என்னைக் காட்டிக் கொடுக்கிறாயா? என்று யுதாஸிடம் கேட்டார்.

### இயேசு யார் என்று ராணுவ வீரர்களுக்கு எப்படித் தெரியும்?

யூதாஸ் இயேசுவை கைது செய்யும் அடையாளமாக அவரை முத்தம் செய்தான்.

---

## 38:15

படை வீரர்கள் இயேசுவைப் பிடித்தார்கள். அப்போது பேதுரு தான் வைத்திருந்த கத்தியை எடுத்து, பிரதான ஆசாரியனின் சேவகன் காதை வெட்டிப் போட்டான். இயேசு அவனைப் பார்த்து, கத்தியை கீழே போடு! என் தகப்பனிடத்தில் என்னை பாதுகாக்கும்படி சண்டை போடும் தூதர்களை கேட்க முடியும். ஆனால் நான் கண்டிப்பாக

என்னுடைய தகப்பனுக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்று சொல்லி, அவனுடைய காதை குணமாக்கினார். பின்பு, அவருடைய சீஷர்கள் எல்லோரும் ஓடிப் போனார்கள்.

## இயேசுவை பாதுகாக்க பேதுரு என்ன செய்தான்?

அவன் தன்னிடத்தில் வைத்திருந்த கத்தியை எடுத்து பிரதான ஆசாரியனின் வேலைக்காரனின் காதை வெட்டினான்.

## பேதுருவை இயேசு எதினால் ஒன்றும் செய்யவேண்டாம் என்று சொன்னார்?

இயேசு பிதாவினிடத்தில் கேட்டால் தூதர்களின் சேனையை அவர் அனுப்பக்கூடும்.

## இயேசுவை கைது செய்தபின்பு சீஷர்கள் என்ன செய்தார்கள்?

அவர்கள் எல்லோரும் ஓடிப்போனார்கள்.

# 39. இயேசு சோதிக்கபடுதல்

## 39:01

அது நடு இரவாயிருந்தது. சேவகர்கள் இயேசுவை பிரதான ஆசாரியனுடைய வீடிற்கு சில கேள்விகளை கேட்கும்படி கொண்டு போனார்கள். பேதுரு அவரைத் பின்தொடர்ந்து தூரத்திலே இருந்தான். சேவகர்கள் இயேசுவை வீட்டிற்க்குள் கொண்டு போனதும், பேதுரு தீயில் குளிர் காயும்படி வெளியே இருந்தான்.

### எந்த நேரத்தில் யூத தலைவர்கள் இயேசுவை கேள்வி கேட்க ஆரம்பித்தனர்?

அது நடு இரவாய் இருந்தது.

---

## 39:02

வீட்டிற்க்குள் யூத தலைவர்கள் இயேசுவை சோதித்தனர். அவர்கள் இயேசுவுக்கு எதிராக பொய் சொல்ல, நிறைய பொய் சாட்சிகளை ஏற்பாடு செய்திருந்தார்கள், ஆனால் அவர்கள் ஒருவருடைய வார்த்தையும், மற்றவர்களோடு ஒத்து போகவில்லை. எனவே யூத தலைவர்களால் அவரிடத்தில் குற்றம் ஒன்றும் கண்டுபிடிக்க முடியவில்லை. இயேசு ஒன்றும் பேசவில்லை.

### ஏன் யூத தலைவர்களால் இயேசுவின் மேல் குற்றம் ஒன்றும் கண்டுபிடிக்க முடியவில்லை?

பொய்சாட்சி சொல்லுகிரவர்களுக்குள் கருத்து வேறுபாடுகள் இருந்ததால் ஒத்துபோகவில்லை.

---

## 39:03

கடைசியில், பிரதான ஆசாரியன் இயேசுவைப் பார்த்து, நீ ஜீவனுள்ள தேவனுடைய மகனாகிய மேசியாவா? சொல், என்றான்.

### பிரதான ஆசாரியன் இயேசுவிடம் கடைசியாக கேட்ட கேள்வி என்ன?

சொல், நீ மேசியாவா, ஜீவனுள்ள தேவனுடைய குமாரானா?

---

### 39:04

இயேசு, ஆம், தேவன் பரலோகத்திலிருந்து வருகையில், நான் அவருடைய வலது பக்கத்தில் உட்கார்ந்திருப்பதைப் பார்ப்பீர்கள் என்றார். உடனே பிரதான ஆசாரியன் இயேசுவின்மேல் மிகவும் கோபமடைந்து, தன்னுடைய ஆடையை கிழித்து, இவனைப் பற்றி சொல்ல நமக்கு வேறு சாட்சி தேவையில்லை! நீங்களே அவன் தேவனுடைய மகன் என்று சொல்வதைக் கேட்டீர்கள் என்றான். இவனைக் குறித்து நீங்கள் என்ன முடிவு செய்கிறீர்கள்? என்றான்.

## பிரதான ஆசாரியனுக்கு இயேசு தந்த பதில் என்ன?

ஆம், தேவன் வரும்போது அவருடைய வலதுபாரிசத்தில் உட்கார்ந்து இருப்பதை காண்பீர்கள் என்றார்.

## இயேசு செய்த குற்றம் என்னவென்று பிரதான ஆசாரியன் சொன்னான்?

தன்னை தேவனுடைய குமாரன் என்று இயேசு சொன்னதை சொன்னான்.

---

### 39:05

யூத தலைவர்கள் எல்லோரும் பிரதான ஆசாரியனிடத்தில் மரணத்திற்கு ஏதுவானவன்! என்று சொல்லி, அவருடைய கண்களைக் கட்டி, அவர்மேல் துப்பி, அறைந்து, கிண்டல் செய்தார்கள்.

---

### 39:06

பேதுரு அந்த வீடிற்கு வெளியே இருந்தான். ஒரு வேலைகாரி அவனைப் பார்த்து, நீயும் இயேசுவோடு இருந்தவன் தானே! என்றாள், பேதுரு இல்லை என்றான். பின்பு, வேறொரு பெண் வந்து அதேபோல கேட்டாள், பேதுரு திரும்பவும் இல்லை என்றான். கடைசியாக, அங்கே இருந்த சிலர் நீயும் இயேசுவோடு இருந்தவன் தானே, நீங்கள் இருவரும் கலிலேயர்கள் என்றார்கள்.

## இயேசு விசாரணையில் இருந்தபோது பேதுரு எங்கே இருந்தான்?

பிரதான ஆசாரியன் வீட்டின் முன்பு பேதுரு காத்துக்கொண்டிருந்தான்.

## ஜனங்கள் எதினால் பேதுருவும் இயேசுவோடு இருந்தவன் என்று சிந்தித்தார்கள்?

இயேசுவும் பேதுருவும் களிலேயாவிலிருந்ததினால்.

---

## 39:07

பின்பு பேதுரு, இந்த மனிதனை நான் அறிந்திருந்தால் தேவன் என்னை சபிப்பாராக! என்று சொல்லி சத்தியம் பண்ணினான். இப்படி அவன் செய்தபோது சேவல் கூவிற்று. இயேசு திரும்பி பேதுருவைப் பார்த்தார்.

## இயேசுவை உனக்குத் தெரியுமா என்று ஜனங்கள் பேதுருவிடம் கேட்டதற்கு அவரன் என்ன சொன்னான்?

இயேசு யார் என்று தெரியாது என்று பேதுரு மூன்று முறை மறுதலித்தான்.

## மூன்றாவது முறை இயேசுவை பேதுரு மறுதலித்தபோது என்ன சம்பவித்தது?

சேவல் கூவிற்று, மேலும் இயேசுவும் பேதுருவைத் திரும்பிப்பார்த்தார்.

---

## 39:08

பேதுரு அந்தவேறு பக்கம் போய், மிகவும் அழுதான். அதே சமயத்தில், இயேசுவைக் காட்டிக் கொடுத்த யூதாஸ், யூத தலைவர்கள் இயேசுவைக் கொலை செய்யும்படி ஒப்புக்கொடுக்க போவதினால், மிகுந்த வருத்தமடைந்து, தற்கொலை செய்து கொண்டான்.

## யூததலைவர்கள் இயேசுவின்மேல் குற்றம் சுமத்துகிறதை யூதாஸ் பார்த்து என்ன செய்தான்?

யூதாஸ் மிகவும் தூக்கப்பட்டு, போய் தற்கொலை செய்துகொண்டான்.

---

## 39:09

அந்த ஊரின் அதிகாரியாக பிலாத்து இருந்தான். அவன் ரோமருக்கு வேலை செய்தான். அவனிடத்தில் யூத தலைவர்கள் இயேசுவைக் கொண்டு வந்தனர். அவர்கள் இயேசுவை

பிலாத்து கொலை செய்ய ஒப்புக் கொடுக்கும்படி விரும்பினார்கள். பின்பு பிலாத்து இயேசுவினிடத்தில், யூதருடைய ராஜாவா என்று கேட்டான்?

### யூத தலைவர்கள் ஏன் இயேசுவை ரோமர்களின் அதிகாரியான பிலாத்துவினிடத்திற்கு கொண்டுபோனார்கள்?

பிலாத்து இயேசுவை குற்றவாளியாகத் தீர்த்து, அவரை கொலை செய்யும்படி ஒப்புக்கொடுப்பார் என்று அவர்கள் நம்பினர்.

### பிலாத்து இயேசுவினிடத்தில் கேட்ட முதல் கேள்வி என்ன?

நீ யூதருடைய ராஜாவா?

---

## 39:10

இயேசு பிலாத்துவினிடத்தில், நீர் சொன்னபடிதான். ஆனால் என்னுடைய ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல, அப்படியிருந்தால் என்னுடையவர்கள் எனக்காக சண்டைபோட வந்திருப்பார்கள் என்றார். நான் இந்த உலகத்திற்கு தேவனைக் குறித்து உண்மையை சொல்ல வந்தேன். அதை விரும்புகிறவன் நான் சொல்வதைக் கேட்பான் என்றார். என்ன உண்மை? என்று பிலாத்து கேட்டான்.

### இந்த உலகத்திற்கு எதற்காக வந்ததாக இயேசு கூறினார்?

தேவனைக் குறித்து உண்மையை சொல்ல.

---

## 39:11

இயேசுவிடம் பேசி முடித்த பிலாத்து, ஜனங்களிடம் போய், இந்த மனிதன் மரணத்திற்கு எதுவாய் எதையும் செய்ததாக எனக்குத் தெரியவில்லை என்றான். ஆனால் யூத தலைவர்களும் ஜனங்களும், அவனை சிலுவையில் அறைய வேண்டும்! என்று சத்தமாய் சொன்னார்கள். பிலாத்து அவர்களுக்கு, அவரிடத்தில் எந்த குற்றத்தையும் நான் பார்க்கவில்லை என்றான், ஆனால் அவர்கள் அதிலும் அதிகமாய் சத்தம் போட்டார்கள். மூன்றாவது முறையும் பிலாத்து, அவர் குற்றம் ஒன்றும் செய்யவில்லை! என்றான்.

### இயேசு எந்தக் குற்றமும் செய்யவில்லை என்று பிலாத்து ஜனங்களிடத்தில் எத்தனை முறை கூறினான்?

மூன்று முறை.

---

## 39:12

பின்பு பிலாத்து, ஜனங்களுக்குள் கலவரம் ஏதாவது நடக்கும் என்று பயந்து, இயேசுவை சேவர்கள் சிலுவையில் அறையும்படி ஒப்புக் கொண்டான். ரோம படைவீரர்கள் இயேசுவை பிடித்து, அவருக்கு ஒரு அங்கியை போட்டு, முள்ளினால் செய்யப்பட்ட ஒரு கிரீடத்தை தலையில் வைத்தார்கள். பின்பு பாருங்கள், இவன் யூதருடைய ராஜா என்று கிண்டல் செய்தார்கள்!

### பிலாத்து ஏன் இயேசுவை சிலுவையில் அறையும்படி ஒப்புக்கொடுத்தான்?

ஜனங்களுக்குள் கலகம் உண்டாகும் என்று பிலாத்து பயந்தான்.

### ரோம ராணுவ அதிகாரிகள் இயேசுவை எப்படி நடத்தினர்?

அவர்கள் இயேசுவை பிடித்து, சிவப்பு அங்கியை அணிவித்து, அவருடைய தலையில் கிரீடத்தை அணிவித்து, அவரை கிண்டல் செய்தனர்.

# 40. இயேசுவை சிலுவையில் அறைதல்

## 40:01

சேவர்கள் இயேசுவை கிண்டல் செய்து, அவரை சிலுவையில் அறையும்படி கொண்டுபோனார்கள். அவர் சிலுவையை சுமக்க வைத்தார்கள்.

### இராணுவ வீரர்கள் இயேசுவை சிலுவையில் அறையக் கொண்டுபோகும்போது, அவரை எதை சுமக்க வைத்தனர்?

அவரை அறைந்து கொள்ளும் சிலுவையை சுமக்க வைத்தனர்.

---

## 40:02

சேவர்கள், இயேசுவை கபால ஸ்தலம் என்று அழைக்கப்படும் இடத்திற்கு கொண்டு போய், சிலுவையில் அவருடைய கைகளிலும், கால்களிலும் ஆணிகளால் அடித்தார்கள். இயேசு, பிதாவே இவர்களை மன்னியும், அவர்கள் செய்கிறது என்னதென்று அவர்களுக்குத் தெரியாது என்றார். மேலும் அவர்கள் சிலுவையில் இயேசுவின் தலைக்கு மேல், சிறிய பலகையில் யூதருடைய ராஜா. என்று எழுதி வைத்தார்கள். பிலாத்து அப்படி எழுதும்படி சொல்லியிருந்தான்.

### இயேசு சிலுவையில் அறையப்பட்ட இடத்தின் பெயர் என்ன?

கபாலஸ்தலம்.

### ராணுவ வீரர்கள் இயேசுவை எப்படி சிலுவையில் அறைந்தனர்?

கைகளிலும் கால்களிலும் அவரை ஆணிகளால் சிலுவையில் அறைந்தனர்.

### சிலுவையில் அறைந்தவர்களுக்காக இயேசு எப்படி ஜெபித்தார்?

பிதாவே, இவர்களை மன்னியும், ஏனெனில் தாங்கள் செய்கிறது இன்னதென்று அவர்களுக்குத் தெரியாது.

### இயேசுவின் தலைக்கு மேலே எழுதப்பட்டிருந்த அடையாளம் என்ன?

யூதருக்கு ராஜா.

---

## 40:03

அதன் பின்பு, சேவகர்கள் இயேசுவின் துணிக்காக சீட்டுப் போட்டார்கள். அவர்கள் அப்படிச் செய்து, என் உடையின் பேரில் சீட்டுப் போட்டு அதைப் பங்கிட்டுக் கொண்டார்கள் என்று சொல்லப்பட்ட தீர்க்கத்தரிசனத்தை நிறைவேற்றினார்கள்.

### ராணுவ வீரர்கள் இயேசுவின் உடையை எப்படிப் பிரித்துக்கொண்டார்கள்?

தீர்க்கதரிசனம் சொல்லப்பட்டபடி, அவருடைய உடையின் பேரில் சீட்டுப்போட்டார்கள்.

---

## 40:04

அதே சமயத்தில் இரண்டு திருடர்களும் அங்கே சிலுவையில் அறையப்பட்டிருந்தார்கள். அவர்கள் இயேசுவுக்கு இரண்டு பக்கத்திலும் வைக்கபட்டிருந்தார்கள். அதில் ஒரு திருடன் இயேசுவை கிண்டல் செய்தான். அதற்கு மற்றவன், தேவன் உன்னை தண்டிப்பார் என்று உனக்கு பயம் இல்லையா? நாம் அநேக குற்றங்கள் செய்து தண்டிக்கபடுகிறோம், ஆனால் இந்த மனுஷன் குற்றம் எதுவும் செய்யவில்லை என்றான். பின்பு அவன் இயேசுவைப் பார்த்து, நீர் உம்முடைய ராஜ்யத்தில் ராஜாவாகும் போது, என்னையும் நினைத்தருளும் என்றான். அதற்கு இயேசு, இன்றைக்கு, நீ என்னோடுகூட பரலோகத்தில் இருப்பாய் என்றார்.

### இயேசுவை கிண்டல் செய்யாத திருடன் இயேசுவிடம் என்ன செய்யும்படி கேட்டான்?

அவருடைய ராஜ்யத்தில் அவனையும் நினைக்கும்படிக் கூறினான்.

### அந்த திருடனின் வேண்டுதலுக்கு இயேசு சொன்ன பதில் என்ன?

இன்றைக்கு, நீ என்னோடுகூட பரதேசில் இருப்பாய் என்றார்.

---

## 40:05

யூத தலைவர்களும், அங்கே இருந்த ஜனங்களும், நீ தேவனுடைய மகன் என்றால், சிலுவையிலிருந்து இறங்கி வந்து, உன்னை நீயே இரட்சித்துக்கொள். அப்போது நாங்கள் உன்னை நம்புவோம் என்று சொல்லி இயேசுவை கிண்டல் செய்தனர்.

## ஜனங்கள் இயேசு தேவனுடைய குமாரனாகில் என்ன செய்து நிரூபிக்கும்படி சொன்னார்கள்?

சிலுவையுள் இருந்து இறங்கி வந்து தன்னைத்தானே இரட்சிக்கும்படி சொன்னார்கள்.

---

## 40:06

பின்பு, நடுப்பகலாயிருந்தும் வானம் முழுவதும் இருளடைந்தது. மத்தியானத்தில் இருள் சூழ்ந்து, மூன்று மணிநேரம் அப்படியே இருந்தது.

## நடுப்பகலில் நடக்காத எந்த சம்பவம் அந்த நாளில் வானில் நடந்தது?

மதியம் 3:00 மணி வரை முழுவதும் காரிருளாய் இருந்தது.

---

## 40:07

அப்போது இயேசு, சத்தமாக எல்லாம் முடிந்தது! பிதாவே, உம்முடைய கைகளில் என்னுடைய ஆவியை ஒப்புக் கொடுக்கிறேன் என்று சொல்லி, தலையை சாய்த்து, ஜீவனை விட்டார். அப்போது அங்கே நிலநடுக்கம் உண்டானது. ஜனங்களை தேவனுடைய பிரசன்னத்திலிருந்து பிரிக்கும்படி தேவாலயத்தில் இருந்த திரைச் சீலை மேலேயிருந்து கீழேவரைக்கும் இரண்டாகக் கிழிந்தது.

## இயேசு சிலுவையில் சொன்ன கடைசி வார்த்தை என்ன?

எல்லாம் முடிந்தது! உம்முடைய கரத்தில் என்னுடைய ஆவியை ஒப்புவிக்கிறேன்.

## இயேசு மரித்தவுடன் அங்கே நடந்த அற்புதங்கள் என்ன?

பூமி அதிர்ந்தது மற்றும் ஆலயத்தின் திரைச்சீலை இரண்டாகக் கிழிந்தது.

---

## 40:08

இயேசுவின் மரணத்தினால், ஜனங்கள் தேவனிடத்தில் போவதற்கு வழி திறந்தது. இயேசுவைக் காத்துக் கொண்டிருந்த சேவகர்கள் நடந்த எல்லாவற்றையும் பார்த்து, உண்மையாகவே இந்த மனுஷன் நீதிமான். இவர் தேவனுடைய மகன் தான் என்றார்கள்.

### இயேசு தம்முடைய மரணத்தினால் செய்த சாதனை என்ன?

ஜனங்கள் தேவனிடத்தில் போவதற்கு வாசலை திறந்துவிட்டார்.

---

## 40:09

பின்பு யூத தலைவர்களில் இரண்டுபேர் இயேசுவை மேசியா என்று நம்பினார்கள். அவர்களில் ஒருவன் யோசேப்பு மற்றவன் நிக்கொதேமு. அவர்கள் இருவரும் வந்து, பிலாத்துவினிடத்தில் இயேசுவின் உடலைக் கேட்டு வாங்கி, அவர் உடலை சீலையினால் சுற்றி, கற்பாறையை உடைத்து செய்யப்பட்ட கல்லறையில் வைத்தார்கள். பின்பு பெரிய கல்லை உருட்டி அதின் வாசலை அடைத்தார்கள்.

### பிலாத்துவினிடத்தில் இயேசுவின் சரீரத்தை கேட்டது யார்?

யோசேப்பு மற்றும் நிக்கொதேமு.

### அந்த சரீரத்தை அவர்கள் என்ன செய்தனர்?

அவர்கள் சரீரத்தை துணிகளில் சுற்றி, கற்பாறையில் வெட்டப்பட்ட கல்லறையில் வைத்து, ஒரு பெரிய கல்லை வைத்து அதின் வாசலை மூடினர்.

# 41. இயேசுவை தேவன் மரணத்திலிருந்து எழுப்புதல்

## 41:01

சேவகர்கள் இயேசுவை சிலுவையில் அறைந்த பின்பு, யூத தலைவர்கள் பிலாத்துவினிடத்தில் போய், அந்த பொய்யன், இயேசு, மரித்து மூன்று நாளைக்குள் திரும்ப உயிர்த்தெழுவேன் என்று சொல்லியிருக்கிறான். எனவே கல்லறையை யாராவது காவல் காக்க வேண்டும், இல்லையென்றால், அவனுடைய சீஷர்கள் அவனுடைய உடலைத் திருடிக்கொண்டு போய், அவன் உயிர்த்தெழுந்தான் என்று சொல்லுவார்கள் என்றனர்.

### இயேசு தாம் மரித்து மூன்றாம் நாளில் என்ன சம்பவிக்கும் என்று சொல்லியிருந்தார்?

அவர் மரணத்திலிருந்து உயிர்தெழுவார்.

### இயேசு தாம் மரணத்திலிருந்து மறுபடியும் உயிர்தெழுவதாக சொன்னதைக் குறித்து யூத தலைவர்கள் என்ன நினைத்தனர்?

அவன் ஒரு பொய்யன் என்று நினைத்தனர்.

### சீஷர்கள் என்ன செய்வார்கள் என்று யூத தலைவர்கள் பயந்தனர்?

இயேசுவின் சீஷர்கள் அவருடைய சரீரத்தை திருடிக்கொண்டுபோய், அவர் மரணத்திலிருந்து உயிர்தெழுந்தார் என்று சொல்லுவார்கள் என்று நினைத்தனர்.

---

## 41:02

பிலாத்து அவர்களிடத்தில், உங்களுக்கு தேவைப்படுகிற சேவகர்களை வைத்து அந்தக் கல்லறையை காவல் செய்யுங்கள் என்றான். எனவே, அந்தக் கல்லறையின் வாசலுக்கு சீல் வைத்து, ஒருவரும் இயேசுவின் சரீரத்தை எடுத்துக் கொண்டு போகாத படிக்கு அங்கே சேவகர்களை நிறுத்தினார்கள்.

### இயேசுவின் கல்லறையை காக்கும்படி யூதத் தலைவர்கள் என்ன செய்தனர்?

அவர்கள் கல்லறைக்கு சீல் வைத்து, அந்தக் கல்லறையை பாதுகாக்கும்படி காவலாளிகளை வைத்தனர்.

---

### 41:03

இயேசு மரித்த அடுத்தநாள் ஓய்வு நாளாயிருந்தது. அந்நாளில் ஒருவரும் வேலை செய்ய மாட்டார்கள், எனவே இயேசுவின் நண்பர்கள் ஒருவரும் கல்லறைக்குப் போகவில்லை. ஆனால் ஓய்வு நாளுக்கு அடுத்த நாள் அதிகாலையில் நிறையப் பெண்கள் இயேசுவின் சரீரத்திற்கு நறுமணமூட்டும் படிக்கு, இயேசுவின் கல்லறைக்குப் போக புறப்பட்டனர்.

### பெண்கள் எப்போது இயேசுவின் கல்லறைக்குப் போனார்கள்?

ஓய்வு நாளுக்கு அடுத்தநாள் அதிகாலையில்.

---

### 41:04

பெண்கள் அங்கே போவதற்கு முன்பே, கல்லறையின் பகுதியில் நிலநடுக்கம் ஏற்பட்டது. வானத்திலிருந்து ஒரு தேவ தூதன் வந்து, கல்லறையின் வாசலில் வைத்திருந்த கல்லைப் புரட்டி, அதிலே உட்கார்ந்தான். அந்த தூதன் ஒளிரும் வெளிச்சத்தைப் போலவும், மின்னலைப் போலவும் இருந்தான். அந்த தூதனைப் பார்த்த சேவகர்கள் மிகவும் பயந்து, கீழே விழுந்து, செத்தவர்களைப் போல ஆனார்கள்.

### அந்தப் பெண்கள் கல்லறைக்குப் போகும்முன்னே அங்கே சம்பவித்த அற்புதமான காரியம் என்ன?

பூமி அதிர்ந்தது, ஒரு தேவ தூதன் அங்கே தோன்றி, அந்தக் கல்லை புரட்டி அதின்மேல் உட்கார்ந்துகொண்டிருந்தான்.

### தூதனைப் பார்த்த சேவகர்கள் என்ன செய்தனர்?

அவர்கள் பயந்து நடுங்கி, செத்தவர்களைப் போலானார்கள்.

---

### 41:05

அந்தப் பெண்கள் கல்லறைக்கு வந்தவுடன், தூதன் அவர்களிடத்தில், பயப்படாதிருங்கள், இயேசு இங்கே இல்லை. அவர் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார்! கல்லறைக்கு உள்ளே பாருங்கள் என்றான். அவர்கள் கல்லறைக்குள் பார்த்தபோது, இயேசுவின் சரீரத்தை வைத்திருந்த அந்த இடத்தில் அவர் சரீரம் இல்லை!

## கல்லறையின் அருகே வந்த பெண்களிடத்தில் தூதன் சொன்னது என்ன?

பயபடாதிருங்கள். கல்லறையை வந்துப் பாருங்கள, இயேசு உயிர்தெழுந்தார்.

---

## 41:06

பின்பு அதன் தூதன் பெண்களிடத்தில், நீங்கள் போய் சீஷர்களிடத்தில் இயேசு மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்தார். என்றும், அவர் அவர்களுக்கு முன்பு கலிலேயாவுக்குப் போனார் என்றும் சொல்லச் சொன்னான்.

## சீஷர்களிடத்தில் தூதன் என்ன சொல்லும்படி பெண்களிடம் சொன்னான்?

அவன் பெண்களிடத்தில், இயேசு மரணத்திலிருந்து உயிர்தெழுந்தார். அவர் உங்களுக்கு முன்னே கலிலேயாவுக்கு போகிறார் என்று சீஷர்களுக்குச் சொல்லும்படி சொன்னான்.

---

## 41:07

அந்த பெண்கள் ஆச்சரியப்பட்டு, மிகுந்த சந்தோஷத்தினால், சீஷர்களுக்கு அந்த நல்ல செய்தியை சொல்லும்படி ஓடினார்கள்.

---

## 41:08

அந்த பெண்கள் சீஷர்களுக்கு நல்ல செய்தியை சொல்லும்படி போகையில், இயேசு அவர்களுக்கு தோன்றிர்! அவர்கள் அவருடைய காலில் விழுந்தார்கள். இயேசு அவர்களிடத்தில், பயப்படாதிருங்கள். என்னுடைய சீஷர்களை கலிலேயாவுக்குப் போக சொல்லுங்கள். அவர்கள் என்னை அங்கே பார்ப்பார்கள் என்றார்.

## சீஷர்களை சந்திக்கும்படி சென்ற பெண்களை சந்தித்தது யார்?

இயேசு அவர்களுக்குத் தோன்றினார்.

## இயேசுவை அந்தப் பெண்கள் கண்டதும் என்ன செய்தார்கள்?

அவர்கள் அவரை வணங்கினார்கள்.

# 42. இயேசு பரலோகத்திற்குத் திரும்புதல்

## 42:01

தேவன் இயேசுவை மரணத்திலிருந்து எழுப்பின நாளில், அவருடைய இரண்டு சீஷர்கள் பக்கத்து ஊருக்குப் போய் கொண்டிருந்தார்கள். அப்போது இயேசுவுக்கு நடந்ததைப் பற்றி பேசி, அவர்தான் மேசியா என்று நம்பினோம் ஆனால் அவர் கொலை செய்யபட்டார் என்று பேசிக்கொண்டு நடந்து சென்றார்கள். அப்போது அந்தப் பெண்கள், இயேசு மறுபடியும் உயிர்த்தெழுந்தார் என்று சொன்னார்கள். ஆனால் அவர்களால் அதை நம்ப முடியவில்லை.

### வழியில் சென்ற இரண்டு சீஷர்கள் எதைக் குறித்து பேசிக்கொண்டுபோனார்கள்?

இயேசுவுக்கு சம்பவித்த காரியங்களைக் குறித்து பேசிக்கொண்டுபோனார்கள்.

---

## 42:02

இயேசு அங்கே தோன்றி, அவர்களோடு நடந்து சென்று, அவர்கள் பேசுகிறதைப் பற்றி அவர்களிடம் கேட்டார். அவர்கள் இயேசுவைக் கண்டுபிடிக்கவில்லை. பதிலாக, கடந்த சில நாட்களாக இயேசுவுக்கு நடந்த விஷயங்களைப் பற்றி அவரிடம் சொன்னார்கள். அந்த சீஷர்கள் எருசலேமில் நடந்த காரியங்களைக் குறித்து ஒன்றும் தெரியாத யாரோ ஒருவர் என்று நினைத்து இயேசுவிடம் எல்லாவற்றையும் சொன்னார்கள்

### வழியில் சென்ற இரண்டு சீஷர்களுக்கு இயேசு தோன்றியதும் அவர்கள் என்ன நினைத்தனர்?

எருசலேமில் நடந்த காரியங்கள் எதுவும் அறியாத ஒரு வழிப்போக்கன் என்று நினைத்தார்கள்.

---

## 42:03

வேதத்தில் மேசியாவைக் குறித்து முன்பு தீர்க்கத்தரிசிகளால் சொல்லப்பட்ட, அதாவது, கெட்ட மனிதர்கள் மேசியாவை துன்பப்படுத்தி, கொலை செய்வார்கள், ஆனாலும் அவர் மூன்று நாளுக்குப் பின் மறுபடியும் அவர் உயிர்த்தெழுவார் என்று சொல்லப்பட்டதையும் அவர்களுக்கு இயேசு விவரித்துச் சொன்னார்

### மேசியாவுக்கு என்ன சம்பவிக்கும் என்று தீர்க்கத்தரிசிகள் சொன்னது என்ன?

மேசியா பாடுபட்டு, கொலை செய்யப்படுவார், ஆனாலும் மூன்றாம் நாளில் உயிர்தெழுவார்.

---

## 42:04

அந்த இரண்டு பேரும் தங்கும்படி இருந்த அந்த ஊர் வந்தது, அப்போது சாயங்காலமாய் இருந்ததினால், அவர்களோடு தங்கும்படி இயேசுவை அழைத்தார்கள், எனவே இயேசு அவர்களோடு வீட்டிற்குள் போனார். அவர்கள் இரவு சாப்பிட உட்கார்ந்தபோது, இயேசு அப்பத்தை எடுத்து அதற்காக தேவனுக்கு நன்றி சொல்லி, அந்த அப்பத்தை பிட்டார். உடனே அவர்கள் அது இயேசு என்று புரிந்து கொண்டார்கள். உடனே அவர்கள் கண்களுக்கு இயேசு மறைந்தார்.

### இரண்டு சீஷர்களும் தம்மை அறிந்துகொண்டபோது, இயேசு என்ன செய்து கொண்டிருந்தார்?

அவர் அப்பம் பிட்டு, தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்திக்கொண்டிருந்தார்.

---

## 42:05

அவர் இயேசு தான்! அதினால் தான் அவர் தேவனுடைய வார்த்தையைச் சொல்லும் போது நமக்கு மிகவும் ஆச்சரியமாயிருந்தது என்று அவர்கள் இருவரும் ஒருவரோடு ஒருவர் சொல்லிக் கொண்டார்கள். உடனே அவர்கள் இருவரும் எருசலேமுக்குப் போனார்கள். அவர்கள் வந்து, சீஷர்களைப் பார்த்து, இயேசு உயிரோடிருக்கிறார்! நாங்கள் அவரைப் பார்த்தோம் என்றார்கள்!

### இயேசு அவர்களை விட்டுப் போனவுடனே அந்த இரண்டு சீஷர்களும் என்ன செய்தனர்?

அவர்கள் எருசலேமுக்குத் திரும்பிப்போய், மற்ற சீஷர்களிடத்தில் தாங்கள் இயேசுவை கண்டதாகவும், அவர் உயிரோடு இருப்பதையும் சொன்னார்கள்.

---

## 42:06

அப்படி சீஷர்கள் பேசிக்கொண்டிருக்கும் போது, திடீரென்று அவர்கள் இருந்த அறையில் இயேசு அங்கே தோன்றி உங்களுக்கு சமாதானம்! என்று சொன்னார். சீஷர்கள் அவரை ஆவி என்று நினைத்தார்கள். இயேசு அவர்களிடத்தில், ஏன் பயப்படுகிறீர்கள்? நான் தான், இயேசு! என்னுடைய கைகளையும், கால்களையும் பாருங்கள். ஆவிக்கு என்னைப்

போல் சரீரம் இருக்காது. அவர் ஆவி இல்லை என்று அவர்களுக்கு காண்பிக்க, சாப்பிட ஏதாவது கொடுங்கள் என்று கேட்டார். அவர்கள் மீன் துண்டுகளைக் கொடுத்தார்கள், அவர் அதை சாப்பிட்டார்.

### தாம் ஆவி இல்லை என்று இயேசு எப்படி சீஷர்களுக்கு நிரூபித்தார்?

அவர் ஒரு வறுத்த மீன்துண்டை எடுத்து சாப்பிட்டார்.

---

## 42:07

மேலும் இயேசு, என்னைப் பற்றி தேவனுடைய வார்த்தையில் எழுதபட்டிருக்கிற எல்லா நிறைவேற வேண்டும். இப்படி சம்பவிக்கும் என்று நான் உங்களுக்கு முன்பே சொல்லியிருக்கேன். அநேக வருடங்களுக்கு முன்பு வேதத்தில், தீர்கத்தரிசிகள் நான் மேசியா என்றும், பாடுபட்டு, மரித்து மறுபடியும் உயிர்தெழுவதைப் பற்றி சொல்லியிருக்கிறார்கள் என்று அவர்களுக்கு எல்லாவற்றையும் புரியும்படி விவரித்துச் சொன்னார்.

### தேவனுடைய வார்த்தையை சீஷர்கள் எப்படிப் புரிந்துகொண்டனர்?

இயேசு அவர்களுடைய மனக்கண்களைத் திறந்தார்.

---

## 42:08

மேலும் அந்தத் தீர்கத்தரிசிகள் என்னுடைய சீஷர்கள் தேவனுடைய வார்த்தையைப் பிரசங்கிப்பார்கள் என்றும் சொல்லியிருக்கிறார்கள். எல்லோரும் பாவத்தை விட்டு, மனந்திரும்பினால், தேவன் அவர்களுடைய பாவங்களை மன்னிப்பார் என்று அவர்கள் சொல்லுவார்கள். அவர்கள் அதை எருசலேமில் ஆரம்பித்து, எல்லா இடங்களுக்கும் போவார்கள். நான் செய்ததும், எனக்கு நடந்த எல்லாவற்றிக்கும் நீங்களே சாட்சியாயிருக்கிறீர்கள் என்றார்.

### இயேசுவின் சீஷர்கள் அறிவிக்க வேண்டிய செய்தி என்ன?

ஒவ்வொருவரும் தங்களுடைய பாவத்திலிருந்து இரட்சிக்கப்பட, மனந்திரும்ப வேண்டும்.

### இந்த செய்தியை இயேசுவின் சீஷர்கள் எங்கெல்லாம் பிரசங்கிப்பார்கள்?

அவர்கள் முதலில் எருசலேம் பின்பு எல்லா ஜனத்துக்கும் போய் பிரசங்கிப்பார்கள்.

---

## 42:09

நாற்பது நாட்கள், இயேசு அவருடைய சீஷர்களுக்கு அநேகந்தரம் தோன்றினார். சீஷர்கள் அல்லாத 500க்கும் அதிகமான பேருக்கும் அதே சமயத்தில் தோன்றினார்! மேலும் அவர் உயிரோடிருக்கிறார் என்று சீஷர்களுக்குக் காண்பித்து, தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்து போதித்தார்.

### எத்தனை நாட்கள் இயேசு சீஷர்களுக்கு தரிசனமானார்?

---

## 42:10

இயேசு அவருடைய சீஷர்களிடத்தில், வானத்திலும், பூமியிலும் உள்ள எல்லாவற்றிலும் எனக்கு தேவனால் அதிகாரம் கொடுக்கபட்டிருக்கிறது. எனவே, நீங்கள் போய் எல்லோரையும் என்னுடைய சீஷராக்குங்கள். அதின் அடையாளமாக அவர்களை பிதா, குமாரன் மற்றும் பரிசுத்த ஆவியின் பேரில் ஸ்நானம் பண்ணுங்கள். நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் அவர்களுக்கு சொல்லி, அதற்கு கீழ்படிய சொல்லுங்கள். நான் எப்போதும் உங்களோடு இருப்பேன். என்றார்.

### போய் என்ன செய்யும்படி இயேசு தம்முடைய சீஷர்களுக்குக் கட்டளைக்கொடுத்தார்?

அவர் சீஷர்களிடத்தில், எல்லா ஜனத்தையும் என்னுடைய சீஷராக்கி, அவர்களுக்குப் பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தில் ஞானஸ்நானம் கொடுத்து, நான் உங்களுக்குப் போதித்த யாவையும் கைக்கொள்ளும்படி அவர்களுக்குப் போதியுங்கள் என்றார்.

---

## 42:11

இயேசு உயிர்தெழுந்து நாற்பது நாட்களுக்குப்பின் சீஷர்களிடத்தில், நீங்கள் எருசலேமில் தங்கியிருங்கள், பிதா உங்களுக்கு வல்லமை கொடுப்பார். அதின் அடையாளமாக பரிசுத்த ஆவியானவர் உங்கள்மேல் வருவார். பின்பு இயேசு பரலோகத்திற்கு ஏறிப்போனார். அவர்கள் அவரைப் பார்த்துக் கொண்டிருக்கும் போது மேகம் அவரை மறைத்தது. எல்லாவற்றின் மேலும் அவருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டது, அவர் பிதாவின் வலது பக்கத்தில் உட்கார்ந்தார்.

### எதற்காக சீஷர்களை எருசலேமில் காத்திருக்கும்படி இயேசு சொன்னார்?

பிதா அவர்களுக்கு பரிசுத்த ஆவியின் வல்லமையைத் தர காத்திருக்குக்கும்படி சொன்னார்.

## இயேசு தாம் உயிர்தெழுந்து நாற்பது நாட்கள் கழித்து எங்கே போனார்?

பரலோகத்திற்கு ஏறிப் போனார்.

## இப்போது இயேசு என்ன செய்துகொண்டிருக்கிறார்?

அவர் தேவனுடைய வலது பாரிசத்தில் உட்கார்ந்துகொண்டு, சகலத்தையும் ஆட்சி செய்கிறார்.

# 43. சபைகளின் ஆரம்பம்

## 43:01

இயேசு பரலோகம் சென்ற பின்பு, அவருடைய சீஷர்கள் எருசலேமில் இயேசு சொன்னதுபோல தங்கியிருந்தார்கள். அவர்கள் கூடி நம்பிக்கையோடு தொடர்ந்து ஜெபித்துக் கொண்டிருந்தார்கள்.

### சீஷர்கள் எருசலேமில் காத்துக்கொண்டிருக்கும்போது என்ன செய்தனர்?

அவர்கள் எல்லோரும் சேர்ந்து தொடர்ந்து ஜெபித்துக்கொண்டிருந்தனர்.

---

## 43:02

ஒவ்வொரு வருடமும் பஸ்கா முடிந்து 50ஆவது நாள், யூதர்கள் பெந்தேகோஸ்தே என்னும் ஒரு நாளை கொண்டாடுவார்கள். பெந்தேகோஸ்தே நாள் வரும்போது, யூதர்கள் கோதுமையின் அறுவடையை, எல்லா ஊர்களிலும் இருக்கும் யூதர்கள் எருசலேமுக்கு வந்து அவர்கள் சேர்ந்து கொண்டாடுவார்கள். அந்த வருடம் இயேசு பரலோகம் சென்ற ஒரு வாரத்தில் பெந்தேகோஸ்தே நாள் வந்தது.

### பெந்தேகோஸ்தே நாளை யூதர்கள் எப்போது கொண்டாடுவார்கள்?

ஒவ்வொரு வருடமும் பஸ்கா முடிந்து 50 வது நாளில் கொண்டாடுவார்கள்.

### இயேசு மரித்து உயிர்தெழுந்த பின்பு பெந்தேகோஸ்தே நாளில் விசுவாசிகளுக்கு சம்பவித்தது என்ன?

காற்று போல ஒரு சத்தம் உண்டாகி, ஒவ்வொருவருடைய தலையின்மேலும் அக்கினி போன்று காட்சி தோன்றி, அவர்கள் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு அந்நிய பாஷைகளைப் பேசினார்கள்.

---

## 43:03

விசுவாசிகள் எல்லோரும் கூடியிருக்கும்போது, உடனே, பெருங்காற்று போன்ற சத்தம் அந்த வீட்டில் உண்டானது. அப்போது எல்லோருடைய தலையின் மேலும் எரிகிற அக்கினி போன்று காணப்பட்டது. அப்போது அவர்கள் எல்லோரும் பரிசுத்த ஆவியினால் நிரப்பபட்டார்கள், பின்பு வெவ்வேறு மொழிகளில் அவர்கள் பேசினார்கள். அந்த மொழிகளை பரிசுத்த ஆவியானவர் பேசும்படிச் செய்தார்.

---

## 43:04

எருசலேமில் இருந்த ஜனங்கள் அந்த சத்தத்தைக் கேட்டு, என்ன நடக்கிறது என்று பார்க்கும்படி கூடி வந்தார்கள். அவர்கள் தேவன் செய்த மகத்துவங்களைப் பேசிக் கொண்டிருந்தார்கள். அங்கே வந்தவர்களின் தாய் மொழிகளை அவர்கள் பேசுகிறதைக் கேட்டு, அங்கே வந்திருந்த எல்லோரும் மிகவும் ஆச்சரியபட்டார்கள்,

### கூட்டத்தில் இருந்த ஜனங்கள் ஏன் ஆச்சரியப்பட்டனர்?

ஜனங்களுடைய சொந்த பாஷைகளில் சீஷர்கள் பேசிகிறதை அவர்கள் கேட்டார்கள்.

---

## 43:05

ஜனக்கூட்டத்தில் இருந்த சிலர், சீஷர்கள் குடித்திருப்பார்கள் என்றனர். ஆனால் பேதுரு எழுந்து நின்று, என்னை கவனியுங்கள்! நாங்கள் குடிக்கவில்லை, கடைசி நாட்களில் நடக்கும் என்று, யோவேல் தீர்க்கதரிசி சொன்ன தேவனுடைய வார்த்தை என்னவென்றால், என்னுடைய ஆவியை ஊற்றுவேன் என்று சொல்லப்பட்டதை தான் நீங்கள் இப்போது பார்க்கிறீர்கள் என்றான்.

### எந்தக் காரணத்தினால் சீஷர்கள் இப்படி பேசுகிறார்கள் என்று சில ஜனங்கள் நினைத்தனர்?

அவர்கள் குடித்து வெறித்து இருக்கிறார்கள் என்றார்கள்.

### எது அவர்களை அந்நிய பாஷை பேச வைத்ததாக பேதுரு சொன்னான்?

தேவன் தம்முடைய ஆவியை ஊற்றினதினால் என்று பேதுரு சொன்னான்.

---

## 43:06

இஸ்ரவேலின் மனிதர்களே, இயேசு ஒரு மனிதனாய், அவர் யார் என்று நீங்கள் அறியும்படி, அநேக அற்புதங்களை தேவனுடைய வல்லமையினால் செய்தார். அதை நீங்கள் அறிந்தும் இயேசுவை சிலுவையில் அறைந்தீர்கள்!

### இயேசுவை சிலுவையில் அறைய யார் தான் காரணம் என்று பேதுரு சொன்னான்?

கூட்டத்தில் இருந்த ஜனங்கள்.

---

## 43:07

இயேசு மரித்தார், ஆனால் தேவன் அவரை உயிரோடு எழுப்பினார். உம்முடைய பரிசுத்தரை கல்லறையில் கெட்டுப்போக விடமாட்டீர் என்று தீர்க்கதரிசி எழுதினபடி, இயேசுவை தேவன் உயிரோடு எழுப்பினதற்கு நாங்கள் சாட்சிகளாய் இருக்கிறோம்.

### இயேசு மறுபடியும் எப்படி உயிரோடு இருப்பதாக பேதுரு சொன்னான்?

தேவன் அவரை மரணத்திலிருந்து எழுப்பினதினால்.

---

## 43:08

பிதாவாகிய தேவன் இயேசுவை அவருடைய வலது பக்கத்தில் உட்காரும்படி செய்து அவரை மகிமைப்படுத்தினார். மேலும் தாம் சொன்னபடியே பரிசுத்த ஆவியானவரை எங்களுக்குள் அனுப்பினார். நீங்கள் இப்போது பார்க்கிற யாவையும் பரிசுத்த ஆவியானவரே செய்கிறார்.

### எது சீஷர்களை அந்நிய பாஷை பேச வைத்தது?

பரிசுத்த ஆவியே அவர்களை அந்நிய பாஷையை பேச வைத்தது.

---

## 43:09

நீங்கள் இயேசுவை சிலுவையில் அறைந்தீர்கள், ஆனால் தேவன் இயேசுவை எல்லாவற்றிற்கும் ஆண்டவராகவும், மேசியாவாகவும் செய்தார்!

### இயேசுவை சிலுவையில் அறைய யார் தான் காரணம் என்று பேதுரு சொன்னான்?

கூட்டத்தில் இருந்த ஜனங்கள்.

### எந்த இரண்டு காரியங்கள் தேவனால் இயேசுவுக்கு கொடுக்கப்பட்டது என்று பேதுரு சொன்னான்?

தேவன் மற்றும் மேசியா.

---

### 43:10

பேதுரு சொன்ன எல்லாவற்றையும் கேட்டதினால் ஜனங்கள் தொடப்பட்டு, நாங்கள் இப்போது என்ன செய்யவேண்டும்? என்று பேதுருவையும், சீஷர்களையும் பார்த்துக் கேட்டனர்.

### பேதுருவின் செய்தியைக் கேட்ட ஜனங்கள் என்ன செய்தனர்?

அவர்கள் மனமுடைந்து, சகோதரரே, நாங்கள் என்ன செய்ய வேண்டும்? என்று கேட்டனர்.

---

### 43:11

பேதுரு அவர்களை நோக்கி, நீங்கள் எல்லோரும் பாவத்தை விட்டு, மனந்திரும்ப வேண்டும், அப்போது தேவன் உங்களுடைய பாவங்களை மன்னிப்பார். பின்பு பிதா, குமாரன் மற்றும் பரிசுத்த ஆவியினால் ஸ்நானம் பெறவேண்டும். பின்பு அவர் உங்களுக்கு பரிசுத்த ஆவியின் வரங்களையும் கொடுப்பார் என்றான்.

### ஜனங்கள் என்ன செய்யும்படி பேதுரு சொன்னான்?

தேவன் அவர்களுடைய பாவங்களை மன்னிக்கும்படி, அவர்களை மனந்திரும்பி, இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெறும்படி கூறினான்.

---

### 43:12

பேதுரு சொன்னதை கேட்டு ஏறக்குறைய 3000 பேர்கள் இயேசுவை நம்பினார். பின்பு அவர்கள் எல்லோரும் ஸ்நானம் எடுத்து, எருசலேமின் சபையில் சேர்ந்தனர்.

### அந்நாளில் எத்தனைப்பேர் விசுவாசித்து, ஞானஸ்நானம் பெற்றனர்?

ஏறக்குறைய 3000 பேர்கள்.

---

### 43:13

விசுவாசிகள் தொடர்ந்து, அப்போஸ்தலர்கள் போதித்தததைக் கேட்டனர். மேலும் அவர்கள் ஒருவரையொருவர் அதிகமாய் சந்தித்து, சாப்பிட்டு, மற்றவர்களுக்காக ஜெபித்தனர். அவர்கள் சேர்ந்து தேவனை துதித்து, அவர்கள் அறிந்திருந்த

காரியங்களை ,மற்றவர்களுக்கும் அறிவித்தனர். அங்கே இருந்தவர்கள் மத்தியில் நற்சாட்சி பெற்றதினால் அநேகர் விசுவாசிகளாக மாறினர்.

## சீஷர்கள் தங்களுடைய நேரத்தை எப்படி செலவு செய்தனர்?

அப்போஸ்தலர்களின் போதனைகளைக் கேட்பதும், மற்றவர்களோடு சேர்ந்து நேரத்தை நேரத்தை செலவிடுவது, சேர்ந்து சாப்பிடுவது, மற்றவர்களுக்காக ஜெபிப்பது, சேர்ந்து தேவனை ஆராதிப்பது மற்றும் தங்களுடைய உடைமைகளை மற்றவர்களிடம் பகிர்ந்துகொள்வது போன்ற காரியங்கள் செய்தனர்.

# 44. பேதுருவும் யோவானும் ஒரு பிச்சைக்காரனை சுகமாக்குதல்

## 44:01

ஒருநாள் பேதுருவும் யோவானும் தேவாலயத்திற்கு போனார்கள். அப்போது அந்த வாசலில் ஒரு முடவன் உட்கார்ந்து பிச்சை எடுத்துக் கொண்டிருந்தான்.

### நடக்க முடியாத முடவன் பேதுரு மற்றும் யோவானிடம் என்ன தருவார்கள் என்று எதிர்பார்த்தான்?

பணம்.

---

## 44:02

பேதுரு அந்த முடவனைப் பார்த்து, என்னிடத்தில் கொடுப்பதற்கு பணம் இல்லை, ஆனால் என்னிடத்தில் இருக்கிறதை உனக்குத் தருகிறேன் என்று சொல்லி, இயேசுவின் நாமத்தில் எழுந்து நட என்றான்!

### மாறாக பேதுரு அந்த முடவனுக்கு என்ன கொடுத்தான்?

இயேசுவின் நாமத்தினால் பேதுரு அவனை குணமாக்கினான்.

---

## 44:03

உடனே தேவன் அவனை குணமாக்கினதினால் அந்த முடவன் நடந்தான். அவன் குதித்து தேவனை மகிமைப் படுத்தினான். அங்கே முன்பதாக இருந்த ஜனங்கள் ஆச்சரியப்பட்டனர்.

---

## 44:04

உடனே சுகம் பெற்ற அந்த மனிதனைப் பார்க்க அநேக ஜனங்கள் அங்கே வந்தனர். பேதுரு அவர்களிடத்தில், அவன் சுகமானான். ஆனால் நீங்கள் ஆச்சரியபட வேண்டாம். எங்களுடைய பலத்தினாலும், நாங்கள் தேவனை ஆராதிப்பதினாலும் அவனை குணமாக்கவில்லை, மாறாக நாங்கள் இயேசுவை நம்புகிறோம் எனவே அவருடைய வல்லமைதான் இவனை குணமாக்கிற்று என்றான்.

### முடவன் சுகமடையும்படி பேதுரு என்ன சொன்னான்?

இயேசுவின் வல்லமையையும் மற்றும் இயேசு கொடுக்கும் நம்பிக்கையும்.

---

## 44:05

ரோமர்களின் அதிகாரியிடம் நீங்கள் தான் இயேசுவை கொலைசெய்ய சொன்னீர்கள். எல்லோருக்கும் ஜீவனைக் கொடுக்கும் இயேசுவை நீங்கள் கொலை செய்தீர்கள். ஆனால் தேவன் அவரை மரணத்திலிருந்து எழுப்பினார். நீங்கள் செய்ததை நீங்கள் அறியாமல் செய்தீர்கள் ஆனால் தீர்கத்தரிசிகளால் சொல்லப்பட்டது நிறைவேறிற்று. தேவனே அப்படி நடக்கும்படி செய்தார், இப்போது நீங்கள் மனந்திரும்பி, தேவனிடத்தில் சேருங்கள். தேவன் உங்களுடைய பாவங்களைப் போக்குவார் என்றான்.

### யார் இயேசுவை கொன்றதாக பேதுரு சொன்னான்?

ஜனங்கள் தான் ரோம அதிகாரியிடம் இயேசுவை கொலை செய்யும்படி கேட்டுக்கொண்டார்கள்.

### இயேசுவை கொன்று எந்த தீர்கத்தரிசனத்தை ஜனங்கள் நிறைவேற்றினார்கள்?

தீர்க்கதரிசனம் சொல்லப்பட்டபடி மேசியா பாடுபட்டு மரிப்பது.

### ஜனங்கள் என்ன செய்யும்படி பேதுரு சொன்னான்?

ஜனங்கள் மனந்திரும்பி தேவனிடத்தில் திரும்பினால் அவர்களுடைய பாவங்கள் மன்னிக்கப்படும்.

---

## 44:06

பேதுருவும் யோவானும் செய்ததை யூத தேவாலய தலைவர்கள் கேட்டு, கோபமடைந்து, அவர்கள் இருவரையும் சிறையில் அடைத்தனர். ஆனால் பேதுரு சொன்ன

வார்த்தையைக் கேட்ட அநேகர் விசுவாசித்தனர். இயேசுவை விசுவாசித்தவர்களின் எண்ணிக்கை 5,000 ஆக உயர்ந்தது.

### பேதுருவின் செய்தியைக்கேட்டு எத்தனைப்பேர் இயேசுவின்மேல் நம்பிக்கை வைத்தனர்?

ஏறக்குறைய 5000 பேர்கள்.

---

## 44:07

அடுத்தநாள், யூத தலைவர்கள் பேதுருவையும், யோவானையும் மற்றும் அந்த சுகம்பெற்ற முடவனையும் மதத் தலைவர்களிடத்தில் கொண்டு போனார்கள். அவர்கள் எந்த வல்லமையினால் இந்த முடவனை சுகமாக்கிணீர்கள்? என்று பேதுருவையும், யோவானையும் கேட்டார்கள்.

---

## 44:08

பேதுரு அவர்களிடத்தில் இந்த மனிதன் மேசியா என்ற இயேசுவின் நாமத்தினால் சுகம் பெற்றான். நீங்கள் அவரை சிலுவையில் அறைந்தீர்கள், ஆனால் தேவன் அவரை மீண்டும் உயிரோடு எழுப்பினார்! நீங்கள் அவரை ஏற்றுக் கொள்ளவில்லை, ஆனால் இரட்சிக்கபடுவதற்கு இயேசுவைத் தவிர வேறே நாமம் இல்லை என்றான்!

### இரட்சிக்கப்பட வேண்டுமானால் எந்த ஒரேஒரு வழி உண்டு?

இயேசுவின் வல்லமையினால் மாத்திரம் தான் இரட்சிக்கப்பட முடியும்.

---

## 44:09

பேதுருவும் யோவானும் தைரியமாக பேசினதைப் பார்த்து, அவர்கள் படிக்காத சராசரி மனிதர்கள் என்று தலைவர்கள் அறிந்திருந்ததினால் ஆச்சரியப்பட்டனர். மேலும் அவர்கள் இயேசுவோடு இருந்ததை அவர்கள் அறிந்து, இனிமேல் இயேசுவைப் பற்றி எந்த பிரசங்கமும் ஜனங்களுக்கு செய்யக்கூடாது என்று அநேகக் காரியங்களையும் சொல்லி பேதுருவையும், யோவானையும் அனுப்பிவிட்டனர்.

## பேதுருவும் யோவானும் பிரசங்கள் செய்கிறதைப் பார்த்து ஏன் யூததலைவர்கள் ஏன் ஆச்சரியப்பட்டனர்?

பேதுருவும் யோவானும் படிக்காத சராசரி மனிதர்கள்.

## கடைசியாக பேதுருவையும் யோவானையும் என்ன செய்யும்படி யூததலைவர்கள் முடிவு செய்தனர்?

அவர்களை கண்டித்து பின்பு அனுப்பிவிட்டனர்.

# 45. ஸ்தேவான் மற்றும் பிலிப்பு

## 45:01

முதலில் கிறிஸ்தவர்களாக மாறியவர்களில் தலைவனாக இருந்தவன் பெயர் ஸ்தேவான். எல்லோரும் அவனை கணம் பண்ணினார்கள். பரிசுத்த ஆவியானவர் அவனுக்கு வல்லமையையும், நியானத்தையும் தந்ததினால், ஸ்தேவான் அநேக அற்புதங்களைச் செய்தான், மேலும் அவன் இயேசுவைப் பற்றி பிரசங்கம் செய்தபோது அநேக ஜனங்கள் அவனை விசுவாசித்தார்கள்.

### ஸ்தேவான் எப்படிப்பட்டவன்?

அவன் பரிசுத்த ஆவியினால் நிரப்பபட்டவனும், ஞானமுள்ளவனும் மற்றும் நற்சாட்சி பெற்றவன்.

---

## 45:02

ஒருநாள் ஸ்தேவான் இயேசுவைப் பற்றி போதித்துக் கொண்டிருக்கும்போது, இயேசுவை ஏற்றுக் கொள்ளாத சில யூதர்கள் அங்கே வந்து, அவனிடம் வாக்குவாதம் செய்தனர். அவர்கள் ஸ்தேவான்மேல் மிகவும் கோபமடைந்து, மதத் தலைவர்களிடம் போய், ஸ்தேவான் மோசேயைக் குறித்தும், தேவனைக் குறித்தும் தவறாய் பேசுகிறான்! என்று பொய் சொன்னார்கள். எனவே மதத் தலைவர்கள் ஸ்தேவானைப் பிடித்து, யூதர்களின் பிரதான ஆசாரியர்கள் மற்ற தலைவர்களிடதிற்கு கொண்டு போய், ஸ்தேவானைப் பற்றி பொய்யான சாட்சிகளை சொல்லும்படி அநேகரை வரவழைத்தார்கள்.

### ஸ்தேவானுக்கு எதிராக யூதர்கள் எந்த பொய் குற்றத்தை சுமத்தினார்கள்?

மோசேக்கும் தேவனுக்கும் விரோதமாய் பேசினான் என்று சொன்னார்கள்.

---

## 45:03

பிரதான ஆசாரியன் ஸ்தேவானிடத்தில் இவர்கள் உன்னைப் பற்றி சொல்லுவது உண்மை தானா? என்று கேட்டான். பிரதான ஆசாரியனுக்கு பதிலாக ஸ்தேவான் அநேகக் காரியங்களைச் சொன்னான். அதாவது, தேவன் இஸ்ரவேலருக்கு ஆபிரகாம் நாட்கள் முதல் இயேசுவின் நாட்கள் வரைக்கும் அநேக அற்புதங்கள் செய்தார், ஆனாலும் ஜனங்கள் தேவனுக்குக் கீழ்ப்படியாமல் போனார்கள். அதேபோல நீங்களும் தேவனை எதிர்த்து, அவருக்கு விரோதமான காரியங்களைச் செய்து, பரிசுத்த ஆவியை

புறக்கணித்து, அவருடைய தீர்க்கதரிசிகளை கொலை செய்கிறீர்கள்! அதிலும் மிக மோசமான காரியம் நீங்கள் அந்த மேசியாவை கொன்று போட்டது தான் என்றான்!

### ஜனங்கள் தங்களுடைய முன்னோர்களை விட எந்த மோசமான காரியத்தை ஜனங்கள் செய்ததாக ஸ்தேவான் சொன்னான்?

அவர்கள் மேசியாவை கொன்றுபோட்டதை.

---

## 45:04

மதத்தலைவர்கள் அதைக் கேட்டு, மிகவும் கோபமடைந்து, அவர்களுடைய காதுகளை மூடிக்கொண்டு, ஸ்தேவானை சத்தமாக திட்டினார்கள். பின்பு அவனைப் பிடித்து இழுத்து, நகரத்திற்கு வெளியே கொண்டு போய் அவன் சாகும்படி கல்லெறிந்தார்கள்.

### ஸ்தேவன் மேல் உள்ள குற்றத்திற்காக மதத்தலைவர்கள் என்ன செய்தனர்?

ஸ்தேவானை பிடித்து நகரத்திற்கு வெளியே கொண்டுபோய், அவன்மேல் கல்லெறிந்து கொன்றுபோட்டார்கள்.

---

## 45:05

ஸ்தேவான் மரிக்கும் போது, என்னுடைய ஆவியை எடுத்துக் கொள்ளும் என்று சத்தமாக சொல்லி, முழங்காலில் நின்று மிகவும் அலறினான். ஆண்டவரே, இந்தப் பாவத்தை இவர்கள் மேல் சுமத்தாதிரும் என்று சொல்லி மரித்துப் போனான்.

### ஸ்தேவான் மரிக்கும்முன்பு கடைசியாக சொன்ன வார்த்தை என்ன?

தேவனே, இந்த பாவத்தை இவர்கள்மேல் சுமத்தாதிரும்.

---

## 45:06

அந்த நாள் முதல் எருசலேமில் இருந்தவர்கள் இயேசுவைப் பின்பற்றுகிறவர்களை கொடுமைபடுத்த ஆரம்பித்தனர். அதினால் அங்கே இருந்த கிறிஸ்தவர்கள் மற்ற இடங்களுக்கு சிதறிப் போனார்கள். அதினால் அவர்கள் எங்கே போனார்களோ அங்கேயெல்லாம் இயேசுவைக்குறித்து பிரசங்கித்தார்கள்.

### ஸ்தேவானை ஜனங்கள் கொன்றுபோடும்படி அதிகாரம் பெற்று வந்தவன் யார்?

சவுல்.

### எருசலேமில் துன்புறுத்தல் ஆரம்பித்ததும் விசுவாசிகள் என்ன செய்தனர்?

அவர்கள் மற்ற இடங்களுக்கு போய், எங்கெல்லாம் போனார்களோ அங்கெல்லாம் இயேசுவைக்குறித்து பிரசங்கம் செய்தார்கள்.

---

## 45:07

எருசலேமிலிருந்து மற்ற இடங்களுக்கு சிதறிப்போன கிறிஸ்தவர்களில் பிலிப்பு என்னும் ஒருவன் இருந்தான். அவன் சமாரியாவுக்குப் போயிருந்தான். அங்கே அவன் இயேசுவைக் குறித்து பிரசங்கம் செய்ததினால் அநேகர் விசுவாசித்து, இரட்சிக்கபட்டார்கள். ஒருநாள், தேவதூதன் அவனிடத்தில், வனாந்திரத்தில் ஒரு பாதை வழியாக நடந்து போகும்படி சொன்னான். பிலிப்பும் அப்படியே அந்த பாதையில் நடந்துபோகும் போது, வேறொருவன் ரதத்தில் வருகிறதைப் பார்த்தான். அவன் எத்தியோப்பியா தேசத்தின் முக்கிய அதிகாரியாயிருந்தான். அவனிடத்தில் போய் பேசும்படி பரிசுத்த ஆவியானவர் பிலிப்புவிடம் சொன்னார்.

### வனாந்திர வழியில் பிலிப்பு யாரை சந்தித்தான்?

எத்தியோப்பியாவின் முக்கியமான அதிகாரியை.

---

## 45:08

எனவே பிலிப்பு, அந்த ரத்தத்திற்கு பக்கத்தில் போய், அந்த எத்தியோப்பியன் தேவனுடைய வார்த்தையை வாசிக்கிரதைப் பார்த்தான். அவன் ஏசாயா தீர்க்கதரிசன புத்தகத்தை படித்துக் கொண்டிருந்தது என்னவென்றால். ஒரு ஆட்டுக்குட்டியைப் போல ஒருவரை கொலை செய்யும்படி கொண்டு போனார்கள், அவர் அமைதியாக ஒன்றும் பேசாமல் இருந்தார். ஆட்டுக்குட்டியானவரை அவமானப்படுத்தி, துன்பப்படுத்தினார்கள். பின்பு அவரைக் கொன்றுப் போட்டார்கள்.

### பிலிப்பு எத்தியோப்பிய அதிகாரியை சந்திக்கும்போது அவன் என்ன செய்துகொண்டிருந்தான்?

ஏசாயா தீர்க்கதரிசன புத்தகத்தை வாசித்துக்கொண்டிருந்தான்.

---

## 45:09

பிலிப்பு எத்தியோப்பியனிடத்தில் நீர் வாசிக்கிறது, உமக்கு புரிகிறதா? என்று கேட்டான். அதற்கு அவன், இல்லை, யாராவது எனக்கு இதை புரியும்படி சொன்னால் தான் புரியும் என்றான். பின்பு அவன் பிலிப்புவை கூப்பிட்டு, அருகில் உட்காரவைத்து, ஏசாயா யாரைப் பற்றி இங்கே எழுதியிருக்கிறான்? அவனைப் பற்றியா? என்று கேட்டான்.

### அந்த அதிகாரி வாசித்துக்கொண்டிருந்த தீர்க்கதரிசனம் அவனுக்கு புரிந்ததா?

இல்லை. மற்றவன் அவனுக்கு விளக்கிச்சொல்ல வேண்டியிருந்தது.

---

## 45:10

பிலிப்பு அந்த ரதத்தில் ஏறி உட்கார்ந்து, ஏசாயா இங்கே இயேசுவைக்குறித்து எழுதியிருக்கிறா என்று சொன்னான். மேலும் பிலிப்பு வேதத்திலிருந்து அநேக காரியங்களைப் பற்றி அவனோடு பேசி, அவனுக்கு இயேசுவின் நற்செய்தியை சொன்னான்.

### தீர்க்கதரிசனத்தில் ஆட்டுக்குட்டி என்று யாரைக் குறிப்பிடுவதாக பிலிப்பு சொன்னான்?

அது இயேசுவைக் குறிப்பதாக சொன்னான்.

---

## 45:11

அப்படியே அவர்கள் இருவரும் பிரயாணம் பண்ணி, தண்ணீர் இருக்கும் ஓர் இடத்திற்கு வந்தார்கள். எத்தியோப்பியன், பார்! இங்கே கொஞ்சம் தண்ணீர் இருக்கிறது! நான் ஸ்நானம் எடுக்கலாமா? என்று கேட்டு, ரதத்தை நிறுத்தும்படி வேலைக்காரனிடம் சொன்னான்.

### பிலிப்பு எல்லாவற்றையும் விளக்கிச் சொன்னபின்பு, அந்த எத்தியோப்பியன் கொஞ்சம் தண்ணீரைப் பார்த்து என்ன கேட்டான்?

ஞானஸ்நானம் பெறவேண்டும் என்று கேட்டான்.

---

## 45:12

பின்பு அவர்கள் இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள். பிலிப்பு, எத்தியோப்பியனுக்கு ஸ்நானம் கொடுத்தான். பின்பு அவர்கள் இருவரும் தண்ணீரிலிருந்து வெளியே வந்தார்கள். உடனே பரிசுத்த ஆவியானவர், பிலிப்பு, இயேசுவைப் பற்றி தொடர்ந்து மற்றவர்களுக்கு சொல்லும்படிக்கு அங்கேயிருந்து எடுத்துக் கொண்டு போனார்.

### எத்தியோப்பிய அதிகாரி ஞானஸ்நானம் பெற்றவுடன் பிலிப்புவுக்கு சம்பவித்தது என்ன?

பரிசுத்த ஆவியானவர் அவனை கொண்டுபோய்விட்டார்.

---

## 45:13

அதற்கு பின்பு எத்தியோப்பியன், தான் இயேசுவை யார் என்று தெரிந்து கொண்டதினால், சந்தோஷமாக தன் வழியே போனான்.

### பிலிப்பு காணாமற்போனபின்பு, அந்த எத்தியோப்பியன் என்ன செய்தான்?

அவன் இயேசுவை அறிந்ததை நினைத்து சந்தோஷத்துடன், தன் பிரயாணத்தைத் தொடர்ந்து தன்னுடைய வீட்டிக்குப் போனான்.

# 46. பவுல் கிருஸ்தவனாய் மாறுதல்

## 46:01

சவுல் என்று ஒருவன் இருந்தான். அவன் இயேசுவை நம்பாதவன். இவன் வாலிபனாய் இருக்கும் போது, ஸ்தேவானை கொலை செய்தவர்களோடு இருந்தவன். அதன் பின்பு விசுவாசிகளைத் துன்புறுத்தினான். இவன் எருசலேமில் வீடுகள் தோறும் சென்று, ஆண்களையும் பெண்களையும் பிடித்து சிறையில் போடும் படிக்கு, பிரதான ஆசாரியரால் கொடுக்கப்பட்ட அதிகாரத்தினால் தமஸ்குவிற்கு சென்று அங்கே இருக்கும் கிறிஸ்தவர்களைப் பிடித்து, எருசலேமுக்கு கொண்டு வரும்படி அனுப்பபட்டிருந்தான்.

### சவுல் ஏன் தமஸ்குவிற்கு போனான்?

கிறிஸ்தவர்களை பிடித்து எருசலேமுக்கு கொண்டுவருவதற்கு.

---

## 46:02

எனவே சவுல் தமஸ்குற்கு சமீபமாய் போகும் வழியில், வானத்திலிருந்து ஒரு வெளிச்சம் அவனைச் சுற்றி தோன்றிற்று. உடனே சவுல் கீழே விழுந்தான். உடனே ஒரு சத்தம் உண்டாகி, சவுலே! சவுலே! நீ ஏன் என்னைத் துன்பப்படுத்துகிறாய்? என்றது. அதற்கு சவுல், ஆண்டவரே நீர் யார்? என்று கேட்டான். இயேசு அவனிடத்தில். நீ துன்பபடுத்துகிற இயேசு நானே என்று பதில் சொன்னார்.

### தமஸ்குவின் வழியில் சவுலிடம் இயேசு கேட்ட கேள்வி என்ன?

ஏன் என்னைத் துன்பப்படுத்துகிறாய்?

---

## 46:03

சவுல் எழுந்தபோது, அவனால் பார்க்க முடியவில்லை. அவனுடைய நண்பர்கள் அவனை தமஸ்குவிற்கு கொண்டு போனார்கள். அங்கே சவுல் மூன்று நாட்கள் எதையும் சாப்பிடாமலும், ஒன்றும் குடிக்காமலும் இருந்தான்.

## வெளிச்சமான ஒளியைப் பார்த்துவிட்டு எழுந்த சவுலுக்கு என்ன நடந்தது?

சவுலுக்கு பார்க்கமுடியவில்லை, அவனுடைய நண்பர்களின் உதவியில் அவன் தமஸ்குவிற்கு போனான். அங்கே மூன்று நாள் சாப்பிடவும், எதுவும் குடிக்கவும் இல்லை.

---

### 46:04

தமஸ்குவில் ஒரு தீர்கத்தரிசி இருந்தான் அவன் பெயர் அனனியா. தேவன் அவனிடத்தில் சவுல் இருக்கும் வீட்டிற்குப் போய், அவன்மேல் கைகளை வைத்தால் அவன் மறுபடியும் பார்வையடைவான் என்று சொன்னார். ஆனால் அனனியா, ஆண்டவரே, இந்த மனிதன் விசுவாசிகளைத் துன்பப்படுத்துகிறதைக் கேட்டிருக்கிறேன் என்று சொன்னான். பின்பு தேவன் அனனியாவினிடத்தில், நீ போ! நான் அவனை என்னுடைய நாமத்தை யூதர்களுக்கும், மற்ற ஜனங்களுக்கும் சொல்லும்படித் தெரிந்து கொண்டேன். அவன் என் நாமத்தின் நிமித்தம் அநேக பாடுகள் படுவான் என்றார்.

## அனனியா ஏன் சவுலிடம் பேச பயந்தான்?

சவுல் விசுவாசிகளைத் துன்பப்படுத்துகிறவன் என்று அனனியா கேள்விப்பட்டிருந்தான்.

## தேவன் சவுலை தெரிந்துநோக்கம் என்னவென்று சொன்னார்?

சவுல் தேவனுடைய நாமத்தை யூதர்களுக்கும் மற்ற ஜனங்களுக்கும் பிரசங்கிக்கும்படி.

---

### 46:05

எனவே அனனியா, சவுலை சந்தித்து, நீ வந்த வழியிலே உனக்குத் தோன்றின இயேசு, நீ பார்வையடையும் படிக்கும், பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படும்படிக்கும் என்னை அனுப்பினார் என்று சொல்லி அவன் மேல் கையை வைத்தான். உடனே அவன் பார்வையடைந்து, ஸ்நானம் பெற்றான். பின்பு சாப்பிட்டு, பெலனடைந்தான்.

## சவுல் மறுபடியும் பார்வையடைய அனனியா என்ன செய்தான்?

அவன் சவுல்மேல் கைகளை வைத்தான்.

## சவுல் திரும்பவும் பார்வையடைந்ததும் அனனியா என்ன செய்தான்?

அனனியா அவனுக்கு ஞானஸ்நானம் கொடுத்தான்.

---

## 46:06

அங்கே தமஸ்குவில், யூதர்களுக்கு தேவனுடைய குமாரனாகிய இயேசுவை பிரசங்கித்தான். சவுல் விசுவாசிகளை கொல்லும்படி போனான், ஆனால் இப்போது இயேசுவை விசுவாசித்தான்! யூதர்கள் ஆச்சரியப்பட்டார்கள். சவுல் யூதர்களோடு வாக்குவாதம் செய்து, இயேசுவை மேசியா என்று அவர்களுக்குச் சொன்னான்.

### உடனே யூதர்களுக்கு சவுல் என்ன பிரசங்கிக்க துவங்கினான்?

இயேசுவே தேவனுடைய குமாரன்!

---

## 46:07

அநேக நாட்களுக்குப் பின், யூதர்கள் சவுலைக் கொலை செய்யும்படி நினைத்து, நகரத்தின் வாசலில் சிலரை நிறுத்தினார்கள். ஆனால் இந்த செய்தியை சவுல் கேள்விப்பட்டு, அவனுடைய நண்பர்களின் உதவியினால் தப்பித்தான். அதாவது, ஒருநாள் இரவில், நகரத்தின் சுவர்மேலிருந்து ஒருகூடையில் இறக்கி விடப்பட்டு, தமஸ்குவிலிருந்து சவுல் தப்பித்து, தொடர்ந்து இயேசுவைப் பற்றி பிரசங்கித்தான்.

### சவுலின் பிரசங்கத்திற்கு யூதர்களின் பதில் என்ன?

அவர்கள் சவுலை கொலைசெய்யும்படித் திட்டமிட்டனர்.

### தமஸ்குவிலிருந்து சவுல் எப்படித் தப்பித்தான்?

அவனுடைய நண்பர்கள் நகரத்தின் மதில்மேலிருந்து கூடை மூலமாய் இறக்கி விட்டனர்.

---

## 46:08

சவுல் எருசலேமில் இருந்த அப்போஸ்தலர்களை சந்திக்கும்படி போனான், ஆனால் அவர்கள் அவனைப் பார்த்து பயந்தார்கள். பின்பு விசுவாசியாகிய பர்னபா என்பவன் சவுலை அப்போஸ்தலரிடம் கூட்டிக் கொண்டு போனான். அங்கே எப்படி தைரியமாய் பிரசங்கித்தான் என்று சொன்னான் பின்பு அப்போஸ்தலர்கள் சவுலை ஏற்றுக் கொண்டனர்.

### எருசலேமில் இருந்த சீஷர்கள் சவுலை ஏற்றுக்கொள்ள உதவினது யார்?

பர்னபா சவுலை சீஷர்களிடம் கொண்டுபோய், அவன் தைரியமாய் தமஸ்குவில் பிரசங்கித்ததை தெரிவித்தான்.

---

## 46:09

எருசலேமில் துன்பப்பட்டதினால், சில விசுவாசிகள் தூர தேசமான அந்தியோகியா என்னும் ஊரில் இயேசுவை பிரசங்கித்தனர். அந்தியோகியாவில் இருந்த அநேகர் யூதர்கள் இல்லை எனவே அங்கே அநேகர் முதலில் விசுவாசிகளானார்கள். அங்கே பவுலும் பர்னபாவும் போய், புதிய விசுவாசிகளுக்கு இயேசுவைப் பற்றி அதிகமாய் போதித்து, சபைகளை பலப்படுத்தினார்கள். அந்தியோகியாவில் இயேசுவை விசுவாசித்தவர்களை தான் முதன் முதலில் கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்பட்டனர்.

### அந்தியோகியாவில் விசுவாசிகளான ஜனங்களுக்கு இருந்த வித்யாசம் என்ன?

அவர்கள் யூதர்கள் அல்லாதவர்கள்.

### அந்தியோகியாவில் இருந்த விசுவாசிகளுக்கு வழங்கப்பட்ட முதல் பெயர் என்ன?

கிறிஸ்தவர்கள்.

---

## 46:10

ஒருநாள் அந்தியோகியாவில் இருந்த கிறிஸ்தவர்கள்உபவாசித்து ஜெபித்துக் கொண்டிருக்கும் போது பரிசுத்த ஆவியானவர் அவர்களோடு பேசி, சவுலையும், பர்னபாவையும் நான் அவர்கள் செய்யும்படி அழைத்த வேலைக்கு அனுப்பிவிடுங்கள் என்று சொல்லப்பட்டதினால். அந்தியோகியா சபையார், பவுலுக்கும் பர்னபாவுக்கும் ஜெபம் செய்து, அவர்கள் மேல் கைகளை வைத்தார்கள். பின்பு இயேசுவின் நற்செய்தியை பிரசங்கிக்கும்படி அனுப்பப்பட்டார்கள். சவுலும் பர்னபாவும் இயேசுவை அநேக இடங்களில் பிரசங்கித்ததினால் அங்கே இருக்கும் ஜனங்கள் இயேசுவை விசுவாசித்தார்கள்.

### பர்னபாவையும் சவுலையும் பிரித்தெடுக்கும்படி பரிசுத்த ஆவியானவர் சொன்னபோது அந்தியோகியா சபை என்ன செய்துகொண்டிருந்தது?

அவர்கள் உபவாசித்து ஜெபித்துக்கொண்டிருந்தனர்.

## சவுலையும் பர்னபாவையும் அந்தியோகியா சபை எந்தக் காரணத்தினால் அனுப்பினர்?

இயேசுவைக்குறித்து நற்செய்தி மற்ற ஜனங்களுக்கும் பிரசங்கிக்கும்படி அனுப்பினர்.

# 47. பிலிப்புவில் பவுலும் சீலாவும்

## 47:01

ரோமாபுரி எங்கும் சவுல் பிரயாணம் செய்ததினால், அவன் ரோம பெயர் பவுல் என்பதை பயன் படுத்தினான். ஒருநாள் பவுலும் சீலாவும் பிலிப்பியில், ஆறுக்கு பக்கத்தில் இருந்த ஒரு நகரத்தில் ஜனங்கள் ஜெபிக்கும்படி கூடியிருந்ததினால் அங்கே அவர்கள் போனார்கள். அங்கே அவர்கள் லீதியாள் என்னும் ஒரு வியாபாரியை சந்தித்தார்கள். அவள் தேவனை நேசித்து, ஆராதித்தாள்.

### சவுல் பயன்படுத்தின ரோம பெயர் என்ன?

பவுல்.

### இயேசுவைக்குறித்து பிரசங்கம் செய்யும்படி பவுல் பிலிப்பு பட்டணத்தில் எங்கே போனான்?

நகரத்திற்கு வெளியே நதிக்கு அப்புறத்தில் ஜனங்கள் ஜெபிக்கும்படி கூடியிருந்த இடத்திற்குப் போனார்கள்.

---

## 47:02

லீதியாள் இயேசுவின் செய்தியை கேட்டு, அதை ஏற்றுக் கொள்ளும்படி தேவன் உதவினார். பவுலும் சீலாவும் அவளுக்கும் அவளுடைய குடும்பத்தாருக்கும் ஸ்நானம் கொடுத்தார்கள், பின்பு அவள் அவர்களை வீட்டிற்குத் தங்கும்படி அழைத்தாள். எனவே பவுலும் சீலாவும் அங்கே தங்கினார்கள்.

### லீதியாள் இயேசுவைவிசுவாசிக்க உதவினது எது?

லீதியாள் இயேசுவைக்குறித்த செய்தியை புரிந்துகொள்ளும்படி தேவன் அவளுக்கு உதவினார்.

### லீதியாள் இயேசுவை விசுவாசித்ததும் பவுலும் சீலாவும் என்ன செய்தனர்?

லீதியாவையும் அவளுடைய குடும்பத்தையும் அவர்கள் ஸ்நானம் பண்ணினார்கள்.

---

## 47:03

யூதர்கள் ஜெபிக்கும் இடத்தில் தான் பவுலும் சீலாவும் அதிகமாய் ஜனங்களை சந்தித்தார்கள். ஒவ்வொரு நாளும் அவர்கள் நடந்து போகும் போது, பிசாசு பிடித்திருந்த ஒரு அடிமைப் பெண் அவர்களைப் பின் தொடர்ந்தாள். ஏனென்றால் அவள் ஜனங்களுக்கு அவர்களுடைய எதிர்காலத்தை சொல்லி, அதிக பணம் சம்பாதித்து வந்தாள். அதாவது குறிச் சொல்லுவதில் கில்லாடி.

---

## 47:04

அந்த அடிமைப் பெண் அவர்கள் நடக்கும் போது, இவர்கள் உன்னதமான தேவனுடைய வேலைக்காரர்கள் என்று சொல்லி, நீங்கள் இரட்சிக்கபடுவதற்கு ஏதுவான வழியை போதிக்கிறார்கள் என்று சொன்னாள். அவள் எப்போதும் இப்படி சொல்லிக் கொண்டிருந்ததினால் பவுல் கோபமடைந்தான்.

### பவுலையும் சீலாவையும் பார்த்து பிசாசு பிடித்திருந்த அடிமைப் பெண் சொல்லிக்கொண்டே இருந்தது என்ன?

இவர்கள் உன்னதமான தேவனுடைய ஊழியக்காரர்கள். நீங்கள் இரட்சிக்கப்படும் வழியை உங்களுக்குப் போதிக்கிறார்கள் என்றது.

### பிசாசின் சாட்சியைக் கேட்ட பவுல் என்ன சொன்னான்?

பவுல் அந்த பிசாசை கடிந்துகொண்டு, அந்த அடிமைப் பெண்ணை விட்டுப் போகும்படி கட்டளைக் கொடுத்தான்.

---

## 47:05

கடைசியாக ஒருநாள், அந்த அடிமைப் பெண் அப்படி சொல்ல ஆரம்பித்தாள், உடனே பவுல் திரும்பி, அவளைப் பார்த்து இயேசுவின் நாமத்தில் பொல்லாத ஆவியே வெளியே வா என்று சொன்னான். அந்த நிமிடமே அந்த ஆவி அவளை விட்டுப் போனது.

### பிசாசின் சாட்சியைக் கேட்ட பவுல் என்ன சொன்னான்?

பவுல் அந்த பிசாசை கடிந்துகொண்டு, அந்த அடிமைப் பெண்ணை விட்டுப் போகும்படி கட்டளைக் கொடுத்தான்.

---

## 47:06

அந்த பெண்ணை அடிமையாக வைத்திருந்தவர்கள். அசுத்த ஆவி இல்லாமல் அவள் குறிச் சொல்ல முடியாது என்று அறிந்து கொண்டார்கள். ஏனெனில் அவள் இனிமேல் நடக்கப் போவதை சொல்லி யாரிடமும் பணம் வாங்க முடியாது என்பதை அவளை அடிமையாய் வைத்திருந்தவர்கள் அறிந்து மிகவும் கோபமடைந்தார்கள்.

### அந்த அடிமைப் பெண்ணை சொந்தமாக வைத்திருந்தவர்கள் ஏன் கோபமடைந்தனர்?

ஜனங்களுடைய எதிர்காலத்தை அவள் இனிமேல் சொல்ல முடியாது மற்றும் ஜனங்கள் யாரும் பணம் செலுத்த மாட்டார்கள் என்று அவர்கள் அறிந்துகொண்டார்கள்.

---

## 47:07

எனவே அந்த அடிமைப் பெண்ணின் உரிமையாளர் பவுலையும் சீலாவையும் ரோமர்களின் அதிகாரியிடம் கூட்டிக் கொண்டு போனார்கள். அவர்கள் பவுலையும் சீலாவையும் அடித்து, சிறையில் அடைத்தனர்.

---

## 47:08

அவர்கள் சிறையின் காவல்காரர்கள் அதிகம் இருந்த ஒரு பகுதியில் பவுலையும் சீலாவையும் வைத்து, அவர்களுடைய கால்களையும் பெரிய மரக்கட்டையால் செய்யப்பட்ட ஒரு பொருளினால் பூட்டினார்கள். ஆனாலும் நடு இரவில் பவுலும் சீலாவும் தேவனை துத்தித்துப் பாடினார்கள்.

### பவுலும் சீலாவும் சிறைச்சாலையில் நடுராத்திரியில் என்ன செய்துகொண்டிருந்தனர்?

அவர்கள் பாட்டுகள் பாடி தேவனைத் துதித்துக்கொண்டிருந்தார்கள்.

---

## 47:09

உடனே, நில நடுக்கம் உண்டாயிற்று! சிறைச்சாலையின் எல்லா கதவுகளும் நன்றாகத் திறந்தது. மேலும் எல்லா கைதிகளின் சங்கிலிகளும் கழன்று விழுந்தது.

## பவுலும் சீலாவும் பாடிக்கொண்டிருக்கும்போது என்ன நடந்தது?

அங்கே பூமி அதிர்ந்தது, சிறைச்சாலையின் கதவுகள் திறவுண்டது மற்றும் கைதிகளின் சங்கிலிகள் விலங்குகள் கழன்று விழுந்தது.

---

## 47:10

பின்பு சிறைச்சாலையின் அதிகாரி எழுந்து, சிறைச்சாலையில் எல்லா கதவுகளும் திறந்திருக்கிறதைப் பார்த்து, எல்லா கைதிகளும் தப்பித்து போயிருப்பார்கள். அவர்களைப் போக விட்டதினால், ரோம அதிகாரிகள் அவனைக் கொன்று போடுவார்கள் என்று பயந்து, அவன் தற்கொலை செய்ய முயன்றான்! ஆனால் பவுல் அதைப் பார்த்து, சத்தமிட்டு. நிறுத்து! ஒன்றும் செய்யாதே, நாங்கள் எல்லோரும் இங்கே தான் இருக்கிறோம் என்றான்.

## சிறைச்சாலை காவலாளி ஏன் பயந்து நடுங்கினான்?

அவன் எல்லா கைதிகளும் தப்பித்து போயிருப்பார்கள் ரோம அதிகாரிகள் தன்னை கொன்றுபோடுவார்கள் என்று நினைத்தான்.

---

## 47:11

அந்த சிறைச்சாலையின் அதிகாரி நடுக்கத்தோடு பவுலையும் சீலாவையும் பார்த்து, நான் இரட்சிக்கபடுவதற்கு என்ன செய்ய வேண்டும்? என்று கேட்டான். அதற்கு பவுல், இயேசுவே ஆண்டவர் என்று நீயும் உன் குடும்பமும் நம்பினால் இரட்சிக்கபடுவீர்கள் என்றான். பின்பு அந்த சிறைச்சாலையின் அதிகாரி பவுலையும் சீலாவையும் அவனுடைய வீட்டிற்க்கு கூட்டிக் கொண்டு போய் அவர்களுடைய காயங்களுக்கு மருந்து போட்டான். அதற்கு பின்பு பவுல் அந்த வீட்டில் இருந்த யாவருக்கும் இயேசுவின் நற்செய்தியை பிரசங்கித்தான்.

## பவுலிடம் சிறைச்சாலை அதிகாரி கேட்ட கேள்வி என்ன?

நான் இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டும்?

## சிறைச்சாலையின் அதிகாரி இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டும் என்று பவுல் கூறினான்?

அவன் இயேசுவை ஆண்டவாராக ஏற்றுக்கொள்ளும்படிக் கூறினான்.

---

## 47:12

அந்த சிறைச்சாலையின் அதிகாரியும் அவன் குடும்பம் முழுவதும் இயேசுவை விசுவாசித்தனர். எனவே பவுலும் சீலாவும் அவர்களை ஸ்நானம் பண்ணினர், பின்பு அவர்களுக்கு சாப்பி கொடுத்து, அவர்கள் எல்லோரும் சேர்ந்து சந்தோஷமாயிருந்தார்கள்.

---

## 47:13

அடுத்த நாள் தலைவர்கள் பவுலையும் சீலாவையும் சிறையிலிருந்து விடுதலை பண்ணி, அந்த பிலிப்பி நகரத்தை விட்டுப் போகும்படி சொன்னார்கள். பவுலும் சீலாவும் போய் லீதியாளையும், அவர்களுடைய நண்பர்களையும் சந்தித்து விட்டு, அந்த நகரத்தை விட்டு போனார்கள். இயேசுவின் நற்செய்தி தொடர்ந்து பெருகி, சபையும் வளர்ந்து கொண்டிருந்தது.

---

## 47:14

பவுலும் மற்ற கிருஸ்தவ தலைவர்களும் அநேக நகரங்களுக்கு போய், இயேசுவைக்குறித்த நற்செய்தியை பிரசங்கம் செய்து, போதிக்கவும் செய்தனர். மேலும் அவர்கள் சபைகளையும் விசுவாசிகளையும் ஊக்குவிக்கும்படி அநேக கடிதங்களை எழுதினார்கள். அதில் சில கடிதங்கள் வேதாகமத்தின் புத்தகங்களாகவும் இருக்கின்றது.

### பவுலும் மற்ற கிறிஸ்தவ தலைவர்களும் சபையில் இருந்த விசுவாசிகளுக்கு எழுதின கடிதங்கள் என்னவாயிற்று?

அதில் சில கடிதங்கள் வேதாகமத்தில் புத்தகங்களாயின.

# 48. இயேசு தான் வாக்குத்தத்தம் பண்ணபட்ட மேசியா

## 48:01

தேவன் இந்த உலகத்தை படைத்த போது, எல்லாம் நன்றாய் இருந்தது. பாவம் இல்லாதிருந்தது. ஆதாமும் ஏவாளும் ஒருவரையொருவர் நேசித்து, தேவனையும் நேசித்தார்கள். வியாதியோ மரணமோ இல்லை. தேவன் விரும்பினபடியே உலகம் இருந்தது.

### தேவன் முதலில் உலகத்தை உண்டாக்கும்போது அது எப்படி இருந்தது?

அது பரிபூரமனாய், பாவம் இல்லாமல், நோய் இல்லாமல், மரணமும் இல்லாமல் இருந்து.

---

## 48:02

தோட்டத்தில் ஒரு பாம்பின் மூலமாக சாத்தான் ஏவாளோடு பேசி, அவளை வஞ்சித்தான். பின்பு ஏவாளும் ஆதாமும் தேவனுக்கு விரோதமாய் பாவம் செய்தனர். அவர்கள் பாவம் செய்ததினால் தான் எல்லோரும் மரிக்கின்றனர்.

### எதினால் உலகத்தில் இருக்கும் மக்கள் நோயினால் மரிக்கிறார்கள்?

ஆதாமும் ஏவாளும் தேவனுக்கு விரோதமாய் பாவம் செய்ததினால்.

---

## 48:03

ஆதாமும் ஏவாளும் பாவம் செய்ததினால் மோசமான காரியம் ஒன்று நடந்தது. அது என்னவென்றால் அவர்கள் தேவனுக்கு விரோதிகளாக மாறினர். அவர்கள் பாவம் செய்ததின் விளைவாக எல்லா மனிதர்களும் பிறக்கும் போதே தேவனுக்கு விரோதிகளாக இருக்கின்றனர். தேவனுக்கும் ஜனங்களுக்கு உறவு இல்லை, ஆனால் தேவன் அதை ஏற்படுத்த விரும்புகிறார்.

### பிறக்கும் ஒவ்வொருவரின் நிலை என்ன?

யாவரும் பாவசுபாவம் நிறைந்தவர்களும் மற்றும் தேவனுக்கு விரோதிகளுமாய் இருக்கிறார்கள்.

---

## 48:04

ஏவாளுடைய சந்ததி சாத்தானின் தலையை நசுக்கும் என்று தேவன் வாக்குப்பணினார். மேலும் அவருடைய குதிகாலை சாத்தான் கடிப்பான் என்றும் சொன்னார், அதாவது தெளிவாக சொல்ல வேண்டுமானால், சாத்தான் மேசியாவைக் கொலை செய்வான், ஆனால் தேவன் அவரை மறுபடியும் மரணத்திலிருந்து எழுப்புவார், அதன் பிறகு, மேசியா என்றென்றைக்கும் சாத்தானின் வல்லமையை முறியடிப்பார். அநேக வருடங்களுக்குப் பின் அந்த மேசியா இயேசுவே என்று தேவன் புரியும்படி செய்தார்.

### சாத்தான் ஏவாளின் சந்ததியின் காலை நக்கும் என்பதின் அர்த்தம் என்ன?

சாத்தான் மேசியாவை கொலை செய்வான், ஆனால் தேவன் அவரை திரும்பவும் எழுப்புவார்.

---

## 48:05

வரபோகும் வெள்ளத்திலிருந்து நோவாவின் குடும்பத்தை பாதுகாக்க, அவனிடத்தில் ஒரு பேழையை செய்யும்படி தேவன் சொன்னார். அவரை நம்புகிறவர்களை தேவன் இவ்விதமாக பாதுகாக்கிறார். இதேபோல, எல்லோரும் பாவம் செய்து தேவன் நம்மை கொன்றுபோட பாத்திரவான்களாய் இருந்தும், இயேசுவை நம்புகிறவர்களை இரட்சிக்கும்படிக்கு தேவன் அவரை அனுப்பினார்.

### தேவன் ஜலத்தினால் பூமியை அழித்தபோது அவர் கொடுத்த பேழை எப்படி இயேசு போன்றது?

இயேசுவை விசுவாசிக்கிறவர்கள் யாவரும் இரட்சிக்கப்பட தேவன் இயேசுவைக் கொடுத்தார்.

---

## 48:06

அநேக நூற்றாண்டுகளாக ஆசாரியர்கள் தொடர்ந்து தேவனுக்கு பலிகளை செலுத்தி வந்தனர். ஜனங்கள் பாவம் செய்து தேவனுடைய தண்டனைக்கு பாத்திரவான்களாய் இருக்கும் போது இந்த பலிகள் அவர்களுடைய பாவங்களை மன்னிக்க முடியவில்லை. அதினால் பிரதான ஆசாரியரான இயேசு யாரும் செய்ய முடியாததை செய்தார். அதாவது தம்மையே பலியாக ஒப்புக் கொடுத்து, எல்லோருடைய பாவங்களையும் நீக்கினார். எல்லோருடைய பாவங்களுக்காகவும் தேவன் அவரை தண்டித்தே ஆகவேண்டும் என்று, அதை ஏற்றுக் கொண்டதினால் தான் இயேசு பூரணமான பிரதான ஆசாரியன் ஆனார்.

## முன்பு வந்த ஆசாரியர்கள் எல்லோரையும்விட எப்படி இயேசு மேலானவர்?

எல்லோருடைய பாவங்களையும் போக்கும் பலியாக இயேசு தம்மையே ஒப்புக்கொடுத்தார்.

---

## 48:07

ஆபிரகாம் மூலமாக இந்த உலகத்தில் இருக்கும் எல்லா ஜனங்களையும் தேவன் ஆசீர்வதிப்பதாக அவனிடத்தில் சொன்னார். இயேசு ஆபிரகாமின் சந்ததியில் பிறந்தவர். எனவே இயேசுவை நம்புகிற யாவரையும் தேவன் பாவத்திலிருந்து இரட்சித்து, எல்லோரையும் ஆசீர்வதிக்கிறார். ஜனங்கள் இயேசுவை நம்பும்போது அவர்களை ஆபிரகாமின் சந்ததியாக தேவன் ஏற்றுக் கொள்கிறார்.

## ஆபிரகாமின் வாக்குத்தத்தம் எப்படி இயேசுவில் நிறைவேறிற்று?

இயேசுவை விசுவாசிக்கிற எல்லா ஜாதியும் ஜனமும் பாவத்திலிருந்து இரட்சிக்கப்பட்டு, ஆவிக்குரிய ஆபிரகாமின் பிள்ளைகளாகும்படி செய்தார்.

---

## 48:08

ஆபிரகாமின் மகனாகிய ஈசாக்கை அவருக்கு பலி செலுத்தும்படி தேவன் சொன்னார். பின்பு ஒரு ஆட்டுக்குட்டியை ஈசாக்குக்கு பதிலாகக் கொடுத்தார். அதேபோல நாம் எல்லோரும் பாவம் செய்து மரணத்திற்கு பாத்திரவான்களாய் இருந்தோம்! ஆனால் தேவன் நம்முடைய பாவங்களுக்காய் பலியாக இயேசுவை மரிக்கும்படிச் செய்தார். அதினால் தான் இயேசுவை நாம் ஆட்டுக் குட்டியானவர் என்று சொல்லுகிறோம்.

## இயேசு எவ்விதத்தில் ஈசாக்குக்கு பதிலாக பலி செலுத்தப்பட்ட ஆட்டுக்குட்டியைப் போன்றவர்?

இயேசு தேவ ஆட்டுக்குட்டி, நம்முடைய சார்பில் பலியானார்.

---

## 48:09

எகிப்தில் தேவன் கடைசி வாதையை அனுப்பும் போது இஸ்ரவேலர் எல்லோருடைய வீட்டிலும் ஒரு பழுதில்லாத ஆட்டுக்குட்டியை கொள்ளும்படி சொன்னார். பின்பு அதின் இரத்தத்தை எடுத்து கதவின் நிலத்தில் பூசும்படி சொன்னார். ஏனென்றால் தேவன் அந்த இரத்தத்தைப் பார்த்து, அவர்களுடைய முதல் குமாரர்களை அழிக்காமல், அவர்களுடைய வீட்டைக் கடந்து போவார். இது நடந்த போது தேவன் அதை பஸ்கா என்று சொன்னார்.

---

## 48:10

இயேசு ஒரு பஸ்கா ஆட்டுக்குட்டி, அவர் பாவம் ஒன்றும் செய்யவில்லை. மேலும் அவர் பஸ்கா பண்டிகையின் சமயத்தில் தான், இயேசுவும் மரித்தார். இயேசு பாவங்களுக்கு பரிகாரமாக இரத்தம் சிந்தினதினால், எவன் ஒருவன் இயேசுவை விசுவாசிக்கிரானோ அவனை தேவன் தண்டிக்காமல், அந்த பஸ்காவில் எப்படி கடந்து போனாரோ அதேபோல அவனையும் கடந்து போவார்.

### இயேசு எப்படி பஸ்கா ஆட்டுக்குட்டியைப் போன்றவர்?

இயேசு பாவமில்லாதவர் மற்றும் அவருடைய இரத்தம் (அவருடைய மரணம்), அவரை விசுவாசிக்கிற யாவருடைய தண்டனையும் தேவன் அவர்மேல் விழும்படி செய்தார்.

---

## 48:11

தேவன் அவருடைய ஜனமாக இஸ்ரவேலரைத் தெரிந்தெடுத்ததினால், அவர்களோடு உடன்படிக்கை செய்திருந்தார். ஆனால், இப்போது எல்லா ஜனங்களுக்காகவும் புதிய உடன்படிக்கை செய்திருக்கிறார். இயேசுவை விசுவாசிக்கிற யாராக இருந்தாலும் அவர்களை தேவ ஜனங்களோடு சேர்த்து, அந்த புதிய உடன்படிக்கையில் சேர்த்துக் கொள்கிறார்.

### யாரெல்லாம் தேவனுடைய ஜனங்களாக முடியும்?

புதிய உடன்படிக்கையினால் இயேசுவை விசுவாசிக்கிற எந்த ஜாதியும், ஜனமும் தேவனுடைய ஜனங்களாக முடியும்.

---

## 48:12

மோசே ஒரு தீர்கத்தரிசியாக மிகுந்த வல்லமையோடு தேவனுடைய வார்த்தையை பிரசங்கித்தான். ஆனால் எல்லா பெரிய தீர்க்கதரிசிகளிலும் இயேசுவே பெரியவர். ஏனெனில் அவர் தேவனாயிருந்து, எல்லாவற்றையும் செய்து, தேவனுடைய வார்த்தைகளையும் போதித்தார். அதினால் தான் இயேசுவே தேவனுடைய வார்த்தை என்று வேதம் சொல்லுகிறது.

### எவ்விதத்தில் இயேசு எல்லா தீர்க்கத்தரிசிகளிலும் மேலானவர்?

அவர் தேவன், எனவே அவர் செய்த மற்றும் பேசினது எல்லாம் தேவனுடைய வார்த்தை.

---

### 48:13

தாவீதின் சந்ததி என்றென்றைக்கும் தேவனுடைய ஜனங்களுக்கு ராஜாவாக இருப்பார்கள் என்று தேவன் வாக்குப் பண்ணியிருந்தார். தாவீதின் சந்ததியில் வந்த மேசியா அந்த இயேசு தான், எனவே அவர் என்றென்றைக்கும் ஆட்சி செய்வார்.

### தேவன் தாவீதுக்குக் கொடுத்த வாக்குத்தத்தத்தை இயேசு எப்படி நிறைவேற்றினார்?

அவர் தேவனுடைய குமாரன், தாவீதின் சந்ததி என்றென்றும் அரசாளுகிறவர்.

---

### 48:14

தாவீது இஸ்ரவேலின் ராஜா, ஆனால் இயேசு இவ்வுலகம் முழுவதுக்கும் ராஜா! அவர் மறுபடியும் வருவார், வந்து ஜனங்களை நீதியோடும், சமாதானத்தோடும் என்றென்றும் ஆட்சி செய்வார்.

### தாவீதை விட இயேசு எவ்விதத்தில் மேலான ராஜா?

இயேசுவே இவ்வுலகத்தின் ராஜா.

# 49. தேவனுடைய புதிய உடன்படிக்கை

## 49:01

மரியாள் ஒரு கன்னிகையாய் இருக்கும் போது, தேவதூதன் அவளிடத்தில் வந்து, நீ ஒரு குழந்தையைப் பெறுவாய் என்றான். பின்பு அவள் பரிசுத்த ஆவியினால் கர்ப்பவதியாகி, ஒரு குழந்தையைப் பெற்றாள். அவருக்கு இயேசு என்று பெயர் வைத்தார்கள். அதினால் இயேசு மனிதனாகவும், தேவனாகவும் இருக்கிறார்.

### இயேசு எப்படி மனிதனும், தேவனுமாயிருக்கிறார்?

அவர் கன்னியின் வயிற்றில் பிறந்தவர், மேலும் அவர் தேவனுடைய குமாரன்.

---

## 49:02

இயேசு தேவன் என்று காண்பிக்க அநேக அற்புதங்களைச் செய்தார். அதாவது, அவர் தண்ணீரின் மேல் நடந்தார், அநேக வியாதியஸ்தர்களை குணமாக்கினார், பிசாசுகளைத் துரத்தினார், மரித்தவர்களை உயிரோடு எழுப்பினார், மேலும் ஐந்து அப்பங்களையும், இரண்டு சிறு மீன்களையும் வைத்து 5000 பேர்கள் திருப்தியாக சாப்பிடும்படி செய்தார்.

### இயேசு தேவன் என்று எப்படி நிரூபித்தார்?

அவர் அநேக அற்புதங்களைச் செய்தார்.

---

## 49:03

இயேசு நல்ல போதகராகவும் இருந்தார். அதாவது, எல்லாவற்றையும் ஜனங்களுக்கு நன்றாய் போதித்தார். இயேசு தேவனுடைய குமரன் என்பதினால் அவர் சொன்ன எல்லாவற்றையும் அவர்கள் செய்யும்படி போதித்தார். உதாரணமாக, தன்னைப் போல மற்றவர்களையும் நேசிக்கும்படி சொன்னார்.

### மற்றவர்களை நாம் எப்படி நேசிக்கவேண்டும்?

நம்மை நாம் நேசிப்பதுபோல மற்றவர்களையும் நேசிக்கவேண்டும்.

---

## 49:04

மேலும் அவர் சொன்னது, எல்லாவற்றையும்விட நாம் தேவனை நேசிக்க வேண்டும், நம்முடைய செல்வங்களையும் சேர்த்து தான் சொன்னார்.

### எல்லாவற்றையும்விட எதை நாம் அதிகமாய் நேசிக்கவேண்டும்?

தேவனை.

---

## 49:05

இந்த உலகத்தில் இருப்பதை விட தேவனுடைய ராஜ்யத்தில் சேர்வதே நல்லது என்றும், தேவனுடைய ராஜ்யத்தில் சேர்வதற்கு, அவர் நம்முடைய பாவங்களை மன்னிக்க வேண்டும் என்பதையும் இயேசு சொன்னார்.

### எல்லோருக்கும் அதிக முக்கியமானது எது?

தேவனுடைய ராஜ்யத்தின் சொந்தங்களாய் இருப்பது.

---

## 49:06

இயேசுவை சிலர் ஏற்றுக் கொள்வார்கள், அவர்களை தேவன் இரட்சிப்பார். சிலர் அவரை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் என்று இயேசு சொன்னார். மேலும் அவர், சிலர் இயேசுவின் நற்செய்தியை ஏற்றுக் கொள்வார்கள் அவர்களை தேவன் இரட்சிப்பார். இவர்கள் நல்ல நிலத்திற்கு ஒப்பிடப்படுகிறார்கள். ஆனால் வேறு சிலர் வழியருகே இருக்கும் கெட்ட நிலம் போன்றவர்கள், அவர்கள் தேவனுடைய வார்த்தை, விதையைப் போல வழியருகே விழுந்து, பலன் எதுவும் கொடுக்காது. அதுபோல இவர்கள் தேவனுடைய வார்த்தையை ஏற்றுக் கொள்ளாமல், தேவனுடைய ராஜ்யத்தை புறக்கணிக்கிறார்கள்.

### இயேசுவைக் குறித்த செய்தியை புறக்கணிப்பவர்களுக்கு என்ன சம்பவிக்கும்?

அவர்கள் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பதில்லை.

---

## 49:07

பாவிகளை தேவன் அதிகமாய் நேசிக்கிறார் என்று இயேசு போதித்தார். அவர்களை தேவன் மன்னித்து, அவருடைய பிள்ளைகளாக மாற்ற விரும்புகிறார்.

### பாவிகளுக்கு தேவன் என்ன செய்ய விரும்புகிறார்?

அவர்களை தேவன் அவருடைய பிள்ளைகளாக மாற்ற விரும்புகிறார்.

---

## 49:08

தேவன் பாவத்தை வெறுக்கிறார் என்று இயேசு சொன்னார். ஏனெனில் ஆதாமும் ஏவாளும் பாவம் செய்தார்கள், அவர்களுடைய சந்ததியார் முழுவதும் பாவம் செய்தார்கள். பின்பு இந்த உலகத்தில் உள்ள எல்லோரும் பாவம் செய்து தேவனுக்கு விரோதிகளாக மாறி, தூரம் போனார்கள்.

### தேவன் எதை வெறுக்கிறார்?

பாவம்.

---

## 49:09

ஆனால் தேவன் தம்முடைய ஒரே குமாரனை தந்து, அவரை விசுவாசிக்கிரவர்களை தண்டியாமல், மாறாக என்றென்றைக்கும் அவரோடு வாழும்படிச் செய்து, இப்படி தம்முடைய அன்பை உலகத்தில் இருக்கும் எல்லோருக்கும் காண்பித்தார்.

---

## 49:10

நீ பாவம் செய்ததினால், மரிப்பதற்கு பாத்திரவானாய் மாறினாய். தேவன் உன்மேல் கோபமடைவதற்கு அவருக்கு உரிமை உண்டு, ஆனால் அவர் இயேசுவின் மேல் கோபமடைந்து, இயேசுவை தண்டித்து, அவரை சிலுவையில் அறைந்தார்.

## நம்முடைய பாவத்தினால் நாம் எதற்கு பாத்திரவான்களாகிறோம்?

நாம் மரிப்பதற்கு பாத்திரவான்களாகிறோம்.

## தகுதி இல்லாத எதை இயேசு சிலுவையில் பெற்றுக்கொண்டார்?

அவர் நம்முடைய பாவங்களை ஏற்றுக்கொண்டார்.

---

## 49:11

இயேசு பாவம் எதுவும் செய்ததில்லை, ஆனாலும் தேவன் அவரைத் தண்டிக்கும்படி ஒப்புக் கொடுத்தார். சாவதற்கும் சம்மதித்தார். உன்னுடைய மற்றும் இவ்வுலகத்தில் இருக்கும் எல்லோருடைய பாவங்களையும் போக்குவதற்கு அவரே சரியான பலி, எல்லோருடைய பாவங்களையும் மேலும் கொரூரமான பாவங்களையும்கூட தேவன் மன்னிகும்படி இயேசு தம்மையே பலியாக ஒப்புக் கொடுத்தார்.

## தேவன் பலியானதினால் எப்படி உலகத்தில் இருக்கும் எல்லோருடைய பாவங்களையும் போக்கமுடியும்?

ஏனெனில் அவர் பாவம் செய்யாதவர்.

---

## 49:12

நீ தேவனால் இரட்சிக்கபடுவதற்கு எந்த நன்மை செய்தாலும் ஈடாகாது. நாம் தேவனோடு உறவு வைத்துக் கொள்வதற்கு, தேவனுடைய குமாரனாகிய இயேசு சிலுவையில், உன்னுடைய பாவங்களுக்காக, உனக்கு பதிலாக மரித்து, அவரை மறுபடியும் தேவன் உயிரோடு எழுப்பினார் என்று விசுவாசித்தால் தேவன் நீ செய்த பாவங்களை மன்னிப்பார்.

---

## 49:13

இயேசுவை சொந்த இரட்சகராக யாரெல்லாம் ஏற்றுக் கொள்கிறார்களோ, அவர்களை தேவன் இரட்சிக்கிறார். ஆனால் இயேசுவை விசுவாசிக்காதவர்கள் யாராயிருந்தாலும், அவர்கள் பணக்காரர், ஏழை, ஆண், பெண், சிறியவர், பெரியவர் அல்லது நீ வாழும் இடம் என்று எதுவாயிருந்தாலும் தேவன் இரட்சிப்பதில்லை. தேவன் உன்னை நேசிக்கிறார், நீ இயேசுவை விசுவாசிக்கும் போது, அவர் உன்னுடைய நண்பனாய் இருப்பார்.

## எவன் இரட்சிக்கப்படுவான்?

இயேசுவை விசுவாசிக்கிற ஒவ்வொருவனும் அவரை ஆண்டவாராக ஏற்றுக்கொள்ள முடியும்.

---

## 49:14

அவரை விசுவாசித்து, ஸ்நானம் பெறும்படி இயேசு உன்னை அழைக்கிறார். இயேசுவை மேசியா என்றும் அவரே தேவனுடைய ஒரே குமரன் என்று நீ விசுவாசிக்கிறாயா? நீ பாவி என்றும், தேவன் உன்னை தண்டிப்பதற்கு நீ பாத்திரவான் என்றும் நீ நம்புகிறாயா? உன்னுடைய பாவங்களைப் போக்கும்படி இயேசு சிலுவையில் உனக்காக மரித்தார் என்று நீ விசுவாசிக்கிறாயா?

---

## 49:15

இயேசு உனக்காக செய்ததை, நீ நம்பினால், நீ கிறிஸ்தவன்! இருளின் அதிகாரியான சாத்தான் உன்னை ஒருபோதும் ஆட்கொள்வதில்லை. இப்போது ஒளியின் ராஜ்யத்தின் அதிகாரியான தேவன் உன்னை நடத்துவார். தேவன் நீ எப்போதும் செய்து கொண்டிருந்தது போல, உன்னை பாவம் செய்யாமல் தடுத்து, நீ போகும்படி சரியான வழியைக் காட்டுவார்.

---

## 49:16

நீ கிறிஸ்தவனாயிருந்தால், இயேசு உனக்காக எல்லாம் செய்ததினால், தேவன் உன்னுடைய பாவங்களை மன்னித்தார். இப்போது, தேவனுக்கு விரோதியாக அல்ல, நெருங்கிய நண்பனாக உன்னை ஏற்றுக் கொண்டார்.

## கிருஸ்தவர்கள் இன்னும் தேவனுடைய எதிரிகளா?

இல்லை. இப்போது அவர்கள் தேவனுடைய நண்பர்கள்.

---

## 49:17

நீ ஒருவேளை இயேசுவின் நண்பனாகவும் அல்லது இயேசுவின் ஊழியக்காரனாயிருந்தாலும், இயேசு உனக்குக் கற்றுக் கொடுக்கும் விஷயங்களுக்குக் கீழ்ப்படிய வேண்டும். ஏனென்றால் நீ கிருஸ்தவனாயிருந்தாலும் சாத்தான் உன்னை பாவம் செய்யும்படி சோதிப்பான். ஆனால் தேவன் செய்வேன் என்று சொன்னபடியே

அவர் எப்போதும் செய்வார். நீ உன்னுடைய பாவங்களை அறிக்கை செய்தால் அவர் மன்னிப்பார். மேலும் அந்த பாவத்தை எதிர்த்து ஜெயிக்கும் பலத்தையும் கொடுப்பார்.

### கிருஸ்தவர்கள் பாவம் செய்ய தூண்டப்படுவார்களா?

ஆம்.

### கிருஸ்தவர்கள் பாவம் செய்யும்போது அவர்கள் என்ன செய்யவேண்டும்?

அவர்கள் தங்களுடைய பாவங்களை தேவனிடத்தில் அறிக்கை செய்யவேண்டும்.

### நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால் தேவன் என்ன செய்வதாக வாக்குப்பண்ணியிருக்கிறார்?

அவர் நம்முடைய பாவங்களை மன்னித்து, பாவத்தை ஜெயிக்கும் பெலனையும் தருகிறார்.

---

## 49:18

தேவனுடைய வார்த்தையை படித்து, ஜெபிக்கும்படி தேவன் சொல்லுகிறார். மேலும் அவரை மற்ற கிறிஸ்தவர்களோடு சேர்ந்து ஆராதிக்கும் படியும் சொல்லுகிறார். அவர் உனக்குச் செய்தவைகளை கண்டிப்பாக மற்றவர்களுக்குச் சொல்ல வேண்டும். இவைகள் எல்லாவற்றையும் நீ செய்யும் போது உன்னால் அவருடைய நல்ல நண்பனாக மாறமுடியும்.

### தேவன் கூறும் கிருஸ்தவர்கள் செய்ய வேண்டிய காரியங்கள் என்ன?

நாம் ஜெபிக்க வேண்டும், அவருடைய வார்த்தையை வாசிக்க வேண்டும், அவரை ஆராதிக்க வேண்டும், தேவன் நமக்கு செய்தவைகளை மற்றவர்களுக்கும் செய்யவேண்டும்.

# 50. இயேசுவின் வருகை

## 50:01

ஏறக்குறைய 2,000 ஆண்டுகளுக்கும் மேலாக உலகமெங்கும் மேசியாவாகிய இயேசுவின் நற்செய்தியை கேட்கின்றனர். சபைகள் வளர்ந்து வருகின்றது. உலகத்தின் கடைசியில் இயேசு திரும்ப வருவேன் என்று வாக்குப் பண்ணியிருக்கிறார். இதுவரை அவர் வரவில்லை ஆனால் அவர் சொன்னபடியே செய்வார்.

### கடந்த 2000 வருடங்களாக இயேசுவை விசுவாசித்த ஜனங்களுக்கு என்ன சம்பவித்தது?

அவர்களுடைய எண்ணிக்கை அதிகமாயிற்று.

---

## 50:02

இயேசுவின் வருகைக்காக காத்துக் கொண்டிருக்கும் நம்மை, தேவன் பரிசுத்தமாய் வாழ்ந்து, அவரை மகிமைப்படுத்தும்படி விரும்புகிறார். மேலும் அவருடைய ராஜ்யத்தைப் பற்றி மற்றவர்களுக்கும் சொல்லும்படி விரும்புகிறார். இயேசு இவ்வுலகத்தில் வாழ்ந்த போது, என்னுடைய சீஷர்கள், தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்துப் உலகம் முழுவதும், பிரசங்கம் செய்வார்கள், பின்பு முடிவு வரும் என்று சொன்னார்.

### இயேசுவின் வருகைக்காக காத்திருக்கும் நம்மை தேவன் எப்படி இருக்கும்படி விரும்புகிறார்?

அவரை மகிமைப்படுத்தும் விதமாக பரிசுத்தமாய் வாழ விரும்புகிறார்.

### உலகத்தின் முடிவு வரும்முன்பு என்ன சம்பவிக்கும் என்று இயேசு சொல்லியிருக்கிறார்?

அவருடைய சீஷர்கள் தேவனுடைய ராஜ்யத்தின் நற்செய்தியை உலகம் முழுவதும் பிரசங்கிப்பார்கள்.

---

## 50:03

அநேக ஜனங்கள் இன்னும் இயேசுவைக் குறித்துக் கேள்விப்படவில்லை. நீங்கள் போய் எல்லோரையும் என்னுடைய சீஷராக்குங்கள்! இது அறுவடையின் சமயம்! என்றும் அவர் சொல்லியிருக்கிறார். எனவே இயேசு திரும்பி வருவதற்கு முன்பு, அவர்

கிறிஸ்தவர்களுக்கு சொன்னது என்னவென்றால், அவரைப் பற்றி இன்னும் கேள்விப்படாத ஜனங்களுக்கு நற்செய்தியை அறிவிக்க வேண்டும்.

---

## 50:04

இயேசு மேலும் சொன்னது, ஒரு வேலைக்காரன் தன் எஜமானிலும் பெரியவன் அல்ல. இந்த உலகத்தில் இருந்த முக்கியமான ஜனங்கள் என்னை வெறுத்தார்கள். எனவே அவர்கள் உங்களைத் துன்பப்படுத்தி, என்னிமித்தம் கொலை செய்வார்கள். இந்த உலகத்தில் நீங்கள் துன்பப்படுவீர்கள், ஆனாலும் தைரியமாய் இருங்கள். ஏனெனில் இந்த உலகத்தின் அதிபதியான சாத்தனை நான் தோற்கடித்தேன். நீங்கள் கடைசிவரை உண்மையாய் இருந்தால், தேவன் உங்களை இரட்சிப்பார்!

### இயேசுவை வெறுத்த உலகம் அவருடைய சீஷர்களை எப்படி நடத்துவார்கள்?

அவருடைய சீஷர்களையும் அவர்கள் துன்பப்படுத்துவார்கள்.

### முடிவு வரை உண்மையாய் இருப்பவர்களுக்கு தேவன் எதை வாக்குப்பண்ணியிருக்கிறார்?

அவர்கள் இரட்சிக்கபடுவதாக அவர் வாக்குப்பண்ணியிருக்கிறார்.

---

## 50:05

இந்த உலகத்தின் முடிவில் ஜனங்களுக்கு என்ன நடக்கும் என்பதைப் பற்றி இயேசு அவருடைய சீஷர்களுக்கு ஒரு கதை சொன்னார். அதாவது, நல்ல விதையை தன்னுடைய நிலத்தில் ஒருவன் விதைத்தான். அவன் தூங்கிக் கொண்டிருக்கும் போது, அவனுடைய எதிரி வந்து, கோதுமை விதைகளின் மத்தியில் களையை விதைத்து விட்டுப் போனான்.

### இயேசுவின் கதையில் உலகத்தின் முடிவு, கோதுமை களத்தில் எப்படி களைகள் முளைக்கும்?

எதிரி வந்து களை விதைப்பான்.

---

## 50:06

அது வளர்ந்த போது, வேலைக்காரர்கள் வந்து, ஆண்டவரே, நீர் நல்ல விதைகளைத் தான் விதைத்தீர் ஆனால் களைகள் எப்படி முளைத்தது? என்று கேட்டார்கள். அதற்கு அவன், என்னுடைய எதிரிகளில் ஒருவன் தான் இதைச் செய்திருப்பான் என்றான்.

### இயேசுவின் கதையில் உலகத்தின் முடிவு, கோதுமை களத்தில் எப்படி களைகள் முளைக்கும்?

எதிரி வந்து களை விதைப்பான்.

---

## 50:07

வேலைக்காரர்கள், அவர்களுடைய எஜமானிடத்தில், நாங்கள் அந்த களைகளை எடுத்துப் போடலாமா? என்று கேட்டனர். அதற்கு எஜமான், வேண்டாம். அப்படி நீங்கள் செய்யும்போது, கோதுமையையும் பிடுங்கிப் போடுவீர்கள். அதினால் அறுவடை வரைக்கும் காத்திருங்கள். பின்பு களைகளை தனியே எடுத்து தீயில் போட்டு எரித்துவிட்டு, கோதுமையை களஞ்சியத்தில் சேர்க்கலாம் என்றான்.

### ஏன் வேலைக்காரன் களைகளை பிடுங்கவில்லை?

அவர்கள் தெரியாமல் கூட கோதுமையை பிடுங்க வேண்டாம் என்பதினால்.

---

## 50:08

சீஷர்களுக்கு இயேசு சொன்ன கதையின் அர்த்தம் புரியாததினால், அவரிடத்தில் தெளிவாகச் சொல்லும்படி கேட்டனர். அவர் சொன்னது என்னவென்றால், நல்ல விதையை விதைக்கிறவர் மேசியா. அந்த நிலம் உலகம். நல்ல விதை தேவனுடைய ராஜ்யத்தின் ஜனங்களைக் குறிக்கிறது என்று சொன்னார்.

### நல்ல விதை எதைக் குறிக்கிறது?

அது தேவனுடைய ராஜ்யத்தின் மனிதர்களைக் குறிக்கிறது.

---

## 50:09

களைகள் அந்த பொல்லாத பிசாசின் ஜனங்கள். களைகளை விதைத்த எதிரி அந்த பிசாசு. அறுவடை இந்த உலகத்தின் முடிவு. அறுவடை செய்கிறவர்கள் தேவனுடைய தூதர்கள்.

### அறுவடை எதைக் குறிக்கிறது?

அறுவடை உலகத்தின் முடிவைக் குறிக்கிறது, தேவதூதர்கள் பிசாசின் பிள்ளைகளை ஒன்று சேர்ப்பார்கள்.

---

## 50:10

உலகத்தின் முடிவில், பிசாசின் ஜனங்களை தூதர்கள் ஒன்று சேர்த்து, அவர்களை அக்கினியிலே போடுவார்கள். அங்கே அவர்கள் தாங்க முடியாத துயரத்தினால் அவர்களுடைய பற்களைக் கடித்து, கதறி அழுவார்கள். ஆனால் இயேசுவை பின்பற்றின நீதிமான்கள், பிதாவாகிய தேவனுடைய ராஜ்யத்தில் சூரியனைப்போல் பிரகாசித்துக் கொண்டிருப்பார்கள்.

### அறுவடை எதைக் குறிக்கிறது?

அறுவடை உலகத்தின் முடிவைக் குறிக்கிறது, தேவதூதர்கள் பிசாசின் பிள்ளைகளை ஒன்று சேர்ப்பார்கள்.

### பிசாசின் பிள்ளைகளுக்கு உலகத்தின் முடிவில் சம்பவிப்பது என்ன?

அவர்கள் எரிகிற அக்கினியில் போடப்படுவார்கள், அங்கே அவர்கள் கொடுமையை துன்பப்படுவார்கள்.

---

## 50:11

இயேசு மேலும் சொன்னது என்னவென்றால், உலகத்தின் முடிவுக்கு முன்பாக அவர் திரும்பி வருவேன் என்று சொன்னார். அவர் எப்படி போனாரோ அப்படியே திரும்பி வருவார். அவருக்கு உண்மையான சரீரம் இருக்கும், அவர் மேகத்தில் வருவார், இயேசு வரும்போது அவருக்குள் மரித்த எல்லாக் கிறிஸ்தவர்களும் உயிரோடு எழுந்து, அவரை மேகத்தில் சந்திப்பார்கள்.

### எந்த உருவத்தில் இயேசு பூமிக்கு வருவார்?

அவர் எப்படி போனாரோ அப்படியேமேகத்தின் மத்தியில் சரீர உடம்பில் திரும்பவும் வருவார்,

---

## 50:12

உயிரோடிருக்கிற கிறிஸ்தவர்கள் வானத்தில் ஏறிக்கொண்டு இறந்துபோன மற்ற கிறிஸ்தவர்களோடு சேர்ந்துக் கொள்வார்கள். அவர்கள் அனைவரும் இயேசுவுடன் இருப்பார்கள். அதன் பிறகு, இயேசு தம் மக்களுடன் வாழப்போகிறார். அவர்கள் ஒன்றாக வாழ்வாதால் அவர்கள் முழுமையான சமாதானத்தை அடைவார்கள்.

### இயேசு திரும்பவும் வரும்போது எல்லா கிறிஸ்தவர்களுக்கும் என்ன சம்பவிக்கும்?

அவர்கள் அவரை சந்திக்கும்படி எழுந்திருப்பார்கள், மரித்தவர்களும் அவரை சந்திக்க வானத்தில் எழுத்துக்கொள்ளப்படுவார்கள்.

---

## 50:13

அவரை விசுவாசிக்கிற ஒவ்வொருவருக்கும் கிரீடத்தைத் தருவேன் என்று இயேசு வாக்குப் பண்ணியிருக்கிறார். அவர்கள் தேவனோடு என்றென்றைக்கும் எல்லாவற்றையும் ஆட்சி செய்து, பூரண சமாதானத்தோடு இருப்பார்கள்.

---

## 50:14

ஆனால் தேவனை விசுவாசியாதவர்களை அவர் நியாயந்தீர்ப்பார். அவர்களை நரகத்தில் போடுவார். அங்கே அவர்கள் தாங்க முடியாத துயரத்தினால் அவர்களுடைய பற்களைக் கடித்து, கதறி அழுது என்றென்றைக்கும் துன்பப்படுவார்கள். அவியாத அக்கினி அவர்களை எரித்துக் கொண்டே இருக்கும், மேலும் அங்கே புழுக்களும் அவர்களைத் தின்பதை நிறுத்தாது.

---

## 50:15

இயேசு திரும்பி வந்து சாத்தானையும் அவனுடைய ராஜ்யத்தையும் முற்றிலும் அழித்து, சாத்தானை நரகத்தில் தள்ளுவார். அங்கே என்றென்றைக்கும் அவன் தேவனுக்குக்

கீழ்படியாமல், தன்னோடு இருந்த ஜனங்களோடு அக்கினியில் எரிந்து கொண்டிருப்பான்.

## இயேசு திரும்பி வரும்போது சாத்தானை என்ன செய்வார்?

இயேசு சாத்தனை என்றென்றும் எரிகிற அக்கினியில் வீசுவார்.

---

### 50:16

ஏனென்றால் ஆதாமும், ஏவாளும் தேவனுக்குக் கீழ்படியாமல் இந்த உலகத்திற்கு பாவத்தைக் கொண்டு வந்தார்கள். தேவன் உலகத்தை சபித்து, அழிக்கும்படி முடிவு செய்தார். ஆனால் மறுபடியும் தேவன் புதிய வானம், புதிய பூமியை உண்டாக்குவார். அது பூரணமாயிருக்கும்.

---

### 50:17

இயேசுவும் அவருடைய ஜனங்களும் அந்த புதிய பூமியில் வாழுவார்கள். அவர் எல்லாவற்றையும் என்றென்றைக்கும் ஆட்சி செய்வார். அவர் ஜனங்களின் கண்ணீரைத் துடைத்து, ஒருவரும் துன்பமோ கவலையோ இல்லாமல் இருப்பார்கள். அவர்கள் அழுவதில்லை. அவர்கள் நோயினால் சாவதில்லை. அங்கே பாவம் ஒன்றும் இருக்காது. இயேசு அவருடைய ஜனங்களை நீதியோடும் சமாதானத்தோடும் நடத்தி, அவருடைய ஜனங்களோடு என்றென்றைக்கும் இருப்பார்.

## புதிய வானத்திலும் பூமியிலும் வாழ்க்கை எப்படி இருக்கும்?

இயேசு என்றென்றைக்கும் சமாதானமும், நீதியுமாய் என்றென்றும் பாடுகள் இல்லாமல் ஆட்சி செய்வார்.

# பங்களிப்பாளர்கள்

## Open Bible Stories Translation Questions பங்களிப்பாளர்கள்

Dr. Bobby Chellappan
Vipin Bhadran
Dr. Joseph Jekab
Acsah Jacob
Jinu Jacob
Hind Prakash

## Open Bible Stories பங்களிப்பாளர்கள்

Antoney Raj
Cdr. Thomas Mathew
Dr. Bobby Chellappan
Hind Prakash
Shojo John
Vipin Bhadran